# சவப்பெட்டி

## சிரஞ்சீவி



COMICS PDF TIMES
HSC

# உள்ளே அத்தியாயங்கள்


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 1 | குற்றத்திற்குப் பங்காளிகள் | 5 |
| 2 | கப்பல் மோசடி | 10 |
| 3 | பழி தீர்க்கும் படலமா? | 22 |
| 4 | சாகாதவனும் சாகப்போகிறவனும்! | 38 |
| 5 | மாருட்டம்! | 50 |
| 6 | அடியே அன்னம்மா என்ற அலறல்! | 57 |
| 7 | மெத்தை விஷயம்! | 69 |
| 8 | திண்ணை தூங்கியும் பெண்ணைப் பெற்றவனும்! | 84 |
| 9 | பியாரி பவனத்தில் பணம் பிடுங்கி! | 94 |
| 10 | மகுடி ஓசை கேட்ட பாம்பு! | 101 |
| 11 | எந்தப் புற்றில் எந்தப் பாம்பு? | 107 |
| 12 | பித்தம் தெளிய மருந்து! | 114 |
| 13 | சவப் பெட்டி வந்தது | 126 |
| 14 | மரண ஓலையா? | 132 |
| 15 | விளக்கு அணைந்தது! | 139 |
| 16 | காணோம்! காணோம்!! | 151 |
| 17 | இவனு க்ரன்ஸிங்? | 158 |
| 18 | கள்ளனுக்குள் கள்ளன்! | 163 |
| 19 | "மோசம் போனேமடி!" | 168 |
| 20 | சவப் பெட்டிக்குள் இருந்தது? | 174 |
| 21 | உறுமினார் அப்துல்லா! உருண்டார் சேட்! | 180 |
| 22 | பிணம் பேசியது! | 188 |
| 23 | துப்பறியும் ராஜாமணியின் சாமர்த்தியம் | 194 |
| 24 | ஆனந்த ரங்கனின் ஆனந்தம்! | 206 |

## இந் நாவலாசிரியரின்
## ஏனைய துப்பறியும் நாவல்கள்

| | | | |
|---|---|---|---|
| மர்மக் கொலை | (4-ம் பதிப்பு) | ரூ. | 1-0-0 |
| நீதிமயக்கம் | (2-ம் பதிப்பு) | ... | 1-0-0 |
| மர்மத் தீவு | (2-ம் பதிப்பு) | ... | 1-4-0 |
| ரத்தப் பசி | (2-ம் பதிப்பு) | ... | 1-4-0 |
| பேய் வீடு | (2-ம் பதிப்பு) | ... | 1-8-0 |
| காதலன் கொலை வழக்கு | ,, | ... | 1-4-0 |
| மாய வில்லா | ,, | ... | 1-0-0 |
| சூன்யக்காரி | ,, | ... | 1-0-0 |
| மரண யாத்திரை | ,, | ... | 1-8-0 |
| பயங்கர மனிதன் | ,, | ... | 2-0-0 |
| கல்நெஞ்சன் | ,, | ... | 1-8-0 |

NOT FOR SALE
FAN MADE ONLY

# 1 குற்றத்திற்குப் பங்காளிகள்!

இருபதாம் நூற்றாண்டை இரண்டாயிரம் கோணல்களாகக் காட்டிப் பிரதிபலிப்பது போல இறுமாப்புடன் வானளாவி நிற்கும் ஒரு மாளிகையில் அட்டகாசமாக ஈஸிசேரில் உட்கார்ந்திருந்த அஞ்சுவேலி ஆளவந்தார், அன்றையத் தினப் பத்திரிகையில் வெளிவந்திருந்த ஒரு திடுக்கிடும் செய்தித் தலைப்பைப் பார்த்ததும் பதறிப் போனார்.

**பர்மாக் கப்பலில் படுகொலை !**

**கப்பல் தலைவர் கழுத்து நெறிக்கப்பட்டார்!**
**துப்பறிபவர் இருந்தும் துணிகரமான செயல்!**
**கரைசேர்ந்த பிறகே கண்டுபிடிக்கப்பட்டது!**

"ஆ!" என்று அலறினார் ஆளவந்தார். அவ்வளவுதான்! அதற்குப் பிறகு அவருக்குப் பேச்சு மூச்சே இல்லாமற் போய் விட்டது.

அவருக்கு விசிறிக் கொண்டிருந்த வேலைக்காரன் "அம்மா!...அம்மா! ஓடியாங்க!" என்று அலறியபடி உள்ளே ஓடினான்.

"என்னடா நடந்தது?" என்று கிரீச்சிட்டுக்கொண்டு ஓடிவந்தாள் ஆளவந்தாரின் சம்சாரம். மூர்ச்சித்துக் கிடக்கும் தன் புருஷனைக் கண்டதும், அந்த அம்மாள் 'என்ன ஆச்சோ, என்னவோ!' என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டாள்.

ஆளவந்தாரின் இதயம் நின்றுவிடவில்லை; படபட வென்று வேகமாகவே அடித்துக் கொண்டிருந்தது! விழிகள் பிதுங்கி நின்றிருந்தன; ஆனால் அவை பார் வையை இழக்கவில்லை! 'என்னங்க? ... என்னங்க?' என்று கேட்டுத் துடியாகத் துடிக்கும் அவருடைய மனைவி யின் பரிதாபகரமான ஓலம் அவருடைய செவிகளில் விழுந்து கொண்டுதான் இருந்தது. ஆனால் அடியோடு அடைத்துப் போகவில்லை!

தண்ணீரைக் கொண்டுவந்து முகத்திலே தெளித்த வேலைக்காரன் விசிறி கொண்டு விசிறினான்.

சிறிது நேரம் அந்த வீடு, சாவு விழுந்த வீடுபோல அமர்க்களப்பட்டது. ஆனால் கடைசிவரை அந்த நிலை நீடிக்கவில்லை.

அதிர்ச்சியினின்றும் சிறிது சிறிதாக மீண்டு கண்களை உருட்டிப் பார்த்தார் ஆளவந்தார். நடுங்கிக் கொண் டிருக்கும் அவரது வலதுகரம் கீழே கிடந்த பத்திரிகையைச் சுட்டிக் காட்டியது. "அன்னம்மா! அதை எடுத்துப் படி! முழு விபரத்தையும் சீக்கிரம் படித்துச் சொல்லு!" என்று குரல் தழதழக்கத் தடுமாற்றத்தோடு தம் மனைவி யின் முகத்தைப் பார்த்தார் அவர்.

பத்திரிகையை எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள் அன்னம்மா. படித்துக் கொண்டுவரும் போதே வாய் வார்த்தை குளறுபடியாகியது.

அவள் படித்துச் சொன்ன விஷயம் இது தான்:

"ஆளவந்தார் அண்டு அப்துல்லா கம்பெனி யாரின் 'ஜல மாயா' என்ற கப்பல் ஏற்கனவே வெடி விபத்துக்குள்ளாகியது நினைவிருக்கலாம். அதே கம்பெனியின் 'ஜல தாரா' என்ற கப்பல் பர்மாவிலிருந்து புறப்பட்டு வருகிற வழியில் கப்பல் தலைவரான காசிநாதர் கொலைப்பட்டிருக் கிறார். கப்பல் தலைவர் கொலையுண்டு கிடப்பது கப்பல் கரை சேர்ந்த பிறகே மாலுமிகளுக்குத் தெரியவந்தது. இத்தனைக்கும் அதே கப்பலில் பிரயாணம் செய்து கொண்டிருந்த துப்பறியும்

நிபுணரான ராஜாமணிக்குக் கூட எதுவுமே தெரியாது இருந்திருக்கிறது.

"கப்பலில் இருந்த அனைவரையும் போலீசார் கடும் சோதனைகளுக்கு இலக்காக்கியும்கூட எந்த விதப் புலனும் கிடைக்கவில்லை. கப்பல் காப்டன் கொலை செய்யப்பட்ட விஷயம் மிகவும் மர்மமாகவே இருக்கிறது. துப்பறியும் ராஜாமணியே வியப்படைகிறார்!

"கொலையுண்டவரின் முகத்திலே அமைதியில்லை. அவருடைய விழிகள், விழித்தது விழித்தபடி இருந்தன. திறந்த வாய் திரும்ப மூடிக் கொள்ளவில்லை.

"கொலைகாரனைக் கண்ட எதிர்பாராத அதிர்ச்சி தெளிவடையாத நிலையில் கொலை செய்யப்பட்டிருப்பதாலேயே, அப்போதைய பயங்கர பாவம் பிணமாகியும் அவரது முகத்திலே தேங்கி விட்டது!' என்பதாக டாக்டர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

"பிரேத பரிசோதனை நடத்திய டாக்டர்கள் வியப்பிற்குரிய மற்றோர் அறிக்கையையும் தந்திருக்கிறார்கள். 'கொலையுண்டவரின் உடம்பிலே குத்துக் காயங்களோ அல்லது துப்பாக்கிக் காயங்களோ காணப்படவில்லை. ஆனால் அவர் கழுத்து நெறிக்கப்பட்டே இறந்திருக்கிறார் என்பது நிச்சயமாகப் புலனாகிறது. பிணத்தருகே ஒரு கெஜம் நீளமுள்ள கயிறும் கிடந்தது. அவரது கழுத்தை நெறிக்க அது உபயோகப்படுத்தப் பட்டிருக்க வேண்டும்!"

"டாக்டர்களின் அறிக்கையை அனுசரித்து ரேகை நிபுணர்களும் அபிப்பிராயம் ஒன்றை வெளியிட்டிருக்கின்றனர். கொலையுண்டவரின் அருகே கிடந்த கயிற்றில் பதிந்திருக்கும் ரேகைகளைப் பரிசோதித்துப் பார்த்ததில் அதில் காணப்படும் ரேகைகளும் கொலையுண்டவரின் கைரேகையாகவே இருக்கிறது! இதிலிருந்து

அந்தக் கயிற்றைக் கொண்டே கொலையானவர் தன் கழுத்தை தானே இறுக்கி மாண்டிருக்கலாம் என்று கருத இடம் தருகிறது.

“தற்கொலையாகவே ஏன் இருக்கக்கூடாது என்ற சர்ச்சையும் நடந்தது. கொலையுண்டவர் படிப்பாளியாகவும், உயர்தர உத்தியோகஸ்தரா கவும் இருப்பதால் தற்கொலை செய்து கொள்ளு முன் ஏதாவது கடிகம் எழுதி வைத்திருக்க வேண்டுமே என்ற எண்ணத்தில் அவருடைய அறை முழுதும் சோதனையிடப்பட்டது. அவரால் எழுதிவைக்கப்பட்ட எந்தக் கடிதமும் அகப்பட வில்லை. ஆனால் தமிழில் ‘டைப்’ செய்யப்பட்ட ஒரு சிறிய குறிப்புத் தாள் இறந்தவரின் சட்டைப் பையிலிருந்து அகப்பட்டது. அதைக கொண்டு சிந்திக்கும் போது கப்பல் தலைவரின் மரணம் ஏன் ஒரு கொலையாக இருக்கக்கூடாது என்ற ஐயத்தைக் கிளப்புகிறது.

“காப்டனின் மரணம் கொலை என்று சந்தே கிக்கப்படுவதால், கப்பலில் பிரயாணம் செய்த வர்கள் கரை சேர்வதினின்றும் தடுத்து வைக்கப் பட்டிருக்கின்றனர். குற்ற இலாகா போலீசாரின் பூரண விசாரணைக்குப் பிறகே அவர்கள் கப்பலி லிருந்து வெளியேற அனுமதிக்கப்படுவார்கள்.

செய்தியை படித்துவந்த அன்னம்மாள் மூச்சுவாங்கிக் கொள்ளச் சிறிது நிறுத்தினாள். அதுவரை ஆடாமல் அசை யாமல் இருந்தபடி வெகு கவனமாகக் கேட்டுக் கொண் டிருந்த ஆளவந்தார், “ஏதோ துண்டுக் கடுதாசி அகப் பட்டதாகச் சொல்லுகிறார்களே? அதிலே என்ன எழுதி யிருந்தது என்பதையும் பத்திரிகையில் போட்டிருக்கிறார் களா பாரு?” என்று பதறினார்.

“போட்டிருக்கிறது. படிக்கிறேன் கேளுங்கள்” என்று அன்னம்மா சொல்லிவிட்டு, செய்தியைத் தொடர்ந்து வாசித்தாள்.

“மூன்று அயோக்யர்களும் ஒரு பேராசைக் காரனும் சேர்ந்து அபாரமான திட்டத்தோடு

கண்டுபிடிக்க முடியாத வகையில் பிரம்மாண்டமான ஒரு குற்றத்தைச் செய்தார்கள். அதன் மூலம் கிடைத்த ஆதாயத்தை நான்கு பேர்களும் பங்கிட்டுக் கொண்டார்கள். பங்கிட்டுக் கொண்டு பணக்காரனாகிவிட்டது தெரியக் கூடாதே என்பதற்காகப் பணத்தைப் பதுக்கி வைத்துவிட்டுப் பஞ்சக் கோலம் பூண்டு பசுப் போல் வாழ்கிறார்கள்! ஆண்டவன் தான் ஊமையாகிச் செவிடாகி. கண்மூடி நிஷ்டையில் இருந்து விட்டார் என்றால் வாய் திறந்து, செவி பிளந்து கொட்டக் கொட்டப் பார்த்துக் கொண்டிருந்த தன்மானக்காரனின் உணர்ச்சிகளுமா சமாதியடைந்துவிடும்?"

"பொய்!...சுத்தப் பொய்! அத்தனையும் பொய்!" என்று அலறினார் ஆளவந்தார்.

"எது பொய்? பேப்பரிலே போட்டிருப்பதா?" என்று பதறினாள் அன்னம்மா.

"அதைச் சொல்லவில்லையடி! மூன்று அயோக்யர்களும் ஒரு பேராசைக்காரனும் என்கிறானே, அது பொய்! அந்த நால்வரில் நான் சேரவேயில்லை! பேராசைக்காரனாக இருந்து அதன் பெரும் பலனை நான் அடையவேயில்லை! அபாண்டம்! அக்கிரமப் பேச்சு!" என்று ஆளவந்தார் பித்துப் பிடித்தவர் போல கத்திக் கொண்டு எழுந்து குறுக்கும் நெடுக்குமாக ஓடத் தலைப்பட்டார்.

அனனம்மாளுக்கு ஒன்றுமே புரியவில்லை. தன் கணவருக்கு புத்தி பேதலித்துவிட்டதோ என்று கலங்கிப் போய், அவரைப் பிடித்துக் கட்டிலில் போட்டு அமுக்கிப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

"டாக்டரைக் கூப்பிடு! ஓடுடா சீக்கிரம்!" என்ற கூப்பாடு, கண்ணீரும் கலக்கமும் நிறைந்த அம்மாளின் வாயினின்றும் வெளிப்பட்டு ரீங்கரித்தது.

வேலைக்காரன் விழுந்தடித்துக் கொண்டு வெளியே ஓடினான்.

## கப்பல் மோசடி?

கப்பல் கவிழவில்லை. கப்பல் காப்டன் தான் செத்தான். இந்தக் காப்டன் இறந்தால் இன்னொரு காப்டன் அகப்படாமலா போவான்? கப்பல் தான் கடலில் மிதக்காதா? இதற்காக அஞ்சுவேலி ஆளவந்தார் மூர்ச்சை போட்டு விழுவானேன்?

உள்ளபடியே கப்பல் கவிழ்ந்திருந்தால் கூட அசனல் அதிர்ச்சி அடைந்து மயக்கம் போட்டு விழக்கூடியவரல்ல ஆளவந்தார்! கப்பல் காப்டன் சாதாரணமாகச் செத் திருந்தால் கூடச் சிறிதும் அதற்காக அதிர்ச்சியடைந் திருக்கமாட்டார் அவர்! கொலையுண்ட காப்டனின் பையிலே இருந்த அந்தச் சிறு குறிப்புத்தான் அவரை வெல வெலக்க வைத்து, சித்தம் பேதலிக்க வைத்துவிட்டது!

அந்தக் குறிப்பில் கண்ட வாசகமும் அவரது முற்கால வாழ்வும் நெருங்கியதொரு தோழமை கொண்டிருந்தது.

19—ம் வருஷத்திற்குச் சற்று முன் பின்னை நடப்பு இது. பர்மா ஒரு ரமணீயமான செல்வம் கொழிக்கும் பூமியாக இருந்தது. சகல நாட்டினரும் சஞ்சரித்துப் புழங்கும் நல்லதொரு வியாபார ஸ்தலமாக கீழ்நாடுகளுக் கிடையே கீர்த்தி பெற்றிருந்தது. உண்மையான வியாபாரி களுக்கு மட்டுமல்ல, முரட்டு ஆத்மாக்களுக்கும் யோக்யப் பொறுப்பில்லாத கயவர்களுக்கும் அது ஒரு தங்கச் சுரங்கம் போல விளங்கி வந்தது எனலாம்!

அப்போது ஆளவந்தாருக்கு உடைமையாக ஐந்து வேலித் தரிசு நிலம்கூடக் கிடையாது! சென்னையில் பஞ்ச வேஷத்தோடு செங்காங்கடை-வட்டாரத்தில் ஒரு'சோமாரி' போல திரிந்து வந்தார் அவர். அந்த நாளில் பாண்டிச் சேரி பட்டாபியின் சகவாசம் அவருக்குக் கிடைத்தது. சோம்பேறியும் சுயநலக்காரனும் ஒன்று சேர்ந்தால் காசை எந்த வழியில்தான சேகரம் செய்ய முடியாது? கள்ளக் கடத்தல் வியாபாரத்தைத் தரை மார்க்கமாக

சென்னைக்கும் பாண்டிச்சேரிக்குமிடையே நடத்த முற்பட்டவர்கள் முன்னேற்றமடைந்து கடல் மார்க்கத்திலும் நடத்தத் தலைப்பட்டனர் அதுமுதல் கள்ளத்தோணிக்காரராக ஆகிவிட்டார் ஆளவந்தார்.

பணம் பெருகிவர ஆரம்பித்தது. பட்டாபி பர்மாவிலும் ஆளவந்தார் சென்னையிலுமாகத் தங்கி வியாபாரத்தைத் திறம்பட நடத்தி வந்தார்கள். அதன் பலனாய் கள்ளத் தோணிக்காரர்களான அவர்கள், லைசென்ஸ் பெற்ற கப்பல் கம்பெனிக்காரர்களாகவும் ஆகிவிட்டார். அவர்களுக்குச் சொந்தமான **'ஜலமாயா'** என்ற கப்பல் ரங்கூனுக்கும் சென்னைக்குமிடையே பிரயாணிகளையும் சாமான்களையும் ஏற்றிச் சென்று எக்காலமும் கடல் மீது நகர்ந்து கொண்டிருந்தது.

இதன் பின் இரண்டு வருடகாலத்திற்குள் இக்கரையில் இருந்த ஆளவந்தாரும, அக்கரையில் இருந்த பட்டாபியும் லக்ஷாதிபதிகளாகிவிட்டனர். நேர்மையான கப்பல் போக்கு வரத்தை நடத்தியல்ல! கள்ளக் கடத்தலிலேதான் கரைகாண முடியாத லாபம் கண்டார்கள்!

ஆளவந்தாரைவிடப் பட்டாபி கொஞ்சம் புத்திசாலி; 'நிரட்சரகுட்சி' யானாலும் எதிலும் நிதானமுள்ளவன். 'ஒருவன் ஒருதரம் குற்றம் புரியலாம்; தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் அதையே ஓராயிரம் தடவை செய்துவிட முற்பட்டால் என்றாவது ஒருநாள் பிடிபடவேண்டியது தானே!'—இதை பட்டாபி உள்ளூர உணர்ந்து கொண்டு விட்டானோ என்னவோ, ஆளவந்தாரோடு அபிப்ராய பேதம் கொள்ள ஆரம்பித்துவிட்டான்.

அந்தப்புத்தி ஆளவந்தாருக்கு வரவில்லை. "நீ யோக்யமானவனாக மாறிவிட ஆசைப்பட்டால் அது உன் இஷ்டம். நான் குறுக்கே நிற்கமாட்டேன். ஆனால் கப்பல் கம்பெனியின் பங்குதாரராக நீ இருக்க முடியாது!" என்று அவர் பட்டாபியிடம் கூறிவிட்டார். அதன் பலனாய் பட்டாபி மனராஸியோடு தன் பங்கை வெட்டிக் கொண்டு பர்மாவிலே நேர்மையானதொரு வியாபாரத்தை நடத்துவதில் முற்பட்டான்.

ஆளவந்தார் இப்போது **ஜலமாயா** கப்பலின் ஏக போக உரிமையாளராக ஆகிவிட்டார். அதோடு அவருக்

கிருந்த பேராசையும் பெரிதாகியது. ஒரு காலத்தில் சோமாரி போல வளைய வளைய வந்து கொண்டிருந்த செங்காங்கடை வட்டாரத்தை அப்படியே மொத்தமாக வீடு, கடைகள் உள்பட விலைக்கு வாங்கி விடவேண்டு மென்று மனக் கோட்டை கட்டிக் கொண்டார்.

நினைக்கிறபடியே எது தான் நடக்கிறது? அததற்கு அவனவன் இருந்தால்தான் ஆதாயம் உண்டு. பட்டாபி யின் உதவி ஒதுங்கிப் போய்விட்டதால் கள்ள வியாபாரம் சுகமில்லாமல்போய்விட்டது! நேர்மையான கப்பல் போக்குவரத்தில் கூட நஷ்டமே ஏற்படலாயிற்று.

ஒரே வருஷத்திற்குள் கோடீஸ்வரனுகிவிட திட்டம் போட்டிருந்த ஆளவந்தாருக்கு அசடுதட்டியது. தீவிர மாகக் குறுக்கு வழிச் சம்பாத்தியத்தில் ஈடுபட்டால் அல்லாது தம் கனவு நனவாகாது எனற நினைப்பில் கண்ணும் கருத்தும் கொண்டார். பட்டாபியைப் போன்று நாலும் தெரிந்த நபர் கிடைக்கமாட்டாரு என்று தேடி வலைவீசிக் கொண்டிருந்தார்.

ஆளவந்தார் வீசிய வலையில் அப்துல்லா சிக்கிக் கொண்டான். பாண்டிச்சேரிக்கு ஒரு பட்டாபி என்ருல் கோவாவிற்கு ஒரு அப்துல்லா எனலாம்! அதோடு மட்டு மல்ல; பல விஷயங்களுக்கு அப்துல்லாவிற்கு ஒத்தாசை யாக இருந்த ஆத்மாராமையும் ஆளவந்தார் இழுத்துப் போட்டுக் கொண்டார். **ஜலமாயா** கப்பலை நன்கு மிதக்க விட மூவரும் சேர்ந்து முக்கூட்டு வைத்துக் கொண் டார்கள். ஆளவந்தாரின் கப்பல் கம்பெனி 'ஆளவந்தார் அண்டு அப்துல்லா கம்பெனி'யாக மாறிற்று.

சேர்ந்த முக்கூட்டு சோடையாகவில்லை. ஆளவந்தார் எதிர் பார்த்ததற்கு அதிகமாகவே அக்கம்பெனி முன் னேற்றமடைந்துவிட்டது. சென்னைக்கும் ரங்கூனுக்கு மிடையே **'ஜலமாயா'** கப்பல் வெற்றிகரமாக மிதந்து கொண்டிருக்க, அக்கம்பெனியாரால் வேருெரு கப்பலும் விலைக்கு வாங்கப்பட்டு **'ஜலதாரா'** என்ற நாமத்தைத் தாங்கி, கல்கத்தாவிற்கும் ரங்கூனுக்குமிடையே மிதக்க விடப்பட்டது.

இந்தியாவிற்கும் பர்மாவுக்குமிடையே ஒரு கப்பலை ஓட்டி அதில் லாபம் பார்ப்பதே பெரிய காரியம் என்று

மலேக்கிற அயலாரின் அபிப்ராயத்துக்கிடையே 'ஆள வந்தார் அண்டு அப்துல்லா' கம்பெனியார் இன்னொரு கப்பலை மிதக்க விட்டிருப்பது கண்டு எல்லோருமே அதிசயித்தார்கள். ஆனால் அப்படி அதிசயததவர்களுக்கெல்லாம் அக் கப்பல் கம்பெனியார் நடத்தும் அந்தரங்க வியாபாரம் கிஞ்சித்தும் தெரிவதற்கிடமில்லாமல் போய் விட்டது.

மேலும் ஆறுமாதம் இப்படியே காலம் நகர்ந்திருந்தால் ஆளவந்தாரின் கனவு நனவாகியிருக்கும். ஆனால் தெய்வச் சித்தம் வேறுவிதமாகத் திரும்பிவிட்டது.

உலகத்தை அடிஅடியாக அபகரித்து வியாபித்துக் கொண்டுவந்த யுத்தம் பர்மா பக்கமும் நடைபோட ஆரம்பித்துவிட்டது. குறித்த காலத்தில் குதூகலமாக நீந்திக் கொண்டிருந்த 'ஜலமாயா'வும் 'ஜலதாரா'வும் என்று புறப்படும், எப்போது புறப்படும் என்று கூடச் சொல்ல முடியாதவாறு நாட்கணக்கில் அவை துறைமுகத்தில் கிடந்து துயிலத் தொடங்கின. காரணம் பர்மாவுக்கும் இந்தியாவுக்குமிடையே ஏராளமாகக் கொடுக்கப்பட்டு வந்த 'விசா' விஷயம் (நாடு கடந்துசெல்ல அனுமதிச்சீட்டளிக்கும் விஷயம்) தீவிரமான கட்டுப் பாட்டுக்கு இறுகி விட்டது.

கப்பல்கள் நகராவிட்டால் கம்பெனிக்கு ஏது வருமானம்? கல்கத்தாவில் இருந்தபடி 'கடன்பட்டு விட்டோம்,' என்று அலறினார் அப்துல்லா. 'கப்பல் துறை முகக் கட்டணம்கூட அதிகரித்துக் கொண்டிருக்கிறது!' என்று ரங்கூனிலிருந்து 'டிரங்க் கால்' செய்தார் ஆத்மாராம். 'உடன் விமானத்தில் புறப்பட்டுவந்து சேரவும்; கலந்தாலோசிக்கலாம்!' என்று ஆத்மாராமிற்கு பதில் கொடுத்தார் ஆளவந்தார். கப்பல் பங்குதாரர்களும் கப்பல் காப்டனும் கலந்தாலோசிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது!

நாட்களை வீணாகத் தள்ளவில்லை. கல்கத்தாவிலிருந்து அப்துல்லாவும், சென்னையிலிருந்து ஆளவந்தாரும், ரங்கூனிலிருந்து புறப்பட்டு வந்த ஆத்மாராமும், கப்பல் தலைவனும் கூடி சர்க்காரின் கட்டுதிட்டங்களையும்

ஜனங்களின் மனோபாவங்களையும் தீவிரமாகப் பரிசீலித்துப் பார்த்தனர். கப்பல் கம்பெனி மூழ்கிவிடாமல் இருக்க ஒரு திட்டமும் வகுத்தார்கள். அதன் அறிகுறியாக பாரத நாட்டுப் பத்திரிகைகளில் கப்பல் கம்பெனியின் அறிக்கை பிரமாதமாக அடிபட்டது.

"பொதுஜன வற்புறுத்தலின் மீது கப்பல் கம்பெனி பரிசீலனை செய்தது. நம் இரு கப்பல்களும் மீண்டும் தங்கள் சேவையைத் தொடர்ந்து நடத்தும். பிரயாணிகள் அதிகம் சேராவிட்டாலும் கூடக் குறித்த காலத்தில் கப்பல்கள் துறைமுகத்தை விட்டுக் கிளம்பும் என்பதைப் பொது ஜனங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—ஆளவந்தார் அண்டு அப்துல்லா கம்பெனியார்"

ஏற்கனவே கப்பல் போக்கு வரத்து நிறுத்தப்பட்டிருந்ததால் மிகவும் கவலை கொண்டிருந்தவர்கள் சற்றே மனத் தெளிவு கொண்டனர். 'பர்மாவில் இருக்கும் தங்கள் சொத்து என்ன கதியானதோ' என்று புழுவாய்த் துடித்துக் கொண்டிருந்த இந்திய வாசிகள் 'ஆளவந்தார் அண்டு அபதுல்லா கம்பெனியின், கல்கத்தா கிளையிலும், சென்னைக் கிளையிலும் சாரை சாரையாக வந்து குவிந்தனர், "விண்ணப்ப நமூனு எழுதிக் கொடுங்கள். விஸா எடுத்துத் தர நாங்களே முயற்சிக்கிறோம்" என்ற பதில் வெளிப்படையாக உரத்த குரலில் ஒவ்வொருக்கும் கிடைக்கும். அதே சமயம் பர்மா செல்ல முனையும் பசையுள்ள ஆசாமிகளை மாற்றுன் ஒருவன், ஒருவர் பின் ஒருவராகச் சந்தித்து ஏதோ 'குசு குசு'வென்று சொல்லி ஆளவந்தாரின் அறைக்கு அந்தரங்கமாக அழைத்துச் செல்வான். 'விசா கிடைக்காதா'' என்ற ஏக்கத்தோடு மனம் சோர்ந்து உள்ளே செல்கிற பிரயாணி முகமலர்ச்சியோடு ஆளவந்தாரின் அறையிலிருந்து வெளியே வருவான்.

விஷயம் இதுதான்: பர்மாவிற்குச் செல்ல 'விசா' கொடுப்பதில் வெகு கவனம் செலுத்திய அரசாங்கம், ஆயிரம் பேர் மனு செய்து கொண்டால் ஆறே பேருக்குத் தான் அனுமதி கொடுக்கும், மற்றவை நிராகரிக்கப்படும்.

அப்படி நிராகரிக்கப் பட்டவர்களுக்கு நிவாரணமளிக்க ரகசியத் திட்டம் வகுத்திருந்தது கப்பல் கம்பெனி.

கப்பல் கரையை விட்டுக் கிளம்பும்போது ஆறு பிரயாணிகளைத்தான் தன்னுள்ளே கொண்டிருக்கும். ஐந்து மைல் தூரம் கடலுக்குள் சென்றதும் கப்பலின் நங்கூரத்தை நழுவ விடுவான் காப்டன். நாலாபக்க மிருந்தும் கட்டுமரங்கள் மளமளவென்று கப்பலை நோக்கி வந்துசேரும். அக்கட்டுமரங்களில் வரும் பிரயாணி களுக்குக் கப்பல் தன்னுள்ளே தஞ்சமளித்து ஆட் கொள்ளும். காலையில் கட்டுமரத்தைக் கட்டிக்கொண்டு இருபது மைல் தூரம் கடலுக்குச் சென்று கூடை நிறைய மீன்பிடித்து மறுநாள் திரும்பினால் கூட அந்தக் கட்டுமரக் காரர்கள் பத்துரூபாய் சம்பாதிக்கமாட்டார்கள். அதை விட நான்கு மடங்கு பணத்தை அள்ளிக் கொடுத்தனுப் புவான் காப்டன். 'பர்மா போய் சேர்ந்தால்போதும்!' என்று பரதவிக்கும் பிரயாணிகள் ஒன்றுக்குப் பத்தாக அல்லவா கப்பல் கட்டணம் கொடுக்கிறார்கள் ?

இப்படி ஏற்றிச் செல்லப்படுகிற 'விசா' இல்லாத பிரயாணிகளுக்காக ரங்கூன் பிராந்திய செம்படவர்களும் கப்பல் கம்பெனிக்கு உடந்தையாக வேலை செய்து வந்தனர். கப்பல் ரங்கூன் துறைமுகத்திற்கு ஐந்து மைல் தூரத்தில் வந்ததும் அவர்களை ஏற்றுக்கொள்ளும் பொறுப்பு கட்டுமரத்தைச் சேர்ந்துவிடும்!

பர்மாவிற்கும் இந்தியாவிற்கு மிடையே இப்படியாக 'ஜலமாயா'வும் 'ஜலதாரா'வும் சுமுகமாக வியாபாரத்தை நடத்திக் கொண்டிருந்தன. போதிய பிரயாணிகள் இல் லாமல் கப்பலை எப்படி ஓட்டிக் கொண்டிருக்க முடிகிறது என்று அரசாங்கங்கள் ஐயப்பட்டுவிடாமல் இருக்க, அதன் பங்குதாரர்கள் மிகவும் சாமர்த்தியமாக நடந்து கொண்டார்கள். கப்பல் கம்பெனி பெரும் நஷ்டத்திற்கு இலக்காகி வருவதாகக் காட்டிக்கொண்டு கல்கத்தா விலே அப்துலலாவும் சென்னையிலே ஆளவந்தாரும் சொத்து பத்துகளை விற்க ஆரம்பித்தார்கள். ஆனால் கத்தை கத்தையாக கரன்ஸி நோட்டுகளைக் கட்டி எங்கேயோ அவர்கள் பதுக்குகிறார்கள் என்பதை அயலார் அணுவளவுகூட உணரமுடியவில்லை! அதிகம் சொல்

வானேன்; ஆளவந்தாரின் மனைவியான அன்னம்மாகூட தன் புருஷன் நாளுக்கு நாள் நஷ்டப்பட்டுக் கடன்காரனுகி வருவதாகவே கருதி வந்தாள்.

எதை எதிர்ப்பார்த்து அப்துல்லாவும் ஆளவந்தாரும் செயலில் ஈடுபட்டார்களோ, அது பலித்துவிட்டது, ஆளவந்தார் அதிகப்படியான கடன்காரராகிவிட்டார் என்று சென்னையிலும் அப்துல்லா அதள பாதாளத்தில் விழுந்து விட்டார் என்று கல்கத்தாவிலும் பொது ஜனங்களிடையே பேச்சு பலமாக அடிபட ஆரம்பித்துவிட்டது!

கப்பல் கம்பெனியாருக்குச் சாதகமான சூழ்நிலை! சந்தேகத்திற்கிடமளிக்காத ஒரு திட்டம்!

இந்தியாவிலிருந்து பர்மாவிற்குக் கப்பல் எப்படி வெற்றிகரமாக மிதந்து சென்றதோ, அதே போன்று, அதையும் விடப் பன்மடங்கு லாபத்துடன் ஜலமாயாவும் ஜலதாராவும் பர்மாவிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தன.

பர்மா இருந்த நிலையிலே, அதன் சங்கடத்திலே, அங்கே இருந்த பணக்காரர்கள் விசா கிடைக்காத தோஷத்தில் தங்களது செல்வத்தோடு எப்படியாவது பர்மாவை விட்டு ஒடினுல் போதுமென்று புழுவாய்த் துடி துடித்துக் கொண்டிருந்தனர். அப்படிப்பட்ட பணக்காரர்களுககு அடைக்கலம் தந்தது ஆளவந்தார் அண்டு அப்துல்லா கப்பல் கம்பெனி.

பர்மா கரையை விட்டுப் புறப்படும் கப்பல், கரையிலிருந்து சிறிது தூரம் சென்றதும் கள்ளத்தோணியில் வரும் பணக்காரர்களை தன்னுள்ளே அடக்கிக் கொள்ளும். பாரதத்தின் கரையை நெருங்கும் போது கப்பலினுள்ளே சிறு சிறு 'கசமுசா' கிளம்பும். அக்கரையில் கொண்டு சேர்த்தால் ஆயிரம் ரூபாய் தரவேண்டும் என்று பிரயாணியோடு ஒரு முடிவுக்கு ஏற்கனவே வந்திருக்கும் காப்டன் 'ஆருயிரம் கொடுத்தால் தான் ஆச்சு' என்று மிரட்டுவான். 'பேசியது ஆயிரம் தானே' என்று அலறுவான் பிரயாணி. 'அறுபதினுயிரம் ரூபாயை பத்திரமாக எடுத்துச் செல்ல உதவுகிற கம்பெனிக்கு ஆருயிரம் ரூபாய் கொடுக்க அழுகிருயே!' என்பான் கப்பல் தலைவன்.

'பர்மாவில் தங்கியிருந்தால் இந்த அறுபதினாயிரமும் பறி போயிருக்குமே!' என்ற நினைப்பில் மிஞ்சியது வரை மிச்சம் என்ற மனதோடு அநேகமாக எல்லாப் பிரயாணிகளும் தலைக்கு ஆறாயிரம் வீதம் கொடுத்துவிடுவார்கள்! இலாபம் இலேசானதா?

கொடுக்க மறுப்பவர்களும் அதிலே இல்லாமல் இருக்கமாட்டார்கள். "கொடுக்காவிட்டால என்ன செய்வாய்?" என்று எதிர்ப்பான் கொஞ்சம் தைரியமிருப்பவன். "கள்ளத்தோணி ஏறிவந்தவன் என்பதாகச் சொல்லி உன்னைக் காட்டிக் கொடுப்பேன்" என்பான் கப்பல் தலைவன். "அப்படி ஏற்றிவந்தது நீ என்பதைச் சொல்ல எனக்கு வாயில்லாமலா போகும்!" என்று பதிலுக்குச் சவால் விடுவான் எவனாவது ஒரு பிரயாணி. கப்பல் தலைவன் அதற்குப் பிறகு ஏதும் பதில் கூற மாட்டான். 'ஓஹோ!' என்று சிரித்தபடி அப்பால் போய் விடுவான். அப்புறம்...?

அப்புறம் நடப்பதுதான் பயங்கரமாயிற்றே! ஆறாயிரம் கொடுக்க மறுத்த அந்தப் பிரயாணி அறுபதாயிரம் ரூபாயைச் சொளைபோல கப்பலில் விட்டுவிட்டு சொகு சாக செத்தபிணமாக கடலிலே மிதந்து கொண்டிருப்பான். கப்பலில் ஏறுகிற போது பதிவு இருந்தாலல்லவா அப்பிரயாணிபற்றி கடற்கரை அதிகாரிகள் கேள்வி கேட்கப் போகிறார்கள்?

ஆளவந்தார் அண்டு அப்துல்லா கம்பெனியின் கப்பல்கள்,பயங்கரத்தைத் தன்னுள்ளே கொண்டு இப்படியாக உல்லாசமாக மிதந்து கொண்டிருந்தன.

'ஒருவன் ஒருதரம் குற்றம் புரியலாம். தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் ஓராயிரம் தடவை அதையே திரும்பத் திரும்பச் செய்து கொண்டிருந்தால் அதுபற்றி அரைகுறையான பேச்சுக் கூடவா கிளம்பாது?' அந்த ஒரு சந்தேகம் ஆளும் வர்க்கத்தினருக்குத் தட்டிவிட்டது என்பதை உணர்ந்த அப்துல்லா தனது இதர பங்காளியான ஆளவந்தாருக்கும் ஆத்மாராமிற்கும் சொல்லி நிலைமையை எடுத்து விளக்கினான்.

மூன்று கூட்டாளிகளும் ஒன்று கூடினர். கப்பல் தலைவனும் அதில் கலந்து கொள்ளாமல் இல்லை. புதிய

தொரு திட்டத்தை விஸ்தாரமாகத் தந்தான் அந்தக்கப்பல் தலைவன். அதுவே பேஷான யோசனை என்று கப்பல் முதலாளிகள் கருத்து ஒன்றுபட்டார்கள்.

அடுத்த தினமே 'ஆளவந்தார் அண்டு அப்துல்லா கம்பெனியாரின்' அறிவிப்பு ஒன்று பர்மாப் பத்திரிகைகளில் பெரிய பெரிய எழுத்துக்களில் விளம்பரமாக வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கை கீழ்க் கண்டபடி இருந்தது.

"இதன் மூலம் ஆளவந்தார் அண்டு அப்துல்லா கம்பெனியார் அறிவிப்பது என்னவென்றால் போதிய பிரயாணிகள் இல்லாமல் ஆனால் குறித்தகாலம் தவறாமல் நாங்கள் கப்பல் ஓட்டி வந்ததில் நாங்கள் தாங்க முடியாத நஷ்டத்திற்குள்ளாகி விட்டோம் அதனால் இன்னும் ஆறு மாத காலத்திற்கு கப்பல் போக்குவரத்தை நிறுத்தி வைத்திருக்கிறோம்.

"இப்போது ரங்கூன் துறைமுகத்தில் இருக்கும் ஜலமாயா என்ற கப்பல் பாரதக் கரைக்குத் திரும்ப வேண்டியிருக்கிறது. திரும்பும் பிரயாணத்தோடு கப்பல் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டுவிடும். இந்தியாவிற்கு விசா உள்ளவர்கள் இடத்திற்கு முந்திக் கொள்ளலாம்."

இந்த அறிக்கையை வெளியிட்ட கப்பல் முதலாளிகளுக்குள்ளே மேலும் என்ன சதித் திட்டம் உருவானதோ தெரியாது. அன்றே இந்தியாவிலிருந்த ஆளவந்தாரும் அப்துல்லாவும் விமானம் மூலம் ரங்கூன் போய்ச் சேர்ந்தனர்.

° ° ° °

பர்மாவில் ஏகப்பட்ட சொத்துச் சுதந்திரத்தை வைத்துவிட்டு அதன் வருவாய் சரியாக வந்து கொண்டிருந்தால் போதும் என்ற நினைப்பிலே இந்தியாவிலே உட்கார்ந்து உல்லாசமாக இருந்து வந்தவர்களுக்குக் கப்பல் கம்பெனியாரின் அறிக்கை எப்படி அதிர்ச்சி தரத் தக்கதாக இருந்ததோ, அதைவிடப் பன் மடங்கு திகிலை பர்மா வாழ் இந்தியர்களுக்குத் தந்தது. அந்தச் சூட்டிலே ரங்கூனிலிருந்த ஆளவந்தார், அப்துல்லா, ஆத்மாராம்

ஆகிய மூவரும் அப்படிப் பரதவிக்கிற பணக்காரர் களிடையே புகுந்து புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். கள்ளத்தோணி வியாபாரத்தின் கடைசிச் சதியல்லவா, அது!

கப்பல் போக்கு வரத்து நின்றுவிடப் போகிறதே என்ற கவலையில் எந்த வழியிலாவது கப்பல் முதலாளி களைக் காக்காய் பிடிப்பதற்காக அலைந்து திரிந்தார்கள் பிரபல பணக்காரர்கள். கப்பல் கட்டணமாகப் பத்தாயிரம் கேட்டால்கூட கொடுக்கத் தயாராக இருப்பதாகவும், தம் செல்வங்களுடன் தங்களைப் பத்திரமாக இந்தியக் கடற் கரையில் கொண்டுவிட்டால் போதுமென்று பல தரகர் கள் மூலம் கப்பல் கம்பெனி முதலாளிகளிடம் பேரம் பேசத் தலைப்பட்டனர் அச் செல்வந்தர்கள். அதிகம் சொல்வானேன்? இன்று கப்பல் முதலாளியாக இருக்கும் ஆளவந்தார் முன்பு, அரைவயிற்றுக் கஞ்சிக்கு ஆலாகப் பறந்து கொண்டிருந்த போது தன்னுடன் சேர்த்துக் கொண்டு ஆளாக்கிவிட்ட பாண்டிச்சேரி பட்டாபிகூட, பர்மாவை விட்டு வெளியேற ஆளவந்தாரின் தயவை நாட வேண்டியதாகிவிட்டது.

COMICS PDF TIMES

கள்ளத்தனமாக 'டிக்கட்' புக் செய்யும் தரகர் களுக்குக் கண்டிப்பான ஒரு உத்திரவைப் பிறப்பித் திருந்தார் ஆளவந்தார். ஆயிரம் இரண்டாயிரம் தரும் சாதாரணப் பிரயாணிகளாக அறுபது பேரைச் சேர்ப் பதைவிட, நல்ல பணக்காரர்களாக இருபது பேர்கள் சேர்ந்தால் போதும் என்று சொல்லிவிட்டார். அதன் படியே இருபது பெரிய புள்ளிகளும் கிடைத்து விட்டனர்.

சட்டரீதியான விசா உள்ள இரு பிரயாணிகளை மட்டும் சுமந்து கொண்டு 'ஜலமாயா' பர்மாவைவிட்டுக் கிளம்பியது. இடை வழியிலே இருபது பேர்களை ஏற்றிக் கொள்ளக்கூட எந்தவித இடையூறும் குறுக்கிடவில்லை. எந்த ஒரு விக்னத்திற்கும் சந்தேகத்திற்கும் இடந்தராமல் 'ஜலமாயா' கிட்டத்தட்ட பாரதக் கரையை நெருங்கி விட்டது. இன்னும் ஐந்தே மைல்கள் தான் பாக்கி! கப்பல் வெடித்து விட்டது!

அடுத்த நாள் பத்திரிகைகள் யாவும் ஒருமிக்க ஓல மிட்டன.

## ஜலமாயாவின் ஜலசமாதி !
## ஐந்தாவது மைலில் வெடித்து மூழ்கியது !

**" பர்மாவை விட்டுப் புறப்பட்ட ஜலமாயா சுமூகமாகவே மிதந்து வந்து கொண்டிருந்த போது விபத்துக்குள்ளாகி வெடித்து மூழ்கிவிட்டது. அதில் பிரயாணம் செய்த ஆறு பிரயாணிகளும் இருபது மாலுமிகளும் கப்பலோடு கடலில் பலியாகிவிட்டார்கள். கப்பலின் மேல் தளத்தில் நின்று கொண்டிருந்த கப்பல் தலைவனும் கப்பல் கம்பெனி முதலாளிகளும் கப்பல் வெடித்த வேகத்தில் வெளியே தூக்கி எறியப் பட்டதால் உயிர் தப்பினர். இவர்களைக் கரைசேர்ப்பதில் மீன் பிடி செம்படவர்கள் மிகவும் உதவி செய்திருக்கிறார்கள். இந்தச் சம்பவம் இந்தியத் துறைமுகத்திலிருந்து ஐந்தாவது மைலில் நிகழ்ந்திருக்கிறது !"**

ஃ ஃ ஃ ஃ

*'ஆளவந்தார் அண்டு அப்துல்லா கம்பெனியாருக்கு இது ஒரு பெரும் நஷ்டம்; தொழில் முறையில் அவர்கள் கவிழ்ந்துவிட்டார்கள் !' என்று பொது ஜனங்கள் பேசிக் கொண்டனர். ஆனால் கப்பல் விபத்துக்குள்ளானது கம்பெனி முதலாளிகளின் சதித் திட்டமென்ற உண்மையோ, அல்லது முன்னேற்பாடான ஒரு கடற் கொள்ளை என்பதோ வெளியே யாருமே சந்தேகிக்க இடமில்லாமல் போய்விட்டது.*

*லட்சக் கணக்கான மதிப்புடைய தங்கள் கப்பலை நாசப்படுத்திவிட்டதன் மூலம் ஆளவந்தார் அண்டு அப்துல்லா கம்பெனியார் என்ன பலனை அடைந்து விட்டனர் என்று நினைக்கத் தோன்றும். ஆனால் சில லட்சங்களை நஷ்டமடைந்து விட்ட அவர்கள், பல லட்சம் ரூபாய்கள் ஆதாயம் அடைந்துவிட்டனர் என்று சொல்லப் போனால் ஆச்சரியமாகவே இருக்கும்.*

*மூழ்கடிக்கப்பட்ட அந்தக் கப்பலில் இருபது செல்வந்தர்கள் அறுபது லட்சம் ரூபாய்களோடு பிரயாணம் செய்து கொண்டிருந்தனர். அந்த இருபது பிரயாணிகளும் நம்பிக்கை வைத்து சுமார் அறுபது லட்சம் ரூபாய்*

களையும் கப்பல் தலைவனிடம் ஒப்புவித்து, பாதுகாப்பு அறையில் பத்திரப்படுத்தி வைக்கச் சொல்லியிருந்தனர். கரை சேர்ந்த பிறகு வாங்கிக் கொள்வதாகப் பேச்சு. ஆறு வருடம் கப்பல் ஓட்டினாலும்கூட அறுபது லட்சம் சம்பாதிக்க முடியாத கப்பல் முதலாளிகள் இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தே திட்டம் வகுத்திருந்தனர் ஆதலால், கப்பல் முதலாளிகளும் கப்பல் காப்டனும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அறுபது லட்சத்தோடு, இரவு வேளையில் யாரும் கவனியாத சமயம் கப்பலைவிட்டு சிறு தோணியில் ஏறிக் கொண்டு கப்பலுக்கு வெடி (டைம் பாம்) வைத்துவிட்டு நகர்ந்துவிட்டனர்! அவர்கள் கப்பல் இருந்த இடத்தைவிட்டு வெகுதூரம் சென்றபிறகே கப்பல் வெடித்தது!

• • • •

இப்படி மூழ்கடிக்கப்பட்ட ஒரு சம்பவம் சர்வ சாதாரணமான ஒரு விபத்தாக முடிவு கட்டப்பட்டுவிட்டது. அறுபது லட்சத்தை கடலிலே வைத்துக் கொள்ளையடித்து விட்டாலும் அதை காலக்கிரமத்திலல்லவா சதி செய்தவர்கள் அனுபவிக்க முடியும்? கொள்ளையடித்த பணம் தான் இருக்கிறதேயென்று கப்பல் முதலாளிகள் தடபுடலாக இருந்துவிட்டால் சந்தேகமான ஒரு சூழ்நிலையை உண்டாக்கிவிடுமே என்பதற்காகவும், கப்பலைப் பறி கொடுத்த கம்பெனிக்காரர்கள்போல துன்பப்படுவது போல வெளிப் பாவனைக்குக் காட்டிக் கொள்வதற்காகவும் கல்கத்தாவிலே அப்துல்லா ஆண்டிவேஷம் போட்டுத் திரிந்தான். ஆத்மாராம் தரகுக்காரன் போல தங்க சாலையில் அலைந்து கொண்டிருந்தான். ஆளவந்தார் வீட்டோடு அடைந்து கிடந்து, அயலார் கண்களுக்கு தம் தரித்திர வாழ்வு வாழ்வதைப் போல காட்டிக் கொள்வதற்காக அன்றாடம் அரைப்படி அரிசி, காலணா உப்புப் புளி, அரையணா கடுகு மிளகாய் என்று வாங்கிக் கொண்டிருந்தார்! இத்தகைய கபட நாடக நடிப்பால் கப்பலைக் கவிழ்த்த சதி சிறிதுகூட வெளிப்படவில்லை.

இந்தக் கப்பல் விபத்திற்குப் பிறகு ஆறுமாதம் பர்மாவிற்குப் போதுமான போக்குவரத்தே இல்லாமல்

இருந்தது. கப்பல் போக்குவரத்தை மீண்டும் கம்பெனியார் ஆரம்பிக்கவேண்டும் அல்லது அரசாங்கம் அதன் நிர்வாகத்தை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று மக்கள், அரசாங்கத்தை வற்புறுத்தவே, கப்பல் கம்பெனிக்குச் சொந்தமான 'ஜலதாரா' கப்பலைத் தன் நிர்வாகத்திற்கு எடுத்துக் கொண்டது சர்க்கார். அந்த ஒரு ஏற்பாட்டிற்கு ஆளவந்தாரும் இதர பங்குதாரர்களும் எதிர்த்து வழக்காடாமல் பணிந்து போகவே, கப்பல் கம்பெனியார் கவிழ்ந்தே போய்விட்டார்கள் என்பது உறுதியாகிவிட்டது! ஜலமாயா கப்பலின் ஜலசமாதி பற்றி யாரும் திரித்துப் பேசவும் இடமின்றிப் போய்விட்டது!

இதெல்லாம் நடந்து இரண்டு வருஷங்களாகி விட்டன. தாங்கள் நடத்திய சதித் திட்டம் இனி வெளிப்பட இடமில்லை என்று ஆளவந்தாரும், அப்துல்லாவும், ஆத்மாராமும் பெருமூச்சு விட்டபொழுதுதான், முதல் அத்தியாயத்தில் கூறப்பட்டபடி 'ஜலதாரா' கப்பலின் காப்டன் கொலையுண்டுவிட்டான்!

கதி கலங்கினார்கள் மாஜி முதலாளிகள். காப்டனின் கொலையைப் பழைய சம்பவத்தோடு இணைத்த ஒரு விளைவாக அவர்களுக்குத் தோன்றிவிட்டது. 'ஜலமாயா' கப்பலின் ஜலசமாதி பற்றிய சதித் திட்டம் எங்கேயோ, எப்படியோ, யாருக்கோ தெரிந்திருக்கிறது. அதன் பிரதிபலிப்பாக பழிக்குப் பழி வாங்கும் கட்டம் ஆரம்பமாகிவிட்டது என்பதாகக் கிலியடைந்துவிட்டனர் முதலாளிகள்.

கப்பல் காப்டன் கொலைப்பட்டிருந்தால் மட்டும் பரவாயில்லை. அவன் பையிலே இருந்த குறிப்பு லேசானதா? அது தன் வாசகத்திலே ஒரு மர்மத்தைக் கொண்டிராவிட்டால் ஆளவந்தார் தான் மூர்ச்சை அடைவாரா!

---

## 3 பழி தீர்க்கும் படலமா?

---

மயக்க முற்றிருந்த ஆளவந்தாருக்கு அரைகுறை ஸ்மரணையில் இந்தப் பழைய நடப்புகளெல்லாம் 'விர்' ரென மனத்திரையில் தோன்றாமல் இல்லை. பழைய

பயங்கரச் சதிக்கும் காப்டனின் கொலைக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கவேண்டும் என்று நிச்சயமாக அவருடைய மனதிலே பதிந்துவிட்டது. பழிதீர்த்துக் கொள்ள முற்பட்டிருப்பவன் அடுத்தபடியாகத் தன்னை வஞ்சம் தீர்த்துக் கொள்ள முற்பட்டுவிடுவானே என்ற பீதியும் அதிகரித்துவிட்டது. இத்தனை நாளும் அசசமின்றி மிடுக்கோடு இருந்து கொண்டிருந்தது போக, இப்போது இருதய நோயாமல் பீடிக்கப்பட்டு விட்டவர் போல ஆளவந்தார் தளர்ச்சியடைந்து சாம்பிக்கிடக்க ஆரம்பித்து விட்டார். அவர் இருக்கிற அறையிலே சிறிது அதிர்ச்சி கேட்டால் கூட, "ஐயோ! கொல்ல வருகிறானே!" என்று பேத்துகிற நிலைக்கு அவர் மனம் குழம்பிப் போய்விட்டது.

ஆளவந்தாரின் மனைவியான அன்னம்மாளுக்கு அகிலமே இருண்டுவிட்டது போலாகிவிட்டது. படா டோபமாக வாழ்ந்து, இப்போது ஏழ்மையடைந்து அன்றாட அரிசி, உப்பு, புளி வாங்குகிற வாழ்க்கைக்கு வந்துவிட்டோமே என்று குமுறினாளே யொழிய, லட்சக் கணக்கான ரூபாய்களைத் தன் புருஷன் பதுக்கி வைத்திருக்கிறார், எதிர் காலம் சுபீக்ஷமாகக் கழியும் என்பதை அறிவதற்கே வாய்ப்பின்றிப் போய் விட்டது. அழுத்தக் காரரான ஆளவந்தார் அந்தரங்க சுத்தியுடன் தன்னோடு இணைந்து வாழுகிற அருமை மனைவியிடம் கூட அந்த ரகஸியத்தைச் சொல்லி வைக்கவேயில்லை! அப்படியிருகக, பாவம், தன் கண வரின் திடீர் படுக்கை பற்றிய மர்மம் அவளுக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்?

"விடியும்...விடியும் என்கிறீர்களே! கடைசியில் என் தலைமீது இடி விழுந்துவிட்டதே! எல்லாவற்றையும் இழந்து, உங்களையும் இழந்து, கண்ணான ஒரு பெண்ணை எப்படித்தான் கண்கசங்காமல் காப்பாற்றிவரப் போகிறேனோ?" என்று கணவனின் காலடியில் உட்கார்ந்து கதறி அழுதாள் அன்னம்மாள்.

அருவிபோல அன்னம்மா சிந்திய கண்ணீர்த் துளிகளைக் கண்டதும் ஆளவந்தாருக்கு அலட்டலும் உறுத் தலும் அதிகமாகிவிட்டது. அவளுக்காகப் பச்சாத்தாபப் படுபவர் போலக் கனிவு ததும்பப் பார்த்தார் அவர்.

இத்தனை நாளும் பூட்டுப் போட்டதுபோல தன் மனதிற்குள்ளே இறுக்கி மூடிவைத்திருந்த ரகஸியத்தை அவனிடம் சொல்லிவிட முடிவு கட்டிக் கொண்டவர்போல, "இப்படி வா, அன்னம்மா" என்றார் ஆளவந்தார்.

இத்தனை நாழியும் மிரள மிரள விழித்தபடி இருந்த தன் புருஷன் வாய்திறந்து பேச ஆரம்பிக்கிறாரே என்ற மகிழ்ச்சியில் கண்களைத் துடைத்துக் கொண்டு ஆளவந்தாரின் தலைமாட்டில் வந்து உட்கார்ந்து கொண்டாள் அன்னம்மாள்.

"அன்னம்மா!" என்று அருமையோடு அழைத்தார் ஆளவந்தார். "அழாதே! நீ நினைப்பதுபோல நாம் ஏழையில்லை! இந்த வீடு ஒன்றுதான் நான் விட்டுச் செல்கிற சொத்து என்று நினைக்காதே! பணம் இருக்கிறது!...லக்ஷ லக்ஷமாக இருக்கிறது! மூன்று தலைமுறைக்குப் பணத்திலே புரளலாம். நான் ஓட்டாண்டியல்லடி, ஓட்டாண்டியல்ல..."

"பணமா?...லட்சக் கணக்கிலா!...ஏதேதோ பேத்துகிறீர்களே!...ஜுரவேகம்!...அலட்டிக் கொள்ளாதீர்கள்!" என்று கூறி அவரது வாயைப் பொத்தினாள் அன்னம்மாள். தன் கணவருக்குச் சித்தம் பேதலித்துவிட்டது என்று நினைத்து அந்த அம்மாள் குமுறிக் குமுறி அழ ஆரம்பித்துவிட்டாள்!

அதே சமயம் அறைக் கதவு லேசாகத் தட்டப்படுவது அன்னம்மாவின் காதுகளுக்குக் கேட்டது. கதவைத் திறந்துவிட ஓடினாள் அவள்.

"அன்னம்மா! அவசரப்பட்டு யார் என்ன என்று விசாரியாமல் கதவைத் திறக்காதே! பழிகாரன் சுற்றிக்கொண்டிருக்கிறான்!" என்று எச்சரிக்கை செய்தார் ஆளவந்தார்.

மடியில் கனமிருப்பது அன்னம்மாளுக்கு எப்படித் தெரியும்? ஜுரவேகத்தில் தன் புருஷர் உளறுகிறார் என்ற நினைப்போடு கதவைத் திறந்து வழி விட்டாள் ஆளவந்தாரின் மனைவி.

"ஆளவந்தார் இருக்கிறாரா?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழையும் மனிதரை, கட்டிலில்

படுத்தபடியே 'குறுகுறு'வென்று பார்த்துக் கொண்டிருந்தார் ஆளவந்தார்.

"உடம்பு சௌகரியமில்லை. படுத்திருக்கிறார்!" என்று தாழ்ந்த குரலில் பதில் கொடுத்த அன்னம்மா, "அவரோடு யாரும் அதிகமாகப் பேசவேண்டாமென்று டாக்டர் சொல்லியிருக்கிறார்!" என்றாள்.

"அப்படியா?...அவருக்கு என்ன உடம்பு?" என்று கேட்டபடியே கட்டிலை நெருங்கினார் வந்த மனிதர்.

அருகில் நெருங்கிவந்துவிட்ட அம்மனிதரை வெறிக்கப் பார்த்தபடி கிடந்தார் ஆளவந்தார். அவருடைய கண் இமைகள் படபடவென்று அடித்துக் கொண்டன. "யார் நீங்கள்?" என்ற வார்த்தை தடுமாற்றத்தோடு வெளிப் பட்டது.

"சிரமத்திற்கு மன்னிக்கவேண்டும். முக்கியமான ஒரு விஷயமாக இங்கே வந்தேன். என் பெயர் ராஜாமணி..." என்றார் வந்த மனிதர்.

"ராஜாமணியா?...எந்த ராஜாமணி?...துப்பறியும் நிபுணர் ராஜாமணி என்கிறார்களே, அந்த ராஜாமணியா?" என்று பரபரப்போடு குறுக்கிட்டாள் அன்னம்மா.

"காப்டன் காசிநாதன் கொலைப்பட்ட 'ஜலதாரா' கப்பலில் பிரயாணம் செய்ததாக ஒரு துப்பறியும் நிபுணரைக் குறிப்பிட்டிருந்தார்களே, அந்த ராஜாமணியா நீங்கள்?" என்று கேட்டபடி. வாரிச்சுருட்டிக் கொண்டு படுக்கையில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டார் ஆளவந்தார். அவரது உள் மனம் 'இந்தப் பாவி எதற்காக இங்கே வந்திருக்கிறானோ தெரியவில்லையே!' என்று பதை பதைப்பதை அவருடைய நடுங்கும் அங்கங்கள் லேசுபாசாகக் காட்டின.

"ஆமாம்! அதே ராஜாமணிதான் நான்!" என்று சிரித்துக் கொண்டே, ஆளவந்தார் சாய்ந்து இருந்த கட்டிலின் ஓர் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டார் அந்த மனிதர்.

"கொலைகாரனைப் பிடித்துவிட்டீர்களா?" என்று பரபரப்பைக் காட்டினார் ஆளவந்தார்.

"முக்கால்வாசி பிடித்தது போலதான். அது சம்பந்தமாக உங்களிடமிருந்தும் சில விபரங்கள் கிடைத்து விட்டால், விலங்கை மாட்டவேண்டியதுதான்!" என்றார் ராஜாமணி மிக அமைதியாக.

"எதைப் பற்றி உங்களுக்குத் தெரியவேண்டும்?"

"பாண்டிச்சேரி பட்டாபியைப் பற்றி!"

"அவர் தான் கொலையாளியா?"

"சரியான கேள்வி தான் கேட்கிறீர்கள்!" என்று சொல்லி இடியிடியென்று சிரித்தார் ராஜாமணி. அந்தச் சிரிப்பு பட்டாபியின் ஆவி சிரிப்பது போல பிரமையை எழுப்பியது ஆளவந்தாருக்கு.

"பாண்டிச்சேரி பட்டாபியே கொலைகாரனாக இருக்கலாமோ?" என்று கேட்டார் துப்பறியும் நிபுணர்.

"அதெப்படி நான் சொல்லமுடியும்?" என்று ஆரம்பித்த ஆளவந்தார், "நீங்கள் கேட்பதன் அர்த்தமே புரியவில்லை. செத்துப்போன பட்டாபி உயிரோடு மீண்டு வந்து எப்படிக் கொலை செய்யமுடியும்!" என்றார் சமாளித்துக் கொண்டு.

"பட்டாபி எப்போது செத்தார்?"

"எப்போது செத்தார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் மரணமெய்திவிட்டார் என்பதை அறிவேன்."

"அவருக்கும் உங்களுக்கும் நெருங்கின சிநேகிதம் இருந்ததல்லவா?"

"நெருங்கின சிநேகிதம் என்று லேசாகச் சொல்லுகிறீர்களே! கப்பல் கம்பெனியை நான் ஆரம்பித்த போது அவர் தானே எனது கூட்டாளி?"

"அப்புறம்?"

"பங்கை வெட்டிக் கொண்டார்."

"அதனால் உங்களுக்குள் விரோதமில்லையே?"

"சாகிறவரை அத்யந்த நண்பர்களாகவே இருந்தோம்."

" கப்பல் காப்டன் காசிநாதனுக்கும் பட்டாபிக்கும் ஏதாவது பகை உண்டோ ?"

" காசிநாதன் என்றால் பட்டாபிக்கு அபாரமான அபிமானமாச்சே ! ஆமாம்...இதையெல்லாம் நீங்கள் கேட்கக் காரணம் ?"

" காப்டன் காசிநாதன் கொலையுண்ட கப்பலில் பட்டாபியின் மகனான ஆனந்த ரங்கனும் பிரயாணம் செய்து வந்திருக்கிறான் !"

" பிரயாணம் செய்வது தப்பா என்ன ?"

" தப்பு என்று சொல்லவில்லை. சந்தேகப்பட்டேன். அதனால் விசாரித்தேன் !'

" அவனைச் சந்தேகப்பட வேண்டிய அவசியமே இல்லை. நான் தான் அவனைப் புறப்பட்டு வரும்படியாகச் சொன்னேன். பழைய நண்பரின் மகனாயிற்றே, நம்மால் முடிந்த உதவியைச் செய்வோம் என்று அவனை இந்தியா வரும்படி கடிதம் எழுதியதும் நான் தான். அவனை நீங்கள் சந்தேகிக்கவே வேண்டாம். பட்டாபிக்கும் எங்கள் கம்பெனியில் உள்ள எவருக்கும் பகையே கிடையாது. மிஸ்டர் ராஜாமணி ! நான் உத்திரவாதம் அளிக்கிறேன். அந்தப் பையன் மீது கடுகளவுகூட சந்தேகிப்பதற்கிட மில்லை. விசாரணைக்காக அவனை நீங்கள் நிறுத்தியிருப்பதும் பெரும் தவறு. உடனே அவனைச் சுதந்திரமாக விட்டு விடுங்கள் !" என்றார் ஆளவந்தார்.

" உங்கள் அபிப்பிராயம் அப்படியானால் எனக்கு ஆக்ஷேபணையில்லை. ஒரு உண்மையை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியிருக்கிறது. காப்டனின் கழுத்தை நெறிக்க எந்தக் கயிறு உபயோகப் படுத்தப்பட்டிருக் கிறதோ, அந்தக் கயிறு ஆனந்த ரங்கனின் படுக்கை கட்டும் கயிறாக இருக்கிறது !"

" ஒருக்காலும் இருக்க முடியாது. அப்படியே இருந் தாலும் ஆனந்தரங்கன் மீது பழி போடுவதற்காகக் கொலைகாரன் அதைத் திருடி ஏன் கொலை செய்திருக்கக் கூடாது ?"

"வேறு யாரும் சந்தேகத்திற்கிடமானவராக இல்லையே!"

"காசிநாதனே தற்கொலை செய்து கொண்டிருக்கக் கூடாதா?"

"அந்தச் சந்தேகம் உங்களுக்கு ஏற்படக் காரணம்?"

"அனுமானத்தில் சொன்னேன். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். ஆனந்த ரங்கன் அவனைக் கொலை செய்திருக்க மாட்டான்!"

"உங்கள் தீர்மானம் அதுவானால் நான குறுக்கே நிற்கப் போவதில்லை. ஆனால் ஒன்றுமட்டும் எச்சரிக்கிறேன். ஆளவந்தாரே, ஆனந்த ரங்கன் உங்கள் விரோதியின் மகன் என்பது எனக்கு நிச்சயம் தெரியும், பாம்புக்குப் பால் வார்ப்பது போல அவனை இப்போது உங்கள் குடும்பத்தோடு இணையவைத்து வாழவைக்க முற்பட்டிருக்கிறீர்கள். காசிநாதன் கொலைப்பட்டதிலிருந்து பழி தீர்க்கும் படலம் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவே நான் உணர்கிறேன். ஆனந்த ரங்கன் உங்கள் வீட்டோடு இருந்து, என்றுவது ஒரு நாள் அவன் உங்களைக் கொல்ல முற்படும் போது, பழி தீர்க்கும் படலத்தின் இரண்டாவது பலிக்கு நாம் இலக்காகிவிட்டோமே என்று கதறி உயிர் விடுவீர்கள்! இதற்கு மேல் அதிகம் எனக்குச் சொல்ல வராது. போய் வருகிறேன், ஆளவந்தாரே!" என்று சொல்லிக் கொண்டே எழுந்து விரைந்தார் ராஜாமணி.

ராஜாமணி வாசற்படியைத் தாண்டியிருக்கமாட்டார். வெறிபிடித்தவர்போல வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த ஆளவந்தார், "பட்டாபி எனக்கு எந்த நாளும் விரோதியில்லை. இல்லாத ஒரு விரோதத்தை இடையிலிருப்பவர்கள் கிளப்பவும் ஒரு நாளும் ஒப்பமாட்டேன்!" என்று உரத்த குரலில் ராஜாமணியின் காதுக்குப் படும்படியாகக் கத்தினார்.

ராஜாமணியின் கால்கள் நிலைவாசல் அருகே சிறிது தயங்கி நின்றன. பிறகு சட்டென நடையைத் துரிதப் படுத்திக் கொண்டன.

இந்த நடப்புகள் யாவற்றையும் இமை கொட்டாது கவனித்துக் கொண்டிருந்த அன்னம்மாள், ஒன்றுமே

புரியாதவளாய் ஆளவந்தார் அருகே வந்து நின்று அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஆளவந்தாரும் சிறிது நேரம் வரை எதுவுமே பேச வில்லை, அவரது யோசனை இப்போது வேறு திசையில் திரும்பிவிட்டது! துப்பறியும் நிபுணர் ஆனந்த ரங்கனை சந்தேகிக்கிறாரே, ஒருக்கால் அவனது தந்தை வஞ்சிக்கப் பட்ட விதத்தை அவன் அறிந்து கொண்டிருப்பானோ என்று சிந்திக்கலானார்.

ஃ ஃ ஃ ஃ

ஆயுள் காலத்தில் ஒரு மனிதன் எப்படி யெப்படி யெல்லாமோ அக்ரமங்கள் புரிந்திருந்தாலும் கூட, அந்திம காலத்தில் அதையெல்லாம் நினைத்துப் பார்க்காமல் இருக்கமாட்டான். தன் பழம் செய்கைகளின் நல்லது கெட்டதுகளை எண்ணிப் பார்த்துக் கழிவிரக்கம் கொள் வதும் உண்டு. ரத்தம் வீரியத்தை இழந்து, மினு மினுக் கும் தோல் சுருங்கி, விரைத்து நிற்கும் நரம்புகள் முறுக் குத் தளரும் சமயத்தில் மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொரு வருக்கும் இதைப் போன்றதொரு மனத்திருப்பம் ஏற்படு வது இயல்பு.

இந்த ஒரு கழிவிரக்கம் ஆறு மாதத்திற்கு முன்னால் ஆளவந்தாருக்கு ஏற்பட்டது. ஆதி நாளில் செங்கான் கடையில் திரிந்து கொண்டிருந்ததையும் இப்போது செல் வங்கொழிக்கும் ஒய்யார மாளிகையில் உல்லாசமாக வீற் றிருப்பதையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டார். இந்த ஒரு நிலைக்கு உயர்ந்தது யாரால் என்பதையும் எண்ணிப் பார்த்தார், பாண்டிச்சேரி பட்டாபி தம் வாழ்வில் குறுக் கிட்டிராவிட்டால், தாம் எப்படி யெல்லாம் அவதிப்பட நேரிட்டிருக்கும் என்பதையும் நினைத்துப் பார்த்தார். கடைசிவரை பட்டாபி தம் விஷயத்தில் எவ்வளவு பெருந் தன்மையோடு விட்டுக் கொடுத்தான் என்பதையும் அவர் உணரக்கூடிய அறிவு வந்தது. சிந்தித்துப் பார்த்தார். பலவிதங்களில் தம் மனச் சாட்சியோடு தர்க்கவாதமும் தமக்குள்ளே புரிந்து பார்த்தார், வாழவைத்தவனுக்கு

வத்தி வைத்துவிட்டாயே என்று இடித்துக் காட்டியது மனச் சாட்சி.

மனச் சாட்சியை வென்றவர்கள் இந்த உலகிலே யார் உண்டு? பட்டாபிக்கு தம்மால் இழைக்கப்பட்ட அநீதி ஒரு மகா துரோகம் என்பது ஆளவந்தாரின் மனதுக்குப் பட்டது. கப்பலைக் கவிழ்க்கச் சதி செய்ததுகூட பெரிய தொரு குற்றமாக அவருக்குத் தோன்றவில்லை. கப்பலை வெடிக்க வைப்பதற்கு முன்னால் பட்டாபியை எச்சரிக்கை செய்து தாம் தப்பிய மார்க்கத்தில் அவனையும் தப்பு விக்காததையே பெரியதொரு வஞ்சகமாக நினைத்து வாதனைப் பட்டார் ஆளவந்தார்.

பட்டாபியைத் தப்புவிக்க வைத்திருந்தால் அதனால் ஆளவந்தாரின் குடியோ அல்லது அவரது சகாக்களின் குடியோ முழுகிப் போயிருக்காது. இருபது பேரைச் சாகடித்ததன் மூலம் அறுபது லட்சம் பணத்தை அமுக்க முடிந்தது. அதில் பட்டாபியின் ஆறு லட்சம் குறைந்தால் என்ன குறைச்சல் ஏற்பட்டுவிடும்? பட்டாபிக்கு இழைத்த துரோகத்தின் மூலம் ஆளவந்தார் அனுபவித்தது நாலில் ஒரு பங்கான ஒன்றரை லட்சம் ரூபாய்கள்தானே! இப்போது அவரிடம் இருக்கும் இருபது லட்சத்திற்கு எதிரே மேலே கண்ட ஒன்றரை லட்சம் எவ்வளவு சிறிய தொகை!

ஆளவந்தாரின் சிந்தனையும் கழிவிரக்கமும் இதோடு நிற்கவில்லை. இன்னொரு விதத்திலும் புகுந்து புறப்பட்டது 'ஜலமாயா' கவிழ்ந்து இரண்டு வருஷங்களுக்கு மேலாகி விட்டது. இதுவரை அந்த சூது துளிகூட வெளிப்பட வில்லை. **ஆனால் எந்தக் குற்றமும் எக்காலத்தும் மூடு மந்திரமாக இருந்ததில்லை. அது வெளிப்பட்டே தீரும்.** எப்போதாவது தம் கபடகாரியம் லேசாக வெளிப்பட்டு, பட்டாபியின் குடும்பத்துக்கும் அது தெரிந்து விடுமே யானால் பழி தீர்க்கும் படலம் எத்தகைய கொடுமை கொண்டதாக இருக்கும் என்பதை ஆளவந்தார் நினைத்துப் பார்த்தார். பட்டாபியின் உற்றார் உறவினர் கொல்லு கொலைக்கும் அஞ்சாதவர்கள் என்பது பிரசித்தம். இதை நினைக்கும்போதே ஆளவந்தாருக்கு அங்க மெல்லாம் நடுங்கியது.

இப்படி ஒரு மனப் போராட்டம் ஆறு மாதத்திற்கு முன்பு அவருக்குள்ளே நடந்து கொண்டிருந்தபோதுதான் பர்மாவிலிருந்து ஆனந்தரங்கனின் கடிதம் ஒன்று ஆளவந்தாருக்கு வந்தது.

" அன்புள்ள மாமா அவர்கட்கு,

எனது இந்தக் கடிதம் உங்களுக்குத் திகைப்பைத்தரலாம். நீண்டநாளாக யோசித்தே இந்தக் கடிதத்தை உங்களுக்கு எழுதலானேன். நான் கூறப் போகும் விஷயங்களெல்லாம் உங்களுக்குத் தெரிந்திருக்குமோ தெரியாதோ!

" இரண்டு வருஷத்திற்கு முன்னால் பர்மா இருந்த நிலைகண்டு, அப்பர் தாம் தேடிய செல்வத்தோடு இந்தியா போய்விட முயற்சிகள் செய்தார். விசா கிடைக்காததால் கள்ளத் தோணியாவது கிடைக்காதா என்று அலைந்து திரிந்தார். ஒருநாள் இரவோடு இரவாக வீடு திரும்பிய அவர், இந்தியா சென்றுவிட ஏதோ இரகசிய சந்தர்ப்பம் கிட்டியிருப்பதாகவும், ரொக்கமும் தங்கமுமாக இருக்கும் செல்வங்களை மட்டும் தம்மோடு எடுத்துக் கொண்டு கிளம்பப் போவதாகவும் கூறினார். அப்பா எப்படியேனும் பத்திரமாக இந்தியா போய்விட்டால் பிறகு, என்னை அழைத்துப் போக ஏற்பாடுகள் செய்துவிடுவார் என்று நம்பிக் கொண்டிருந்தேன். சுமார் ஆறு லட்சம் மதிப்போடு அவர் கிளம்பிய பிரயாணம் இன்னும் முடிவடையவில்லை போலும். அப்பாவிடமிருந்து அதற்குப் பிறகு ஏதும் கடிதம் கிடையாது.

" அப்பா பத்திரமாய் இந்தியா சேர்ந்துவிட்டாரா என்பதை அறிய பாண்டிச்சேரியில் உள்ள அப்பாவின் சிநேகிதர்கள் அத்தனை பேருக்கும் கடிதம் எழுதிப் போட்டேன். எல்லோரிடமிருந்தும் பதில் வந்தது. ஆனால் அப்பா வந்து சேர்ந்தார் என்று ஒருவருமே நல்ல சேதி தரவில்லை. கள்ளத்தோணியில் பிரயாணம்

செய்த அப்பா எந்த ஆபத்திலாவது சிக்கி மாண்டிருப்பாரோ என்ற சந்தேகமே இப்போது என்னைப் பலமாகப் பிடித்தாட்டுகிறது.

"இங்கே நானிருக்கும் நிலை சொல்லுந் தரமன்று. அப்பா வட்டுச் சென்ற ஆயிரம் இரண்டாயிரத்தை வைத்துக் கொண்டு அப்படி இப்படியாக இரண்டு வருடத்தைக் கழித்து விட்டேன். இபபோது அன்ருடச் சோற்றுக்கே அவஸ்தைப்படும் நிலையில் நான் இருக்கிறேன். இந்த லக்ஷணத்தில் இரகசியப் போலீசார் எதற்காகவோ அப்பாவைத் தேடிக் கொண் டிருக்கிருர்கள்! என்னைப் பலமுறை கூப்பிட்டு விசாரித்தார்கள்! கள்ளத் தோணியில் அப்பா இந்தியா சென்றதாக நான் கூறவேயில்லை! அவ்வப்போது எனக்குத் தோன்றுகிற சாக்குப் போக்குகளைக் கூறிக் கொண்டிருக்கிறேன்.

"பட்டினிக்கிடையே நான் படிப்பை எப்படி மேற்கொள்ளமுடியும்? இன்னும் ஒரு வருடம் படித்து முடித்து விட்டேனேயானல் பி. ஏ. பாஸ் செய்திருக்கலாம். பணக்காரத் தந்தையின் மகனுக நான் வளர்ந்தும் கடைசிக் கதி எனக்கு இப்படியாக ஏற்பட்டுவிட்டது.

"எனக்கு இந்தப் பர்மாவில் இருக்கவே பிடிக்கவில்லை. காசில்லையே என்ற கவலை கூடத் தோன்றவில்லை. இரகசியப் போலீசாரின் நடவடிக்கைதான் என்னை கிலியடித்து வருகிறது. எப்படியேனும் இந்த பர்மாவை விட்டுக் கிளம்பினுல் போதுமென்ருகிவிட்டது.

"எனக்கு இங்கே உதவி செய்வோர் யாரு மில்லை. யாருக்கு எழுதினுல் உதவி கிடைக்கும் என்று இத்தனை நாளும் யோசனை செய்து பார்த் தேன். அப்பாவினுல் முன்னுக்கு வந்த பலரை உதவி வேண்டி நாடினேன்; அத்தனை பேர்களுமே நன்றி கெட்டவர்களாக இருக் கின்றனர்!

" கடைசியாக உங்கள் உதவியைக் கேட்க முடிவு செய்துகொண்டேன். கடிதத்தை எழுதித் தபாலிலும் சேர்த்துவிட்டேன். நீங்கள் எனக்கு எந்த வகையில் உதவி செய்யப் போகிறீர்கள் என்பதுதான தெரியவில்லை.

"நான் உங்களை ஆயிரம் பதினாயிரம் கேட்க வில்லை. பர்மாவைவிட்டு இந்தியா வந்தடைந் தால் போதும். இங்கே நான் 'விசா'வுக்காக எத்தனையோ விதங்களில் முயற்சி செய்தும் பிரயோசனமில்லை. நீங்கள் மனம் வைத்தால் 'விசா' வாங்கித் தரமுடியும். நான் இந்தியா செல்ல ஏற்பாடும் செய்துதரமுடியும்.

" அப்பாவுடன் நீங்கள் பழகிய தோஷத் திற்காகவாவது இந்தச் சிறு உதவியை எனக்குச் செய்துதருவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

தங்களன்புள்ள,

**ஆனந்தரங்கம்** "

∴ ∴ ∴ ∴

பட்டாபிக்கு இழைக்கப்பட்ட தீங்குக்கு என்றாவது யாராலாவது பழி தீர்க்கும் படலம் ஆரம்பிக்கப்படுமோ என்று பயந்துகொண்டிருந்த ஆளவந்தாருக்கு, ஆனந்த ரங்கத்தால் எழுதப்பட்ட இந்தக் கடிதம் சிறிது ஆத்ம சாந்தியைத் தந்தது. கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஆனந்த ரங்கனை பர்மாவிலிருந்து வரவழைத்து தம்மிடம் வைத்துக் கொண்டால், பட்டாபியின் மரணம் பற்றிய உண்மை உலகத்துக்குத் தெரிந்தால் கூட, ஆனந்த ரங்கனை அன்போடு நடத்துவது சந்தேகத்திற்கு மாற்றுத் தேடித் தந்துவிடும் என்று கருதலானார். ஆகவே, ஆனந்த ரங்கனைத் தம் பராமரிப்பிலும் பாதுகாப்பிலும் வைத் திருப்பது பலவிதத்திலும் ஆளவந்தாருக்கு அனுசரணை தரத் தக்கதாக இருந்ததால், அவனை வரவழைத்துக் கொள்ளச் சகல ஏற்பாடுகளும் செய்து கொடுத்தார்.

அப்படி தம்மால் செய்து கொடுக்கப்பட்ட உதவியைக் கொண்டே, இப்போது ஆனந்த ரங்கன் 'ஜலதாரா' கப்பலில் வந்திருக்கிறான் என்ற விஷயம் துப்பறியும் ராஜாமணி சொல்லிய பிறகு தான் ஆளவந்தாருக்குத் தெரியவந்தது !

"அன்னம்மா !" என்று கூப்பிட்டார் ஆளவந்தார்.

"என்ன வேண்டும் ?" என்று கேட்டபடி கனிவோடு தன் கணவன் அருகே வந்து உட்கார்ந்து கொண்டாள் ஆளவந்தாரின் மனைவி.

"ஆனந்த ரங்கன் பர்மாவிலிருந்து வந்திருக்கிறான். இன்னும் கொஞ்ச நேரத்தில் இங்கே வந்து சேர்வான்" என்று பேச்சை இழுத்தார் ஆளவந்தார்,

"அவனை எதற்காக வரவழைத்தீர்களாம் ?" என்று முகம் சிணுங்கினாற்போலக் கேட்டாள் அன்னம்மா.

"காரியத்தோடு தான் வரவழைத்திருக்கிறேன். போகப் போக நீயே தெரிந்து கொள்வாய் !" என்றார் ஆளவந்தார் சிரித்துக் கொண்டே. பிறகு அவர் "உஷா படித்தவரை போதும். இன்றோடு அவள் படிப்பை நிறுத்திவிடலாம். வயது காலத்தில் என்னைவிட்டு அவள் ஹாஸ்டலில் தனித்திருப்பதை விரும்பவில்லை. நீ போய் அவளைக் கூட்டிக் கொண்டு வந்து விடுகிறாயா ?" என்றார்.

புருஷனின் எண்ணங்களுக்கு எப்போதுமே எதிர் வார்த்தை பேசி அறியாத அன்னம்மா, "இன்றைக்கே போய்க் கூட்டிக் கொண்டு வந்துவிடச் சொல்லுகிறீர்களா ?" என்று கேட்டாள்.

"ஆமாம் !" என்பது போலத் தலை அசைத்தார் ஆளவந்தார்.

பெண்ணைக் கூட்டிவர அன்னம்மாள் அந்த இடத்தைவிட்டு அகன்றாள்.

அன்னம்மாள் போய் ஐந்து நிமிஷம் கூட இருக்காது. முன்பின் அந்த வீட்டிற்குள்ளே அடிக்கடி வந்து போனவன் போல தடபுடலாக உள்ளே நுழைந்தான்

ஒருவன். அவன் வந்த வேகமும் முகத்திலே காணப் படும் கடுகடுப்பும் அவனுக்குள்ள பதை பதைப்பையும் ஆத்திரத்தையும் நன்கு வெளிப்படுத்திக் கொண்டிருந்தன.

" ஆளவந்தார் ! யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளும் என்பார்களே, அதுபோல இருக்கிறது உமது செய்கை. ஆனந்த ரங்கனை எதற்காக இங்கே வரவழைத்திருக்கிறீர்கள் ? அது எனக்குத் தெரிய வேண்டும் !" என்ருன் வந்த மனிதன்.

அவன் ஆளவந்தாருக்கு முன்பின் தெரியாதவனல்ல! முன்பின் தெரியாதவனுக இருந்தால் 'ஏன் வரவழைத் தீர்கள் ?' என்பதாக அவ்வளவு சுதந்திரத்துடன் கேட்க முடியாதல்லவா !

" நமது நல்லதற்காகத்தான் ஆனந்த ரங்கனை இங்கே வரவழைத்திருக்கிறேன். தன்னை ஆதரிக்கும்படி அவன் வேண்டினுன். நான் தயை காட்டினேன். இதுகூட நான் பட்டாபியின் மகனுக்குச் செய்யாவிட்டால் பரத்திலே எனக்கு என்ன சுகம் கிடைக்கப் போகிறது !" என்ருர் ஆளவந்தார்.

" இகத்திலே தான் உமக்கு என்ன கிடைக்கப் போகிறது. கண்டதுண்டமாக நீங்கள் வெட்டுப்படப் போகிறீர்களே, அதை விடவா பரலோகக் கஷ்டம் ஒன்று இருக்கப்போகிறது !" என்ருன் மாற்ருன்.

ஆனந்த ரங்கனின் வரவு அத்தகைய பயங்கரச் சூழ்நிலை கொண்டதா என்பதை நினைத்துத் திகைத்தார் ஆளவந்தார்.

" கொக்கு தலையில் வெண்ணை வைத்துப் பிடிக்க நீர் திட்ட மிடுகிறீர், ஆளவந்தார் ! ஆனுல் நீர் வெண்ணை வைக்கிறவரை கொக்கு தலை நீட்டிக் கொண்டிருக்காது. அந்த உண்மையை நீர் உணர வேண்டும். அண்டிப் பிழைக்க ஆதரவு தருமாறு ஆனந்த ரங்கன் கடிதம் எழுதினதாகக் கூறுகிறீர்கள். அவன் அப்படிக் கடிதம் எழுதியது அந்தரங்க சுத்தியோடு அல்ல என்பதை நீர் அறியமாட்டீர். அண்டிக் கெடுக்கும் அத்தியாயத்தின் முதல் கட்டம் அந்தக் கடிதம். அதை உங்களால் கண்டு பிடிக்க முடியாது, ஆளவந்தாரே !"

"அப்படி நான் நினைக்கவில்லை. குற்றமுள்ள நெஞ்சு உமக்கு. அதனால் குறுகுறுக்கிறது. மருண்டவனாக நீர் இருப்பதால் இருண்டதெல்லாம் பேயாகத் தோன்றுகிறது! ஆனந்த ரங்கன் மிகவும் வாலிபன். பயங்கரங்களை பழுதறச் செய்து முடிக்க வளர்ச்சி இல்லாத வாலிபன். அவனால் எனக்கு எதுவும் தீங்கிருப்பதாக நான் கருத வில்லை."

"அவனால் தீங்கிருக்காது என்பது உமது தைரியம். ஆனால் அவன் அப்பன் கூடவா அப்படி? ஆளவந்தாரே! பாண்டிச்சேரி பட்டாபி இன்னும் சாகவில்லை!"

தூக்கிவாரிப் போட்டது போல "என்ன!" என்று கேட்டு அலறினார் ஆளவந்தார். 'தெரியாவிட்டால் என்னிடமிருந்து கேட்டுக் கொள்' என்பதுபோல கள்ள நகை நகைத்தான் இன்னொருவன்.

"ஆளவந்தாரே! மிகமிகச் சாமர்த்தியமாகத் தான் திட்டம் போட்டோம். கப்பலைக் கவிழ்த்தோம். கைக்குக் கிடைத்த காசுகளை அமுத்திக் கொண்டோம். நம் கையாலேயே கப்பலுக்கு வெடி வைத்தோம். அது உண்மை. கப்பல் வெடித்து முழுகுவதை தூரத்திலிருந்து பார்த்தோம். அதையும் நான் மறுக்கவில்லை. அதிலிருந்த இருபது பணக்காரர்களும் காலகதியை அடைந்தார்களா என்பதை நாம் கண் கூடாகப் பார்க்கவில்லை. அவர்கள் எந்த விதத்திலும் கரை சேர்ந்திருக்க முடியாது என்பது மட்டுமே நமது யூகம். கப்பல் விபத்திலே சிக்குண்டவர்கள் அத்தனை பேரும் செத்துவிடுவதில்லை. தப்பித் தவறி ஒருவராவது பிழைத்துக் கரை சேர்ந்துவிடுவது உண்டு. அந்த ஒரு அதிர்ஷ்டம் பாண்டிச்சேரி பட்டாபிக்குக் கிடைத்திருக்கிறது!"

"நிஜமாகவா? பட்டாபி விபத்திற்குப் பலியாகாமல் தப்பிவிட்டான் என்பது உமக்கு எப்படித் தெரியும்?"

"தெரியவந்ததால் தான் சொன்னேன்!"

"அதற்கு ருசு?"

"என் வாய்ச் சொல் நம்பிக்கை யளிக்கவில்லை உமக்கு! ஆதாரம் கேட்கிறீர். அந்த ஆதாரத்தை நான்

உமக்குக் காட்டினுல் என் தலை போய்விடும் ஆளவந்தாரே! உம் நல்லதற்காக நான் நமனுலகம் செல்ல வேண்டுமா?''

ஆளவந்தாருக்கு அதிர்ச்சி அதிகரித்து விட்டதாலோ என்னவோ, அர்த்தமற்று முகட்டைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தார்.

சிறிது நேரம் வரை வந்தவனும் எதுவும் பேசவில்லை.

இந்த மௌனத்தை நீடிக்க விடுவதற்காகவா, அந்த மனிதன் ஆளவந்தாரைப் பார்க்கவந்தான்!

"பழகின தோஷம்! மேலும் பங்காளியாக வேறு இருந்திருக்கிறேன். அந்த ஒரு நட்பு முறையால் சொல்லுகிறேன். ஆனந்தரங்கனை வரவழைத்து விட்டீர். அவனும் வந்து சேர்ந்துவிட்டான! ஆனல் அவன் எந்தச் சதித்திட்டத்தோடும் பழி மனப்பான்மையோடும் வந்திருக்கிருனே அதற்கு நீர் ஆளாகிவிடாமல் பார்த்துக் கொள்ளும். என்னைக் கேட்டால் நான் சொல்லும் யோசனை விபரீதமாகப்படும். அந்த என் யோசனையை நீர் ஏற்றுக்கொண்டால் உமக்கும் ஆபத்தில்லை; எனக்கும் ஆபத்தில்லை!'' என்று சொல்லி நிறுத்தினுன் வந்தவன்.

தமக்கு வரவிருக்கும் ஆபத்து எப்படியாவது தீர்ந்தால் போதும் என்ற எண்ணத்திற்கு வந்துவிட்ட ஆளவந்தார், "என்ன செய்ய வேண்டும், சொல்லேன்!'' என்று பதறினுர்.

"துப்பறியும் போலீசார் உம்மிடம் வரலாம். கொலையுண்ட காப்டன் காசிநாதனின் விஷயமாய் ஏதாவது அபிப்பிராயம் கேட்க முற்படுவார்கள். அந்தக் கொலையை நடத்தியது ஆனந்த ரங்கனுகத் தான் இருக்க வேண்டும் என்பது அவர்களது எண்ணம். உம்மைக் கேட்டால் அதற்கு அனுசரணையாகப் பதில் சொல்லிவிடும். ஆனந்தன் போலீஸின் பிடியிலிருந்து தப்ப முடியாது. ஆனந்தரங்கன் கொலைக் குற்றம் சாட்டப்படுவான். அப்போது பட்டாபி எங்கிருந்தாலும் தன் மகனைக் காப்பாற்ற முனவருவான். நம் உதவியையும் வலியவந்து நாடுவான். அந்தச் சந்தர்ப்பத்தை நாம் உபயோகித்துக் கொண்டு நம் விஷயங்களை அவன் வெளிப்படுத்தாதவாறு

ஓர் உடன்பாட்டுக்கு வந்துவிடலாம். அப்புறம் நமக்கு எப்போதுமே பயமில்லை !...எனக்குத் தெரிந்த யோசனை இதுதான் !”

“மூழ்கிய கப்பல் விபத்திற்குப் பலியாகாமல் பட்டாபி தப்பியிருப்பான் என்ற அனுமானத்தோடு இந்த யோசனையைத் தெரிவிக்கிறாய். பட்டாபி அந்த விபத்தி னின்றும் தப்பித்திருப்பான் என்பது உனது யூகமாகும். அந்த யூகம் தப்பாகி, பட்டாபி செத்தே போயிருந்தால், ஆனந்த ரங்கன் மீது சுமத்தப்பட்டது வீண் பழியாக ஆவதுடன் ஒரு நிரபராதியைத் தூக்கிலேற்றிய பாபமும் நம்மைப் பிடிக்குமே ! என்ன பாபம் செய்தோ, இன்று நம்மிடம் ஏராளமான பணமிருந்தும், அதை எடுத்துப் புழங்கமுடியாமல் கஷ்ட ஜீவனம் செய்கிறோம். செய்த பாபத்திற்கே இன்னும் விமோசனம் கிடைக்கவில்லை. அதோடு மற்றொரு பாபத்தையுமா சுமக்கவேண்டும் ?”

“நீர் நினைப்பதுபோல் பட்டாபி சாகவில்லை, ஐயா சாக வில்லை. நான் சொல்வதும் வெறும் யூகத்தால் அல்ல. கொஞ்ச நஞ்சம் சந்தேகமிருந்தால் இதோ இந்தக் கடி தத்தை, எனக்கு பர்மாவிலிருந்து கிடைத்திருக்கும் இந்தக் கடிதத்தை வாசித்துப் பாரும். எல்லாம் புரியும் !” என்று அலக்ஷியமாகக்கூறி, தன் ஜேபியிலிருந்த ஒரு கடிதத்தை ஆளவந்தார் முன்னே விசிறிப் போட்டான் வந்தவன்.

ஆளவந்தாரோடு இத்தனை நேரமும் பேசிக் கொண் டிருந்தவன் வேறு யாருமில்லை. அவருடைய பங்காளியான ஆத்மாராம் தான் அவன் !

ஆத்மாராம் தூக்கியெறிந்த கடிதத்தைப் பரபரப் போடு பிரித்துப் பார்த்தார் ஆளவந்தார், அக்கடிதத்தைப் படிக்கப் படிக்க அவர் உடம்பு அச்சத்தால் அதிர்ந்து உதற ஆரம்பித்தது. அது பட்டாபியால் எழுதப்பட்ட கடிதமாக இருந்தது.

---

## 4 சாகாதவனும் சாகப்போகிறவனும் !

---

ஆத்மாராம் தந்த கடிதத்தை ஆளவந்தார் படிக்கப் படிக்க அவருடைய உடம்பே பதற ஆரம்பித்துவிட்டது.

அந்தக் கடிதம் பின் வருமாறு அறை கூவியது:

ரங்கூன்,
15-3-1954.

ஆத்மாராம் அவர்கட்கு,

இந்த என் கடிதத்தைப் பார்த்து நீங்கள் அதிர்ச்சியடைய நேரிடும். 'ஜலமாயா'வின் விபத்திலிருந்து பட்டாபி தப்பிவிட்டானே என்பதை இக்கடிதம் மூலம் தெரிந்து கொண்டதும் கதிகலங்கிப் போவீர்கள் என்பதையும் நான் அறியாமல் இல்லை. ஆனால் நீங்கள் கலக்கமுறவேண்டாம். என் சொல்படி நீங்கள் நடந்து கொள்கிறவரையில் என்னால் உங்களுக்கு எந்தத் தொந்திரவும் இருக்காது!

பாம்பின் காலைப் பாம்பறியும் என்பார்கள். ஆளவந்தாரின் அந்தரங்கத் திட்டத்தை அவருக்குக் குருவாக விளங்கிய பட்டாபியால் அறிந்து கொள்ள முடியாமற் போயிற்று என்றால் எவ்வளவு இழுக்கானது என்பதை நான் அறியாமல் இல்லை. கள்ளத்தோணிக் கலையையும், கடற்கொள்ளையடிப்பதில் நாசூக்கையும் கற்றுக் கொடுத்த நானே, ஆளவந்தாரின் திட்டத்தில் அகப்பட்டு உயிரிழந்து விடுவேனா?

பர்மாவைவிட்டு என் செல்வங்களோடு இந்தியா செல்ல நான் முற்பட்டதில் ஏதும் சூது இல்லை. சூழ்ச்சியும் கிடையாது. கடல் தாண்ட ஆளவந்தாரின் உதவியை நாடினேன்—யாரை அவர் மோசம் செய்தாலும் அவரை ஓர் ஆளாக்கிவிட்ட எனக்கு மோசம்செய்ய நினைக்கமாட்டார் என்ற நம்பிக்கையில்! ஜலமாயாவில் எனக்கு இடம் கிடைத்தது. ஏறிக் கொண்டேன். ஆனால் அந்தக் கப்பல் பிரயாணத்தில் ஒரு நிமிஷம்கூட நான் கண்ணயரவேயில்லை. கள்ளனை நம்பினாலும் காப்பாளன் காப்பாளனாகத்தானே இருக்கவேண்டும்? அந்த ரீதியில் என் கண்ணோட்டமெல்லாம் உங்கள் பக்கமே இருந்து வந்தது. அப்போது நீங்கள் நால்வரும் அடிக்கடி கூடிப் பேசுவது என் சந்தேகத்தை அதிகரித்தது. நானும் எச்சரிக்கையானேன். அந்த நிமிஷம் முதல் உங்களைக் கண்காணிப்பதில் தீவிரமாக இருந்தேன்.

'ஜலமாயா' வெடித்து மூழ்கு முன்பாக நாலுமணி நேரத்திற்கு முன் நடந்ததை உங்கட்குச் சொன்னால்

போதுமென எண்ணுகிறேன். 'ஜலமாயா' மூழ்கியது அதிகாலை ஐந்து மணிக்கு. அன்று இரண்டுமணி சமாருக்கு, நல்ல இருட்டிலே நீங்கள் நால்வரும் 'லைப் போட்டை' (ஆபத்துதவிப் படகை) கீழே தண்ணீரில் மிதக்க விடுவதைக் கண்டேன், எனக்கு ஏதோ சந்தேகம் தட்டியது. மேலும் நடப்பதென்ன என்பதைக் கவனித்தேன். நீங்கள் நால்வரும் அந்தச் சிறு போட்டில் ஏறிக் கொண்டு இருளிலே, கடலிலே மறைவதைக் கண்டேன். உங்கள் திட்டம் என்ன வென்பது எனக்குச் சரிவரப் புலப்படவில்லை. நீங்கள் சென்ற பிறகு பணம் வைக்கப் பட்டிருந்த பாதுகாப்பு அறையை அடைந்து கவனித்தேன். நான் உள்பட, இதர பிரயாணிகள் யாவரும் உங்கள் கப்பல் தலைவனிடம் ஒப்புவித்த செல்வத்தில் செப்பாலடித்த காசுகூட அங்கே விட்டு வைக்கப்படாமலிருப்பதைக் கண்டேன். என் மனதிற்கு ஓர் எண்ணம் தோன்றியது. அகப்பட்ட பணத்தைச் சுருட்டிக்கொண்டு நீங்கள் நால்வரும் எங்காவது ஓடிவிடத் திட்டமிட்டிருக்கிறீர்கள் என்பதை அறிந்துகொண்டேன். தான் கற்ற வித்தையை ஆசானிடமே காட்டுவதென்றால் எந்த குருவுக்குத்தான் பொறுக்கும். உடனே கப்பலிலிருந்து இன்னொரு லைப்போட்டை (ஆபத்துதவிப்படகை) கடலில் மிதக்கவிட்டு அதில் ஏறிக் கொண்டு உங்களைப் பின் பற்றினேன். நல்ல இருட்டாக இருந்ததால் நீங்கள் எத்திசையில் சென்றீர்கள் என்பதையே அறிய முடியாமல் திண்டாடினேன்.

அப்படித் திண்டாடிக் கொண்டிருக்கும்போது இடி முழக்கம் போன்ற சப்தம்கேட்டது! என்ன பரிதாபக் காட்சி! 'ஜலமாயா' வெடித்துத் தூள்தூளாகிக் கடலில் சமாதி கொள்வதைக் கண்ணாரக் கண்டேன்.

எனக்கேற்பட்ட ஆத்திரம் கொஞ்ச நஞ்சமல்ல, உங்களைப் பின் பற்றித் துரத்தவேண்டும் என்ற புத்தி எனக்கு அப்போது ஏற்படாதிருந்தால் ஜலமாயாவின் அழிவோடு நானும் அழிந்துதானே இருக்கவேண்டும்? அப்போது ஆளவந்தாரின் மீதுதான் எனக்கு அதிக ஆக்ரோஷம் ஏற்பட்டது! நீங்கள் மூன்று பேர் அன்னியர். ஆனால் என்னோடு ஆத்மார்த்திகமாக இருந்த ஆளவந்

தார் எனக்குச் செய்யத் துணிந்த துரோகத்தை என்னால் பொறுக்கவே முடியவில்லை.

ஆத்திரமான அந்தச் சமயத்தில் நல்ல வேளையாக நிதானமாக நடந்து கொண்டேன். உங்களைத் துரத்தி வரவும் முற்படவில்லை. எத்தனையோ கஷ்டங்கள் கடலில் பட்டேன். காற்று என்னைச் சுழற்றி அடித்துக் கொண்டு போய், கரை ஒன்றில் ஒதுக்கியது. அந்தக் கரை இந்தியாக் கரையாக இருக்குமேயானால் உங்கள் நால்வரையும் என்றோ கொன்று கணக்குத் தீர்த்திருப்பேன். ஆனால் அதிருஷ்டம் உங்களுக்குச் சில நாள் வாழ்வு கொடுக்க நிச்சயித்தது போலும்! நான் கரை சேர்ந்த பூமி பர்மா வாக இருந்துவிட்டது.

'ஜலமாயா' கவிழ்க்கப்பட்ட சதி எனக்குத் தெரியும். அதன் மூலம் நீங்கள் கொள்ளையடித்தது கணக்கற்ற செல்வம் என்பதும் தெரியும். அரசாங்கத்திடம் நான் கூறியிருக்கலாம், ஆனால் "உனக்கெப்படித் தெரியும்?" என்ற எதிர்க் கேள்வியை அவர்கள் கிளப்புவார்கள். நான் பதில் சொன்னால் அதிலும் எனக்கு ஓர் ஆபத்து இருக் கிறது. 'விசா' இல்லாமல் நான் கடலைக் கடந்து ஓட முற் பட்டதேன்?' என்ற குற்றச்சாட்டு என் தலையில் சுமரும். 'பெரியதொரு சதித் திட்டத்தை அம்பலப் படுத்தினனே இவன்! அதற்காகவாவது இவன் செய்த சிறு குற்றத்தை மன்னித்துவிடலாம்!' என்று சட்டம் கருணை காட்டாதே என்பதை எண்ணி வாய்மூடி மௌனியாய் இருந்துவிட்டேன். அதோடு மற்றொன் றையும் நான் யோசிக்க வேண்டியிருந்தது. உங்கள் விசாரணையின் போது என் பூர்வ கதை வெளிப்பட்டு விடுமே என்ற பயம்!

சிறிது நாள்வரை ஆத்திரம் என்னுள்ளே அடங்காமல் கொதித்துக் கொண்டிருந்தது. பிறகு சற்று சமாதானம். எனது பணம் கப்பலில் அகப்பட்டு கடலுக்குக் காணிக்கை யாகிவிடவில்லை. கப்பல் முதலாளிகளிடம் இருக்கிறது! இன்றில்லாவிட்டாலும் என்றாவது ஒரு நாள் வசூலித்து விட எனக்கு சாமர்த்தியமில்லாமலா போய்விடும் என்ற தைரியத்தில் இருந்தேன். அந்தச் சாமர்த்தியத்தை எப்படிச் செல்லாக்குவது என்று வெகு நாளாக என் மண்டையைக்

குழப்பிக் கொண்டிருந்தேன். முடிவாக ஒரு யோசனை தோன்றியது. அதைச் செயலாக்க முற்பட்டேன்.

நான் செத்தேபோய்விட்டேன் என்பதாக நீங்கள் முடிவு கட்டிக் கொண்டிருப்பதைக் கெடுக்க உத்தேசமில்லை. என் திட்டத்திற்கு உங்களது அந்த நினைப்பை சாதகமாக்கிக்கொள்ள முற்பட்டேன். அந்த யோசனையில் முளைத்தது தான் ஒரு கடிதம், ஆனந்தரங்கனைக் கொண்டு ஆளவந்தாருக்கு ஒரு கடிதம் எழுதச் சொன்னேன்.

மனித மனம் கொண்டவர் போல ஆளவந்தார் என் மகன் பெயருக்குப்பதில் எழுதினார். 'விசா'வும் அனுப்பினார். என் மகனை அனுப்பிவைத்தேன் உடனடியாக.

இந்தக் கடிதத்தை ஆளவந்தாருக்கு எழுதியிருந்தேனேயானால் எவ்வளவோ பலன் கிடைத்திருக்கும். நான் உயிரோடு இருக்கிறேன் என்பது அவருக்குத் தெரிந்தாலே போதும், கொள்ளையடித்துப் பதுக்கி வைத்திருக்கும் அத்தனை ஆஸ்தியையும் கரன்ஸி நோட்டுகளாக என் காலடியிலே கொண்டுவந்து குவித்திருப்பார். தம் உயிருக்கு அபயமளித்தாலே போதும் என்று கதறியிருப்பார். ஆனால் அப்படி நான் எளிதாகப் பலனடைய விரும்பவில்லை. ஒரு சதிக்கு இலக்காகி இழந்த பணத்தை மற்றொரு சதியின் மூலமே திரும்பப் பெற நினைக்கிறேன். மேலும் ஆளவந்தாரைக் கொன்றுலொழிய என் மன உறுத்தல் மட்டுப்படாது போலவே இருக்கிறது.

ஆத்மாராம்! உன் விஷயத்தில் நான் என்ன மனப்பான்மை கொண்டிருக்கிறேன், பழிதீர்க்கும் படலத்தில் உன்னை எந்த அளவுக்கு ஆளாக்க நினைத்துள்ளேன் என்பதை அறியத் துடிதுடிப்பாய். எய்தவன் ஒருவனிருக்க அம்பை நோவது என் பண்பல்ல. பட்டாபி யார், எத்த கையவன் என்பது உனக்குத் தெரியாதல்லவா? தெரியாத ஒருவன் செய்த குற்றத்தை மன்னிக்கும் மனம் எனக்கு உண்டு. அதனால் உன்னை உயிரோடு விட்டு விடுகிறேன்.

ஆனால் மற்றொன்று. கப்பலைக் கவிழ்த்ததன் மூலம் நான் இழந்தது ஆறு லட்சம். அதை நால்வரும் பங்கிட்டுக்

கொண்டிருப்பீர்கள். உங்கள் உயிரை நான் தானமாகத் தரலாம். அதே சமயம் என் பணத்தையுமா நான் தானம் செய்ய முடியும்? ஆதலால் நீ பங்கு போட்டுக்கொண்ட நாலில் ஒரு பாகமான லட்சத்து ஐம்பதாயிரத்தை என் மகன் அங்கு வந்து சேர்ந்த அன்றே ரொக்கமாகக் கொடுத்துவிடு. உன் பணத்தை நீ இழக்கவில்லை. என் பணத்தைத் தான் நீ கொடுக்கிறாய் என்பதை மனதில் கொள்ளவும். இந்தத் தொகையை நீ கொடுக்கவில்லை யென்றால் அடுத்த 24 மணி நேரத்தில் நீ சவமாகக் கிடப்பதை போலீஸ் அறியவரும்.

இது என் முடிவான, இறுதியான கடிதம். என் மகன் உன்னிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டுவிட்டால் உன் உயிர் உனக்கு மிச்சப்படும். இதைத் திண்ணமாக நீ நம்பு.

என் மகனை நான் கப்பலேற்றிவிடும் போது, கப்பலைக் கவிழ்த்த கூட்டாளியான காப்டன் காசிநாதனைக்கூட நேரில் சந்தித்தேன். உனக்கு இப்போது அனுப்பியுள்ள கோரிக்கையைத் தான் அவனுக்கும் வெளியிட்டேன். கடிதம் மூலமாகக் கூட இல்லை. நேருக்கு நேராக. கப்பல் கரை சேர்ந்தவுடன லட்சத்து ஐம்பதாயிரத்தை என் மகனிடம் காசிநாதன் கொடுக்கத் தவறினால் அவன் உயிர் அவனுக்கு இல்லை என்று எச்சரித்து அனுப்பினேன். அவன் என் மகனுக்குப் பணம் கொடுத்தானா, அல்லது கொடுக்காத காரணத்தால் கொலைப்பட்டுவிட்டானா என்பது ‘ஜலதாரா’ இந்தியக் கடற்கரையை அடைந்த பிறகுதான் எனக்குத் தெரியவரும்!

உன் நல்லதற்காகவே இக்கடிதம் எழுதினேன். இதை உன் கூட்டாளிகளுக்கு நீ காட்ட முற்படமாட்டாய் என்று நம்புகிறேன். குறிப்பாக ஆளவந்தாருக்கு இது காட்டப் படவே கூடாது என்பதை எச்சரிக்கிறேன்.

நான் உயிரோடு இருப்பது என் மகனுக்குக் கூடத் தெரியாது. செல்வமனைத்தையும் உங்களிடம் நான் பறி கொடுத்து விட்ட நிலையில் நாடோடிபோல எங்கெங்கோ அலைந்து கொண்டிருக்கிறேன். அதனால் எனக்கு நிலையான தபால் விலாசம் இல்லை.

என் பேரில் இன்னும் பகை மனப்பான்மை கொண்டு என் மகனுக்கு இன்னல் விளைவிக்கக் கிஞ்சிதும் நினைக்காதீர்கள். அது ஒரு போதும் நிறைவேறாது. பட்டாபி தன் அருமை மகனை நிழல் போலத் தொடர்ந்து சென்று பாதுகாப்பளித்துவருவான் என்பதைத் தெரிந்து கொள்ளவும்.

என் மகன் ஆனந்த ரங்கனிடம் கொடுக்க வேண்டிய பணத்தை நீ சேர்ப்பிக்கும் போது, எந்த உண்மையையும் அவனுக்குக் கூற வேண்டியதில்லை. என்னுல் நீங்கள் பெரும் பொருள் ஈட்டியதாகவும், அந்த விசுவாசத்திற் கறிகுறியாக பண உதவி செய்வதாகவும் கூறிக்கொண்டால் போதுமானது.

இப்படிக்கு,
பாண்டிச்சேரி பட்டாபி.''

° ° ° °

கடிதத்தைப் படித்து முடித்த ஆளவந்தாருக்குத் தலை 'கிர்'ரெனச் சுற்ற ஆரம்பித்தது. சட்டென எழுந்துபோய் ஆத்மாராம் அவரைப் பிடித்திருக்காவிட்டால், கட்டிலிலிருந்து மயங்கிக் கீழே விழுந்து பிராணனை விட்டிருப்பார்!

எச்சரிக்கை செய்ய வந்த இடத்தில் ஏடாகூடமாகப் போய்விட்டதே என்று பரதவித்தான் ஆத்மாராம். ஆளவந்தாருக்கு ஏற்பட்ட மயக்கத்தைத் தெளிய வைப்பதே பெரும் பாடாகிவிட்டது அவனுக்கு!

கண் விழித்துப் பார்த்தார் ஆளவந்தார். பீதி அவருடைய கண்களைச் சாம்பல் பூக்க வைத்திருந்தது. ஆத்மாராம் தந்த கடிதத்தின் மேல் உறையை திருப்பித் திருப்பிப் பார்த்தார். ஏர்மெயிலில் வந்த அந்தத் தபால் கவரில் ஒட்டப்பட்டிருந்த தபால் முத்திரைகள் அனைத்தும் பர்மாவைச் சேர்ந்தவை தான்! சந்தேகமேயில்லை. பட்டாபி தான் எழுதியிருக்கிறன். அவன் சாகவில்லை. உயிரோடு இருக்கிறன். பழிக்குப் பழிவாங்கத் துணிந்து தன் ஒரே புதல்வனையல்லவா அனுப்பிவைத்திருக்கிறன்! எதைப்பற்றியும் சிந்திக்க ஆளவந்தாரின் மனமே ஓடவில்லை.

“ஆத்மாராம்! நீ தான் இதற்கு ஏதாவது வழி செய்தாக வேண்டும். பட்டாபி எச்சரித்திருந்தும் கூட, ‘நண்பனுயிற்றே’ என்று எச்சரித்துப் போக வந்த உன்னை தெய்வம் போல மதிக்கிறேன். நான் இப்போது எப்படி நடந்து கொள்ள வேண்டும் ஆத்மாராம்?” என்று பதறினார் ஆளவந்தார்.

ஆத்மாராம் பதில் ஏதும் சொல்லவில்லை. ஆளவந்தாரே மீண்டும் ஆரம்பித்தார். “ஆத்மாராம்! ஒன்று செய்யேன் எனக்காக. பட்டாபி எழுதிய கடிதம் என்னிடமே இருக்கட்டும். அதை நான் போலீஸில் கொடுத்தால் எனக்குப் பாதுகாப்புக் கிடைக்கும். உனக்கும் ஒன்றரை லட்சம் மிச்சப்படும். என்ன சொல்கிருய் ஆத்மாராம்!” என்று கேட்டு அவசரப்படுத்தினார் ஆளவந்தார். ஆத்மாராம் சரி என்று தலையாட்டியிருந்தால் அக்கடிதத்தை எடுத்துக் கொண்டு பிடரியில் கால் இடிக்கும்படி போலீஸ் ஸ்டேஷனை நோக்கி ஓடியிருப்பார்.

ஆனல் ஆத்மாராம் அதற்கு ஒப்பாததுபோல தலை அசைத்து சட்டெனப் பாய்ந்து ஆளவந்தாரின் கையிலிருந்த கடிதத்தை ‘வெடுக்’ கெனப் பிடுங்கிக் கொண்டான். “ஆளவந்தாரே! பட்டாபி முன் யோசனை எதுவும் இல்லாமல் இக்கடிதத்தைத் துணிந்து எழுதவில்லை. இப்படி ஒரு கடிதம் எழுதினல் அது போலீசுக்குப் போகுமே என்பதும் பட்டாபிக்குத் தெரியாமல் இல்லை. அதற்கேற்ற தினுசில் தான் கடிதமும் எழுதியிருக்கிருன். போலீஸ் அதிகாரிகள் அக்கடிதத்தைப் பார்த்தால் பாதுகாப்பு அளித்து வெறுமனே உம்மை விட்டுவிடமாட்டார்கள்; பாய்ந்து பிடித்துக் கொள்வார்கள். ‘ஜலமாயா’ கப்பல் கவிழ்ந்த ரகஸியம் அனைத்தும் அக்கடிதத்தில் இருக்கிறது! சும்மா கிடக்கும் சங்கை ஊதிக்கெடுக்கப் பார்த்துவிட்டீரே!” என்று எரிந்து விழுந்தான் ஆத்மாராம்.

“அவசரப் பட்டுவிட்டேன்...வாஸ்தவம் தான்!” என்று தமக்குள்ளே முனகிக் கொண்டார் ஆளவந்தார். பிறகு குரலைச் சிறிது மட்டுப்படுத்திக் கொண்டு, “ஆத்மாராம்! என் உயிரை நான் காப்பாற்றிக் கொண்டாகவேண்டும். அதற்கொரு வழி சொல்லு!” என்று கெஞ்சினர்.

சிறிது நேரம் யோசனை செய்வதுபோல 'கம்'மென்று உட்கார்ந்திருந்தான் ஆத்மாராம். பிறகு அவன் ஏதோ ஒரு முடிவைத் தேடிவிட்டவன் போல, "ஆளவந்தார்! நன்றாகக் கவனித்துக் கொள்ளும். யாரிடமும் சொல்லவும் கூடாது. நமக்குள்ளே இருக்கும் பகையை நாமே தான் தீர்த்துக் கொள்ள வேண்டும். ஆனந்த ரங்கனை ஒழித்து விடுவதே மேல். எப்படி ஒழிக்கலாமோ அப்படி ஒழித்து விடவேண்டும். புலன் அகப்படாதபடி செய்து முடிக்க வேண்டும். அதற்கு உமக்குத் தைரியமிருக்கிறதா?" என்று கேட்டான்.

"தலைக்குமேல் தண்ணீர் வந்துவிட்ட பிறகு, ஒரு மடக்காவது குடிக்க முடியாமல் இருக்க முடியுமா? சொல்லு ஆத்மாராம்! சீக்கிரம் சொல்லு! உன் யோசனை நுட்பமுள்ளதாகத் தான் இருக்கும்! சீக்கிரம் சொல்லு!" என்று துடித்தார் ஆளவந்தார்.

ஆளவந்தாரை நெருங்கி உட்கார்ந்து கொண்டான் ஆத்மாராம். "நன்றாகக் கவனியும். இப்போது மணி இரண்டரை. மூன்று மணிக்கு சினிமா ஆரம்பமாகிறது. நாம் இருவரும் இப்போதே சினிமாவுக்குக் கிளம்புவோம். 'ரிசர்வ்' வகுப்பு டிக்கட் எடுத்துக் கொண்டு சிறிது நேரம் அந்தத் தியேட்டர் மானேஜரோடு பேசிக் கொண்டிருந்து விட்டு, சினிமா பார்க்க உட்காருவோம். இன்டர்வல் வரை சினிமா பாருங்கள். மீண்டும் துவக்கும்போது நீங்கள் தியேட்டரைவிட்டு வெளியேறி வீட்டிற்குப் போங்கள். ஆனந்தரங்கன் அதற்குள் உங்கள் வீடு வந்து சேர்ந்திருப்பான். ஒளிந்து நின்று அவனைச் சுட்டுவிட்டு, திரும்ப தியேட்டருக்கு வந்துவிடுங்கள். காட்சி முடிந்து எதேச்சையாக வீடு திரும்புவதுபோல போய்விடலாம். அதற்குள் ஆனந்தரங்கன் சுடப்பட்டிருப்பது போலீசுக்குத் தெரிந்துவிட்டிருக்கும். எல்லோரும் கூடியிருப்பார்கள். விஷயம் ஏதும் தெரியாததுபோல நாம் கலந்து கொண்டு விடலாம். நம்மை யாரும் சந்தேகிக்க முடியாது. ஏனெனில் கொலை நடந்த சமயத்தில் நாம் தியேட்டரில் இருந்தாகச் சாட்சியமிருக்கிறதல்லவா!" என்றான்.

அப்போதிருந்த குழப்பத்தில் ஆளவந்தாருக்கு, அதுவே சரியானதொரு திட்டமாகப் பட்டது. "சரி...

கிளம்பு சீக்கிரம்!" என்று சொல்லிவிட்டு அவர் தியேட்டருக்குப் புறப்பட்டார்.

பங்களாவைவிட்டு வாசலுக்கு வந்தபோது வேலைக்கார மாணிக்கம் நின்று கொண்டிருந்தான். "மாணிக்கம்! நான் சினிமாவுக்குப் போகிறேன். நம் வீட்டிற்கு இன்று ஒரு விருந்தாளி வருகிறார். வந்தால் இருக்கச் சொல்லு. மரியாதையோடு நடந்து கொள். சினிமா முடிந்ததும் நேராக வந்துவிடுகிறேன்!" என்று ஆளவந்தார் சொல்லிவிட்டு, ஆத்மாராமின் காரில் ஏறிக் கொண்டார்.

கார் தியேட்டரை நோக்கிப் பறந்தது.

பாதி தூரம் சென்ற பிறகு தான் ஆளவந்தாருக்கு அந்த ஞாபகம் வந்தது. "ஆத்மாராம்! சுட்டுக் கொன்றுவிடும்படி சுலபமாகச் சொல்லிவிட்டாயே. அதற்கு ஒரு துப்பாக்கி வேண்டாமா?" என்று கேட்டார் ஆளவந்தார்.

இளஞ்சிரிப்புச் சிரித்தான் ஆத்மாராம்; "இவ்வளவு தந்திரமான யோசனையைச் சொன்னவன் அதற்கொரு வழி கண்டுபிடிக்காமலா இருப்பேன்? என் துப்பாக்கி எங்கே போச்சு? அதைத் தருகிறேன். காரியத்தை முடித்து விடுங்கள்" என்றான்.

"கொலை செய்யப்பட்ட பிறகு, அதற்கு உபயோகப்படுத்தப்பட்டது உனது துப்பாக்கி என்று தெரிந்தால் ஆபத்தில்லையா?" என்று கேட்டார் ஆளவந்தார்.

"அந்த ஆபத்து எனக்குத்தானே வரும்! அதைப் பற்றி நீர் கவலைப்படவேண்டாம். அதற்கு ஒரு தோது நான் செய்து கொள்வேன்" என்றான் ஆத்மாராம்.

அதற்குள் தியேட்டர் வந்துவிட்டது. மோட்டாரை ஓர் ஓரத்தில் நிறுத்திவிட்டு ஆத்மாராமும், ஆளவந்தாரும் தியேட்டருக்குள் புகுந்தார்கள்.

வாசலில் நின்று கொண்டிருந்த மானேஜர் சிரித்துக் கொண்டே அவர்களை வரவேற்றார். ஏற்கெனவே அந்த மானேஜர் இருவரையும் நன்கு அறிந்தவராதலால், காசு கொடுத்து டிக்கட் வாங்குவதைத் தடுத்த அவர், இரண்டு

பேருக்கு முதல் வகுப்பு 'காம்ப்ளிமெண்டரி' டிக்கட் எழுதி, கேட் கீப்பருக்குக் கொடுத்தனுப்பினர்.

உள்ளபோய் முதல் வகுப்பில் உட்கார்ந்ததும், "சினிமா பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதற்குச் சரியான ரிக்கார்டு ஆகிவிட்டது! ஆளவந்தாரே! அதிர்ஷ்டம் நமது பக்கமிருக்கிறது! கடவுள் கூட நம் பக்கமே இருக்கிறார்!" என்று தூபம் போட்டான் ஆத்மாராம்.

ஆளவந்தார் 'உம்' கொட்டினர். உள்ளூர அவர் மனதில் எப்படியெல்லாம் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது என்பதை ஆத்மாராம் கண்டானு என்ன!

பாதி சினிமா முடிந்தது. இன்டர்வெலுக்கு வெளிச்சம் போட்டார்கள். மானேஜர், சிரித்துக் கொண்டே "ஐஸ் கிரீம் சாப்பிடுங்களேன்!" என்று உபசரித்தார் ஆளவந்தாரையும் ஆத்மாராமையும்.

சாதாரண சமயமாக இருந்தால் பெருமைக்காக வாவது வேண்டாம் என்று மறுத்திருப்பர். இப்போதைய நிலைமை அப்படியில்லை. பிந்திய ஒரு நாளில் அவசியம் ஏற்பட்டால் சினிமா மானேஜர் என்றதொரு சாட்சியத்தைக் கொண்டுவர முடியுமல்லவா?

மானேஜர் வாங்கித் தந்த ஐஸகிரீமை இருவரும் சாப்பிட்டு முடித்தார்கள். இடை நேரம் முடிந்து, மீண்டும் திரையில் சினிமா காக்ஷி தொடங்கிற்று. அதுவரை பேசிக் கொண்டிருந்த மானேஜரும் எழுந்து போய் விட்டார்.

அக்கம் பக்கம் பார்த்துவிட்டு தன் மடியில் வைத்திருந்த சுழல் துப்பாக்கியை எடுத்து ஆளவந்தாரிடம் கொடுத்தான் ஆத்மாராம். "இங்கே தான் இருக்கிறோம் என்ற சாட்சியம் நமக்கு வலுவாக அமைந்துவிட்டது ஆளவந்தாரே! இனி காரியத்தை சரிவர முடிப்பது உங்கள் கையில் தான் இருக்கிறது, எழுந்து நீங்கள் கிளம்புங்கள். வேலையை முடித்துக் கொண்டு சினிமா முடிவதற்குள் இங்கே வந்து சேரவேண்டும். திரும்பி வரும்போது வழியிலேயே எங்காவது துப்பாக்கியை விட்டெறிந்து விடுங்கள். சரிதானு? ஜாக்கிரதை! யார்

கண்ணிலும் படாமல் போய்வாரும்!'' என்று துரிதப் படுத்தினான் ஆத்மாராம். யார் செத்தாலென்ன, யார் அகப்பட்டுக் கொண்டால் அவனுக்கென்ன? ஒன்றரை லட்சமல்லவா அவனுக்கு மிஞ்சுகிறது!

ஆத்மாராம் தந்த சுழல் துப்பாக்கியைக் கோட்டுப் பைக்குள் போட்டுக் கொண்டு, 'விர்'ரென வெளியே சென்றார் ஆளவந்தார், தியேட்டர் மானேஜர் பார்த்து விடக்கூடாதே என்ற திகிலில்! பாத்ரூமிற்குப் போவது போல தியேட்டரின் கொல்லைப்புறம் சென்றவர், அந்தப் பக்கமிருந்த கிளீனர் வரும் கதவு வழியாக வெளியே ரஸ்தாவை அடைந்தார்.

சொல்லி வைத்தது போல ஒரு 'வாடகை மோட்டார் (டாக்ஸி கார்) அப்பக்கமாக வந்தது. அதில் ஏறிக்கொண்டார். அவர் வழி சொல்லிக் கொண்டே இருக்க டிரைவர் அப்பாதையிலே சென்றான்.

ஆளவந்தாரின் பங்களா இருந்த வீதியைக் குறுக்கே வகுந்து செல்கிறது ஒரு சந்து. அதன் முனையிலேயே டாக்ஸி மோட்டாரை நிறுத்தச் சொன்ன ஆளவந்தார், காரிலிருந்து இறங்கி தனது மாளிகையான மங்கள விலாஸை அடைந்தார்.

வாசலில் யாருமே இல்லை. இருந்தாலும் முன்னெச்சரிக்கையாகப் பதுங்கிப் பதுங்கி உள்ளே சென்றார் ஆளவந்தார். தோட்டத்தைத் தாண்டி பங்களாவின் பிரதான வாசலை அடைந்து எட்டிப் பார்த்தார். ஹாலிலே போடப்பட்டிருந்த சோபா ஒன்றில் ஓர் இளம் வாலிபன் உட்கார்ந்து ஏதோ பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தான். அந்த ஹாலின் ஒரு மூலையிலே பர்மாக்கூடை ஒன்றும், ஒரு சிறிய தோல் பெட்டியும், படுக்கையும் வைக்கப்பட்டிருந்தன. உட்கார்ந்திருப்பவன் ஆனந்த ரங்கமே தான்!

'வந்த சுருக்குப்போல காரியத்தை முடி. மேஷ ரிஷபம் பார்க்காதே!' என்று ஆத்மாராம் அவரது பக்கத்திலே நின்று 'குசு குசு'வெனச் சொல்லுவது போல மனப் பிராந்தி ஆளவந்தாருக்கு ஏற்பட்டது. கோட்டுப் பையைத் துழாவி அதற்குள் இருந்த சுழல் துப்பாக்கியை

இறுகப் பிடித்துக் கொண்டார். பிறகும் ஒரு பிரமைத் தோற்றம். 'கரணம் தப்பினுல் மரணம், ஜாக்கிரதை. பயத்திற்கு இடம் கொடுத்துவிடாதே ஆளவந்தார்! சட்டெனத் துப்பாக்கியை எடுத்துக் குறிவைத்துச் சுட்டு விடு' என்று ஆத்மாராம் காதோடு காதாக ரகசியம் சொல்வது போல த்வனித்தது.

மனித மனம் படைத்தவர் தானே ஆளவந்தாரும்! பயமும் படபடப்பும் லேசானதா? உடம்பு உதறல் எடுத்துக் கொண்டிருக்க சட்டென ஜேபியிலிருந்த துப்பாக்கியை வெளியே எடுத்து ஆனந்த ரங்கனுக்குக் குறி வைத்தார்.

---

## 5 மாருட்டம்!

கரணம் தப்பினுல் மரணம் என்பார்கள்! இந்தப் பழமொழி வேறு எதற்குப் பொருந்துகிறதோ இல்லையோ, சதித்திட்டம் வரைக்கும் இந்த உபமானம் மிகமிகப் பொருந்துவதைக் காணலாம்.

ஆனந்தரங்கனைக் கொலை செய்வதற்கு அசாத்திய மான, அற்புதமான யோசனை கூறிய ஆத்மாராம், சினிமாவின் இடைவேளைக்குப் பிறகு செய்த காரியம்தான் சதித்திட்டத்திற்கு முத்தாய்ப்பு வைப்பதுபோல இருந்தது.

ஆளவந்தாரின் கையிலே தன் துப்பாக்கியைக் கொடுத்தனுப்பினுன் ஆத்மாராம். ஆளவந்தார் அந்தத் துப்பாக்கியால் ஆனந்தரங்கனைக் கொன்ற பிறகு, வருகிற வழியிலே அதை விட்டெறிந்துவிட வேண்டுமென்பது திட்டம். கொலை நடந்த பிறகு எப்போதாவது அந்தத் துப்பாக்கி போலீஸ் கைக்குக் கிடைத்து, அது தன் னுடையது என்பதைப் போலீசார் கண்டு கொண்டு விட்டால் அதன் மூலம் தன்மீது ஏற்படக்கூடிய சந்தேகத் திற்கு ஒரு மாற்றுத் தேடிக்கொள்வதாகவும் ஆளவந்தா ரிடம் சொல்லியிருந்தானல்லவா? அந்த மாற்றை உடனடி

யாகத் தேடிக்கொள்வதில் முனைந்தான் ஆத்மாராம். அவனுக்கு ஒரு யோசனையும் தோன்றிவிட்டது. வீடு சென்றதும், போலீசைக் கூப்பிட்டு, சினிமாப் பார்த்துக் கொண்டிருக்கும்போது யாரோ தன் துப்பாக்கியைத் திருடிச் சென்றுவிட்டதாகப் புகார் கொடுக்கத் தீர்மானம் செய்துகொண்டான்.

சினிமா முடிந்து விடுவதற்குள் ஆனந்தரங்கனைக் கொன்றுவிட்டு ஆளவந்தார் மீண்டும் தியேட்டருக்கு வந்துவிட வேண்டுமென்பது சதித்திட்டமாகும். நேரம் செல்லச் செல்ல ஆளவந்தார் திரும்பி வராதது ஆத்மா ராமிற்குத் திகிலைத் தந்தது. போட்டு அனுப்பிய தூபத்தில் ஆளவந்தார் ஆனந்தரங்கனைச் நிச்சயம் சுட்டுப் போட்டிருப்பார். கொலை நடத்திய பிறகு திரும்ப வீட்டை விட்டுத் தப்பித்து வெளியே ஓடி வருவதற்குள் யாரேனும் அவரைப் பிடித்துக் கொண்டிருப்பார்களா? — இந்தச் சந்தேகம் தலைதூக்கியது.

'பிடிபட்டிருக்கலாமோ' என்று ஆத்மாராம் எண்ணிய போது அவனுடம்பு புல்லரித்தது. அவர் பிடிபட்டிருந்தால் கையும் மெய்யுமாய் தன்னுடைய துப்பாக்கியுமல்லவா போலீஸ் கையில் சிக்கிவிடும் என்று நினைத்தபோது ஆத்மாராமுக்குப் பாதி உயிரே போய்விட்டது எனலாம். அதற்கப்புறம் என்ன நடக்கும் என்பதையும் அவன் யோசித்தான்...ஆளவந்தாரைப் போலீஸார் பிடித்துக் கொண்டுபோய் ரிமாண்டில் வைப்பார்கள், ஏன் கொன்றாய், என்ன உத்தேசத்தில்?' என்றெல்லாம் ஆளவந்தாரைக் கேட்பார்கள் 'இதற்கெல்லாம் உனக்கு யார் உடந்தை?' என்றும் விசாரிப்பார்கள். துப்பாக்கிப் பிரச்னை கிளம்பும். ஆளவந்தார் நிஜத்தைச் சொல்லாமல் 'கல்லுளி மங்கான்' வேஷம் போட்டால் போச்சு. போலீஸார் மிரட்டுகிற வேகத்தில் அவருக்கே பொருக்காமல் போனால் உள்ளதைக் கக்கிவிடுவார். அதோடு தமக்கு உடந்தையா இருந்தவன் தியேட்டரிலே இருக்கிறான் என்பதையும் குறிப்பிடாமல் இருக்கமாட்டார். அடுத்த நடவடிக்கையாக போலீஸ் ஜீப் முஸ்தீபோடு கிளம்பும். தியேட்டருக்கு வருவார்கள்...அப்புறம்...அப்புறம்...

தன் கையிலே போலீஸார் விலங்கு மாட்டுவது போன்ற பிரமை தட்டி கையைத் தடவிப் பார்த்துக்

கொண்டான் ஆத்மாராம். நுட்பமாக யோஜனை சொல்லிக் கொடுத்த அவனது மூளை அடுத்தபடியாக அவன் என்ன செய்யவேண்டும் என்பதற்கு 'குயுக்தி' தர முடியாமல் மரத்து விட்டது.

தியேட்டரில் இனி ஒரு நிமிஷம் தாமதித்தாலும் ஆபத்து என்ற அளவுக்குக் கலங்கிப்போன அவன், 'விர்'ரென வெளியேறினன் தியேட்டரை விட்டு. மோட்டாரில் எப்படி ஏறிக்கொண்டான், எப்படி முடுக்கி விட்டான், எத்தனை வேகத்தில் எந்தச் சந்து பொந்தெல்லாம் புகுந்து புறப்பட்டான் என்பதே அவனுக்குப் புரியவில்லை. பங்களாவிற்குள்ளே படுவேகத்தில் நுழைந்த அவன், மோட்டாரை 'ஷெட்'டுக்குள் கூட விடாமல்,வெளியேயே நிறுத்திவிட்டு வீட்டுக்குள் புகுந்து கட்டிலில் போய்ச் சாய்ந்துகொண்டான். பத்து மைல் தூரம் வியர்க்க விரு விருக்க அவன் ஓடிவந்திருந்தால்கூட அப்படி இரைக்காது. அதையும் மிஞ்சி அவனது நெஞ்சு வேகத்தில் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கிக்கொண்டிருந்தது.

அடுத்தாற்போல என்ன நடக்கப்போகிறதோ என்ற நினைப்பில் பேய் அறைந்தவன் போலாகிவிட்டான் அவன்.

உண்மையிலேயே அவன் ஒரு கொலையை நடத்தி வந்திருந்தால்கூட அவனது சதையும் நரம்புகளும் அவ் வளவு ஆட்டம் போட்டிருக்காது எனலாம்.

வாசலிலே கார் வரும் சப்தம் கேட்டபோதே தன் கணவன் வந்துவிட்டார் என்ற ஆவல் துடிப்பில் ஆத்மா ராமைத் தேடி அங்கே வந்து சேர்ந்த அவனது மனைவிக்கு அவள் கண்ட காக்ஷி பதறவைத்து விட்டது. விஷ ஜன்னியால் பத்து நாட்களாய்ப் படுத்திருக்கும் நோயாளி யின் உடம்புகூட குளிரால் இவ்வளவு தூக்கிவாரிப் போட் டிருக்காது. அதையும் மிஞ்சி கட்டிலில் படுத்திருக்கும் தன் கணவன் உடல் ஸ்மரணையற்ற நிலையில் தூட்டிலே விட்டு ஒரு சாண் மேலே எழும்பி, கீழே விழுவதைக் கண்டாள்.

ஒன்றுமே புரியவில்லை அவளுக்கு. பந்தத் துடிப் போடு புருஷனையடைந்து, ஆத்மாராமை அமுக்கிப் பிடித்துக்கொண்டு. "உடம்புக்கென்ன?...என்ன சொல் லுங்கள்!" என்று அழ ஆரம்பித்து விட்டாள்.

"ஒன்றுமில்லை பியாரி, ஒன்றுமில்லை...எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்துவிட்டது!" என்று பேசத் தொடங்கிய அவனுகக்கு மூச்சுத் திணறியது. இருந்தாலும் அவளுக்குச் சொல்லி எச்சரிக்க வேண்டியது முக்கியமல்லவா, "பியாரி!...யார் கேட்டாலும் சரி, இன்று முழுதும் நான் எங்குமே போகவில்லை என்று நீ சொல்லிவிடவேண்டும். சரிதானு...நான் சொன்னபடி சொல்ல வேண்டும் என்ன?" என்று கேட்டபடி மிரண்டு விழித்தான் ஆத்மாராம்.

அவன் இருந்த நிலையும், விழித்த விழியும் பியாரியைப் படாதபாடு படுத்தி விட்டது. 'ஓ'வென்று படுத்துப் புரண்டு கதற ஆரம்பித்து விட்டாள் அந்தப் பேதை.

அந்த நேரத்திலே தானு டெலிபோன் மணி "கிர்... கிர்..." என்று அடிக்க வேண்டும்? யார் கூப்பிடுகிருர்கள் என்று கேட்டறிய ஓடினுள் பியாரி. யமதூதனைப் பார்ப்பது போல கிணி கிணிக்கும் டெலிபோன் கருவியை வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தான் ஆத்மாராம்.

டெலிபோன் ரிசீவரை எடுத்துக்கொண்ட பியாரி, "யாரது?" என்று கேட்டாள். துக்கமும் அழுகையும் அவள் தொண்டையை இறுகப் பிடித்திருப்பதுபோல குரல் வெளிப்பட்டது.

எதிர் முனையிலிருந்து பதில் வந்தது — "ஆத்மாராம் இருக்கிருரா?"

"இருக்கிருர்!...காலை முதல் இங்கேயேதான் இருக்கிருர்...வெளியே எங்கேயும் போகவில்லை!...குளிர்... ஜுரம்...ஸ்மரணையே இல்லை!" என்று வெகு பதட்டத்தோடு பதிலளித்தபடி பரிதாபகரமாகத் தன் கணவனைப் பார்த்தாள் பியாரி.

"பேசுவது போலீஸா என்று கேளேன்!" என்று அவசரப்படுத்தினுன் ஆத்மாராம்.

"நீங்கள் யார் பேசுவது?" என்று கேட்டாள் பியாரி.

"உங்களுக்குத் தெரியாது...அவரைப் பேசச் சொல்லுங்கள்."

பியாரி திரும்பிப் பார்த்தாள் தன் கணவனை. கட்டிலில் படுத்திருந்த ஆத்மாராம், அதை விட்டு இறங்கி நின்று கொண்டிருந்தான். பேசுவது போலீஸார்தான் என்று தப்பித் தவறி பியாரி சொல்லியிருந்தால் ஒரே ஓட்டமாக அங்கிருந்து ஓடியே போயிருப்பான்.

"நீங்கள் தான் பேசவேண்டுமாம்!" என்றாள் பியாரி.

கால்கள் ஒன்றையொன்று பின்னித் தடுமாற, நடை தளர்ந்து வந்து, மனைவியிடமிருந்து டெலிபோன் ரிசீவரை வாங்கிக் கொண்டான் ஆத்மாராம். அவன் நாவு கூட வரண்டு காய்ந்துபோய் விட்டது! கிணற்றுக்குள்ளிருந்து பேசுவதுபோல "ஹலோ! ஆத்மாராம் ... ஆத்மாராம் தான்..." என்று உளற ஆரம்பித்தான்.

"ராஜாமணி பேசுகிறேன்" என்ற பதில் வந்தது மறுபுறமிருந்து.

"எந்த ராஜாமணி?...எனக்குத் தெரியவில்லையே!..." என்றான் ஆத்மாராம்.

"துப்பறியும் ராஜாமணி!" என்பதாக 'சடக்'கெனப் பதிலைப் பெற்றதும் "ஆ!" என்றலறினான் ஆத்மாராம்.

இந்த அலறல் மறுமுனையிலிருந்த துப்பறியும் நிபுணரின் காதுக்கும் எட்டிவிட்டது. "என்ன ஆத்மாராம்! ஏதோ சத்தம் கேட்டதே! யார் கத்தினது?" என்று பேச்சை ஆரம்பித்தார் அவர்.

"வேறொன்றுமில்லை...வந்து...வந்து..." என்று பேச முடியாமல் தடுமாறியவன், "என் மனைவிக்கு வயிற்று வலி...அது பொறுக்காமல் கத்துகிறாள்!...ஆமாம்... ஏதாவது விசேஷமா ஸார்?" என்று பதற ஆரம்பித்தான் ஆத்மாராம்.

"விசேஷமில்லாமல் கூப்பிடுவேனா? இதோ பத்து நிமிஷத்தில் அங்கே வந்து சேர்கிறேன்!" என்று சொல்லி விட்டு டெலிபோன் தொடர்பை முடித்துக் கொண்டார் துப்பறியும் ராஜாமணி.

"பியாரி!" என்று கத்தினன் ஆத்மாராம். அவன் மனக் கண் முன்னே அவன் அனுபவிக்கப் போகிறதாக எண்ணிக் கொண்டிருக்கும் சிறைச்சாலை, சித்ரவதை, போலீஸ் ஸ்டேஷன், வக்கீல்கள், நீதிபதி, கோர்ட், தூக்குமரம் அத்தனையும் ஒன்றன் பின் ஒன்ருய் சினிமாப் படம் போல மின்வெட்டு வேகத்தில் தோன்றித் தொடர்ந்தன. "பியாரி!" என்று மீண்டும் ஒருதரம் அலறிய அவன், "பியாரி! என்னைப் போலீசார் கைது செய்தால், பத்து லட்சம் ஜாமீன் கேட்டால் கூட என்னை மீட்கப்பாரு!...பெரிய வக்கீல் வை......அதிலே ஒரு பத்து லட்சம் போனுலும் சரி...!" என்று அடுக்க ஆரம்பித்தான்.

பாவம், ஒன்றுமறியாத பியாரியோ எதுவுமே புரியாமல் அங்குமிங்கும் ஓடி சுவரிலும் கதவிலுமாக முட்டிக் கொள்ள ஆரம்பித்துவிட்டாள்!

பத்து நிமிஷநேரம் அந்த வீடே ஒரு சாவு விழுந்த இல்லமாக நிர்த்துளிப்பட்டுவிட்டது.

சொன்னது சொன்னபடி பத்தே நிமிஷத்தில் வந்து சேர்ந்தார் ராஜாமணி. காலையிலிருந்து நோய்வாய்ப் பட்டுக் கிடப்பவன் போல இழுத்துப் போர்த்தியபடி கட்டிலிலே சொரணையற்று படுத்துக் கொண்டான் ஆத்மாராம்.

"ஆத்மாராம்!" என்று கூப்பிட்டபடி உள்ளே நுழைந்த ராஜாமணி, ஆத்மாராமின் கண்களுக்கு யமகிங்கிரன் போலவே தோன்றினுர் போலும்! ஆதமாராம் புழுவாய்த் துடிதுடித்தான்.

"ஆத்மாராம்! மன்னிக்க வேண்டும்! இரவு வேளையில் உங்களுக்குத் தொந்திரவு கொடுக்க வேண்டும் என்பது என் கருத்தில்லை. ஆனுல் அப்படி ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது..." என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ஆத்மாராம் தனது இருதயத்தைப் பலமாக அழுத்திப் பிடித்துக் கொண்டான்.

ராஜாமணி தொடர்ந்தார். "பாவம்! உங்களுக்கு எவ்வளவு தொந்திரவுகளோ, யோசனையோ தெரியாது,

சினிமாப் பார்த்து வெளியே வந்த ஜோரில் உங்கள் காருக்குப் பதில் என் மோட்டாரை ஓட்டிக் கொண்டு வந்து விட்டீர்களே!" என்று சொல்லிச் சிரித்தார்.

"மோட்டரா?...உங்கள் காரையா!" என்று கேட்டபடி துள்ளி எழுந்தான் ஆத்மாராம். ஒரு கிலி போய் மற்றோர் அதிர்ச்சி அவனைப் பிடித்துக் கொண்டது.

"ஆமாம். நம் இரண்டு பேர் காரும் ஒரே மாடல்!" என்று சொல்லிவிட்டு, "தொந்திரவுக்கு மன்னித்து விடுங்கள் ஆத்மாராம். உங்கள் காரை விட்டுவிட்டு என் காரை நான் எடுத்துக் கொண்டு போகிறேன்" என்று விரைந்து சென்றார் வெளிவாசல் பக்கம்.

விசித்துக் கொண்டிருந்த பியாரியின் அழுகை நின்றது. ஆனால் ஆத்மாராமின் ஆத்மா துடிப்பது மட்டும் சிறிது கூட நிற்கவேயில்லை. தான் சினிமாவிற்குப் போயிருந்தது கூட இந்தத் துப்பறிபவருக்குத் தெரிந்துவிட்டதே என்ற புதுப் பயமும் இப்போது ஆத்மாராமின் தடுமாற்றத்தோடு சங்கமித்துவிட்டது.

'ஆனந்தரங்கன் கொலைப்பட்ட செய்தி இன்னும் ராஜாமணிக்குத் தெரிந்திருக்காதோ!' என்று எண்ணிக் கொண்டான் ஆத்மாராம்.

இப்போது அவனது எண்ணமெல்லாம் ஒரே ஒரு விஷயத்திலேயே வட்டமிட்டது. ஆனந்தரங்கன் கொலைப் பட்டானா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ளாத வரை அவனுக்கு இருப்பே கொள்ளாது போலாகி விட்டது.

தலைக்குமேல் வெள்ளம் போக ஆரம்பித்துவிட்டது. இனி ஒரு சாண் போனாலென்ன, ஒரு முழம் போனா லென்ன என்ற துணிச்சலோடு 44223 என்ற லக்கத்தை டெலிபோன் கருவியில் சுழற்றிவிட்டான்.

அது ஆளவந்தார் வீட்டு டெலிபோன் நம்பர்!

டெலிபோன் அழைப்புக்கு உடனே பதில் கிடைத்தது ஆத்மாராமிற்கு. "யார் பேசுவது?" என்று சற்று மிடுக்குடனேயே அந்த பதில் டெலிபோனில் வந்தபோது,

பேசுவது ஆளவந்தார் இல்லை என்பதை ஆத்மாராம் உணர்ந்து கொண்டான்.

"ஆளவந்தார் இருக்கிறாரா?"

"நாயுடு இல்லை! எங்கேயோ போயிருக்கிறார்! அங்கே பேசுவது ஆத்மாராமா?"

எடுத்த எடுப்பிலே எவன் இப்படிக் கேட்கிறான் என்று மலைத்துப்போன ஆத்மாராம், "நீங்கள் யார் என்பதைச் சொல்லலாமா?" என்று தயக்கத்தோடு கேட்டான்.

"ஆனந்தரங்கம்!" என்று செவிட்டில் அறைவது போல பதில் வந்தது. அடுத்த விநாடி ஆத்மாராம் டெலிபோன் ரீசீவரை 'படக்'கென இருந்த இடத்தில் வைத்து விட்டான்.

'இன்னுமா உயிரோடு இருக்கிறான் இந்தப் பாவி!' என்று புருபுருத்துக் கொண்டது ஆத்மாராமின் மனம்.

## 6 அடியே அன்னம்மா என்ற அலறல்!

ஆனந்தரங்கனைச் சுட்டுவிடுவதே மேலானது என்ற எண்ணத்தோடு தீவிரமான தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ஆளவந்தார் சினிமாத் தியேட்டரிலிருந்து வெளியேறி பங்களாவுக்கு வந்தார். தனிமையிலே ஆனந்தரங்கன் உட்கார்ந்திருப்பதையும் அவர் கண்டார். பையிலிருந்த சுழல் துப்பாக்கியையும் வெளியே எடுத்து விட்டார். இது நடந்தபோது சுமார் நாலரை மணி.

ஆனால் ஏழு மணிக்கு நடந்த மற்றொரு சம்பவமோ முற்றிலும் மாறானது. ஆளவந்தார் நிச்சயமாக ஆனந்த ரங்கனைக் கொன்றிருப்பார். மஞ்சள் மாளிகை நிர்த்துளிப் பட்டுக் கொண்டிருக்கும். போலீஸார் கையிலே ஆளவந்தார் சிக்கிக்கொண்டிருப்பார்.—இப்படி எண்ணி

ஆத்மாராம் தவித்துக்கொண்டிருக்கும் சமயத்திலே ராஜாமணி வந்து போனார். அதற்குப் பிறகு துணிந்து டெலிபோன் செய்தான் ஆத்மாராம். டெலிபோனில் பேசியவர் ஆளவந்தார் அல்ல. இத்தனை நேரத்திற்குள் யார் கொலையுண்டு இருப்பான் என்பதாக நிச்சயப் படுத்திக்கொண்டானோ, அந்த ஆனந்தரங்கன் டெலி போனுக்கு வந்து பேசினான்.

அப்படியானால் நாலரை மணிக்கு ஆளவந்தார் துப்பாக்கியை எடுத்து ஆனந்தரங்கனுக்குக் குறி வைத்தாரே அது என்ன ஆயிற்று?

நாலரை மணிக்கும் ஏழு மணிக்குமிடையே நடந்த விபரங்கள்தான் என்ன?

சினிமாத் தியேட்டரிலிருந்து தம் மாளிகையை அடைந்த ஆளவந்தார், ஹாலிலே போடப்பட்டிருந்த சோபா ஒன்றில் ஆனந்தரங்கன் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். அக்கம் பக்கத் திலும் யாருமில்லை. உடம்பு உதறல் எடுத்துக்கொண் டிருக்க சட்டென ஜேபியிலிருந்து துப்பாக்கியை உருவிக் கொண்டு ஆனந்தரங்கனுக்குக் குறி வைத்தார்.

கண் இமைக்கும் நேரம் கடந்திருந்தால் 'டுமீல்' என்று வேட்டுக் கிளம்பியிருக்கும். ஆனந்தரங்கன் படுகொலைப்பட்டிருப்பான். சதியின் திட்டத்திற்குள்ளே பாழாய்ப்போன விதி அந்தச் சமயத்திலே தானா சனியன் போல குறுக்கிடவேண்டும்! வெகு வேகமாக வந்த கார் ஒன்று 'சர்'ரென சப்தத்தைக் கிளப்பிய வண்ணம் போர்ட்டிகோவில் வந்து நிற்பதைக் கண்டு திகைத்துத் திரும்பினார் ஆளவந்தார்.

பயத்தால் அவர் உடல் முழுதும் வேர்த்துக் கொட்டியது. ரத்த ஓட்டமே தேங்கி நின்று விட்டதுபோல முகம் நீலம் பாரித்து விட்டது. கொட்டக் கொட்ட விழித்த அவருடைய விழிகள் வாசலிலே வந்து நின்ற மோட்டாரிலிருந்து துப்பறியும் ராஜாமணி இறங்குவதை தீர்க்கமாகப் பார்த்துத் திருட்டு முழி முழித்தன.

நின்றுகொண்டிருப்பதோ திருடனைப்போல! அதற் கேற்றாற்போல கையிலே துப்பாக்கி! ராஜாமணி பார்த்து

விட்டால் தம் நிலை என்னுகும் என்று பதறித் துடித்துப் போனுர் ஆளவந்தார். ராஜாமணி தம்மைப் பார்ப்பதற்குள் உள்ளே ஓடிவிடுவதையே பெரியதொரு சாகஸமாகக் கருதிவிட்ட ஆளவந்தார், "சௌக்யமா ஆனந்தரங்கம்? வந்து ரொம்ப நேரமாகி விட்டதோ!" என்று ஏதேதோ கேட்டபடியே பறக்கப் பறக்க ஓடிவந்தவர்போல பெருமூச்சு விட்டுக்கொண்டு ஆனந்தரங்கனுக்கு எதிரே போடப்பட்டிருந்த இரட்டைச் சோபாவில் போய் உட்கார்ந்துகொண்டார்.

"வந்து அரைமணி நேரமாகிறது! வேலைக்காரன் சொன்னுன். நீங்கள் ஏன் பாதியிலேயே வந்து விட்டீர்கள்? சினிமா அவ்வளவு சுரத்தாக இல்லையா?" என்று சிரித்துக்கொண்டே கேட்டான் ஆனந்தரங்கன். அந்தச் சிரிப்பும் பேச்சும், 'உங்கள் சூழ்ச்சியெல்லாம் எனக்குத் தெரிமப்பா!" எனறு எக்களித்துக் கேட்பது போல ஆளவந்தாரின் மனதுக்குப் பட்டது.

"ஆமாம்...ஆமாம்!" என்று சொல்லிச் சமாளித்துக் கொண்டார் ஆளவந்தார். பதில் சொல்லவேண்டுமே என்ற சூழ்நிலையோடு அந்தப் பதில் அவரிடமிருந்து வெளிப்பட்டதே ஒழிய, அவரது கவனமும் பார்வையும் வாசல் பக்கம் பார்த்து மருண்டுகொண்டிருந்தது.

"அடிக்கடி சிரமம் கொடுப்பதற்கு மன்னிக்க வேண்டும்!" என்று சொல்லிக்கொண்டே துப்பறியும் ராஜாமணி ஹாலுக்குள் நுழைந்தார். அவரது பேச்சு இனிமையாகவும் தாழ்வோடு கூடியதாகவும் இருந்ததே தவிர, முகத்திலே சகஜமான புன்னகை இல்லை. அதற்காக முகத்திலே கடுகடுப்பு நிறைந்திருக்கிறது என்றும் சொல்வ தற்கில்லை. மிக அமைதியோடும், தீர்க்கத்தோடும் தெளி வோடும் அவர் நடை போட்டு வருவதைக் கொட்டக் கொட்டப் பார்த்துக் கொண்டிருந்தார் ஆளவந்தார்.

உள்ளே நுழைந்த ராஜாமணியை ஆனந்தரங்கனும் ஏறிட்டுப் பார்த்தான். 'இவன் ஏன் இங்கே வந்தான்!' என்று வெறுப்படைபவன் போல முகத்தைச் சுளித்துக் கொண்டு வேறுபுறம் திரும்பிக்கொண்டான். கப்பலிலிருந்து இறங்கியதும் இறங்காததுமாக சந்தேகப்பட்டு தொல்லை

கொடுத்த மகானுபாவர் ஆயிற்றே அவர்! வெறிக்கப் பார்க்கும் யாருடைய பார்வையையும் சட்டை செய்ய வில்லை அவர். எத்தனையோ முகங்களில் வெறுப்பு விருப்புகளைப் பார்த்தவரல்லவா ராஜாமணி! ஆனந்த ரங்கனை ஒருதரம் முறைத்துப் பார்த்துவிட்டு ஆளவந்தாரை ஏறிட்டுப் பார்த்தார். இந்த மௌனப் பார்வை ஆளவந்தாரின் பீதியை அதிகரித்து விட்டது. அவரது வலது கை அவரையும் அறியாமல் கோட்டுப் பைக்குள் புகுந்துகொண்டு தவித்தது.

"என்ன ஆளவந்தார்! இதுதான் மரியாதையா? வந்தவர்களை வரவேற்கும் தோரணை மிக நன்றாக இருக்கிறது!"

ராஜாமணியின் அதரங்களினின்றும் வெளிவந்த இவ்வார்த்தைகள் கணீரென்று மட்டும் ஒலிக்கவில்லை; ஆளவந்தாரின் கன்னத்தில் அறைவது போலவுமிருந்தது. தாம் செய்ய நினைத்த காரியம் இந்த ராஜாமணிக்குத் தெரிந்து விட்டதோ என்று பெரிதும் தடுமாற்றம் கொண்டார் அவர்.

"எதிலும் பெரும் புத்தியும் போக்கும் இருக்க வேண்டும் ஆளவந்தாரே! பரம விரோதியாக இருந்தால் கூட படியேறி வந்துவிட்டால் பரிவு காட்டுவதுதான் பெரிய மனுஷ தோரணை. ஆனால் நீர் நடந்துகொள்ளும் விதம் இருக்கிறதே, சுத்த மோசம்...மிகவும் புண்படுத்தக் கூடியது!" என்று கூறிக்கொண்டே சிறிது கிட்ட வந்தார் ராஜாமணி.

ஆளவந்தாரின் நெஞ்சும் மார்பும் 'திக்திக்' கென்று அடித்துக் கொண்டது. 'இந்த எமகாதக மனிதனுக்கு சதித் திட்டம் தெரிந்துவிட்டது போலிருக்கே!' என்று தவித்தார் அவர். அங்கிலையிலே ராஜாமணி அவர் அருகே வந்து உட்கார்ந்து கொண்டதும் அந்தப் பயம் விஸ்வரூபம் எடுத்துவிட்டது! பக்கத்தில் உட்கார்ந் திருந்தபடி ராஜாமணி சட்டென்று தம் கோட்டுப பையில் கை போட்டுத் துப்பாக்கியையும் எடுத்துக் காண்பித்து விடுவாரோ என்று அரண்டு போனார் ஆளவந்தார். இன்னும் ஓரிரு விநாடிகள் [illegible]ஜாமணி எதுவுமே பேசா திருந்தால் 'என் அப்பன் குதிருக்குள் இல்லை' என்ற

தோரணையில் அந்த இடத்தை விட்டே ஒரே ஓட்டமாக ஓடியிருப்பார் ஆளவந்தார்.

நிலைமை அவ்வளவு மோசமாகிவிடத் துப்பறியும் நிபுணர் இடமளித்து விடுவாரா என்ன?

"என்ன ஆளவந்தாரே, பேசாமல் இருக்கிறீர்கள்? உங்களைத் தேடி நான் வந்தேனே, மரியாதைக்காகவாவது 'வாருங்கள்' என்று சொன்னீர்களா?" என்று மிடுக்கோடு கேட்டார் ராஜாமணி.

அதுவரை மூச்சையடக்கிக் கொண்டிருந்த ஆளவந்தார் நீண்டதொரு பெருமூச்சுவிட்டார். 'தனக்கு மரியாதை காட்டவில்லையே என்பதை நேரடியாக ராஜாமணி கேட்டிருக்கக் கூடாதா? ஐந்து நிமிஷநேரத்தில் ஐயாயிரம் எண்ணங்களை என்னுள்ளே எழுப்பிவிட்டு விட்டாரே இந்தப் பாவி மனுஷன்!" என்று நினைத்து, கொஞ்சம் தைரியங் கொள்ளலானார் அவர்.

ஓரக்கண்ணால் ஆளவந்தாரை ஒரு தரம் பார்த்து விட்டு ஆனந்தரங்கன் இருக்கும் பக்கம் தம் பார்வையைச் செலுத்தினார் ராஜாமணி. வெகு அலட்சியமாக ஆனந்தரங்கன் முறைப்போடு உட்கார்ந்திருந்தான்.

"என்னப்பா தம்பீ! உன்னைப் போலீசாரின் பிடியிலிருந்து தப்புவித்தேனே, அதற்கு விஸ்வாசமாக நீ எனக்குக் காட்டுகிற மரியாதையா இது! இது நல்லதற்கே காலமில்லை தம்பீ!"

ராஜாமணி தானே வலியப் பேச்சுக்கிழுத்தும் ஆனந்தரங்கன் ஏறிட்டுக் கூட அவரைப் பார்க்கவில்லை. பேப்பர் படித்துக் கொண்டிருப்பது போலத் தன் உருண்டை விழிகளை, படிக்கும் பக்கத்தில் நிலை குத்த விட்டபடி மௌனியாக இருந்தான்.

ஆளவந்தாருக்கு ஆத்திரம் ஒரு புறம்; அவசரம் மற்றொரு புறம். ஆத்மாராம் தியேட்டரில் காத்திருப்பானே என்ற பதைபதைப்பு வேறு அதோடு சேர்ந்து கொண்டு, ராஜாமணியை அங்கிருந்து சீக்கிரமாகக் கிளம்பினால் போதுமென்றாகிவிட்டது!

“தம்பிக்குக் கோபம்! ஒன்று மறியாத அவனை போலீஸ் ஸ்டேஷனில் வைத்துக் கெடுபிடி செய்துவிட்டீர்களல்லவா, அந்த வெறுப்பு அவனுக்கு இன்னும் தணியவில்லை. சின்னப்பிள்ளை தானே அவன்!” என்று பரிந்து பேச முற்பட்டார் ஆளவந்தார்.

ராஜாமணி தமக்குள்ளே கமுக்கமாகச் சிரித்துக் கொண்டார். பிறகு, “தம்பியின் முறைப்பு இன்னும் ஒரு வாரம் போனால் தெரிந்துவிடுகிறது!” என்று கடுமையாகக் கூறிவிட்டு, “ஆளவந்தார்! இந்த ஜாமீன் பத்திரத்திலே கையெழுத்துப் போடுங்கள். அதற்காகத்தான் நான் வந்தேன்!” என்று சொல்லியபடி, ஜேபிக்குள் இருந்த ஒரு நீண்ட கடுதாசியை எடுத்து ஆளவந்தாரிடம் கொடுத்தார்.

“என் கையெழுத்தா? இதிலேயா? எதற்காக?” என்று படபடப்போடு கேட்டார் ஆளவந்தார்.

“ஆனந்தரங்கனுக்காக வேறு யார் ஜாமீன் கொடுப்பார்கள். அவனை விடுதலை செய்யும்படி நீர் சொன்னீர். விடுதலை கொடுத்துவிட்டேன். அதன் மூலம் ஆனந்தரங்கன் நிரபராதி என்பதாக ஆகாது. போலீஸ் தேவைப்படுகிறபோது அவனை ஆஜர்ப்படுத்தும் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொள்வதாக அர்த்தம். அதற்காகத்தான் இந்த ஜாமீன் பத்திரம்!” என்றார் ராஜாமணி.

எந்த ஆளைக் ‘குளோஸ்’ செய்துவிடலாம் என்று திட்டம் தயாரித்தாரோ, அதே நபருக்கு அவர் ஜாமீன்தாரராக ஆகவேண்டிய கட்டம் வந்துவிட்டது.

மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அந்த ஜாமீன் பத்திரத்திலே கையெழுத்திட்டார் ஆளவந்தார். அந்தப் பத்திரத்தை ஆளவந்தாரிடமிருந்து வாங்கிக் கொண்ட ராஜாமணி, “ஆளவந்தார் ஸார்! இப்போது போட்ட உங்கள் கையெழுத்து எவ்வளவு பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது தெரியுமா? போலீஸாருக்குத் தேவைப்படுகிறபோது ஆனந்தரங்கனை நீர் ஆஜர் படுத்தத் தவறினால் ஒரு லட்சம் நீர் தண்டம் அழவேண்டும்! ஆனந்தரங்கன் உங்களிடம் சொல்லிக்

கொள்ளாமல் ஓடிவிட்டால்கூட ஒரு லட்சத்தைக் கக்கியாக வேண்டும்!'' என்று சொல்லிச் சிரித்தார்.

"ஒரு லட்சமா ?" என்று அதிர்ந்துபோய்க் கேட்டார் ஆளவந்தார்.

"நீங்கள் கருதுகிறபடி ஆனந்தரங்கன் யோக்ய மானவனாக இருக்கும் பக்ஷத்தில் பத்து லட்சத்துக்குக்கூட ஜாமீன் கொடுக்கலாமே!" என்று தமாஷாகச் சொல்லி விட்டு, "ஆனந்தரங்கா! உன்னை நம்பி மகத்தான தியாகம் செய்ய முற்பட்டிருக்கும் ஆளவந்தாரை நஷ்டத் திற்காளாக்கிவிட்டு எங்காவது ஓடிவிடாதே!" என்று எச்சரித்துவிட்டு 'விர்' ரென வெளியே கிளம்பினார் ராஜாமணி.

அதற்கப்புறம் அரைமணி நேரம்வரை தனியே விடப் பட்ட ஆளவந்தாரும் பேசவில்லை. ஆனந்தரங்கனும் வாய்திறக்கவில்லை. இருவர் மனங்களும் வெவ்வேறு எண்ணச் சுழல்களில் சிக்கித் தவித்து, ஏகதேசம் ஒரு வரை யொருவர் ஏறிட்டுப் பார்த்த வண்ணம் மஞ்சள் மாளிகையை அமைதியில் தவழவிட்டுக் கொண்டிருந் தார்கள்.

அந்த மௌனம் அதிக நேரம் நீடிக்கவில்லை. ஹாஸ்டலில் விட்டு வைத்திருந்த தம் மகளை அழைத்துக் கொண்டு அன்னம்மா அங்கே வந்து சேர்ந்தாள்!

தன்னைக் கண்டதும் "உஷா!" என்று செல்லமாக அழைத்துத் தழுவிக் கொள்ளும் தன் தந்தை முகத்திலே எந்தவிதப் பிரகாசமும் இன்றி முசுடுபோல உட்கார்ந் திருப்பதைக் கண்டதும் உஷாவின் மனம் தடுமாறிப் போய்விட்டது. "என்னப்பா ஒரு மாதிரியாக உட்கார்ந் திருக்கிறீர்கள்?" என்று கேட்டு வலியச் சென்று அவர் அருகே அமர்ந்து கொண்டாள் உஷா.

சிந்தனை கலைந்து அப்போதுதான் தம் சுய நினைவுக்கு வந்தவர் போல சிலும்பிக் கொண்ட ஆளவந்தார், "என்னவோ யோசனை! அதிலேயே சிந்தனை செலுத்திக் கொண்டிருந்து விட்டேன்!" என்று சொல்லி வலியச் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு புன்னகை செய்தார்.

அதுவரை பேப்பர் படிப்பதுபோல தன் சிந்தையை எங்கோ ஓடவிட்டிருந்த ஆனந்தரங்கன், இனிமையான குரல் ஒன்று தன் காதில் ஒலிப்பதை உணர்ந்து ஏறிட்டுப் பார்த்தான்.

'ஒரு யௌவன மங்கை!' என்று அவன் உதடுகள் சிலிர்த்தன.

உஷா தன் தந்தையோடு பேசுவதில் பேரவா கொண்டிருந்ததால் அவளும் ஆனந்தரங்கனைக் கவனிக்கவில்லை. கவனித்திருந்தால் இப்படித்தான் அவள் மனமும் குறுகுறுத்திருக்கும். வாய்க்குள்ளும் முணுமுணுத்துக்கொண்டிருப்பாள்—' எவ்வளவு சுந்தரமான வாலிபன்!' என்று.

உஷா கவனிக்காத அவ்வாலிபனை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள் அன்னம்மா.

துருதுருத்த உஷாவின் கவனம் அப்பாவை அலட்டுவதிலேயே இருந்தது. "ஏம்பா! அப்படி என்ன யோசனை உங்களுக்கு?" என்றாள் உஷா 'வெடுக்'கென.

"வேறு என்னம்மா. எல்லாம் ஆனந்தரங்கனைப் பற்றித்தான்!" என்றார் ஆளவந்தார்.

"அது யாரப்பா ஆனந்தரங்கன்?"

"அதோ உட்கார்ந்திருக்கிறான் பாரு!"

அப்போதுதான் உஷா ஆனந்தரங்கனைச் சடாரெனத் திரும்பிப் பார்த்தாள். அவனைப் பார்க்கப் பார்க்க அவள் உதடுகள் 'ஆனந்தரங்கன் ஆனந்தரங்கன்' என்ற சொற்களை உதிர்த்துக்கொண்டே இருந்தன. வைத்த விழிகளைத் திரும்ப வாங்கிக்கொள்ளக்கூட மறந்துபோய் ஆனந்தரங்கனையே பார்த்துக்கொண்டிருக்கும் அந்த அசந்தர்ப்ப அறிமுக ஈடுபாட்டைக் கலைக்க ஆளவந்தார் கனைத்துக் குரல் கொடுக்க வேண்டியிருந்தது.

சமாளித்துக் கொண்டாள் உஷா. குறும்பாகப் பார்த்துச் சிரிக்கும் தாயைப் பார்க்க வெட்கப்பட்டு, அப்பாவின் பக்கமாகத் திரும்பிக்கொண்ட உஷா, "யாரப்பா இவர்?" என்று கேட்டாள். அப்போது

அவளுக்கிருந்த மன நிலையில், "உன்னைப் பார்க்க வந்திருக்கும் வரன்" என்று ஆளவந்தார் சொல்லியிருந்தால், மனப்பூரிப்பில் உஷா துவண்டு கீழே சாய்ந்திருப்பாள்! நல்லவேளையாக அப்படிப்பட்ட ஆபத்து ஒன்றும் ஏற்படாது போயிற்று!

"பட்டாபியின் பிள்ளை அவன்!" என்றார் ஆளவந்தார்.

"அது யாரப்பா பட்டாபி?" என்று கேட்டாள் உஷா கொஞ்சலோடு.

"அந்த மனிதனால் தானம்மா நான் முன்னுக்கு வந்தேன். இன்று நாம் சாப்பிடும் சாப்பாடு அவருடையது. அவர் மட்டும் உயிரோடு இன்று இருந்திருந்தால்......" பேச்சை முடிக்காமல் இழுத்தார் ஆளவந்தார்,

"இருந்திருந்தால் என்னப்பா நடந்திருக்கும்?" என்று உஷா குறுக்கே புகுந்தாள்,

'இருந்திருந்தால் நம் வம்சத்தையே பூண்டோடு அழித்திருப்பான்!' என்று சொல்லத் துடிதுடித்தது அவர் மனம். ஆனால் சொல்ல முடியவில்லை. மகளின் கேள்விக்கு எந்தவிதமான பதில் கொடுப்பது என்று ஆளவந்தார் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது அன்னம்மா குறுக்கிட்டு விட்டாள்.

"என்னைக் கேளு சொல்கிறேன். அவரோட சிநேகிதர் உயிரோடு இருந்திருந்தால் ஆனந்தரங்கன் கையிலே ஒரு மஞ்சள் கயிறு கொடுத்து உன் கழுத்திலே இறுகக் கட்டிவிடச் சொல்லியிருப்பார்!...போதுமா பதில்!" என்று சொல்லிச் சிரித்தாள்.

"போம்மா!" என்று சிணுங்கி வெட்கப்பட்டு உள்ளே ஓடி விட்டாள் உஷா.

அப்பால் ஓடிவிட்ட உஷாவைத் திரும்பிப் பார்க்க வேண்டும் போலத் தோன்றி, ஆனந்தரங்கனின் மனம் அடித்துக்கொண்டது. கழுத்தை ஒடித்துக்கொண்டு அப்படிப் பார்த்தால் ஆளவந்தார் என்ன நினைப்பாரோ

என்று பயந்து கொண்டு, பார்க்கத் துடிதுடிக்கும் தன் விழிகளை வேறு பக்கம் ஏவி விட்டான் ஆனந்தரங்கன்.

ஆளவந்தார் எதையுமே ரஸிக்கக்கூடிய நிலையில் இல்லை. "அன்னம்மா! ஆனந்தனுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடு. வந்த அலுப்பு அவனுக்கும் இருக்கும். ஓய்வு எடுத்துக்கொள்ளட்டும். மற்ற விஷயங்களை நாளை சாவகாசமாக அவனோடு பேசிக் கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டு, தன் அந்தரங்க அறைப்பக்கமாகச் சென்றார். பிள்ளையார் பிடிக்கக் குரங்காக அல்லவா முடிந்து விட்டது என்ற ஆத்திரம் அவருக்கு.

தனியாகச் சென்று உட்கார்ந்தும் அவருக்கிருந்த பிரமையும் குழப்பமும் சிறிதுகூட மட்டுப் படவில்லை. சந்து முனையில் டாக்ஸிக்காரனை நிறுத்தி வைத்து வந்ததையும் மறந்துவிட்டார். சினிமாத் தியேட்டரில் ஆத்மாராம் காத்துக்கொண்டிருப்பானே என்ற ஞாபகம் கூட அவருக்கு இல்லாமல் போய்விட்டது, மன ஊசலாட்டம் அவ்வளவு தீவிரத்தில் இருந்தது. ஆனந்தரங்கனின் முகம் அவரது நினைவுத் திரையில் சாந்தமாகவும் குரூரத் தன்மையொடும் மாறிமாறிக் காட்சியளித்து அலைக் கழித்தது அவரை.

ஆனந்தரங்கனை நினைத்துக் கொள்வார் ஆளவந்தார். பால்வடியும் முகத்தோடு கூடிய ஆனந்தரங்கனின் உருவம் அவர் மனத் திரையில் தோன்றும். அப்பாவியான அந்தப் பையனையா கொலைகாரன் என்றான் ஆத்மாராம் என்று எண்ணுவார் ஆளவந்தார். அதே ஆனந்தரங்கன் அடுத்த விநாடி கொடூரத் தோற்றத்துடன் பிரமைத் திரையில் காக்ஷி தருவான். 'புலிக்குப் பிறந்தது பூனையாக இருக்க முடியாது!' என்று முணுமுணுப்பார் ஆளவந்தார். ஆனந்தரங்கனின் ஞாபகம் அவரை எப்படியெப்படி யெல்லாமோ பிடித்தாட்டிக் கொண்டிருந்தது.

இப்படியான ஒரு தடுமாற்றம் எத்தனை நாழி நீடித்ததோ தெரியாது, டெலிபோன் மணி 'கிணிகிணி' என்று ஒலித்தபோது தான் ஆளவந்தார் தூக்கத்திலிருந்து விழிப்பதுபோல திடுக்கிட்டுச் சுய நினைவிற்கு வந்தார்.

அவருடைய அறையிலிருந்த டெலிபோன் மணி கிணி கிணித்துக்கொண்டிருந்தது. விரைந்துபோய் டெலிபோன் ரிசீவரை எடுத்தார் ஆளவந்தார்.

'ஙொய்' என்று ஒரு குரல் செவிட்டில் அடிப்பது போல கேட்டது ஆளவந்தாருக்கு. "யாரு? ஆளவந்தாரா?"

"ஆமாம் ஆளவந்தார் தான் பேசுகிறேன்"

"இங்கே துப்பறியும் ராஜாமணி பேசுகிறேன்" தொந்திரவு கொடுப்பதற்கு மன்னிக்கவும். உங்களைப் பார்த்துவிட்டுத் திரும்பும்போது சந்து முனையில் நீங்கள் ஏறிவந்த டாக்ஸியைப் பார்த்தேன். திரும்ப வந்து அவனுக்குக் காசு கொடுக்கக்கூட மறந்துபோய்விட்டீர்கள் போலிருக்கிறது. உள்ள வாடகையை நான் கொடுத்து அவனை அனுப்பிவிட்டேன். ரூபாய் மூணு, அணா பத்து ...இதை உங்கட்குச் சொல்லத்தான் கூப்பிட்டேன். முடிந்தால் நாளை இந்தச் சில்லரையை உங்கள் வேலைக் காரன் மூலம் எனக்குக் கொடுத்தனுப்பி விடுகிறீர்களா?"

'ஷாக்' அடித்தவர்போல விரைத்துப் போனார் ஆளவந்தார். அவர் பதில் சொல்லத் தடுமாறுவார் என்பதை எதிர்பார்த்தவர்போல ராஜாமணி டெலிபோனை வைத்துவிட்டார்.

யார் பதில் அவருக்குத் தேவை!

டெலிபோன் தொடர்பு நின்று விட்டது கூடத் தெரியாமல் டெலிபோன் ரிசீவரை காதில் வைத்து அழுத்தியபடி சிலையாகி நின்று விட்டார் ஆளவந்தார். பாவம்...எல்லாமே ஏடாகூடமாக இருந்தால் அவர் ஞாபகம் அவருக்கு எங்கே திரும்பப் போகிறது!

எதேச்சையாக அங்கே வந்த அன்னம்மாள், டெலி போனில் பேச்செதுவும் இன்றி திகைத்து நின்றுகொண் டிருக்கும் தன் கணவரை வியப்போடு பார்த்துவிட்டு, "என்னங்க இது! டெலிபோனோடு கொஞ்சிக்கொண் டிருக்கீங்களே!" என்றாள்.

அன்னம்மாளின் குரல் கேட்ட பிறகுதான் ஆளவந் தாருக்கு விழிப்பேற்பட்டது. டெலிபோன் ரிசீவரை

இருக்கவேண்டிய இடத்தில் வைத்துவிட்டு, "உன்னை யார் இங்கு வரச்சொன்னது. போ...வெளியே...நான் கூப்பிடாமல் இனி யாருமே என் அறைக்கு வரக் கூடாது! தெரிந்ததா நான் சொல்வது!" என்று கூப்பாடு போட்டு கனல் கக்கினார் ஆளவந்தார்.

அன்னம்மாள் அசந்துபோய் அறையைவிட்டுச் சென்றுவிட்டாள்.

குறுக்கும் நெடுக்குமாகப் புனுகுப் பூனை போல் அறைக்குள்ளேயே வட்டமிட்டுக் கொண்டு வெகுநேரம் வளைய வளைய வந்து கொண்டிருந்த ஆளவந்தார், கோட்டுப்பையைத் தடவிப் பார்த்துக் கொண்டார். பையினுள் சாதாரணமாக நுழைந்த அவரது வலது கை விருட்டென வெளியே வந்தது. பிறகு மீண்டும் மீண்டும் பரபரப்போடு கோட்டின் எல்லாப் பைகளையும் தடவிப் பார்த்தார். விழி பிதுங்கியது. முகம் கருத்தது. கழுத்தை யாரோ, பிடித்து அமுக்குவதுபோல மூச்சுத் திணறினார். பிறகு அறைமுழுதும் மூலை முடுக்கு எல்லாம் எதையோ தேடினார். கிடைத்தற்கரிய ஒன்றைப் பறிகொடுத்து விட்டால் பைத்தியம் பிடித்ததுபோல எப்படியெல்லாம் தடுமாறுவார்களோ அந்த நடிப்பு அங்கே தத்ரூபமாகக் காக்ஷியளித்துக் கொண்டிருந்தது. தலைமயிரைப் பிய்த்துக் கொண்டு கூடத்தின் பக்கம் ஓடினார். உட்கார்ந்திருந்த இடம், நின்ற இடம், நினைத்த இடம் எல்லாம் குனிந்து பார்த்தார். வெறிக்கப் பார்த்தார்.

ஆனால் அவர் தேடிய பொருள்—ஆத்மாராம் அவரிடம் கொடுத்த பொருள்-ஆனந்தரங்களின் உயிரைக் குடிக்க இருந்த அந்த யமன்—சுழல் துப்பாக்கியைக் காணவில்லை!

"அடியே அன்னம்மா!" என்று அவர் அலறினார் வெறி பிடித்ததுபோல, "உஷா!" என்று கத்தினார் கதி கலங்க. யாரைக் கத்திக் கூப்பிட்டு என்ன பலன்? காணமற் போன துப்பாக்கியை இனி எப்படிக் கண்டுபிடிக்க முடியும்!

7

# மெத்தை விஷயம்

அன்றைய இரவு முழுதும் ஆத்மாராம், தூக்கப் கெட்டுத் தவித்துக் கொண்டிருந்தது போலவே, கைத் துப் பாக்கியைப் பறிகொடுத்த ஆளவந்தாரும் படுக்கை கொள்ளாமல் புரண்டு கொண்டிருந்தார். ஆத்மாராமால் கிளப்பிவிடப்பட்ட மரணபயம் க்ஷயப்பூச்சி போல அவரது இதயத்தைத் துளைத்தெடுத்துக் கொண்டிருந்தது. அவரிடமிருந்த கைத்துப்பாக்கி மட்டும் காணுமற் போகாமல் இருந்திருந்தால், அன்று இரவுக்கிரவே அவர் ஆனந்தரங்கனைச் சுட்டுக் கொன்றிருப்பார்; அல்லது தன்னைத்தானே சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டிருப்பார். அவருக்கிருந்த மன உளைச்சல் அப்படி யிருந்தது.

தூக்கமற்றவன் துர்க் கனவுகள் காண்பான். துயரம் நிறைந்தவன் துன்பக் கனவுகள் காண்பான். மரணபயம் நிறைந்து விட்டவர்களின் கனவுகளில் என்னென்ன வெல்லாம் தோன்றும் என்பதற்கு ஆளவந்தார் பிரத்யக்ஷப் பிரமாணமாகிவிட்டார்!

சுவர்க்கடிகாரம் 'சுர்சுர்' என்று பதிைேருதரம் சுண்டிவிட்டு ஓசை கிளப்பியது. அப்போது கூட ஆளவந் தாரின் இமைகள் மூடவில்லை. அறையிலிருந்த அலமாரி களையும் மேஜைகளையும் சோபாக்களையும் அர்த்தமற்று மாறிமாறிப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டார். 'தூங்கவேண்டும்! எப்படியாவது தூங்கிைல்தான் நல்லது!' என்று அவரது மனம் புருபுருத்தது.

வெளிச்சமிருந்தால் தூக்கம் எப்படி வரும்? எரிந்து கொண்டிருந்த மின்சார விளக்கை அணைத்துவிட்டு கட்டிலில் வந்து படுத்தார். அறையைக் கப்பிக் கொண்ட இருள் அவரது ஐம்புலன்களையும் அரவணைத்துக் கொண்டாலல்லவா தூக்கம் வருவதற்கு! கண்களிலே கருப்புத் துணியைக் கட்டிக் கொண்டால் தூக்கம்வரும்

என்பார்களே, செய்து பார்க்கலாமா என்று ஆளவந்தார் தடுமாறினுர்.

கருப்புத் துணி என்று நினைத்துக் கொண்டதும் அவரது நினைப்பு வேறு எதிலோ ஈடுபட்டுவிட்டது. கொலைகாரர்கள், திருடவருபவர்கள், கொள்ளையடிக்க முற்படுபவர்கள் கருப்புத் துணியால் முகமூடி அணிந்து வருவார்கள் என்பதைப் பல நாவல்களிலும் நிஜசம்பவங்களிலும் படித்திருக்கிருர் ஆளவந்தார். ஆனந்த ரங்கன் தம் உயிரைக் கவர வரும்போது அப்படித்தான் கருப்புத் துணியால் முகமூடி அணிந்து வருவானே என்று தமக்குள்ளே கற்பனை செய்து கொள்ள ஆரம்பித்தார். தம் உயிருக்கு ஆபத்து இருக்கிறபோது தூங்குவது எவ்வளவு பைத்தியக்காரத்தனம் என்று எண்ணிப் படுத்திருந்தவர் எழுந்து கட்டிலிலேயே உட்கார்ந்து கொண்டார்.

அந்தச் சமயத்தில்தானு அந்த ஓசையும் கேட்க வேண்டும்! எதையோ ராவிப் பிராண்டுவதுபோல ஒரு சப்தம் இருள் சூழ்ந்த அந்த அறையிலே முதலில் மெதுவாகக் கேட்க ஆரம்பித்து, பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கலாயிற்று. ஏதோ அரை குறையாக மூச்சுவிட்டுக் கொண்டு உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருந்த ஆளவந்தார், மூச்சுவிடுவதையே நிறுத்திக் கொண்டுவிட்டார்.

எதையோ ஆயுதம் கொண்டு ராவுகிறது போன்று கேட்ட சப்தம் சிறிது கூட அடங்கவில்லை. அது மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டே இருந்தது. "யாரது?" என்று கேட்க வாய் திறந்தார் அவர். பயத்தால் தொண்டை அடைத்துக் கொண்டது. பேச்சு அடி வயிற்றிலேயே தேங்கி நின்றுவிட்டது. "யாரது?" என்று குரல் கொடுத்து தாம் இருக்கிற இடத்தைக் காட்டிக் கொண்டு விட்டால், திருட வந்திருப்பவன் கத்தியோடு அவர் மீது பாய்ந்து விட்டால் உயிருக்கே ஆபத்தாயிற்றே?

அவருக்கு என்ன செய்வதென்றே புரிபடவில்லை. மூச்சைப் பிடித்துக்கொண்டு 'கம்'மென்று உட்கார்ந்திருந்தார். கேட்டுக் கொண்டிருந்த சப்தம் ஓய்ந்தது.

பிறகு ஏதோ 'சலசல'வென்று சப்தம் கேட்டது. பேப்பரைக் கசக்கினுலோ பொட்டலமாகக் கட்டினுலோ ஒரு சப்தம் கேட்குமே. அதுபோல இருந்தது. பிறகு அறைக் கதவைத் திறந்து யாரோ செல்வது போல பிரமைத் தோற்றம். கதவு திறந்து ஓசைப்படாமல் மூடுகிற போது எழக்கூடிய காற்று மோதல் அவர் மீது உராய்வதையும் உணர்ந்தார்.

பிறகு ஓர் அமைதி நிலவிற்று. அந்த அமைதி அவருக்கு ஓரளவு தைரியத்தைக் கொடுத்தது. தம்மைக் கொல்ல வந்தவனுக இருந்தால் சும்மா திரும்பிப் போவாளு என்ற ஒரு சந்தேகம் தட்டியது. அதைத் தொடர்ந்து வேருெரு நினைப்புத் தலைதூக்கியது. "ஐயோ! என் பணமெல்லாம் போச்சே!" என்று அலறிக்கொண்டே கட்டிலை விட்டு இறங்கி விளக்கு ஸ்விட்சைப் போட்டார். பணம் பறிபோயிருக்குமோ என்ற நினைப்பு வந்ததும் உயிர் பறிபோனுல்கூடப் பரவாயில்லை என்று நினைத்து விட்டார் அவர்!

விளக்கைப் போட்டதும் அந்த அறையின் சுவரிலே ஒரு குறிப்பிட்ட இடத்தில் அவரது பார்வை விழுந்தது. பதட்டத்தோடு அந்த இடத்தை அடைந்தவர் அந்தச் சுவற்றிலே தொங்கிக்கொண்டிருந்த லக்ஷ்மி படத், தைத் தூக்கிப் பார்த்தார். பிறகு அவர் பார்வை அறைக் கதவின் மீது விழுந்தது. ஒருக்களித்தாற் போல அது திறந்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டதும் சந்தேகம் வலுப்பட்டு விட்டது.

அவர் மனதிற்கு என்ன தோன்றியதோ, என்னவோ ஏதையோ சரி பார்க்கத் துடிதுடிப்பவர் போல சுவரில் தொங்கிய லக்ஷ்மி படத்தைக் கழற்றிக் கீழே வைத்தார். அந்த லக்ஷ்மி படத்திற்குப் பின்னுல் இருந்த விளக்கு மாடத்தில் கைவிட்டு வெளியே இழுத்தார். மேஜையின் டிராயரை வெளியே இழுத்தால் அந்த டிராயர் எப்படி வெளிப்பக்கமாகத் துருத்திக்கொண்டு வருமோ அதே போன்று ஒரு பெரிய 'டிராயர்' சுவரை விட்டு வெளியே வந்தது. அந்த டிராயரில் கைவிட்டுத் துழாவினுர். புத்தம் புது கரன்ஸி நோட்டுக் கட்டுகள் கட்டுகட்டாகக் கட்டி வைக்கப்பட்டு அதில் இடம் பெற்றிருந்தது.

அந்தக் கரன்ஸி நோட்டுக் கட்டுகள் வைத்தது வைத்த படி இருக்கிறதா என்று ஆராய முற்பட்டார் ஆளவந்தார். அந்தச் சமயம் இருளில் யாரோ தடதடவென்று நடந்து வரும் சப்தம் கேட்கவே, டிராயரை மீண்டும் மூடமுடியாத நிலையில் அறைக் கதவையாவது தாழிட்டு விடலாம் என்று விரைந்தோடினார், அதற்குள் உள்ளே நுழைந்துவிட்டது ஒரு மனித உருவம்! நுழைந்ததோடு மட்டுமல்ல, சுவரி லிருந்தும் வெளியே துருத்திக்கொண்டிருந்த ஒரு பெரிய பெட்டி போன்ற டிராயரையும், அதற்குள்ளே குப்பை போல போட்டுக் கிடக்கும் நோட்டுக் கட்டுகளையும் பார்த்துப் பிரமை தட்டி நின்றுவிட்டது.

அந்த மனித உருவம் வேறு யாருமில்லை. ஆளவந் தாரின் அருமை மகளான உஷா தான் அங்கே அப்படி வந்து செதுக்கி வைத்த சிலை போன்று நின்றுகொண்டிருந் தாள்!

பரம பஞ்சை போல, 'பணமில்லை பணமில்லை' என்று சொல்லித் தாம் போட்டு வந்த வேஷமெல்லாம் இப்போது கலைந்து விட்டதே என்ற பேரிடியால் ஆளவந்தாரும் அசந்துபோய் நின்றுவிட்டார்.

கட்டுக் கட்டான கரன்ஸி நோட்டுகளைக் கண்களை அகல விரித்தபடி பார்த்துத் திகைத்து நின்ற உஷாவும், அப்படிப் பார்த்து நிற்கும் தம் மகளை திறந்த இமை மூடாமல் பார்த்துப் பம்மிக்கொண்டிருந்த ஆளவந்தாரும் சிறிது நேரம் பிரமை படித்தவர்கள் போல நின்று கொண்டிருந்தனர்.

சில விநாடிகள் சென்றன. அந்த அறையே அதிரும் படியாக ஆளவந்தாரின் குரல் குலையைப் பிடித்துக் கொண்டு கிளம்பியது.

"உஷா, ஏன் இங்கு வந்தாய்?"

ஆளவந்தாரின் ஆர்ப்பாட்டக் குரலால் பிரமையி லிருந்தும் நீங்கிவிட்டவள் போல, கையைப் பிசைந்து கொண்டே "வந்து...வந்து..." என்று வந்த காரணத்தைக் கூட நினைவுபடுத்திக்கொள்ள மறந்து விட்டவள் போலத் தயங்கினாள் உஷா.

" அப்பன் எந்தக் காசை எங்கே பதுக்கி வைக்கிறுன் என்று பார்க்க வந்தாயாக்கும்?" என்று உறுமினுர் ஆளவந்தார்.

அது பிறந்ததிலிருந்து இன்று வரை கேட்டறியாத இடியோசையாக இருந்தது உஷாவிற்கு! "வந்தது தப்புத் தான் அப்பா! தெரியாத்தனமாக வந்துவிட்டேன்!" என்று சொல்லிக்கொண்டே அறையைவிட்டுத் திரும்பி ஓடினுள் உஷா.

அந்த அரை நொடி நேரத்தில் ஆளவந்தாருக்கு என்ன தோன்றியதோ என்னவோ, " உஷா! உஷா!" என்று கத்திக் குரல் கொடுத்தார்.

தீயை மிதித்து விட்டவள் போல ஓடிய உஷா தந்தையின் குரல் கேட்டு 'தடா'ரென நின்று திரும்பிப் பார்த்தாள்.

" வா இப்படி!" என்ருர் ஆளவந்தார். அவர் விடுத்த குரல், 'வா இங்கே, தோலை உரிக்கிறேன்' என்று சொல்லுவதுபோல இருந்தது உஷாவிற்கு. தயங்கித் தயங்கி நடந்து தந்தையருகே வந்து நின்றுகொண்டாள் அவள்.

" இங்கே நீ பார்த்ததை யாரிடமும் சொல்லக் கூடாது. தெரிகிறதா?" என்று அதட்டினுர் ஆளவந்தார்.

" சரியப்பா!" என்ருள் உஷா மிரண்டுபோய்.

" உன் அம்மாவிடம் கூடச் சொல்லக்கூடாது!"

" சரியப்பா!"

" அம்மாமாத்திரமல்ல, வேறு யார் கேட்டாலும்கூடச் சொல்லக்கூடாது!"

" சரியப்பா!"

" யாரிடமாவது நீ சொன்னதாகத் தெரிந்தால் போதும், கழுத்தை நெறித்துக் கொன்று விடுவேன் உன்னை!"

" சரியப்பா!"

" போ!" என்ருர் ஆளவந்தார்.

தப்பினோம் பிழைத்தோமென்று உஷா வேகமாக நடையைக் கட்டினாள்.

மீண்டும் ஆளவந்தார் என்ன நினைத்துக் கொண்டாரோ, "உஷா!" என்று கூப்பிட்டார் மறுபடியும்.

மாஜிஸ்ட்ரேட்டால் விடுவிக்கப்பட்ட ஒரு கைதியை செஷன்ஸ் நீதிபதி அப்பீலுக்கு அழைத்தால் கைதியின் மனம் எப்படியிருக்குமோ அதுபோன்று இருந்தது உஷாவின் மன நிலை. அறைக் கதவு வரை சென்றுவிட்ட அவள் திரும்பி வந்து தந்தையின் முன்னே நின்றாள்.

"உஷா!" என்றார் ஆளவந்தார்.

'உஷா!' என்று கூப்பிட்ட இப்போதைய தோரணை, முன்னைப்போல கடுமையோடு கூடியிருக்கவில்லை. கனிவோடு வெளிப்பட்டது உஷாவிற்கு சிறிது மனத் தெம்பை அளித்தது.

"என்னப்பா?"

"கோபத்திலே உன்னை மிரட்டிவிட்டேன்!"

"நான் வந்தது தப்பு! அதனால் நீங்கள் திட்டினீர்கள்! இது சகஜம்தானே, அப்பா?"

"என்றைக்குமில்லாமல் இன்றைக்கு நான் அபூர்வமாக உன்னிடம் கடுமையாக நடந்துகொண்டு விட்டதால் உன் மனசு ரொம்பவும் கஷ்டப்பட்டிருக்கும் இல்லையா, உஷா?"

"இல்லாமல் இருக்குமாப்பா?"

"அதை மறந்துவிடு."

"எதையப்பா? அந்த நோட்டுக்களைப் பார்த்தேனே, அதையா?"

"அதில்லை உஷா. நான் உன் மேல் எரிந்து விழுந்தேன் பார், அதை!"

"மறந்துட்டேனப்பா!"

"இந்தப் பணமெல்லாம் உனக்காகத்தான் சேர்த்து வைத்திருக்கிறேன்."

"சரிதானப்பா!"

“ உன் கல்யாணத்தின்போது இதைக் கொண்டு உனக்குக் கனகாபிஷேகம் செய்வேன்.”

“ சரியப்பா !”

“ நான் இவ்வவளவு பணம் வைத்திருப்பது உன் அம்மாவிற்குக்கூட ஏன் சொல்லவில்லை தெரியுமா? அவளுக்குத் தெரிந்தால் ஊரெல்லாம் தண்டோரா போட்டு விடுவாள் !”

“ வெளியாருக்குத் தெரிந்தால் என்னப்பா ? நம்மிடம் இவ்வளவு பணம் இருக்கிறதென்று தெரிந்தால் எல்லோரும் கைகட்டி நிற்பார்களே ? அது நமக்குப் பெருமைதானே !”

“ அப்படியில்லையம்மா. இவ்வளவு பணம் நான் வைத்திருப்பது வெளியே தெரிந்தால் காரியம் கெட்டு விடும், உஷா !”

“ யாராவது கொள்ளையடிக்க வருவார்களா ?”

“ அப்படியும் வந்தாலும் வரலாம். அந்த பயம் இல்லாவிட்டாலும் வேறொரு கஷ்டம் இருக்கிறதம்மா.”

“ அது என்ன கஷ்டமப்பா ?”

“ சர்க்கார் வந்து என் உயிரை எடுத்துவிடுவார்கள்!”

“ அப்படியானால்...அப்படியானால்...இது எங்காவது கொள்ளையடித்து வந்த பணமா அப்பா ?” என்று மருண்டு கேட்டு விட்டாள் உஷா.

சட்டென மாறுபட்ட தம் முகத்தைச் சரி செய்து கொள்ள வெகுவாக முயற்சித்தார் ஆளவந்தார். கள்ளங் கபடமற்ற அந்தப் பெண் அப்படிக் கேட்டிருக்கக் கூடாது.

நிலைமையைச் சமாளித்துக் கொண்டார் ஆளவந்தார். “ அசடு போல நீ இப்படிக் கேட்கலமா ?” என்றார் அவர் சிரித்துக்கொண்டே.

“ பின் ஏனப்பா நீங்கள் சர்க்காரைக் கண்டு பயப் படவேண்டும் ?” என்று வெகுளி போலக் கேட்டாள் உஷா.

“ இந்தப் பணமெல்லாம் நம்ப கணக்கிலே வராத பணம் உஷா. ‘ பிளாக் மணி ’ என்கிருர்களே, அதே போல! அதனுலே இந்தப் பணம் தனியாக இருப்பது தெரிந்தால் சர்க்கார் வரி போடுவார்கள். அதாம்மா... வருமான வரி இல்லே...அது!”

“ சரிதானப்பா!”

“ இப்பொழுது உனக்கு நிலைமை புரிந்தது இல்லையா? அதனுல் நம்மிடம் பணம் இருப்பதை நீ யாருக்குமே சொல்லமாட்டாய். அப்படித்தானே உஷா ?”

“ சரிதானப்பா!”

இத்தனை நாளும் யாருக்கும் தெரியாமல் ஒளித்து வைத்திருந்த பணம் உஷாவிற்குத் தெரிந்து விட்டதே என்ற பயம் அவர் உள்ளத்திலிருந்து சிறிது விலகி விட்டதுபோல பெருமூச்சு விட்டுக் கொண்டார்.

“ போகட்டுமா அப்பா ?” என்று கேட்டாள் உஷா.

“ ஆமா, நீ எதற்காக இங்கே வந்தாய்?...பயப் படாமல் சொல்லு. நான் இனி உன்னை இனி எதற் காகவும் கோபிக்கமாட்டேன். என்னிடம் என்ன கேட்க நினைத்து வந்தே உஷா ?”

இப்போதுதான் உஷா தனது நிஜமான அன்பு நிறைந்த அப்பாவைக் கண்டாள்! அவள் முகம் சற்றே தெளிவடைந்தது. “ வேறென்றுமில்லையப்பா.....அவர் இருக்கிருரே....” என்று இழுத்தாள் பேச்சை.

“ எவரைச் சொல்லுகிருயம்மா ?” என்று கொஞ்ச லோடு கேட்டார் ஆளவந்தார்.

“ அவர்தானப்பா...பர்மாவிலே இருந்து வந்திருக் கிருரே...அவர்...”

“ ஆமா...அவருக்கென்ன ?”

“ படுத்துக்கொண்டு விட்டாரப்பா!”

“ தூக்கம் வந்தால் படுத்துக்கொள்ளாமலா இருப் பார்கள்...நல்ல புகார் சொல்ல வந்தாய் அசடே!” என்று சிரித்தார் ஆளவந்தார் கலகலவென்று.

" அது தெரியாதாப்பா எனக்கு ?...அவர் கீழே பாயில் படுத்துக்கொண்டு விட்டார்."

" அதுக்கென்ன இப்போ ?"

" அம்மாவிடம் சொன்னேன். அப்பாவிடம் போய்ச் சொல்லு என்றார்கள்."

" இதை ஒரு பெரிய சமாசாரமா என்னிடம் சொல்லச் சொன்னளாக்கும். அவள் ஒரு பைத்தியம் !"

" அதில்லேப்பா ! உங்களிடம் சொல்லி, இங்கே இருக்கிற அம்மாவுடைய மெத்தையை அவருக்கு எடுத்துக் கொடுக்கலாமென்று வந்தேன் !"

சிரித்துப் பேசிக் கொண்டிருந்த ஆளவந்தாரின் முகத்திலே சுழிப்பு ஏற்பட்டு விட்டது. " பாயில் படுத்துக் கொண்டிருந்தால் என்ன ? எலும்பா தேய்ந்துவிடும் ?" என்று கேட்டு ஒரு சிணுங்கு சிணுங்கினர் ஆளவந்தார்.

" சரிதானப்பா !" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்பி விட்டாள் உஷா.

திரும்பிச் சென்று கொண்டிருக்கும் தம் பெண்ணையே குறுகுறுவென்று பார்த்துக்கொண்டு நின்றார் ஆளவந்தார். சோர்வு மிகுதியோடு நடந்து செல்லும் நோயாளிப் பெண் போலச் சென்றுகொண்டிருந்தாள் அவள். ' யார் எக்கேடு கெட்டால் இவளுக்கென்ன !' என்று புருபுருத்தன ஆளவந்தாரின் உதடுகள்.

பிறகு அவர் பணம் பதுக்கி வைத்திருந்த இரகசிய டிராயர் அருகே வந்து, நோட்டுக் கட்டுகளை ஒழுங்காக அடுக்கி வைத்து மீண்டும் சுவரோடு சுவராய் உள்ளே நகர்த்திவிட்டு படுக்கையில் போய் சாய்ந்து கொண்டார். நல்லவேளையாக ஆனந்தரங்கன் வராமல் போனுனே என்ற சமாதானம் அவருக்கு. அவனுடைய தகப்பனை பட்டாபியிடமிருந்து கொள்ளை யடித்த செல்வமல்லவா அந்தப் பணமெல்லாம் !

சிறிது நேரம் சென்றது. அவருடைய கையகல நெஞ்சு எத்தனை யெத்தனை கவலைகளைத்தான் தன்னுள்ளே அடக்கிக் கொண்டிருக்கமுடியும் ? அந்தக் கவலை

களுக்கெல்லாம் ஒன்றன்பின் ஒன்ருய் விடுதலை தந்தால் தானே அதன் சுமையும் இறங்கும்...?

தம் அறையைவிட்டுக் கிளம்பிய உஷா நேராகத் தன் அறைக்குச் சென்று படுத்துவிட்டாளா அல்லது தன் அம்மாவிடம்போய்த் தம் அறையில் நடந்தது யாவையும் ஒன்று விடாமல் சொல்லிக் கொண்டிருக்கிருளா என்பதை அறிய ஆவல் கொண்டார் ஆளவந்தார். மீண்டும் படுக்கையைவிட்டு எழுந்து அவர் அடிமேலடி எடுத்து வைத்து பூனை போல நடந்து சென்ருர்.

உஷாவின் படுக்கை அறைக்கு வந்தார் ஆளவந்தார். அங்கு போடப்பட்டிருக்கும் கட்டிலைப் பார்த்தார். அதில் அவள் படுத்திருக்கவில்லை. அறையைச் சுற்றிக் கண்ணேட்டம் விட்டார். சுவரோரத்தில் தலையணை கூட இல்லாது தரையில் உஷா படுத்திருப்பதைக் கண்டதும் தூக்கிவாரிப்போட்டது அவருக்கு. அடுத்த கணம் அவரது பார்வை கட்டிலின் மீது பாய்ந்தது. அந்தக் கட்டிலிலே விரிக்கப்பட்டிருந்த மெத்தையையும் காணவில்லை !

புரிந்தும் புரியாததுமான ஒரு சந்தேகம் அவருக்கு ஏற்பட்டது. உஷாவை எழுப்பிவிட்டுவிடாமல், அந்த அறையைவிட்டு அவர் அகன்று நடுஹாலுக்கு வந்தார். ஆனந்த ரங்கன் அங்கே படுத்திருந்தான். மங்கிய வெளிச்சத்திலே உற்றுப் பார்த்தார். ஒரு சாண் கனமுள்ள வெல்வெட் மெத்தையில் கைக்குத் தலையணை, காலுக்குத் தலையணை, தலைக்கு இரண்டு சகிதம் ராஜ குமாரன் போல ஆனந்த ரங்கன் ஒய்யாரமாகத் துயில் கொண்டிருப்பதைக் கண்டபோது அவருக்கு ஆத்திரம் மண்டிக் கொண்டு வந்தது. நிர்சாநதியாய்த் தூங்கிக் கொண்டிருக்கும் அவனைக் கரகரவென்று உருட்டி வெளியே தள்ளிவிடலாமா என்ற அளவுக்கு அவர் நிதானம் தவறிவிட்டார். 'பரம வைரிக்கு பட்டுமெத்தை வேறு!' என்று பொருமியபடி, தம் மனைவி படுத் துறங்கும் இடம் தேடி விரைந்தார்.

ஆளவந்தாருக்குத்தான் கவலை அதிகம். அன் னம்மாளுக்கு என்ன வந்தது? கூடத்தை அடுத்த வழி நடையில் நிலைப் படியில் தலைவைத்துப் படுத்தபடி

சுவாரஸ்யமாக நாவல் படித்துக் கொண்டிருந்தாள் அன்னம்மாள், அந்த நேரத்திலே!

"அன்னம்மா!" என்று குரல் கொடுத்தார் ஆளவந்தார்.

திடுக்கிட்டுக் கண்ணை உயர்த்திப் பார்த்தாள் அவள். தலைமாட்டில் கூர்ச்சம் போல நின்று கொண்டிருக்கும் கணவனைக் கண்டதும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து உட்கார்ந்து கொண்டாள் அன்னம்மாள்.

"இவ்வளவு பெரிய வீட்டில் உனக்குப் படுக்கக் கிடைத்த இடம் இந்த வழிநடை தானா?" என்று கேட்டு விட்டு, "எழுந்துவா" என்றார்.

வெறுக் வெறுக் கென்று தனியாகப் படுத்திருக்க முடியாமல் கூப்பிடவந்திருக்கிறார் போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டு நாணத்தை முகத்திலே தேக்கிக் கொண்டு எழுந்து கணவனைப் பின் தொடர்ந்தாள் அன்னம்மாள்.

சம்சாரத்தோடு நடுஹாலுக்கு வந்த ஆளவந்தார் ஆனந்த ரங்கன் படுத்திருக்கும் உல்லாசச் சொகுசைக் காண்பித்து, "பாரு...நன்றாகப் பாரு!" என்றார்.

"ஒரு வாரப் பிரயாணமில்லையா...அசதி! அதுதான் தம்பி அப்படித் தூங்குகிறது!" என்றாள் அன்னம்மாள்.

பல்லை நறநறவென்று கடித்த ஆளவந்தார், "அதைக் காட்டவில்லை உனக்கு. அவன் படுத்திருக்கும் மெத்தை யைப் பாரு!" என்றார்.

"பாய் விரித்துப் படுத்துக் கிடந்தான். பாவம் பார்த்து நீங்கள்தான் மெத்தை கொடுத்தீர்களாக்கும்! உங்க மனசுதான் தங்கமாச்சே!" என்றாள் அன்னம்மாள் புன்னகை ததும்ப.

"என் மனசு செய்த பரோபகாரம் இல்லையடி இது. எந்தத் தங்க மனசு செய்தது என்பதைக் காட்டுகிறேன் வா!" என்று சொல்லிக்கொண்டே வந்தார்.

விரைந்து நடைபோட்ட அவருடைய கால்கள் உஷாவின் அறையிலே வந்து நின்றன. "தங்க மனசு

தரையிலே படுத்திருப்பதைப் பாரு! இந்த நடப்பு கூடத் தெரியாமல் கோட்டான்போல நீயும் விழித்துக்கொண்டு தானே கிடக்கிறாய்!'' என்றார் ஆளவந்தார்.

ஆளவந்தாரின் மனப் போக்கைத் தெரிந்து கொள்ளாத அன்னம்மாள் "உங்கள் பெருந்தன்மை உங்கள் பெண்ணுக்கு இருக்காதா என்ன! தம்பி தரையிலே படுத்துக் கிடக்கிறதே யென்று பரிதாபப்பட்டு தன் மெத்தையை எடுத்துக் கொடுத்திருக்கிறது!'' என்று சிரித்தாள்.

"நீயும் தான் சிபார்சு செய்திருக்கிறாய் அவளுக்கு! இல்லையா?''

"நானா?...நான் ஒன்றும் சொல்லவில்லையே! அவளாகக் கொடுத்திருக்கிறாள்!''

"என் அறையில் இருக்கிற உன் மெத்தையை எடுத்து அவனுக்குக் கொடுக்கச் சொல்லி நீ தானே உஷாவை என் அறைக்கு அனுப்பினாய்!''

"நானா?...உஷாவையா? நீங்களாக இட்டுக் கட்டு கிறீர்களா என்ன?''

"அப்படித்தான் சொல்லிக்கொண்டு என் அறைக்கு வந்து மெத்தை கேட்டாள்!''

"உஷாவா. உங்களிடம் வந்தா? நான் சொன்ன தாகவா?''

"ஆமாம்...ஆமாம்...ஆமாம்!''

"நான் சொல்லவேயில்லையே!''

"சரிதான்!...யாராவது பார்த்திருந்தா சிரித்திருப் பாங்க!''

"எதுக்காக?''

"உன் பெண்ணின் சமர்த்தைக் கண்டு!''

"இதிலே என்ன தப்பு?''

"அவனைத் தூக்கிக் கட்டிலிலே தூங்க வைத்தால் கூட தப்பே இல்லைதான்!...போ...போ! உன் புத்தியைப்

போலதானே இருக்கும் உன் பெண்ணுக்கும்! அந்தப் பயல் வந்து ஆறுமணி நேரம்கூட ஆகவில்லை. அதற்குள்ளே உன் பெண்ணுக்கு அவன் மேலே இவ்வளவு கரிசனை வந்துவிட்டது!...நீயும் இதற்கெல்லாம் இடம் கொடுத்துக் கொண்டிருந்தே, இல்லையா?'' வயசு வந்த ஆணையும் பெண்ணையும் இந்த அளவுக்கா பழக விடுவது?'' என்று பொரிந்து கொட்டினார் ஆளவந்தார்.

அவலை நினைத்து உரலை இடிக்கிற ஆளவந்தாரின் மனப்பான்மை அன்னம்மாளுக்கு எப்படித் தெரிந்திருக்கப் போகிறது?

''அந்தத் தம்பியைப்பற்றி வித்யாசமாகப் பேசாதீங்க. பதவிசான பிள்ளை. என்னோடு பேசக்கூட அது வெட்கப் படுது. உஷாவை ஏறெடுத்துப் பார்க்கக்கூட வெட்கப் படுது. ஏனோதானோ என்று இருக்கிற அந்தத் தம்பியைப் பற்றி ஏன் கேவலமா மதிக்கிறீங்க? அந்தப் பிள்ளை யாண்டானைப்பற்றி கொஞ்ச நேரத்திற்கு முன்னால்கூட உஷா சொல்லிட்டு இருந்திச்சு—''

''என்ன சொல்லிச்சு?'' என்று வெறுப்போடு கேட்டார் ஆளவந்தார்.

''ஆனந்தரங்கன் ஒரு ரிஸ்யசிருங்கர் என்று கேலி செய்து கொட்டமடிக்கிறாள்!'' என்றாள் அன்னம்மா.

''அவள் அவனிடம் போய் எவ்வளவு தூரம் பழகிப் பார்த்திருந்தால் அந்த அபிப்ராயத்தை அவள் உன்னிடம் சொல்லியிருப்பாள்!...அன்னம்மா! அந்தப் பையன் இங்கே இருக்கிற வரை உஷாவை இந்த வீட்டிலே விட்டு வைக்கக் கூடாது. நாளையே திரும்பக் கொண்டுபோய் ஹாஸ்டலில் விட்டுவிடு!'' என்றார்.

''ஆனந்தரங்கன் வரப்போகிறான். அவனை உஷா வுக்குப் பிடித்திருக்கிறதா என்பதைத் தெரிந்துகொண்டு இரண்டுபேருக்கும் கல்யாணம் செய்து வைத்து விடலாம் என்ற எண்ணத்தை எனக்குச் சொல்லித்தானே அவனை அழைத்து வரும்படி கூறினீர்கள். இப்போது ஏன் உங்களுக்கு அந்தப் புத்தி மாறிப் போச்சு?'' என்று சற்று சூடாகவே கேட்டாள் அன்னம்மாள்,

“ அந்த எண்ணம் அப்போது இருந்தது. இப்போது இல்லை!”

“ காரணம் ?”

“ அவன் வருவதற்கு முன்னால் அவனைப்பற்றி உத்தமமாக நினைத்திருந்தேன். இப்போது அப்படியில்லை. அவன் எனது பரமவைரி!” என்றார் ஆளவந்தார் ஆத்திரத்தோடு.

“ யார் சொன்னார்கள் ?—எப்படித் தெரியும் உங்களுக்கு ?” என்று பதறினாள் அன்னம்மாள்.

“ எப்படியோ தெரிந்தது ! அதையெல்லாம் உன்னிடம் சொல்லவேண்டிய அவசியமில்லை. அதற்குமேல் என்னிடம் எதுவும் பேசவும் கூடாது ; கேட்கவும் கூடாது!” என்று முறைப்போடு சொல்லிக்கொண்டே வெகு வேகமாகத் தம் அறைக்குச் சென்றுவிட்டார் ஆளவந்தார்.

ஆறுமணி நேரத்திற்கு முன் நல்லவனாக விளங்கிய ஆனந்தரங்கன் இத்தனை சுருக்காக எப்படிக் கெட்டவனாக மாறியிருக்க முடியும் என்று யோசிக்க ஆரம்பித்தாள் அன்னம்மாள்.

உஷாவின் அறை வாசலில் நின்று அன்னம்மாள் குழம்பிக்கொண்டிருந்தது போலவே, படுக்கையறைக்குள் கண்மூடிக் கிடந்த ஆளவந்தாரும் ஆயிரம் தேள்களால் கொட்டப்பட்டவர் போலச் சஞ்சலப்பட்டுக் கொண்டு கிடந்தார்.

இந்த நிலை ஒரு மணி நேரம் நீடித்தது. குழப்பம் என்பதையே அறியாத அன்னம்மாளால், சஞ்சலத்தைத் தாங்கி சந்தேகததோடு தவித்துக்கொண்டிருக்க முடியவில்லை. கணவர் படுத்திருந்த அறைக்கு வந்தாள்.

விழித்துக்கொண்டிருந்த ஆளவந்தார். “ இன்னமுமா தூங்காமல் வட்டம் போட்டு வளைய வளைய வந்துகொண்டிருக்கிறாய் ?” என்று கேட்டார், உள்ளே வந்த அன்னம்மாளைப் பார்த்து.

“ அரைகுறையாக ஒரு சமாசாரத்தைச் சொன்னால் தூக்கம் எப்படிப் பிடிக்கும் ?” என்று கேட்டபடி

கணவரின் அருகே வந்து உட்கார்ந்து கொண்டாள் சம்சாரம்.

அவள் எவ்வளவோ தூண்டிப்பேசிக் கிண்டிக் கேட்டும் ஆளவந்தார் வாய்திறக்கவேயில்லை. எதையும் அவளிடம் சொல்லவும் அவர் மனங்கொள்ளவில்லை. "வீட்டுக் கதவெல்லாம் தாழிடப்பட்டிருக்கிறதா என்று பார்த்துவிட்டு, உஷா அறையில் போய்ப் படுத்துக்கொள் போ!" என்று கணவர் கூறிவிட்டார்.

என்றுமில்லாமல் இன்று ஏன் தன் கணவர் இப்படிச் சிடுசிடுவென்று விழுகிருர் என்பது புரியாமல் மனக் குறையோடு கிளம்பிய அன்னம்மாள், தலைவாசல் கதவு தாளிடப்பட்டிருக்கிறதா என்று பார்க்கப் போனுள்.

தாளிடப்படாமலேயே அது இருந்தது!

'மறந்துபோய் நாமும் படுத்துவிட்டோமே' என்று அவள் மனதிற்குள்ளே நினைத்து கொண்டு, கதவைத் தாழிட்டுவிட்டு நடுக் கூடத்திற்கு வந்தாள். ஆனந்த ரங்கன் படுததிருந்த மெத்தைப் பக்கம் அவள் வந்ததும் தீயை மிதித்துவிட்டவள்போல எகிறிப் பதறினுள். கால்கள் நிலை கொள்ளவில்லை. ஓட்டமும் நடையுமாய் உஷாவின் அறைக்கு விரைந்தாள். சுற்றுமுற்றும் பார்த்தாள். அவள் முகத்திலே பீதி தவழ்ந்தது. வெகு வேகமாக மீண்டும் தன் கணவரின் அறைக்கு ஓடிவந்து, "என்னோடு வாருங்களேன்! சீக்கிரம் வாருங்கள்" என்று சொல்லிக்கொண்டே மீண்டும் நகர்ந்தாள்.

"என்ன?...என்ன?" என்று பதறிக் கொண்டே கேட்டு கட்டிலிலிருந்து ஒரே தாவாய் தாவியபடி ஆளவந்தார், அன்னம்மாள் பின்னே ஓடினுர்.

நடுக் கூடத்திற்கு வந்த அவள், "பாருங்க அங்கே!" என்று சொல்லிப் பதைபதைத்தபடி ஆனந்த ரங்கன் படுத்திருந்த இடத்தைச் சுட்டிக் காட்டினுள்.

"ஆ!" என்று அலறினுர் ஆளவந்தார். உல்லாசமான சொகுசு தரும் அந்த வெல்வெட்டு மெத்தையில் ஆனந்த ரங்கனைக் காணேம்!

# 8 திண்ணைதூங்கியும் பெண்ணைப் பெற்றவனும்!

ஆளவந்தாரும் அன்னம்மாளும் கண்கூடாக ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகப் பார்த்தார்கள். ஆனந்த ரங்கன் ஆழ்ந்து தூங்கிக்கொண்டிருந்தான். அப்படித் தூங்கிக்கொண்டிருந்த ஆனந்தரங்கன் இப்போது காணப் படவில்லையென்றால் யாருக்குத்தான் வியப்பிருக்காது?

"அன்னம்மா! நல்ல பையன், பதவிசானவன் என்று சொன்னாயே, பார்த்தாயா இப்போதாவது! அயோக்யனடி அவன்! இந்த அர்த்தராத்திரியில் யோக்ய னால் எங்கேயாவது இப்படி மறைவானா!...அப் பொழுதே சந்தேகப்பட்டேன்!...போ! வீடெல்லாம் ஒரு தரம் சுற்றிப் பாரு! அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு ஓடியிருந்தாலும் ஓடியிருப்பான்!......பாரடி!......போய்ப் பாரேன்!" என்று கத்தினார் ஆளவந்தார்.

வீட்டிலிருந்த அத்தனை எலெக்ட்ரிக் விளக்குகளும் ஜகஜ்ஜோதியாய் எரியத் தலைப்பட்டன. புருஷனும் மனைவியுமாய் ஓர் அறை பாக்கிவிடாமல் பறந்து பறந்து புகுந்து வந்தார்கள். வைத்த சாமான்கள் யாவும் வைத்த படியேதானிருந்தன. ஒரு சிறு பாத்திரம்கூடக் குறைய வில்லை.

"கொல்லை வாசற் கதவும், வாசல் கதவும் திறந்து கிடக்கிறதா, பார்!" என்று கத்தினார் ஆளவந்தார் மறுபடியும்.

கொல்லைக்கும் வாசலுக்குமாக ஓடின அன்னம்மாள், "கதவு யாவும் தாழிட்டபடிதானே இருக்கிறது!" என்றாள்.

"உஷா படுத்திருக்கிற அறையைப் பார்த்தாயா?" என்று பதறினார் ஆளவந்தார். கதவுகள் இரண்டுமே தாழிடப்பட்டிருக்கும்போது ஆனந்தரங்கன் வெளியே போயிருக்க முடியாது என்பது அவருடைய முடிவு.

"அங்கேயும் போய்ப் பூர்த்தேனே !" என்று பதறினாள் அவருடைய சம்சாரம்.

"மறுபடியும் போய்ப் பார்த்துவிட்டு வா. வேறு எங்கேயும் அவன் புகுந்துகொள்ள இந்த வீட்டிலே இடமில்லை. போய்ப் பாரு சீக்கிரம் !" என்று ஆளவந்தார் அவசரப்படுத்தினார்.

உஷா படுத்திருந்த அறைக்குள் ஓடினாள் அன்னம்மாள். 'மங்கிய' பெட்ரூம் விளக்கின் வெளிச்சத்திலே தேடியது போதாதென்று பெரிய விளக்கின் சுவிட்சைத் தட்டிவிட்டு, பிரகாசமான வெளிச்சத்தில் அறை முழுதும் துருவினாள். கட்டிலுக்கு அடியேகூடக் குனிந்து பார்த்தாள். அந்த அறையில் சோதிக்கவேண்டிய இடமே வேறு எதுவும் இல்லை. சந்தேகம் ஏற்பட்டபின் எதைத்தான் துருவிப் பார்க்கத் தோன்றாது. உஷாவின் பெரிய மர அலமாரியைக்கூட திறந்து பார்த்தாள் அன்னம்மாள் !

அந்தச் சமயம் தானா பீரோவின் மேல் வைக்கப்பட்டிருந்த உஷாவின் புஸ்தகங்கள் கீழே விழவேண்டும் ! "யாரது ?" என்று அரண்டு கேட்டபடி தூக்கக் கலக்கத்தில் வாறிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள் உஷா. "நான் தான் உஷா...நான்தான் !" என்று பதில் கொடுத்தபடி அன்னம்மாள் ஓடோடி வந்து தன் மகளை அணைத்துக் கொண்டாள். தூக்க வெறிச்சியில் அவள் அடைந்துவிட்ட பயத்தால் அங்கமெல்லாம் படபடவென்று ஆடிக்கொண்டிருந்தது.

"என்னம்மா இது களேபரம் !" என்று கேட்டு ஒன்றும் புரியாதவளாய் முறைத்துப் பார்த்தாள் உஷா.

"உன் அறையிலிருந்து ஏதோ சத்தம் கேட்டதம்மா ! அதனால்தான் ஓடிவந்து பார்த்தேன். ஒன்றுமில்லை. எலி செய்த திரிசமம்.....போம்மா !.....படுத்துக்கோ !" என்று சொல்லியபடி தாயார் சமாதானப்படுத்தினாள். படுத்திருந்த ஆனந்தரங்கனைக் காணோம் என்று சொல்லி, அவளையும் ஏன் கலங்க வைக்கவேண்டும் என்பதே தாயாரின் எண்ணமாக இருந்தது,

உஷா பழையபடி படுத்துக்கொண்டாள். அந்த அறையை விட்டு அகன்று அன்னம்மாள் ஆளவந்தார் இருந்த இடத்திற்கு வந்தாள்.

"என்னடி அன்னம்மா ?....அங்கேயும் இல்லையா ?" என்று பரபரப்போடு கேட்ட கணவனின் வாயைப் பொத்தினுள். "உஷாவிற்கு விழிப்பு வந்து விட்டது. அவளுக்கு உண்மையைச் சொல்லாமல் வந்து விட்டேன். வீணுகக் குழந்தையை ஏன் கலவரத்திற்கு ஆளாக்க வேண்டும் ?....வாங்க போகலாம். நம்ம ரூமிற்குப் போய்ப் பேசிக்கொள்ளலாம் !" என்று சொல்லி, கணவனை இழுத்துக்கொண்டு படுக்கை யறைக்குப் போனுள் அன்னம்மாள்.

கட்டிலில் போய் உட்கார்ந்த ஆளவந்தார், "மாயமாக அல்லவா இருக்கிறது ! கதவைத் திறக்காமல் அவன் எப்படி இந்த வீட்டை விட்டுப் போயிருப்பான் !" என்று முணுமுணுத்தார்,

"அதுதான் எனக்கும் புரியவில்லை !" என்று பயந்து பதில் சொன்னுள் அன்னம்மாள்.

இருவருக்குமே அன்று தூக்கமில்லை. எங்கேயாவது இருளில் ஓசை கேட்கிறதா என்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர் இருவரும்.

மணி பனிரெண்டு அடித்தது; ஒன்றும் அடித்தது: இரண்டு, மூன்று, நான்கு மணிகூட ஆகி, ஜாமக்கோழியும் ராகம் போட ஆரம்பித்து விட்டது.

கொட்டக் கொட்ட விழித்திருந்த ஆளவந்தார் கட்டிலின் குறுக்கே படுத்திருக்கும் மனைவியைப் பார்த்தார். பாவம்! அவளாலும் எத்தனை நேரம்தான் கண் விழித்துக் கொண்டிருக்க முடியும் ! சொக்கித் தூங்கிக்கொண்டிருந் தாள்.

நீண்டதொரு கொட்டாவி விட்டபடி கட்டில் பிடிக் கட்டையில் தலை வைத்து சாய்ந்து படுத்துக் கொண்டார் ஆளவந்தார். மனச் சோர்வும் கண் அயர்வும் அவரை அறியாமலேயே அரவணைத்துக்கொண்டு விட்டது !

விடிகிற வரை ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு விழித்திருந்தவர்கள் அசந்துபோய்க் கட்டையாகி விட்டார்கள்!

⁘ ⁘ ⁘ ⁘

விடிந்தது கூடத் தெரியாமல் தூங்கிக்கொண்டிருந்தார்கள் புருஷனும் மனைவியும். எதேச்சையாக விழிப்பைப் பெற்ற ஆளவந்தாரின் காதுகளில் அலமாரி திறக்கப்படுகிற சப்தம் காதில் விழவே, "யார் அது?" என்று கேட்டுத் துள்ளிக் குதித்து உட்கார்ந்தார்.

"நான்தானப்பா!" என்று குரல் கொடுத்தாள் உஷா, சிரித்துக்கொண்டே. அவள் கையில் மயில் கண் கரை போட்ட எட்டு முழ வேஷ்டியும், ஒரு ஜரிகை அங்கவஸ்திரமும் இருந்தன.

"ஏதுக்கம்மா அதை எடுக்கிறாய்?" என்று கேட்டார் ஆளவந்தார்.

"அவருக்குத்தானப்பா!" என்று சொல்லிவிட்டு 'விர்'ரென வெகு அவசரமாய் உஷா வெளியே போனாள்.

அவரா?...எவரைச் சொல்லுகிறாள் உஷா?—"உஷா! வா இப்படி!" என்று கத்திக் குரல் கொடுத்தார் தந்தை.

"இருங்களப்பா வருகிறேன்" என்ற பதில் உஷாவிடமிருந்துவந்ததே தவிர, அவள் மீண்டும் உள்ளே வரவில்லை.

ஏற்கனவே தூக்கமின்மையால் கலங்கிப் போயிருந்த ஆளவந்தாரின் கண்கள் 'குப்'பெனச் சிவந்தன; கட்டிலை விட்டு எழுந்து வேகமாக உஷாவைப் பின்பற்றினார்.

வேஷ்டியும் அங்கவஸ்திரமும் எடுத்துக்கொண்டு சென்ற உஷா கொல்லைப் பக்கம் போனாள். கிணற்றடியில் இளம் வெயிலில் ஈர வேஷ்டியை உலர்த்திவிட்டு, காய்ந்துவிட்டதா என்று அடிக்கடி தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்த ஆனந்தரங்கனுக்கு முன்னால் போய் நின்று கொண்டாள் உஷா, "இந்தாருங்கள்! இதைக் கட்டிக் கொள்ளுங்கள்!" என்று அவள் சொல்லிவிட்டு அவன் கையிலே துணிகளைத் திணித்துவிட்டு, காய்ந்து கொண்

டிருக்கும் ஈரத்துணியைச் சுருட்டி எடுத்துக் கொண்டு திரும்பினாள்.

அந்த ஒரு பரிவுக் காட்சி, பற்றி எரியும் தீயைப்போல தோற்றம் கொடுத்தது ஆளவந்தாருக்கு; படுகோபத்தோடு, எதையோ பறிகொடுத்தவர் போலத் தம் அறைக்கு ஓடிவந்தார்; தூங்கிக்கொண்டிருந்த அன்னம்மாளின் முதுகிலே ஓங்கி ஓர் அறை வைத்தார்.

"ஐயோ!" என்று அலறிக்கொண்டு எழுந்தாள் அன்னம்மாள். ரௌத்ராகாரமாய் நின்றுகொண்டிருக்கும் கணவனைக் கண்டதும் மருட்சி அதிகமாகியது.

"போ!...போய்ப் பாரு அங்கே...உள்ளே போய்ப் பாரு அக்ரமத்தை!" என்று கத்தினார் ஆளவந்தார்.

'என்ன நடந்தது?' என்று கணவனையே கேட்டிருப்பாளே யாகில் மேலும் நாலடி வாங்கியிருப்பாள் அன்னம்மாள். என்ன நடந்ததோ, ஏதானதோ என்று திகில் பட்டுக்கொண்டே வீடெல்லாம் சுற்றி வந்தாள் அவள். அலங்கோலமாக எந்தச் சாமானுமே இறைந்து கிடைக்கவில்லை. திடுக்கிடக்கூடிய காக்ஷியும் அவள் கண்களுக்குத் தட்டுப்படவில்லை. கூடத்தில் நின்றபடி நாலாபக்கமும் விழித்துப் பார்த்துக்கொண்டு நின்றாள் அன்னம்மாள்.

"ஏனம்மா! சீப்பை எங்கே வைத்தாய்? காணோமே!" என்று கேட்டுக்கொண்டே அங்கே வந்தாள் உஷா. அவளுக்குப் பின்னே, சற்று தள்ளி வந்து கொண்டிருக்கும் ஆனந்தரங்கனைக் கண்டதும் அன்னம்மாளுக்கு 'பகீர்' என்றாகி விட்டது.

"பூஜை அலமாரிப் பக்கத்திலே பாரு. அங்கேதான் உன் சீப்பு இருந்தது!" என்று தாயார் நறுக்குத்தெரிந்தாற் போல சொல்லிவிட்டு, வேகமாகப் புருஷன் இருந்த அறைக்கு வந்தாள்.

"ஆனந்தரங்கனைப் பார்த்தேன்!" என்றாள் அந்த அம்மாள் ஏதோ காணாததைக் கண்டு விட்டவள்போல.

"அவனைமட்டிலும் தான் பார்த்தாயா?" என்று எரிந்து விழுந்தார் ஆளவந்தார்.

" உஷாவையும் பார்த்தேன் !"

" கேட்டாயா அவனிடம் ?"

" கேட்கவில்லை !"

" அதைக் கேட்கத் தைரியமில்லே உனக்கு. நான் பார்க்காததை நீ பார்த்துவிட்டது போலச் சொல்ல வந்து விட்டாய் !" என்று ஆளவந்தார் ஆத்திரத்தைக் கொட்டி விட்டுக் கூடத்துப் பக்கம் விரைந்தார்.

உஷா ஒரு ஓரமாக நின்றுகொண்டிருக்க, ஆனந்த ரங்கன் நிலைக் கண்ணாடி முன்னே நின்று தலை சீவிக்கொண் டிருந்தான். அவன் கட்டியிருப்பது அவருடைய வேஷ்டி ! அவன் போர்த்திக்கொண்டிருப்பது அவருடைய அங்க வஸ்திரம் !

"ஆனந்தரங்கா !" என்று ஓர் அதட்டு அதட்டினார் ஆளவந்தார்.

" என்ன, மாமா ?" என்று கேட்டுத் திரும்பினான் ஆனந்தரங்கம்.

" இதெல்லாம் என்ன வேலையிலே சேர்ந்தது ?" என்று கர்ஜித்தார் ஆளவந்தார்.

உஷா இடிந்துபோனாள்.

" எதைப்பற்றிக் கேட்கிறீர்கள், மாமா ?" என்று நிதானமாகவே கேட்டான் ஆனந்தரங்கன்.

" நேற்று ராத்திரி நீ எங்கே இருந்தாய் ?"

" வீட்டுக்கு வெளியிலே தெருத்திண்ணையில் படுக்க வேண்டியதாகிவிட்டது !" என்று சிரித்துக் கொண்டே சொன்னான் ஆனந்தன.

" ஏன் அங்கே போய்ப் படுத்தாய் ?"

" மாமி தான் அந்த நிலையை ஏற்படுத்திவிட்டார் மாமா !"

" மாமியா ?...அவளா உன்னை அங்கே போய்ப் படுக்கச் சொன்னாள் ?"

"அவராக வாய் திறந்து சொல்லவில்லை. அப்படி வெளியே போய் படுக்க வேண்டிய நிலைக்கு என்னை ஆளாக்கிவிட்டார்கள்!"

"என்ன அன்னம்மா?" என்று கேட்டுத் திரும்பினர் தம் மனைவி பக்கம் ஆளவந்தார்.

"நானு...? தம்பியையா?...அப்படிச் சொல்லவே யில்லையே!" என்று கைகளைப் பிசைந்து திருபுரு வென்று முழித்தாள் அந்த அம்மணி.

"நீங்கள் அப்படிச் சொல்லவில்லை, மாமி! பாத்ரூமிற்குப் போகக் கொல்லைப் பக்கம் போவானேன் என்று நினைத்து வாசற் கதவைத் திறந்து கொண்டு வெளியே போனேன். நான் திரும்பி வந்தபோது கதவு உட்பக்கமாகத் தாழிடப்பட்டிருந்தது. கதவோ கெட்டிக் கதவு. குரல் கொடுத்துக் கூப்பிட்டாலும் உள்ளே யாருக்கும் காதில் விழாது. கதவைத் தட்டினுல் ஒருக்கால் மாமாவின் தூக்கத்தை அந்த ஓசை கலைத்துவிடுமோ என்று பயந்து, தெரு வாசலிலேயே படுத்துவிட்டேன். விடிகிற சமயம் உஷா வந்து திறந்துவிட்டாள்!" என்ருன் ஆனந்தரங்கன்.

"ஆமாமப்பா!" என்ருள் உஷா.

அன்னம்மாவிற்கும் அதே சமயம் ஞாபகம் வந்து விட்டது.

"ஆமாங்க! தம்பி சொல்வது சரியாகத்தான் இருக்கும். நீங்கள் கதவெல்லாம் தாழிடப்பட்டிருக்கிறதா என்று என்னைப் பார்த்து வரச் சொன்னீர்களில்லையா, போய்ப் பார்த்தபோது வாசற் கதவு சும்மா சாத்திக் கிடந்தது. நான் தான் ஞாபகப் பிசகா தாழிட மறந்து விட்டேனுக்கும் என நினைத்து தாழிட்டேன். அதற்குக் கொஞ்சம் முந்தி தம்பி வெளியிலே போயிருக்க வேண்டும்!" என்ருள் ஆளவந்தாரின் சம்சாரம்.

கோதாவில் தோற்றுப் போய் நிற்கும் பயில்வானைப் போல அசடு தட்டி நின்றுவிட்டார் ஆளவந்தார்.

"ஒன்றுமில்லாததற்கு அப்பா இவ்வளவு நிர்த்துளிப் படுத்தி விட்டாரே!" என்று தனக்குள் சிரித்துக் கொண்டாள் உஷா.

"வயசு ஆக ஆக இந்த மனுஷருக்கு புத்திதான் கெட்டு வருது!" என்று முணு முணுத்துக் கொண்டாள் அன்னம்மாள்.

அதே சமயம், "போய் வரேன் மாமா!" என்ற குரல் கேட்டு ஆனந்தரங்கனை ஏறிட்டுப் பார்த்தார், ஆளவந்தார். அவரையுமறியாமல் "இவ்வளவு அதி காலையில் எங்கே கிளம்புகிருய்?" என்ற கேள்வி அவரிட மிருந்து எழுந்தது.

"வந்து சொல்கிறேன்!" என்று நறுக்குத் தெறித்தாற் போல இரண்டே வார்த்தைகளை உதிர்த்துவிட்டு ஆனந்த ரங்கன் வாசலைக் கடந்து சென்றுவிட்டான்.

கண்ணுக்கு மறையும் வரை அவனையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார் ஆளவந்தார்.

அடுப்பங்கரைப் பக்கமாக அன்னம்மாள் போய் விட்டாள்.

சிறிது நேரம் ஏதோ யோசனை செய்தபடி நின்று கொண்டிருந்த ஆளவந்தார், தம் பெண் இருந்த பக்கம் திரும்பி, "உஷா! கொஞ்சம் வந்துவிட்டுப் போ!" என்று சொல்லிக் கொண்டே நடந்தார்.

உஷா தந்தையைப் பின்பற்றி அவரது அறையை வந்தடைந்தாள்.

"உஷா! நான் ஏதேனும் சொன்னல் சிணுங்கிக் கொள்ளமாட்டாயே?" என்று மிருதுவாகப் பேச ஆரம் பித்தார் ஆளவந்தார்.

"சும்மா சொல்லுங்கப்பா!" என்ருள் உஷா.

"ஆனந்தரங்கனேடு நீ பழகுவது எனக்குச் சரியாகப் படவில்லை. அவனலே உனக்கு கெட்டபேர்தான் வரும்!"

"எதைக் கொண்டு நீங்க சொல்கிறீர்கள் அப்பா?"

"நீ அவனேடு ரொம்பவும் நெருங்கிப் பழகுகிருய்!"

"நானு?...சரியாய்ச் சொன்னீர்கள்! நான் பத்துக் கேள்வி கேட்டால், ஒரு வார்த்தை தானே அந்த மனுஷர் பேசுகிருர்!" என்று சொல்லிச் சிரித்தாள் உஷா.

"ஊமை ஊரைக் கெடுக்கும் அம்மா! நீயாக யோசித்துப்பாரு. அம்மாவுக்கும் எனக்குமில்லாத சிரத்தை உனக்கென்ன வந்தது?"

பதில் சொல்ல சற்று தயங்கிய உஷா, எதை மனதில் கொண்டு தன் தந்தை இப்படிக் கேட்கிறார் என்று யோசித்தாள். ஓரளவு புரிந்து கொண்டவள் போல, "அப்பாவும் அம்மாவும் காட்டத் தவறிய ஒரு கரிசனையை ஒரு பெண் கவனிப்பது பிசகா அப்பா?" என்று உஷா கேட்டாள்.

"நானோ அல்லது அம்மாவோ சிரத்தைக் குறைவு காட்டினால் அதற்கு ஏதாவது காரணம் இருக்கத் தான் செய்யும்!"

"வந்தவன், நின்றவன், போனவன் எல்லோருக்கும் படுக்கப் படுக்கையும், உடுத்த உடையும் கொடுத்து உபசரிக்கும் வீடாக இது இருந்த காலமுண்டு. அதுவும் உங்களது கண்டிப்பில் நடந்து வந்திருக்கிறது. அந்த மரியாதை இந்த ஆனந்தரங்கனுக்கு மட்டிலும் இல்லாமலா போச்சு?"

உஷாவின் வார்த்தையில் உள்ளக் கொதிப்பின் அனல் வீசத்தான் செய்தது.

"அது வந்திருக்கும் விருந்தாளியின் அந்தஸ்தைப் பொறுத்திருக்கிறது!"

ஆளவந்தாரின் வார்த்தைகளும் சற்று தடித்தே வந்தன.

"அந்தஸ்தில்லாத ஒரு மனிதன் விருந்தாளியாக வந்திருந்தால் சினிமா பார்ப்பதையும் விட்டு விட்டு பாதியிலே ஓடிவந்திருக்க மாட்டீர்கள்! வந்திருக்கும் விருந்தாளியைப் பற்றி அம்மா உங்களிடம் விசாரித்தபோது, **இவனுடைய அப்பா எனக்குக் கை கொடுத்திராவிட்டால், நான் ஒரு வேளைச் சோற்றுக்கு எங்கெல்லாமோ ஆலாகப் பறந்து கொண்டிருப்பேன்!**' என்று அபிப்பிராயம்சொல்லியிருக்கமாட்டீர்கள்!"

முகத்தில் அறைவது போல வெளிவந்த இந்தப் பேச்சுக்குப்பதில் சொல்ல முடியாமல் திணறினார் ஆளவந்தார்;

அந்தத் திணறல் கோபத்தில் கொண்டுவந்துவிடவே, "யோக்யதை கெட்டதனமாக நடந்து கொண்டுவிட்டு எதிர்த்து வேறு பேசுகிறாய்!" என்று கத்தினார் தொண்டை கிழிய.

"காலத்தால் ஏழையாகிக் கடுகிவந்துவிட்டவனுக்கு மனித மனதோடு படுக்க விரிப்பு கொடுத்ததும், மானத்துக்கு அஞ்சி, கேட்க வெட்கப்பட்டு, கட்டிய துணியைத் துவைத்து காயவைத்துக் கட்டிக் கொள்ளும் மானஸ்தனுக்கு உடை கொடுத்ததும் யோக்யதை கெட்ட செயலானால், கைநிறைய கத்தை கத்தையாய் நோட்டுகளை வைத்துக் கொண்டு, கட்டிய மனைவியிடம் காசில்லாததுபோல கஞ்சிகுடிக்கும் வாழ்க்கையைச் சுமத்தும் புருஷரின் செயல் எந்த ரகத்தில் சேர்ந்தது?"

மழை பெய்து ஓய்ந்ததுபோல இருந்தது சிறிதுநேரம். அந்தச் சிறிது நேரத்திலே வார்த்தை ரூபத்திலே வர்ஷித்துக் கொண்டிருந்த மழை, இடி, மின்னல் யாவும் ஒருங்கு சேர்ந்து உஷாவின் கண்களிலே பிரதிபலிக்க ஆரம்பித்து விட்டது. குமுறி வரும் கொதிப்பை அடக்க முடியாமல், கண்களில் பொல பொலவென நீரை உகுத்த உஷா, "யோக்யதை கெட்ட செயல் எது என்பதை அம்மா விடமே கேட்டு விடுகிறேன்!" என்று சொல்லியபடி திரும்பி ஓட ஆரம்பித்தாள்.

கதி கலங்கிவிட்டவர் போல "உஷா!...உஷா!" என்று கத்திக் கொண்டே தம் மகளைத் துரத்திச் சென்றார் ஆளவந்தார்.

இருவரும் நடுக் கூடத்தை அடையும்போது அன்னம்மாள் ஓடிவந்து பரபரப்போடு உஷாவை அணைத்துக் கொண்டாள்.

"அம்மா! நீயே கேளு! யோக்யதை கெட்டு நடந்து கொண்டது யார் என்று நீயே கேளு!" என்று கொதித்தாள் உஷா.

"என்ன சொல்லேன்?" என்று பதறினாள் தாயார்.

நடந்ததைச் சொல்ல வாய்திறந்தபோது, அதைச் சொல்ல வொட்டாமல் அடக்குபவர் போல "உஷா! என் மீது ஆணை! வாயை மூடு!" என்று கதறினார்.

செவ்விதழ்கள் இரண்டும் இறுக மூடிக் கொண்டன. அன்னம்மாள் ஒன்றுமே புரியாமல் தன் புருஷனின் முகத்தைப் பார்த்தாள்.

மேலும் பேச்சுக்கு இடமில்லாமல் ஆளவந்தார் தம் அறையை நோக்கி நடையைக் கட்டினார்.

அந்த மாளிகையிலே வசிக்கும் குடும்பத்தில் மூவர் அங்கத்தவர்.

ஒருவர் கொல்ல நினைக்கிறார். அவர் நினைப்பது தவறில்லை எனவும் நினைக்கிறார். கொல்ல வருவது பசுவானாலும் கொன்றுதான் ஆகவேண்டும்.

மற்றொருத்தி கொள்ள நினைக்கிறாள். அவள் நினைப்பும் தப்பில்லை. கொள்ளையழகு கொண்டிருப்பவனை கொள்ளை போகவிடமாட்டாள் எந்த ஆரணங்கும்!

மற்றொருத்தி. அவள் இரண்டும் கெட்டான். பெற்ற பெண்ணைக் கண் கசங்கவைக்க மனம் பொறாது; கட்டிய கணவனைப் பறிகொடுக்கவும் துணிவு வராது.

வளைந்திருக்கும் இம்மூன்று கோடுகளும் இணைந்து முக்கோணமாகுமா ?

இதையெல்லாம் நினைக்க நினைக்க ஆளவந்தாரின் புத்தி எப்படியெல்லாமோ பேதலிக்கஆரம்பித்துவிட்டது. தற்கொலை செய்து கொள்வதானால் எந்த வழி எளிதானது என்பதை ஆராய முனைந்துவிட்டார் அவர்!

---

## 9 பியாரி பவனத்தில் பணம் பிடுங்கி!

பியாரி பவனத்துக்குள்ளே கிணுகிணுத்த மணி ஓசை, வெளியே யாரோ வந்திருக்கிறார்கள் என்பதை அறிவிப்பது போல விடாமல் அடித்துக் கொண்டிருந்தது.

"யாரது?" என்று கேட்டுக்கொண்டே ஓடோடி வந்து கதவைத் திறந்த ஆத்மாராம், வெளியே நின்று

கொண்டிருக்கும் ஆனந்தரங்கனைப் பார்த்தான். அவ்வளவு தான். அவனது சப்த நாடிகளும் ஒடுங்கி விட்டது.

" முன்கூட்டியே உங்களுக்கு அறிவிக்காமல் வந்தது பிசகுதான். ஆனால் அது தவிர்க்க முடியாததாக ஆகி விட்டது!" என்று சிரித்துக்கொண்டே ஆத்மாராமையும் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தான் ஆனந்தரங்கன்.

" நமக்குள்ளே அதெல்லாம் பார்க்க முடியுமா? நானாகவே இன்று முதல் வேலையாக உங்களைப் பார்க்க வர இருந்தேன். நீங்களாகவே வந்துவிட்டீர்கள்! ஹி... ஹி!" என்று அசட்டுச் சிரிப்பு சிரித்துக்கொண்டே வர வேற்றான் ஆத்மாராம்.

மாளிகையின் முகப்பில் இருந்த வரவேற்பு அறையிலே உட்கார்ந்து கொண்டான் ஆனந்தன். அவனருகிலே அமர்ந்துகொண்ட ஆத்மாராம், " பியாரி!" என்று குரல் கொடுத்து, " டிபன்.....டிபன்.....டிபன் இருந்தால் கொண்டு வா!" என்று ஆர்ப்பாட்டம் செய்தான்.

" வீண் சிரமம் வேண்டாம் பாபு. நான் பிறர் வீட்டில் சாப்பிடும் வழக்கம் கிடையாது. சாப்பிடவும் கூடாது என்பது என் தந்தையின் கண்டிப்பு. மன்னிக்க வேண்டும்!" என்றான் ஆனந்தன்.

அசடு வழிந்தது ஆத்மாராம் முகத்தில். உதைப்பு நிறைந்தது உள்ளத்திலே.

பேச்சை எப்படி ஆரம்பிக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தான் ஆத்மாராம். இந்தக் கொலைகாரப் பயலிடமிருந்து எப்படித் தப்பிக்கலாம் என்று சிந்தனை செய்து கொண்டிருந்தான்.

சில நிமிஷ நேரம் இப்படியாகக் கடந்தது. முடிவில் ஆத்மாராமே பேச்சைத் துவக்கினான்.

" மிஸ்டர் ரங்கம்! அப்பா கடிதம் எழுதியிருந்தார். அதெல்லாம் கொடுக்க வேண்டியதுதான். அந்த உதவி கூடச் செய்யாவிட்டால் நான் மனுஷனிலே சேர்த்தியில்லை. அதை உணராமல் இல்லை. பட்டாபியின் பேச்சுக்கு மறுபேச்சு தட்டிச் சொல்லமாட்டேன்."

“ அப்பாகூட உங்களைப் பற்றி அப்படித்தான் சொன்னார் !” என்று குறுக்கிட்டான் ஆனந்தரங்கன்.

“ பட்டாபி கேட்டு நான் கொடுககாவிட்டால் ரொம்ப அபசாரம். கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். முழு மனத்தோடு கொடுக்கவேண்டும் என்பதுதான் என் அவாவும் !...அது சரி...பணம் இன்றே வேண்டுமோ ?”

“ நேற்றே எதிர்பார்த்தேன் ! கப்பலை விட்டு இறங்கியதுமே நீங்களே கொண்டு வந்து கொடுப்பீர்கள் என்பதாக அப்பா சொல்லியிருந்தார். அதனால் இன்றைக்காவது நீங்கள் கொடுத்தால் தான் நல்லது !”

“ இப்போதே வேண்டுமோ ?” என்று தயங்கியபடி கேட்டான் ஆத்மாராம்.

“ ஆமாம் !...ஏதாவது தயக்கமா ?”

“ தயக்கமாவது !....அதெல்லாம் ஒன்றுமில்லை. உங்கள் அப்பாவின் கடிதம் நேற்றுதான் வந்தது ! என் கையில் இருந்த பணத்தையெல்லாம் பத்திரத்திற்காக என் மாமனாரிடம் கொடுத்து வைத்திருக்கிறேன். அவர் ஊரில் இல்லை. நாளைக் காலை வருகிறார் ! வந்ததும் வாங்கிக் கொடுத்துவிடலாம் என்ற எண்ணத்திலேதான் கொஞ்சம் தயங்கினேன்...”

பேச்சை அரைகுறையாக நிறுத்திவிட்டு ஆனந்த ரங்கனின் முகத்தைப் பார்த்தான் ஆத்மாராம்.

“ இதுக்காகவா இப்படி நீங்க்ள் குழைந்து பேச வேண்டும். பரவாயில்லை.....பரவாயில்லை !” என்று சொல்லிச் சிரித்தான் ஆனந்தரங்கன்.

காரியம் கைகூடிவிட்டதுபோல ஆத்மாராமும் சேர்ந்து சிரித்தான். அந்தச் சிரிப்பு அவ்வளவு சீக்கிரம் தடைப் படும் என்பதை அவன் சிறிதுகூட எதிர்பார்க்கவேயில்லை.

ஆனந்தரங்கன் மீண்டும் பேச்சை ஆரம்பித்தான். “ பொதுப்படையாகச் சொல்லுகிறேன் பாபு. ஆனால் அது உங்களுக்காகச் சொல்ல வரவில்லை. யாருக்குமே, ஆகட்டும், இருக்கிற பணத்தை எடுத்து வெளியே விடுவதானால் லேசிலே மனம் வரமாட்டேன் என்கிறது !”

" அது இயற்கைதானே !" என்று சொல்லிச் சிரித்தான் ஆத்மாராம். அதைச் சொல்லும் போது, அவனுடைய உடல் ஆயிரம் கோணல்களைக் காட்டியது.

" கொடுப்பதற்கு இஷ்டமில்லையானால் அப்பட்டமாக இல்லை என்று ஒரு வார்த்தையில் சொல்லிவிடலாம். பணம் பறிபோகிறதே என்பதற்காகக் கொலை செய்ய முயற்சிப்பது எவ்வளவு ஆபத்தானது !"

சுரீர் என்று தைத்தது ஆத்மாராமுக்கு. " அப்படியும் நடக்கிறதா என்ன ?" என்று கேட்டான் ஆத்மாராம் தடுமாற்றத்தோடு.

" நேற்றுகூட நடக்க இருந்தது ஸார் !"

" நிஜமாகவா ?" என்று பரபரப்பு காட்டினான் ஆத்மாராம்.

" பொய்யா சொல்லுகிறேன் !...இதைப் பாருங்கள் ! இந்தத் துப்பாக்கியால் சுட்டால் மனிதன் சாகாமல் என்ன பண்ணுவான் ?...நல்ல வேளையாக எச்சரிக்கையாகி விட்டேன் ! ஜாக்கிரதைக் குறைவாக இருந்திருந்தால் இப்போது உங்களை நான் சந்தித்திருக்க முடியாது !... ...பாபு, நீங்களே சொல்லுங்கள் இந்தத் துப்பாக்கியைக் காட்டி யாரிடம் என்ன கேட்டாலும் கொடுப்பானா மாட்டானா ?" என்று ஆனந்தரங்கன், சொல்லிக்கொண்டே கைத்துப்பாக்கியை ஆத்மாராமிற்கு நேராகப் பிடித்துக் கொண்டான்.

" ஏன் கொடுக்காமல்...நல்லா கொடுப்பாங்க....எவ்வளவு கேட்டாலும் கொடுப்பாங்க !" என்று பம்மினான் ஆத்மாராம்.

" அந்த எண்ணத்தோடுதான் அதிகாலையிலே உங்களைப் பார்க்க வந்தேன், ஆத்மாராம் ! உங்கள் உயிர் உங்களிடமே இருக்கவேண்டுமில்லையா ?"

" ஆமா...ஆமா...!" என்று பதறினான் ஆத்மாராம்.

" அவசரத்திற்குப் பணம் வேண்டுமானால் ஆபத்தான இந்த ஆயுதமும் வேண்டித்தான் இருக்கிறது !

...ஆத்மாராம்! நீங்கள் தப்பி ஓட மட்டும் முயற்சிக்காதீர்கள்! நான் உங்களைக் கொல்லமாட்டேன். அப்பா எனக்குக் கட்டளையிடுகிற வரை நான் உங்களை ஒன்றும் செய்யமாட்டேன்! ஆனால் இப்போது அவசியமாக, உடனடியாக ஒரு காரியத்தைச் செய்துதான் ஆகவேண்டியிருக்கிறது, என் பணத்தை நாளை வந்து வாங்கிக் கொள்கிறேன். இப்போது சொல்லப்போகிற விஷயம் வேறு. என்னைக் கொல்வதற்கு உடந்தையாக இருந்து உங்கள் கைத்துப்பாக்கியையும் கடனாகக் கொடுத்திருக்கிறீர்கள் என்பதை நான் போலீசில் சொல்லியாக வேண்டும். என் உயிருக்கு நான் பாதுகாப்பு எடுத்துக் கொள்ளவேண்டாமா?....எழுந்திருங்கள். சத்தம் எதுவும் போடாமல் என் முன்னே நீங்கள் நடக்கவேண்டும். கிளம்புங்கள், போலீஸ் ஸ்டேஷனுக்கு!''

வெட்டுண்ட நெடுமரம் போலத் தரையில் விழுந்த ஆத்மாராம், ஆனந்தரங்கனின் கால்களைப் பிடித்துக் கொண்டு கதறினான். "ஆனந்த்! பிள்ளை குட்டிக்காரன் நான்! தெரியாமல் செய்துவிட்டேன்! நீங்கள் என்ன சொன்னாலும் செய்கிறேன்!...அப்பா கொடுக்கச் சொன்ன ஒன்றரை லட்சம் இப்பொழுதே தந்து விடுகிறேன்! என்னைப் போலீஸில் ஒப்படைக்காதீர்கள், ரங்கம்!'' என்று ஆத்மாராம் ஓலமிட்டான்.

அந்தப் பரிதாப அழுகை ஆனந்தரங்கனின் மனதையே உலுப்பிவிட்டது. ஆத்மாராமின் பிடியிலிருந்து அவன் தன் கால்களை விடுவித்துக்கொண்டான்; "பாபு! இந்த ஒரு தரம் உன்னை மன்னித்து விடுகிறேன். நீ நினைப்பதுபோல நான் ஒரு பிள்ளைப் பூச்சி அல்ல. தப்பாமல் பிறந்திருக்கும் பட்டாபியின் மகன்!....எழுந்திரு, ...எடு ரூபாயை!'' என்றான் ஆனந்தரங்கன்.

"இருங்கள்...இதோ கொண்டு வருகிறேன்!'' என்று எழுந்து ஓடலானான் மாஜி கப்பல் முதலாளி!

"பணம் எடுத்து வருவதாகச் சொல்லி நழுவினாலும் நழுவி விடுவாய்...இரு, நானும் வருகிறேன். தப்பித்து ஓடப் பார்த்தால் தயை தாட்சண்யமே பார்க்கமாட்டேன். நாயைச் சுடுவதுபோல சுட்டுவிடுவேன்! நட முன்னால்...

பணம் இருக்குமிடத்திற்கு போ...'' என்று துப்பாக்கி முனையில் ஆத்மாராமை முன்னுக்குத் தள்ளினான் ஆனந்த ரங்கன்.

"ஏமாற்ற மாட்டேன்...ஏமாற்ற மாட்டேன்...நம்புங்கள் என்னை...'' என்று சொல்லிக் கொண்டே ஆத்மாராம் நகர்ந்தான் பொக்கிஷ அறைக்கு.

அந்த அறையிலே இரும்புப் பெட்டியே கிடையாது. ஒட்டை உடைசல்களே நிறைந்திருந்தன. ஏமாற்றப் பார்த்து ஏதோ திட்டம் போட்டு போக்குக் காண்பிக்கிறான் அவன் என்பதாக சந்தேகித்து, "பாபு! ஏமாற்றப் பார்க்காதே! எந்த வழியிலும் நான் ஏமாந்தவனில்லை! பொக்கிஷ அறைக்கு நட!'' என்றான் ஆனந்தரங்கன் கடுமையாக.

"இங்கேதான் பணம் இருககிறது! ஏமாற்றவில்லை! இருங்கள் ...கொஞ்சம் பொறுங்கள்!'' என்று சொல்லிக் கொண்டே, சுவரில் தொங்கிக்கொண்டிருந்த ஒட்டடை சுற்றிய பழைய காலண்டரை கழற்றினான் ஆத்மாராம். அந்தக் காலண்டர் மறைந்திருந்த சுவரிலே விளக்கு மாடம் ஒன்று தென்பட்டது. அதற்குள் கைவிட்டு வெளியே இழுத்தான். கண்களைத் துடைத்துக்கொண்டு பரக்க விழித்துப் பார்த்தான் ஆனந்தரங்கன். மேஜை டிராயரைப் போல, சுவரிலிருந்து வெளிப்பட்ட ஒரு டிராயரில் கத்தை கத்தையாகக் கரன்ஸி நோட்டுகள் குவிந்து கிடந்தன. கைகள் பற ஆத்மாராம் கட்டு கட்டாக வெளியே எண்ணிப் போட்டான் பணத்தை-ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமாகவே. அவன் ஆனந்த ரங்கனின் கையில் கொடுத்தான்.

பயத்தாலும் பறிகொடுக்கிறோமே என்ற பதைபதைப்பாலும் ஆத்மாராமின் உடல் பதறிக்கொண்டிருந்தது. "ஆனந்தரங்கம்! அப்பா கொடுக்கச் சொன்னபிற்கு மேலேயே இரட்டிப்பாகக் கொடுத்துவிட்டேன். மூன்று லட்சம். ஆனால் ஒரு பிச்சை உங்களிடம் கேட்கிறேன். என்னைக் கொல்லவும் முற்படக் கூடாது. உங்கள் அப்பாவிடமும் நடந்ததைச் சொல்லக்கூடாது ரங்கம்! தயவு காட்டுங்கள் ரங்கம்!'' என்று ஆத்மாராம் கதறினான் ஓவென.

"உன் தலை மீது ஆணையிடுகிறேன். என் உயிர் மீதும் பணத்தின் மீதும் ஆணையிடுகிறேன். பயப் படாதே...சொன்ன சொல்லைக் காப்பாற்றுவேன்......எழுந் திரு...அதோ அந்தத் தோல் பெட்டியை எடு!" என்றான் ஆனந்தரங்கம்.

இட்ட பணியைச் செய்வதற்கென்றே இருக்கும் வேலைக்காரன் கூட அப்படி நடந்து கொள்ளமாட்டான். ஆத்மாராம் அப்படி ஓடோடிச் சென்று மூலையில் கிடந்த ஒரு புது தோல் பெட்டியை எடுத்து வந்து வைத்தான்; கட்டுக் கட்டாக இருந்த கரன்ஸி நோட்டுகளை அதில் அடுக்கிப் பூட்டினான்; 'அப்புறம் என்ன செய்யட்டும் சொல்லுங்கள், தூக்கி வரட்டுமா?' என்று கேட்பது போல ஆனந்தரங்கனின் முகத்தைப் பரிதாபகரமாகப் பார்த்தான்.

"பெட்டியை என்னிடம் கொடு!" என்று வாங்கிக் கொண்டான் ஆனந்தரங்கன். "நீ இந்த அறையிலேயே இருக்கவேண்டும். நான் வெளிப்புறமாகத் தாழிட்டுக் கொண்டு செல்வேன், அரைமணி நேரம் கழித்துக் குரல் கொடுத்து யாரையாவது கொண்டு திறக்கச் சொல்லு!" என்று ஆனந்தரங்கன் சொல்லிவிட்டு, அறைக் கதவைச் சாத்திக் கொக்கியிட்டான். கையில் பணப் பெட்டியோடு போகும் அவனைத் தடுப்பதற்கு அங்கே யாருமில்லை!

பியாரி பவனத்தின் தலைவாசல் கதவைத்தாண்டினான் ஆனந்தரங்கன். ஆனால் அங்கே கதவோரத்தில் ஒண்டி நின்று கொண்டிருந்த ஆளவந்தாரை அவனால் பார்க்க முடியவில்லை.

தோட்டத்தைக் கடந்து, கையில் தோல்பையுடன் தெருவிற்குப் போய் மறைகிறவரை கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்துக் கொண்டிருந்த ஆளவந்தார், பரபரப்போடு பியாரி பவனத்திற்குள் நுழைந்தார்.

பியாரி பவனத்திற்கு ஆளவந்தார் வந்தது ஆனந்த ரங்கனைப் பின்பற்றி வேவு பார்ப்பதற்காக அல்ல. இன்னும் சொல்லப் போனால் ஆத்மாராமைப் பார்க்கவே ஆனந்தரங்கன் கிளம்பியிருக்கிறான் என்பது ஆளவந்தாருக்கு தெரிந்திருந்தால் பியாரி பவனத்தின் பக்கம்கூட அவர் தலை நீட்டியிருக்கமாட்டார். அது ஓர் எதேச்சை யான விஜயமாகவே இருந்தது.

எந்த ஒரு விஷயத்திற்கும், நல்லதோ கெட்டதோ ஆத்மாராம் தான் ஆளவந்தாரின் அந்தரங்க மந்திரி. அவனிடம் தான் அவரும் மனம் விட்டு எதையும் சொல்லு வார்; கலந்தாலோசிப்பார். ஆத்மாராம் என்ன சொல் லுகிறானோ அதன்படியேதான் நடந்து கொள்வார் ஆளவந் தார், இந்த ஒரு ஐக்ய பாவம் இன்று நேற்றுத் தோன்றிய தல்ல. என்றைக்கு இருவரும் கப்பல் கம்பெனி பாகஸ்தர் களாக ஆனார்களோ, அன்றிலிருந்தே இது நடைமுறையில் வந்துவிட்டது. ஆதி நாளில் சாதாரணமான சிறு கள்ளக் கடத்தல்களையும், 'விசா' இல்லாத பிரயாணிகளுக்கு உதவி செய்து காசு பெறும் கள்ளத்தோணி வியாபாரமும் நடத்திவந்த ஆளவந்தாருக்கு ஒரே நாளில் லக்ஷாதிபதி யாகிவிடக்கூடிய திட்டத்தை—கப்பலைக் கவிழ்த்தார்களே, அதை—அங்குரார்ப்பணம் செய்து வைத்தவனும் இதே ஆத்மாராமாகத் தான் இருந்தான்!

அவன் கூறிய யுக்தியைக் கையாண்டு வந்ததாலேயே ஆளவந்தார் இன்று இருபது லக்ஷ ரூபாய் பணக்காரனாக ஆகமுடிந்தது என்றும் அவர் நினைத்தார். ஆத்மாராமின் புத்தி தீட்சண்யத்தில் ஆளவந்தாருக்கு இருந்த அபார மோகத்திற்கும் இதுவே காரணமாக இருந்தது.

முதல் நாள் நடந்த சம்பவங்களையும், காலையில் நடந்த வைகளையும், கைத் துப்பாக்கி காணமற் போய்விட்டதை யும் ஆத்மாராமிடம் சொல்லாமல் இருக்க ஆளவந்தாரால் முடியவில்லை. அதையெல்லாம் சொல்லி மேலும்

ஆலோசனை கேட்கவே அவ்வளவு அவசரமாக அவர் அங்கே வந்திருந்தார்.

ஆத்மாராமை அவர் அவ்வளவு அவசரமாகச் சந்திக்க மற்றொரு காரணமும் இருந்தது. ஆனந்தரங்கன் வரவால் புதிதாக முளைத்திருக்கும் பயங்கர விளைவுகளினின்றும் சுமுகமாகத் தப்பித்துக் கொள்ள அவர் ஒரு குறுக்கு யோசனை செய்திருந்தார். அதாவது அவரது பெண்ணான உஷாவை ஆனந்தரங்கனுக்கு மணம் முடித்துக் கொடுத்து விட்டால் பட்டாபியின் பழி மனப்பான்மை தீர்ந்துவிடும். உயிருக்கும் ஹானியில்லை. குடும்பமும் மான அவமானத்தில் சந்தி சிரிக்காது. எல்லாவற்றிற்கும் மேலாக அவரிடம் இருக்கும் திரண்ட செல்வத்தைச் சிரம வழியில் கொள்ளையடிக்கவும் முற்படமாட்டான்! ஏனெனில் அவருக்குப் பிறகு அந்தச் சொத்தெல்லாம் அவனைத் தானே சேரப்போகிறது!

இந்த ஏற்பாடு எப்படி என்பதைப் பற்றி ஆலோசிக்கவே ஆளவந்தார் ஆத்மாராமைத் தேடி வந்தார். ஆனால் தமது யோசனைகளையெல்லாம் ஆத்மாராம் ஏற்க மாட்டான என்பதை ஆனந்தரங்கனை பியாரி பவனத்தில் சந்தித்தபோது தான் ஆளவந்தார் உணர முடிந்தது. ஏற்கனவே ஆத்மாராம் அவரிடம் காட்டிய பட்டாபியின் கடிதம், அதிலே ரூபாய் ஒன்றரை லட்சம் கொடுக்கும்படி எச்சரிக்கை செய்திருந்த விஷயம், அதற்கேற்றாற்போல வெறுங்கையோடு வீட்டை விட்டுப் புறப்பட்ட ஆனந்தரங்கன் இப்போது தோல் பெட்டி ஒன்றை எடுத்துக் கொண்டு பியாரி பவனத்தை விட்டுக் கிளம்புவது—எல்லாம் தெளிவாக அவருக்குப் புலப்பட்டது. பெட்டிக்குள்ளே இருப்பது கரன்ஸி நோட்டுகளாகவே இருக்க வேண்டும் என்பதையும் நிச்சயப்படுத்திக் கொண்டு விட்டார் ஆளவந்தார்.

அந்தப் பரபரப்போடு பியாரி பவனத்திற்குள் நுழைந்த ஆளவந்தார், "ஆத்மாராம்!...ஆத்மாராம்!" என்று உரக்கக் குரல் கொடுத்தார். எங்கிருந்தும் பதில் வரவில்லை. ஆத்மார்த்திக நண்பராதலால் சுதந்திரமாகத் தங்கு தடையின்றி அவ்வீட்டிலே அவர் எங்கு வேண்டுமானாலும் புகுந்து புறப்படுவது வழக்கமாதலால் திறந்

திருந்த அத்தனை அறைகளிலும் ஆத்மாராமைத் தேடிப் பார்த்தார். சமையல் கட்டில் காலையாகாரம் சாப்பிட்டுக் கொண்டிருப்பானோ என்ற கடைசி நம்பிக்கையில் அடுக்குள் அறைக்கும் போனார். பியாரி மட்டுமே அங்கே இருந்தாள். ஆத்மாராமைக் காணவில்லை.

"ஆத்மாராம் எங்கேம்மா?" என்று கேட்டார் ஆளவந்தார்,

தலையை விட்டு நழுவியிருந்த முட்டாக்கை இழுத்துச் சரி செய்து கொண்டு, "அங்கேதானே இருந்தார்!" என்றாள் பியாரி.

"கதவெல்லாம் திறந்து கிடக்கிறது. ஆளைக் காணுமே!" என்று வியந்தபடி மீண்டும் வாசல் பக்கம் வந்தார் ஆளவந்தார். இப்போது அவருக்கு வேறொரு சந்தேகம் முளைத்து விட்டது. ஆனந்தரங்கன் எதற்கும் துணிந்தவன். ஊமைக் கோட்டான் போல இருந்து கொண்டு ஊரையே சுட்டுப் பொசுக்கிவிடக் கூடியவன். ரூபாய் ஒன்றரை லட்சத்துக்காக ஆனந்தரங்கன் அங்கே வந்திருப்பான். ஆத்மாராமிடமிருந்து காசு பெறுவதானால் கல்லிலிருந்து நார் உரிப்பது போல! மழுப்பியிருக்கலாம். அதன் பலனை ஆத்மாராமைக் கொன்று எங்காவது ஒளிததுவிட்டு, பணத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு ஆனந்தரங்கன் போயிருப்பானோ?

பாண்டிச்சேரி பட்டாபியின் மகனாயிற்றே? செய்தாலும் செய்திருப்பான் என்ற சநதேகம் ஆளவந்தாருக்குப் பலமாகப் பிடித்துக்கொண்டது. அந்தச சந்தேகத்தையும் நிவர்த்தி செய்துகொண்டுவிடலாம் என்ற எண்ணத்தோடு அவர் மீண்டும் மூலைமுடுக்கெல்லாம் சுற்றிவர ஆரம்பித்தார்; முடிவில் ஆத்மாராம் அடைபட்டுக் கிடந்த அறையருகே வந்தார்.

பூட்டு எதுவும் போடப்படாத அறை அது. வெளிப்புறமாகக் கொக்கி போடப்பட்டிருந்தது. ஆத்மாராமை அடித்து அதற்குள் ஆனந்தரங்கன் போட்டிருப்பானோ என்ற சந்தேகத்துடனேயே கதவைத் திறந்தார் ஆளவந்தார்.

உடம்பெல்லாம் வியர்வை சொட்ட ஆத்மாராம் தலையில் கைவைத்தபடி அங்கே உட்கார்ந்திருப்பதைக் கண்டதும் 'ஆ!' என்று துள்ளிக் குதித்தார் ஆளவந்தார்.

பேசவில்லை; பெருமூச்சுக்கூட விடவில்லை! புலம்பவில்லை. பொலபொலவென்று கண்ணீர் உகுக்கவில்லை! முகத்தைக் கையால் துடைத்துக்கொண்டே அந்த அறையை விட்டு வெளியே வந்தான் ஆத்மாராம்.

"என்ன நடந்தது?" என்று கேட்டு மருகினார் ஆளவந்தார்.

எரித்து விடுபவன் போல ஆளவந்தாரை ஏறிட்டுப் பார்த்தான் ஆத்மாராம். "எது நடக்கவேண்டுமோ அதெல்லாம் நடந்து விட்டது. என் கழுத்தைத்தான் அவன் அறுக்கவில்லை!" என்றான் ஆத்திரத்தோடு அவன்.

"யாரைச் சொல்கிறாய்? ஆனந்தரங்கனையா?" என்று கேட்டுப் பதறினார் ஆளவந்தார்.

"நிதானமாகக் கேட்கிறீராக்கும்! கேட்ட தொகைக்கு இரட்டிப்புப் பணத்தை அடித்துக் கொண்டு போய் விட்டான் அவன்! மூன்று லக்ஷமய்யா மூன்று லக்ஷம்!" என்று வயிற்றிலே அடித்துக்கொண்டான் ஆத்மாராம்.

அவனை எப்படித் தேற்றுவது என்பதே ஆளவந்தாருக்குத் தெரியவில்லை.

"ஓய்! உம்மை நம்பியது மண்குதிரையை நம்பி ஆற்றிலே இறங்கிய கதையாகி விட்டது. ஆளைச் சுடச் சொல்லி அனுப்பினால் துப்பாக்கியை அவனிடம் கொடுத்து விட்டுப் பம்முகிறீர். என் துப்பாக்கியைக் காட்டி, என்னையே பயமுறுத்தி, என் பணத்தைக் கொள்ளை கொண்டுபோய் விட்டானே ஐயா! கொலை செய்ய உமக்கு நெஞ்சிலே உரமில்லாவிட்டால், கையாலாகாதவன் போல என் காலடியில் வந்து விழுவதுதானே! என்ன முழிக்கிறீர்!" என்று உறுமினான் ஆத்மாராம்.

"ஆத்திரப்படாதே ஆத்மாராம். நான் சொல்வதைக் கேட்டுவிட்டு எப்படி வேண்டுமானாலும் திட்டு!" என்று

சொல்லி அவனைச் சமாதானப்படுத்திவிட்டு, தியேட்டரி லிருந்து கிளம்பியது முதல் கைத்துப்பாக்கி காணுமற் போனவரை ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் எடுத்துச் சொன்னர் ஆளவந்தார்.

திறந்த வாய் திறந்தபடி எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தான் ஆத்மாராம். மற்றதைப் பற்றிக்கூட அவனுக்கு ஆத்திரம் ஏற்படவில்லை. 'தன் சட்டைப் பைக்குள் இருக்கும் கைத் துப்பாக்கி பறிபோனதை உணர முடியாத இந்த மூட ஆத்மா, பாக்கி சாக்கியிருக்கும் பொக்கிஷத்தை இழக்க எத்தனை நாழி ஆகப்போகிறது!' என்று மனதிற்குள்ளேயே அவரை நிந்தித்துக்கொண்டு. ஆளவந்தாரை இமை கொட்டாது பார்த்துக்கொண்டிருந் தான் ஆத்மாராம்.

என்ன பேசுவது என்பது தோன்ருலேயே மலைத்துப் போய் நின்ருர் ஆளவந்தார்.

"அசட்டுப் பேர்வழி! என் பணம் போனுல் போகட்டும். முப்பது லட்சத்தில் மூன்று லட்சம் போனுல் என் குடி முழுகிப் போய்விடாது. உம் குடும்பத்தையே பூண்டோடு அறுக்கத் திட்டமிட்டு விட்டான் ஆனந்த ரங்கன். வாய்விட்டும் என்னிடம் சொல்லிச் சவால் விட்டு விட்டான், நீர் உமது பணத்தையெல்லாம் எங்கே பத்திரப்படுத்தி வைத்திருக்கிறீர் என்ற ரகசியம் அவனுக்குத் தெரிந்திருக்கிறது. அதில் ஒரு சல்லிகூட விட்டு வைக்காமல் கொள்ளையடிக்கப் போகிருனும். அதோடு மட்டுமில்லை, ஆளவந்தார்! அந்தப் பணத்தைக் கவருவ தற்கு முன்னுல் உம் உயிரையே தீர்த்துவிடப் போகிருனும் —அதுவும் துப்புத் துலக்க முடியாத ஒரு வழியிலே. அதற் கப்புறம் அவன் சொன்னது தான் எனக்கே ரத்தம் கொதிக்க வைத்தது. உம் அருமை மகளைக் கெடுத்துக் கர்ப்பவதியாக்கி ஊரார் சந்தி சிரிக்கும்படி செய்துகொக்க ரிக்கப் போகிருனும்!...போதுமா ஆளவந்தாரே, சவால்? இவ்வளவிற்குப் பிறகும் நீர் உயிரோடு இருந்தாலென்ன, இப்போதே நாக்கைப் பிடுங்கிக்கொண்டு செத்தால்தான் என்ன? உயிர் என்ன அப்படி சர்க்கரையா?" என்ருன் ஆத்மாராம்.

ஆளவந்தாரின் ஆத்திரத்தை அதிகப்படுத்த. அடி மேல் அடியடித்து இடித்துக் காட்டினான் ஆத்மாராம். ஆனந்தரங்கன் சொல்லாததையெல்லாம் எட்டுக் கட்டிப் பொருத்தமாகச் சொல்லிவிட்டான் சேட்!

சண்டி முரண்டால் காடு கொள்ளாது என்பார்கள். அதைப்போலாகி விட்டார் ஆளவந்தார். "என் பணத்தைக் கொள்ளையடிக்கும் வரை, என் மகளைக் கெடுக்கிற வரை, என் உயிரை அபகரிக்கிற வரை பார்த்துக்கொண்டிருக்க பைத்தியக்காரனா நான்?...கோழைப் பயலா நான்?... தலைக்கு மேல் வெள்ளம் போய்விட்டது. சாண் போனாலென்ன முழம் போனாலென்ன?...ஆத்மாராம்! இந்தத் தடவை நான் சோடை போக மாட்டேன். கத்திவேண்டாம், கபடா வேண்டாம். கை இருக்கிறது எனக்கு. அதிலே வலுவும் நிறைய இருக்கிறது. அவன் கழுத்தை நெறித்துப் போடுகிறேனா இல்லையா என்று பார். என்ன ஆனாலும் சரி...!" என்று ஆளவந்தார் ஆக்ரோஷத்தோடு கூறிக் கொண்டே, 'வருகிறேன்' என்று கூடச் சொல்லிக் கொள்ளாமல் வெறி பிடித்தவர் போல வெளியே ஓடினார்!

ஆத்மாராம் தடுக்கவில்லை. தடுத்தால் அவனுக்கு லாபமில்லை! "துணிந்தால்தான் விமோசனம். இதனால் உம் தலையே போவதானாலும் நானிருக்கிறேன். கை நிறையக் காசு இருக்கிறது. கற்புக்கரசியான சாவித்திரி செய்த சாகஸத்தைவிட கண்கண்ட தெய்வமான காசு செய்யும் வேலை அபாரமானது! நாலையும் தாண்டித்தானே சட்டம் நம் உயிரைப் பலியிடும். பார்த்துக்கொள்ளலாம்!" என்று உரக்கச் சொல்லி ஊக்கம் கொடுத்தான் வாசல் வரை ஆளவந்தாரைப் பின் தொடர்ந்து வந்த ஆத்மாராம்.

மதம் பிடித்த யானைபோல 'விருவிரு' வென்று வீட்டை நோக்கி நடந்தார் ஆளவந்தார்.



# எந்தப் புற்றில் எந்தப் பாம்பு?

அன்று இருந்தது போல அந்த மஞ்சள் மாளிகை என்றும் இருந்ததில்லை; இனி அதைப் போன்றதொரு ருத்ர நடனத்தை இனி அங்கே பார்க்கவும் முடியாது. தக்ஷனின் யாக கூடத்தில் தீப்பொறி பறக்க ரௌத்ராகாரமாய் வந்து நின்ற சர்வேஸ்வரனைப்போல, மஞ்சள் மாளிகையின் நடுக் கூடத்தை அடைந்த ஆளவந்தார் ரத்தவெறி பிடித்து கத்திக்கொண்டிருந்தார்.

அவருக்கு இந்த வெறி ஆனந்தரங்கனைக் கொல்லாத வரையில் அடங்காது போல இருந்தது.

"என்ன நடந்தது சொல்லுங்கள்! அவன் என்ன செய்தான் என்று சொல்லுங்களேன்!" என்று பதறித் தவித்தாள் அன்னம்மாள்.

"உன்னிடம் நான் எதுவும் சொல்லவேண்டியதில்லை, நான் கொலைகாரனாகி கோர்ட்டிலே நிற்கிறபோது. ஆதியோடு அந்தமாக நீ எல்லாம் தெரிந்து கொள்வாய். எங்கே அந்த ஆனந்தரங்கன்?...எங்கே அந்தச் சின்னச் சிறுக்கி!...சொல்லுகிறாயா அல்லது உன் கழுத்தைப் பிடித்து நெருக்கிக் கொதறட்டுமா?" என்று கேட்டு, அன்னம்மாளை நெருங்கி வந்து கொண்டிருந்தார் ஆளவந்தார்.

"ஐயய்யோ!...நான் ஒரு பாபமும் அறியேனே!" என்று அன்னம்மாள் வீரிட்டுக்கொண்டே பின்னுக்கு நகர்ந்து ஆளவந்தாரின் பிடிக்கு அகப்படாமல் போய்க் கொண்டே இருந்தாள்.

அன்னம்மாள் மழுப்ப மழுப்ப ஆளவந்தாரின் ஆத்திரம் அதிகரித்துக்கொண்டு போனதே ஒழிய, சிறிது கூடக் குறையவேயில்லை.

"இரண்டில் ஒன்று இன்று நடைபெற்றாக வேண்டும்! ஆனந்தரங்கனைக் கொன்று அவன் குடலை மாலையாகப்

போட்டுக்கொண்டு நான் போலீஸ் ஸ்டேஷன் போக வேண்டும் அல்லது அவன் என்னை படபடவென்று சுட்டுத் தள்ளவேண்டும்! அன்னம்மா, என் உயிர் உனக்கு வேண்டுமானால், உள்ளதை ஒளிக்காதே. ஆனந்தரங்கன் எங்கே ஒளிந்து கொண்டிருக்கிறான் என்பதைச் சொல்லி விடு. மஞ்சளும் குங்குமமும் அறுத்தாலும் சரி, அழிந்தாலும் சரி என்று நீ முடிவு கட்டி விட்டாயானால் எதை வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் மூடி மறைத்துக்கொள்!...சொல்லு அன்னம்மா, எதை விரும்புகிறாய் நீ...நான் சாவதையா, அல்லது நிம்மதியாய் வாழ்வதையா?''

பேசிக்கொண்டே நெருங்கி வரும் ஆளவந்தாரின் முறுக்கேறிவிட்ட கரங்களில் அகப்பட்டுக் கொண்டு விடக் கூடாதே என்று எவ்வளவு தூரம் தான் அன்னம்மாள் பின்வாங்கிக் கொண்டே போக முடியும்? சுவர் குறுக் கிடவே, அந்த அம்மாள் வேறு வழியின்றி சட்டெனப் பக்கத்து அறைக்குள் பாய்ந்து கதவைப் படாரெனச் சாத்தி உட்பக்கமாகத் தாளிட்டுக்கொண்டாள்.

''கதவைத் திறக்கிறாயா இல்லையா?'' என்று கேட்டு காலாலும் கையாலும் கதவைப் படபடவென்று தட்டி ஆர்ப்பரித்தார் ஆளவந்தார்.

ஊரே கூடிவிடும் நிலைக்கு மஞ்சள் மாளிகை நிர்த் துளிப்பட்டது. அறைக்குள்ளே நடுநடுங்கிப் போய் திகிலடைந்திருந்த அன்னம்மாளுக்கு என்ன செய்வ தென்றே புரியவில்லை. கையிலகப்பட்ட ஏதோ பொருளைக் கொண்டு ஆளவந்தார் கதவைப் பிளப்பது போல சப்தம் அதிர்ந்தது.

நிலைமையை நீடிக்க விட்டால் சந்தி சிரிக்க நேரிடும். ஊர் கூடிச் சிரித்து மனம் புழுங்கி வேதனைப் படுவதை விட, தாலி கட்டிய அதே கரங்களில் சிக்கிக் காதோடு காது வைத்தது போல உயிர் விடுவது எவ்வளவோ உத்தமம் போல தோன்றிவிட்டது அன்னம்மாளுக்கு. அவள் தாழ்ப்பாளைத் திறந்து கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள். அவள் விழித்த விழியும், முறைத்த முறைப்பும் அசல் பைத்தியக்காரி போலவே தென்பட்டது.

"இப்போது என்னை என்ன செய்ய வேண்டுமோ செய்து கொள்ளுங்கள். அறிவாள் வேண்டுமானாலும் கொண்டு வந்து தருகிறேன். மனம் போனபடி கண்ட துண்டமாக வெட்டி, ஓசைப்படாமல் இந்த வீட்டிற் குள்ளேயே புதைத்து விடுங்கள்! அவ்வளவுதானே வேண்டும் உங்களுக்கு?" என்று அன்னம்மாள் கிரீச்சிட்டுக் கத்திக்கொண்டே, ஆளவந்தார் முன்னே தைரியமாக வந்து நின்று கொண்டாள்.

வெறி பிடித்த அவருடைய கைகள் இன்னும் தளராமலேயே இருந்தது. "அவ்வளவு திமிரா உனக்கு? ...கள்ளி வேஷமா போடுகிருய்!" என்று ஆளவந்தார் கத்திக் கீசிக்கொண்டு, கைகளை உயர்த்தி அன்னம்மாவின் கழுத்தைப் பற்றிக் கொண்டார்.

"ஹூம்...முறியுங்கள் கழுத்தை. வெறி பிடித்த மனுஷரிடம் ஆயுளெல்லாம் அவதிப் படுவதைவிட இப்போதே செதது விடுவது எவ்வளவோ உத்தமம்... ஹூம்...ஆகட்டும்!" என்று கத்தினள் அன்னம்மாள். அவளது நிலைக்கும், சாவை வெகுநாள் எதிர்பார்த்துச் சிறையில் கிடந்து உழன்று உளுத்து மரத்துப் போய் இறுதியாக தூக்கு மேடையில் சலன பேதம் எதுவுமின்றி வந்து நிற்கும் கைதியின் நிலைக்கும் வித்தியாசமே தட்டுப் படவில்லை.

அன்னம்மாளின் கழுத்தைச் சுற்றி வலுவோடு மடங்கியிருந்த ஆளவந்தாரின் விரல்கள் பிடி தளர்ந்தன. பின் சிறிது சிறிதாக அவை பிரிந்து, கைகள் இரண்டும் கீழே தொய்ந்து விழுவது போல விழுந்து விட்டன. 'கொல்லாதே, கொல்லாதே' என்று பின்னுக்கு நகர்ந்து ஓடியபோது கழுத்தை நெறித்துவிட வெறிகொண்டு துடித்த அந்தக் கரங்கள், "கொல்லு! வலுவுள்ளவரை இறுக்கு!" என்று முன்னுககு வரும்போது தொய்ந்து தளர்ந்து போய் விட்டது.

மனித மனப் போக்கே இதைப் போன்ற பல விசித்திர பலஹீனங்களைக் கொண்டுதானே விளங்குகிறது.

அதுவரை உக்கிரமாகக் கத்திக் கொண்டிருந்த அன்னம்மாளும் அடங்கி ஒடுங்கினள். ஆளவந்தாரும் எகிறிக் குதிக்கவில்லை.

சிறிது நேர அமைதியை அனுபவிக்க மஞ்சள் மாளிகையினுள்ளே அரவம் ஒடுங்கிற்று.

“வெறி தீர்ந்ததா இல்லையா?” என்று சாந்தமாகவே கேட்டாள் அன்னம்மாள்.

பதில் பேசாமல் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்த ஆளவந்தார் நறநறவென்று பல்லைக் கடித்தார்.

“நயவஞ்சகமாக ஒரு பிள்ளையை வரவழைத்து அவனைக் கொன்று போடுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பவர்கள் மனுஷர்களிலேயே சேர்த்தி யில்லை!” என்று மறுப்படியும் ஆரம்பித்தாள் அன்னம்மாள்.

“அண்டிப் பிழைக்க வந்தது போல வேஷமிட்டு அடுத்துக் கெடுக்க முற்படுபவனை கண்டதுண்டமாக வெட்டிப் போட்டாலும் பாபமில்லை!” என்று எதிர்த்து ஏவினார் வார்த்தைகளை ஆளவந்தார்.

“விரலை மடக்கி ஒன்று இரண்டு என்று வரிசையாகத் தான் சொல்லுங்களேன்!” என்று எரிந்து விழுந்தாள் அன்னம்மாள்.

“என் பணத்தைக் கொள்ளையடிக்கிறான்...!”

“உங்களிடம் பணம் இருந்தால்தானே!”

“பணத்தாசை தணியாத பாவி மகன்!”

“ஆசை பிடித்தவன் தான் இப்படி நோட்டு நோட்டாகக கொண்டு வந்து உங்களிடம் கொட்டுவானா?” என்று அவள் கேட்டுக் கொண்டே, உள் அறைக்கு விரைந்து போய் ஒரு தோல் பெட்டியைக் கொண்டு வந்து தலை குப்புறக் கவிழ்த்தாள்.

அத்தனையும் புத்தம் புதிய நோட்டுக் கட்டுகள், ஆனந்தரங்கன் தூக்கி வந்த அதே பெட்டி!

“கொள்ளையடித்த பணமடி அது! கொள்ளை அடித்து வந்த பணம்!”

“பறி கொடுத்தது யார்?”

“ஆத்மாராம் சேட்!”

"கொள்ளை கொடுத்தவராஞல் இதோ இருக்கிறது பணம். கூட்டி வாருங்கள் அவரை. திருடு கொடுத்திருப்பது வாஸ்தவமாஞல் கையும் களவுமாய்ப் பிடிக்க அவன் ஏன் போலீசைக் கூட்டி வரவில்லை? பட்டாபியிடம் பட்ட கடனை அவன் பிள்ளையிடம் திருப்பிக் கொடுத்தார், அந்த சேட்! வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பதற்குப் பேரா கொள்ளையடிப்பது?...சொல்கிறவர் சொன்ஞல் கேட்பாருக்கு மதி எங்கே போயிற்று? பால் வடியும் முகம். கபடு சூது அறியாத உள்ளம். பகைக்கும் பயங்கரத்திற்கும் ஈடு கொடுத்து எதிர் நிற்க முடியாத ஒரு பிராயம், அந்தப் பையனைப் பார்த்தா இந்தக் குதி குதிக்கிறீர்கள்! எல்லாவற்றையும் ஆனந்தரங்கன் எனக்குச் சொல்லி விட்டான். சொல்லப்போஞல் எனக்குத் தாலி பலம் தந்தவனே அவன்தான்! அவனை நீங்கள் நேற்று சுட்டிருந்தால் உங்கள் கழுத்திலே கயிறு ஏறியிருக்கும். என் கழுத்துக் கயிறு இத்து அறுந்திருக்கும்! தெய்வம் போல நடந்து கொண்டு குலவிளக்கு அணைந்து விடாமல் திரியைத் தூண்டி விட்டான்! அவனைப் போய்க் கொலைகாரன் என்று சொல்ல வெட்கமாயில்லை உங்களுக்கு?... ஏன், அவனைக் கொல்லக் கங்கணம் கட்டிக் கொண்டீர்கள்? ...யார் தூண்டுதலின் மீது?...சொல்லுங்கள்! தொண்டை கிழிய இத்தனை நாழி கத்தினீர்களே, அந்த வாய் இப்போது அடைத்து விட்டதா?"

கொண்ட கணவனுக்குப் பரிந்து வாதாடிஞள் கண்ணகி. ஆஞல் அன்னம்மாளோ கொண்ட கணவன் படுகுழியில் விழுவதைத் தடுக்க வாதாடிஞள்.

"நாஞ கொலை செய்ய முற்பட்டேன், பொய்...வீண் பழி!"

"நீங்கள் கொல்ல நினைக்கவில்லை. இதுதானே நினைத்தது!" என்று அந்த அம்மாள் கேட்டபடியே இடுப்பிலே சொருகி வைத்திருந்த கைத்துப்பாக்கியைச் சுழற்றி வீசிஞள் ஆளவந்தாரின் காலடியில்.

அதை எடுக்க முனைந்த ஆளவந்தாரின் கைகள் நடுக்க முறுவதை அன்னம்மாள் கவனித்தாள்.

“ அரை வயிற்றுக் கஞ்சியோடு நாலு வருஷமாக மானக் காலக்ஷேபம் செய்துகொண்டிருந்த இந்த வீட்டிலே ஒரு வாய் சோறு வயிருர உண்ணுத நிலையில் சொனே போல மூன்று லட்சத்தைக் கொண்டு வந்து கொட்டிய ஆனந்தரங்கனு அயோக்கியன் ?” என்று அவள் கேட்டு விட்டு, ஆளவந்தாரைத் தரதரவென்று தள்ளிக்கொண்டு அலமாரி அருகே வந்து கதவைத் திறந்து, “ கட்டைச் சங்கிலிக்குக்கூட கதி கெட்ட நிலையில் குதிர் போல நிற்கும் உங்கள் பெண்ணிற்கு கழுத்து நிறையப் பூட்டிக்கொள்ள வைர நகைகளாகக் கொண்டு வந்து உஷாவின் கையிலே அள்ளிக் கொடுத்திருக்கிருனே அவனு நயவஞ்சகன் ? தன்னைக் கொல்ல வந்தவனை போலீசிலே காட்டிக் கொடுக்காமல், அறியாமையால் அப்படி ஈடுபட்டு விட்டிருக்கின்ருன் என்று பச்சாதாபப்பட்டு, மன்னித்து மாங்கல்யப் பிச்சை கொடுத்தானே அவனு கொலைகாரன் ?” என்று அன்னம்மாள் கேட்டு நின்ருள்.

ஆளவந்தாருக்குப் பேச்சு மூச்சு அற்று விட்டது. கம்மிய குரலில் “ உஷா எங்கே ?” என்று கேட்டார் ஆளவந்தார். அவர் குனிந்திருந்த தலையை நிமிர்த்தவே யில்லை.

“ ஆனந்தரங்கனேடு போயிருக்கிருள் !” என்று சொல்லிவிட்டு வேறுபுறமாகத் திரும்பிக் கொண்டாள் அன்னம்மாள்.

“ ஆனந்தரங்கன் எங்கே போயிருக்கிருன் ?” என்று அடுத்த கேள்வியை விடுத்தார் ஆளவந்தார்.

“ படுத்துக்கொள்ள ஒரு மெத்தையும், கட்டிக்கொள்ள சில வேஷ்டியும் எடுத்துவரப் போயிருக்கிருன் !”

‘ சுளீர் ’ என யாரோ சவுக்கால் அடிப்பது போல இருந்தது அந்த வார்த்தைகள். மனைவியின் முன்னே நிற்கவும் கூசியவராய் வேகமாக நடந்து கட்டிலில் போய் உட்கார்ந்து கொண்டார் ஆளவந்தார். யார் பேச்சில் நிஜமிருக்கிறது, எவன் நயவஞ்சகன், எவன் கொலை செய்யச் சுற்றி அலைகிருன் என்பதே அவருக்கு நிதானப் படவில்லை.

மூன்று லட்ச ரூபாயை மனமுவந்து ஆத்மாராம் சேட் கொடுத்திருப்பதாக அன்னம்மாள் சொல்கிருள்; ஆத்மாராம் வீட்டிலே அவர் கண்ணுரக் கண்ட காக்ஷியோ வேறு விதம்!

ஆனந்தரங்கன் கள்ளம் கபடம் அறியாதவன் என்கிருள் அன்னம்மாள். திருடத் தெரியாதவனு அவ்வளவு நாசூக்காக தன் பையிலிருந்த கைத் துப்பாக்கியைத் தமக்குத் தெரியாமல் 'அபேஸ்' செய்து கொண்டான் என்பது ஆளவந்தாரின் தத்தளிப்பு!

அவருக்கு எதுவுமே மட்டுப் படாத நிலையில் மனம் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது டெலிபோன் மணி 'கிர்...கிர்' என்று ஓயாமல் விட்டு விட்டு அடித்தது.

டெலிபோன் ரிசீவரை எடுத்துக்கொண்டு "ஹலோ! யார் பேசறது ?" என்ருர் ஆளவந்தார்.

"ஆத்மாராம் பேசுகிறேன்" என்று வந்த பதிலைத் தொடர்ந்து, "கடைத் தெருவிலே ஆனந்தரங்கனையும் உஷாவையும் பார்த்தேன், உமது பெண்ணைக்கூட வசியம் செய்து கொண்டு விட்டான்! அவர்கள் பேசிக்கொண்டிருந்த ஒரு விஷயத்தைக்கூட ஒட்டுக் கேட்க சந்தர்ப்பம் கிடைத்தது! ..காரியம் ரொம்ப ரொம்ப முற்றிப்போகிறது! உமது மகளே அவனுக்கு உடந்தையாக இருப்பாள்போல் தோணுகிறது!...அதோடு மற்ெருரு சமாசாரம். கல்கத்தா அஹமதிடமிருந்து, கடிதம் வந்திருக்கிறது. விபரமாக டெலிபோனில் பேசுவதற்கில்லை. சாயந்திரம் ராஜா பார்க்கிற்கு வாருங்கள். விபரமாகச் சொல்லுகிறேன்!" என்று டெலிபோனில் குரல் பேசியது.

"உன் சகவாசமே வேண்டாம் எனக்கு" என்று சொல்லிவிட வாய் திறந்த ஆளவந்தார், சட்டென அடக்கிக் கொண்டார். 'இன்னும் என்னதான் சொல்கிருன் பார்ப்போம்!' என்ற நினைப்பில் "கட்டாயம் வருகிறேன்" என்று சொல்லி டெலிபோன் பேச்சை முடித்துக் கொண்டார்.

எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதோ என்ற பீதி தெளிவடையாத வரையில் அசட்டையாக இருந்து விடுவது ஆபத்து என்பது ஆளவந்தாரின் கருத்தாக இருந்தது.

# 12 பித்தம் தெளிய மருந்து!

ஏதைத் தின்றால் பித்தம் தெளியும் என்ற தன்மையில் ஆளவந்தார் இருந்ததால், ஆத்மாராம் சேட் குறிப்பிட்ட படி மாலை ஐந்து மணிக்கெல்லாம் 'ராஜா பார்க்' எனும் பூங்காவனத்தை வந்தடைந்தார். ஆளவந்தார்போலவே, ஆனால் வேறொரு பீதியில் நிலை கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்த ஆத்மாராம் சேட்டோ ஆளவந்தாரைக் கண்டதும் தெய்வத்தைக் கண்டது போல முகம் மலர்ந்தான்.

'ராஜா பார்க்' அமைக்கப்பட்டிருந்த இடம், அடர்ந்த ஒரு குடியிருப்புப் பிரதேசமாக இல்லாததால் கூட்டம் என்பதே இல்லாமல் வெறிச்சோடிக் கிடந்தது. அங்கொரு வரும் இங்கொருவருமாக ஏழெட்டுப் பேர்களே உட்கார்ந்திருந்ததால், ரகசியம் பேசுவதற்கு ஏற்ற இடமாகவே அது விளங்கியது.

ஆளவந்தாரும் ஆத்மாராமும் பூங்காவில் ஒரு ஒதுப்புறமாக உட்கார்ந்து கொண்டார்கள்.

ஆளவந்தார்தான் பேச்சை ஆரம்பித்தார்.

"கல்கத்தாவிலிருந்து ஏதோ கடிதம் வந்திருப்பதாகச் சொன்னாயே, அதைக் கொண்டுவந்திருக்கிறாயா? அதிலே அப்துல்லா என்ன எழுதியிருக்கிறார்?" என்று அவர் குரலைத் தாழ்த்திக்கொண்டு கேட்டார்.

ஆத்மாராம் சுற்றுமுற்றும் ஒருதரம் பார்த்துவிட்டு சட்டையின் உள் ஜேபியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து ஆளவந்தாரிடம் கொடுத்தான். மிகவும் ஆவலோடு அக்கடிதத்தைப் படித்துப் பார்க்கலானார் ஆளவந்தார்.

கடிதம் பின் வருமாறு இருந்தது.

"அன்புமிக்க ஆத்மாராம் சேட் அவர்களுக்கு எழுதிக்கொண்டது.

எனக்கு பர்மாவிலிருந்து வந்திருக்கும் ஒரு கடிதத்தை இத்துடன் அடக்கம் செய்துள்ளேன். அக்கடிதம் வந்ததிலிருந்து என் மனம் ஒரு நிலையில் இல்லை. உடல் நலம் சரியில்லாத சமயத்தில் பர்மாத் தபால் வந்ததால் உடல் நோயோடு உள்ள வருத்தமும் சேர்ந்து கொண்டு என்னைப் படுத்த படுக்கையாக்கி விட்டது. இல்லா விட்டால் ஒரு நிமிஷம்கூடத் தாமதிக்காமல்அங்கு நேரில் புறப்பட்டு வந்திருப்பேன்.

நாலு வருஷங்கள் கழித்து இப்போது ஆபத்து தலை நீட்டியிருக்கிறது. இதை முளையிலேயே கிள்ளி எறியா விட்டால். நம் மூவர் குடும்பமே அதோ கதியை அடைந்துவிடும் போலிருக்கிறது!

காசுக்காக நாம் யாவரும் மிகமிக மோசமான குரூரமான ஒரு செயலில் உயிரைப் பணயமாக வைத்து ஈடுபட்டோம்.

அதிர்ஷ்ட வசத்தால் பூரண வெற்றியும் பெற்றோம். அப்படி ஒரு துணிகரமான செயலில் ஈடுபட்டு ஈட்டிய பொருளை ஒரே நாளில் இழந்து, அதற்கு வட்டியாக உயிரையும் இழப்பதென்றால் என்ன கேலிக் கூத்தாக இருக்கிறது!

நான் இப்போது எதற்கும் துணிந்து விட்டேன். என் உடல் நலம் மட்டும் சரியாக இருந்திருக்குமேயானால் உங்கள் தயவையும் ஒத்துழைப்பையும் கூட எதிர்பார்த்திருக்க மாட்டேன். இருபது உயிர்களை ஒரே நாளில் குடித்த எனக்கு ஒரு உயிரைக் கவர துணிச்சல் இல்லாமல் இல்லை! ஆண்டவன் சோதனை, என்னைப் படுக்கையில் போட்டுவிட்டது.

இப்போது வந்திருக்கும் சங்கடம் நம் மூவருக்கும் பொதுவானது. ஒருவர் அகப்பட்டுக் கொண்டாலும் கூண்டோடு கைலாசமடைந்து விடும் நிலையில் இருக்கிறோம். ஆதலால் எவ்வகையிலேனும் அங்கு வந்திருக்கும் பட்டாபியின்

புதல்வன் ஆனந்தரங்கனைக் கொன்று, அப் பிணத்தைக்கூட யாருக்கும் அகப்படாதபடி அழித்துவிட வழி வகுத்து காரியத்தை முடித்து விடவேண்டும்.

இப் பொறுப்பை வேறு மூன்றும் மனுஷர்கள் முடித்துவிட எண்ண வேண்டாம். அப்படிச் செய்யவும் கூடாது. நமது ஒரு கொலைகாரச் சதியை மூன்றும் மனிதனுக்குத் தெரிவித்து, அவன் மூலம் ஆனந்தரங்கனைத் தீர்த்து விட்டால் கூட, அந்த மூன்றும் மனுஷனுக்கு நாம் ஆயுள் காலமெல்லாம் பயந்து தவிக்க வேண்டி நேரிடலாம். 'பணம் கொடு...இல்லா விட்டால் காட்டிக் கொடுத்து விடுவேன்' என்று அவன் மிரட்டுவதற்கு இடம் கொடுத்தது போலாகி விடும். அதனுல் அதைப் போன்றதொரு முயற்சி யில் ஈடுபட வேண்டாம்.

மிகச் சாமர்த்தியமாகத் திட்டம் வகுத்து ஆனந்தரங்கனைத் தீர்தது விடவும், நீக்குப் போக்குத் தெரிந்த உங்களுக்கு நாம் அகப்பட்டுக் கொள்ள இடமேற்படாத வழியில் காரியத்தை முடிக்கச் சாமர்த்தியம் உண்டு என்பது எனது நம்பிக்கையாகும். ஆனந்தரங்கன் கொலைப்பட்டு பிற்பாடு நாம் அகப்பட்டுக்கொண்டால் கூட, ஏதாவது ஒரு சிறு சட்ட ஒழுக்கலில் நாம் விடுதலையடைந்து விடலாம்! நாம் அகப்பட்டுக் கொள்ளாதபடி பணத்தை வாறி இறைத்தால் எல்லாம் சரிப்பட்டுப்போய்விடும். அதற்கெனவே ரூபாய் மூன்று லட்சம் ஒதுக்கி விட்டேன். என் சொல்லில் உங்களுக்கு நம்பிக்கை ஏற்படா விட்டால் அந்த மூன்று லட்சத்தை, உங்கள் தகவல் கிடைத்ததும் தங்கள் மாமனுரான லல்லூராம் சேட்டிடம் ஒப்படைத்து விடுகிறேன். எப்படியாவது காரியம் முடிந்தாக வேண்டும்.

ஆனந்தரங்கன் ஆளவந்தார் வீட்டிலேயே வந்து தங்கியிருப்பதால் காரியத்தை முடிப்பதில் கஷ்டமிராது.

இது விஷயமாய் நான் நேரிடையாக அவருக்குக் கடிதம் எழுதவில்லையே என்று ஆளவந்தார் வித்தியாசமாக நினைத்துக் கொண்டாலும் கொள்வார். ஆனந்தரங்கன் அவர் வீட்டிலே தங்கியிருப்பதால் கடிதம் நேரிடையாக எழுதினால் ஒருக்கால் நமது அந்த வைரியின் கைக்கு சிக்கிவிடுமோ என்ற பீதியாலேயே எழுதவில்லை என்பதை ஆளவந்தார் நாயுடுகாருவுக்குத் தெரியப்படுத்தவும்.

மேலும், சிறிது கூடத் தாமதப் படுத்தக் கூடாது. காரியத்தை முடித்து விட்டால், 'கப்பல் கிளம்பி விட்டது.' என்று பரிபாஷையாகத் தந்தி கொடுக்கவும்; புரிந்து கொளவேன்.

இத்துடன் உள்ள கடிதத்தைப் படித்து விட்டு உடன் எனக்கு ரிஜிஸ்டர் தபாலில் திருப்பி அனுப்பிவிடவும். நான் எழுதியிருக்கும் இக்கடிதத்தையும் படித்தவுடன் கிழித்துவிடவும். தப்பித் தவறி யார் கையிலாவது இக்கடிதம் சிக்கிக்கொண்டு விடக்கூடாது என்பதே என் பயம்.

இப்படிக்கு,
**அப்துல்லா."**

மேற்படி கடிதத்தைப் படித்து முடித்த ஆளவந்தார், "இதோடு வந்த இன்னொரு கடிதம் எங்கே?" என்று கேட்டார்.

"அதை நீங்கள் படிக்க வேண்டாம், ஏற்கனவே நொந்து போயிருக்கும் உங்கள் மனதில் மேலும் அது ஈட்டி கொண்டு குத்துவது போல வேதனை தரும்!" என்றான் ஆத்மாராம் சேட்.

"வேதனைப்படுவதற்கோ, துன்பத்தை அடக்கிக் கொள்வதற்கோ என் நெஞ்சிலே இனி இடமிருந்தாலல்லவா, புதிய கவலைகளை அது ஏற்பதற்கு? பரவாயில்லை! கொடு அந்தக் கடிதத்தையும்!" என்றார் ஆளவந்தார்.

மறுவார்த்தை பேசாமல் அந்தக் கடிதத்தை எடுத்து ஆளவந்தாரிடம் கொடுத்தான் ஆத்மாராம்.

அது பட்டாபியிலிருந்து வந்த கடிதமாக இருந்தது. ஆனல் பட்டாபியால் எழுதப்பட்டதல்ல! ஆளவந்தார் அண்டு அஹ்மத் கம்பெனியின் ரங்கூன் பிராந்திய புக்கிங் ஏஜண்டான காளாத்தி முதலியாரால் எழுதப்பட்டதாக இருந்தது.

"சின்ன முதலாளி அவர்கட்கு,

இந்தக் கடிதம் பரம ரகஸ்யமானது, யாருக்காவது இதை நீங்கள் தெரியப்படுத்திவிட்டால், இங்கே அடுத்த நிமிடமே என் தலே கொய்யப்பட்டுவிடும் போலிருக்கிறது. அதனுல் மிக மிக ஜாக்ரதையாக நடந்து கொண்டு எனக்கு ஏதும் ஆபத்து ஏற்பட்டுவிடாதபடி பார்த்துக் கொள்ளவும்.

இரண்டு தினங்களுக்கு முன்னுல் ஒருவன் என்னே வந்து சந்தித்தான். ஏற்கனவே கவிழ்ந்த நமது கப்பலேப் பற்றிப் பல விஷயங்களேக் கேட்டான். எனக்கு ஏதாவது தெரிந்தாலல்லவா சொல்வதற்கு? எதேச்சையாக ஏற்பட்ட விபத்தால் கப்பல் கவிழ்ந்ததாக நிஜத்தைச் சொன்னேன். என்னே வாய்க்கு வந்தபடி திட்டிய அவன், கப்பலேக் கவிழ்த்தது ஒரு சதியென்றும், அது ஒரு நாகரிகச் கடற்கொள்ளே யென்றும், அதன் மூலம் நீங்கள் யாவரும் பெரும் பணம் சேர்த்துவிட்டதாகவும் கூறினுன்.

அது அவனுக்கு எப்படித் தெரியும் என்று கேட்டேன். அந்தக் கப்பலில் 'விசா' இல்லாமல் ஏறிச் சென்ற பிரயாணிகளில் தானும் ஒருவன் என்றும், தெய்வாதீனமாகத் தப்பித்துவிட்டதாகவும் பழிக்குப் பழி வாங்க இப்போது முன் வந்திருப்பதாகவும் என்னவெல்லாமோ கூறினுன். தன் பெயர் பட்டாபி என்றதும் தான் எனக்கு பழைய ஞாபகம் வந்தது. அடையாளமும் கண்டு கொண்டேன். கவிழ்ந்த கப்பலில்

பிரயாணம் செய்ய நான் தான் அவனை உங்களிடம் கூட்டி வந்து அறிமுகம் செய்தேன்.

அவன் சொன்ன விஷயங்கள் யாவும் கேட்கவே பயங்கரமாக இருந்தது. உங்களையெல்லாம் வஞ்சம் தீர்த்துக் கொள்ள, மிக சாமர்த்தியமான ஒரு திட்டம் வகுத்து தன் புதல்வனை ஆனந்த ரங்கனை அங்கே அனுப்பியிருப்பதாகவும், உங்கள் மூவரிடமும் இருக்கும் அத்தனை செல்வங்களையும் சாதுரியமாக அபகரித்துக் கொண்டு, உயிரோடு உங்களைவிட்டு வைத்தால் பிற்பாடு ஏதாவது துன்பத்தைத் தருவீர்களோ என்ற எண்ணத்தோடு உங்கள் மூவரையும் கொன்றுவிடவும் திட்டம் செய்து அனுப்பியிருப்பதாகவும் கூறினன். அவன் மகன் ஆளவந்தார் வீட்டிலே தான் தங்கப் போவதாகவும் சொன்னன்.

அவனுடைய மிரட்டல் உங்களோடு நிற்கவில்லை. அவனை 'புக்' செய்துவிட்டது நானுகையால் அவன் பட்ட நஷ்டத்திற்கு நானே பொறுப்பாளி என்று கூறி, பயமுறுத்தி, காலணு காசுகூட விட்டு வைக்காமல் நான் சம்பாதித்து வைத்திருந்த அத்தனை பணத்தையும் பிடுங்கிக் கொண்டுவிட்டான். இதைப்பற்றி வெளியே சொன்னல் என் தலை எனக்கில்லை என்றும் கூறிவிட்டான். இந்தத் தகவலை உங்களுக்கு அறிவிக்காமல் இருக்க முடியவில்லை. என் கையிலிருந்த பணம் பறிபோய்விட்டதால் சோற்றுக்கே என் குடும்பம் திண்டாடிக் கொண்டிருக்கிறது. முதலாளி அவர்கள் என் மீது தயவு வைத்து, கருணை காட்டி, ஆயிரம் ரூபாய் அனுப்பி வைக்கும்படி மிக மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு
தங்கள் ஊழியன்

**காளாத்தி முதலியார்."**

பின் குறிப்பு:

பட்டாபி தன் மகனை அங்கே இந்தியாவுக்கு அனுப்பியிருப்பது தங்களுக்குத் தெரியுமென்பது போல காட்டிக் கொள்வீர்களேயானால், இந்த ரகஸ்யத்தை நான் தான் உங்களுக்குச் சொல்லிவிட்டதாக நினைத்து பட்டாபி என் குடும்பத்தார் அனைவரையும் கொன்று போட்டுவிடுவான்.

**காளாத்தி.''**

கடிதத்தைப் படித்துப் பெருமூச்சுவிட்டார் ஆளவந்தார். வேறெதுவும் பேசவில்லை.

"என்ன நாயுடு பேசாமல் இருக்கிறீர்கள்?" என்று கிளப்பினான் ஆத்மராராம் சேட்.

"எனக்கு என்ன செய்வதென்றே புரிபடவில்லை. புத்தியும் ஒரு நிலையில் இல்லை. என் மனைவி சொல்வது போல, ஆனந்த ரங்கன் அவ்வளவு பயங்கரமானவனாக நடைமுறையில் காணேம்!" என்றார் ஆளவந்தார்

ஆத்மாராமின் முகம் கருத்துச் சுண்டியது.

''போயும் போயும் பெண்கள் பேச்சுக்கா மதிப்புக் கொடுக்கிறீர்கள்? அண்டியிருந்து கெடுக்கத் திட்டமிடுபவன் உருட்டல் மிரட்டலோடா திரிவான்!''

"அதுவும் சரிதான்! ஆனால் ஒரு சந்தேகம் தட்டுகிறது. உன்னிடமிருந்து கொள்ளையடித்துப்போன பணத்தையெல்லாம் என்மனைவியிடம் ஒப்புவித்து இஷ்டம் போலச் செலவு செய்து கொள்ளும்படி ஆனந்த ரங்கன் கூறியிருக்கிறான். அதுதான் எனக்குத் தடுமாற்றமாக இருக்கிறது!" என்றார் ஆளவந்தார் தலையைச்சொரிந்து கொண்டு.

"அடுத்துக் கெடுப்பவன் கையாளுகிற தந்திரமய்யா அது, தந்திரம்! இப்படி நடந்து கொள்வதன் மூலம் உம் மனைவியின் பிரியத்திற்குப் பாத்திரமாகி விட்டான். பிற்பாடு அவன் என்ன அக்கிரமம் செய்தாலும் 'அவனா செய்தான்......இருக்கவே இருக்காது!' என்று அவள் சொல்லவேண்டுமே. அதற்கான ஒரு சூழ்ச்சி இது!"

"என் பெண்ணிற்கு ஏகப்பட்ட நகைகள் வாங்கியிருக்கிறான். அந்த நகைகளைக்கூட என் மனைவியிடம் தான் கொடுத்திருக்கிறான்!"

"அப்பாவி மனுஷரே! அந்தத் தந்திரம் உமக்கு இன்னும் புரியாமல் இருக்கிறதே! அப்படி அவன் நடந்து கொண்டால்தானே உஷா அவனிடம் மயங்கிப்போவாள்!"

"அவளால் அவனுக்கு என்ன சாதகம்?"

"அதைச் சொல்லத்தான் உம்மைக் கூப்பிட்டேன். கடைத் தெருவில் உம் மகளையும் ஆனந்தரங்கனையும் பார்த்ததாகச் சொன்னேனல்லவா? அவர்களைப் பின் தொடர்ந்து பார்த்தேன். வாங்கவேண்டியவைகளையெல்லாம் வாங்கி ஒரு டாக்ஸியில் போட்டு, உம் வீட்டின் விலாசம் கொடுத்து, அங்கே சேர்ப்பிக்கும்படி டிரைவர் பொறுப்பிலேயே விட்டு விட்டு, அதற்கான சார்ஜையும் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு அவர்கள் இருவரும் பாலஸ் தியேட்டருக்கு 'மாட்னிஷோ' விற்குச் செல்லவே, நானும் டிக்கட் வாங்கிக் கொண்டு, சினிமா ஆரம்பித்த பிறகு அவர்கள் இருவருக்கும் தெரியாமல், அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்திற்குப் பின் வரிசையில் உட்கார்ந்து இருவரும் பேசிக்கொள்வதைக் கவனித்தேன்.

"பேச்சுக் கிடையே, 'உஷா! அம்மாவிடம் அவ்வளவு பெரும் பணத்தைக் கொடுத்துவந்தேனே. அவள் அதைப் பத்திரமாக வைத்திருப்பாளா? அதுதான் எனக்கு திகிலாயிருக்கிறது. கிட்டத்தட்ட மூன்று லக்ஷமாயிற்றே!' என்றான். 'அதெல்லாம் பயமில்லை, அப்பாவிடம் கொடுத்துப் பத்திரமாக வைக்கச் சொல்லியிருப்பாள்!' என்றாள் உங்கள் பெண். 'அப்பாவின் அறைதான் பந்தோபஸ்து இல்லாததாக இருக்கிறதே. பணத்தைப் பூட்டிவைக்க ஒரு இரும்புப் பெட்டிகூட இல்லையே!' என்று கிண்டினான் ஆனந்தரங்கன். 'அப்பாவிற்கு அந்தப் பணம் ஒன்றும் அவ்வளவு பெரிய தொகையில்லை! இரகசிய அறையிலே வைத்து விடுவார்!' என்று உஷா பதில் சொன்னதையும் காதாரக்கேட்டேன். அதிசயப்படுபவன் போல, 'இரகசிய அறை வேறு இருக்கிறதா அங்கே!' என்று கேட்டான் அவன். 'நேற்றுதான் அதுவும் எனக்குத்

தெரிந்தது!' என்ருள் உம் பெண். அதற்குள் இடை வேளைக்கு முன் கூட்டியே மணி அடித்து அறிவிக்கவே, அவர்கள் என்னைப் பார்த்துவிடக் கூடாதே என்று பயந்து தியேட்டரில் வெளிச்சம் போடுவதற்கு முன்னுல் வெளி யேறிவிட்டேன். அசட்டுப் பெண் ஆனந்தரங்கனின் வலையில் சிக்கி அப்பாவுக்கு ஆபத்தை ஏற்படுத்தி விட்டாளே என்று வருந்தினேன். அந்தக் கலக்கத்தோடு தான், தியேட்டரில் இருந்தபடியே அங்கிருந்து உங்களுடன் டெலிபோனில் பேசினேன்! எவ்வளவு நாசூக்காக அவன் எல்லா ரகசியங்களையும் கிரகிக்கிருன் என்பது இப்போ தாவது உமக்குப் புரிகிறதா நாயுடு?" என்று சொல்லி நிறுத்திஞன் ஆத்மாராம் சேட்.

பதில் ஏதும் சொல்லவில்லை ஆளவந்தார். அவர் மனக்கண் முன்னே முந்திய நாள் இரவு நடந்த சம்பவங்கள் மளமளவென்று தோன்றி மறைந்தன. ரகசிய டிராயரைத் திறந்து நோட்டுகளை எண்ணியது, அதே சமயம் உஷா அங்கே வந்தது, பிறகு ஏதேதோ அவளுக்குப் போக்குக் காட்டிச் சமாதானம் சொல்லி அனுப்பியது, யாவுமே ஞாபகத்துக்கு வந்தது. பணத்தைப் பதுக்கி வைத்திருக்கும் இடம் உஷாவிற்குத் தெரிந்தது தானே!

"பரம ரகசியம், யாரிடமும் சொல்லாதே என்று ஆயிரம் தரம் அவளிடம் சொன்ஞேமே, அப்பாவிற்கு விரோதமாக அந்த ரகசியத்தை ஒரு பெண் வெளியிடு வாளா?" என்ற கேள்வியைத் தமக்குத் தாமே மனதிற்குள் கேட்டுக் கொண்டார் ஆளவந்தார்.

'மதுவில் மயங்கி இருக்கும் குடிகாரனும், மன்மத தாபத்தில் மயங்கியிருக்கும் மங்கையும் ஒரே தினுசு. அந்த மயக்கத்திலே எந்த அந்தரங்கத்தையும் சொல்லி விடுவார் களே!' என்ற பதிலைத்தந்தது அனுபவம். ஒரு காலத்தில் அவரும் ஒரு குடிகாரராய் இருந்திருக்கிருர். கூத்திக் கள்ளனாகத் திரிந்திருக்கிருர். அப்போதெல்லாம் மயக்கத் தின் உச்ச நிலையில் எவ்வளவு அந்தரங்கமான ரகசியங் களையெல்லாம் உளறிக்கொட்டியிருக்கிருர் அவர்!

"பெண்களை நம்பி மோசம் போய்விடாதீர்கள்,நாயுடு சுலபமாக ஏமாந்து விடக் கூடியவர்கள்

சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டேன். பிறகு உம் இஷ்டப்படி நடந்துகொள்ளும். என்றாவது ஒரு நாள் கட்டிக் காத்து வைத்திருக்கும் பொருளையெல்லாம் இழந்து, குடும்பம் சீரழிந்து விட்டதையும் கண்ணால் கண்டு கதறுகிற காலத்தில், நானோ அப்துல்லாவோ கொஞ்சம் கூடக்கருணை காட்டமாட்டோம். அதை இப்போதே சொல்லி வைக்கிறேன்!" என்றான் ஆத்மாராம் சேட்.

அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரவேண்டியது தானே! 'இன்னது செய் என்று தீர்க்கமாகத் திட்டம் போட்டுச் சொல் ஆத்மராம். எப்படியாவது அது படிக்கு செய்துவிடுகிறேன்!' என்றார் ஆளவந்தார். அந்தப்பேச்சின் அழுத்தம், அவர் நிச்சயமான ஒரு முடிவுக்கு வந்து விட்டார் என்பதையே பிரதிபலித்தது.

"அப்துல்லாவின் கடிதம் வந்தபோதே திட்டம் தேடித் தீவிரமாகச் சிந்தித்தேன். அதற்கேற்றாற்போல கம்பெனிக்கு ஒரு கடிதமும் வந்தது. அதைப் படித்துப் பார்த்ததும் கடவுளே நமக்கு சமயத்தில் வந்து உதவி செய்வதுபோல தோன்றிவிட்டது!" என்றான் குதூகலத் தோடு.

"கம்பெனிக்குக் கடிதமா? அது என்ன?" என்று கேட்டார் ஆளவந்தார்.

"கொலைப்பட்ட நமது காப்டன் காசிநாதனின் சடலம் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டு விட்டது. ஈமக்கிரியை செய்ய அந்தப்பிணத்தை ரங்கூனுக்கு அனுப்பிவைக்கும் படி காப்டனின் மனைவி கோரியிருக்கவே, அந்தப் பொறுப்பை கம்பெனி ஏற்றுக்கொண்டு காப்டனின் சடலத்தை ரங்கூனுக்கு எடுத்துச் செல்ல சர்க்கார் அனுமதி கொடுத்து உத்திரவும் போட்டிருக்கிறது. அப்பிணத்தை ஒரு சவப்பெட்டியில் வைத்து எடுத்துவந்து, 'புக்கிங்' ஆபீஸ் கிடங்கில் போட்டு வைத்திருக்கிறேன். அடுத்த வாரம் புறப்படுகிற கப்பலில் அதை ஏற்றி அனுப்ப வேண்டும்!" என்றான் ஆத்மாராம்.

"இதனால் நமக்கென்ன சாதகம் இருக்கிறது?"

"இருக்கிறதய்யா இருக்கிறது. சொல்லத்தானே போகிறேன்......நாயுடு! ஆனந்தரங்கனைத் தீர்த்துவிட

நிச்சயம் செய்துகொண்டிருப்பது உறுதிதானே?" என்று ஆத்மாராம் கேட்டான். உறுதி என்று ஆளவந்தார் சத்தியம் செய்தால்தான் திட்டத்தைக் கூறலாம் என்று அவன் எண்ணினுனே என்னவோ?

"நிச்சயமான முடிவுதான் அது!" என்று உறுதியாகக் கூறினுர் ஆளவந்தார் நாயுடு.

"இப்போது நான் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக்கொள்ளும். நீண்ட நேர யோசனைக்குப் பிறகு வகுத்த திட்டம் இது. நம் முயற்சியும் கை கூடிவிடும். எப்படிப்பட்ட நிபுணர் வந்தால்கூட ஒரு சின்னஞ் சிறு தடயம் கூடக் கிடையாது! கவனமாகக் கேட்டுக் கொள்ளும்" என்று ஆத்மாராம் சொல்லிவிட்டு தன்கோட்டுப் பையில் தயாராக வைத்திருந்த ஒரு சீசாவை எடுத்து ஆளவந்தாரிடம் கொடுத்தான்.

"இது என்ன?" என்று கேட்ட ஆளவந்தார், "ஏதாவது விஷமா?" என்ருர்.

"சொல்லாமலா இருக்கப் போகிறேன். அந்தச் சீசாவில் இருப்பது விஷமில்லை. அதிகக் காட்டமுள்ள மயக்க மருந்து. உமது மனைவி, பெண், ஆனந்தரங்கன் எல்லோரும் படுக்கப் போவதற்கு முன்பாக அவரவர் படுக்கையை விரித்துக் கொண்டதும் அவர்களுக்குத் தெரியாமல் தலையணையில் இந்த மருந்தைத் தெளித்து விடவேண்டும். அவர்கள் அதிலே தலைவைத்துப்படுத்த தும் இதன் லளித மணம் அவர்களது சுவாசத்தோடு கலந்துவிடும். சிறிது நேரத்திற்கெல்லாம் மூவரும் மயக்கத்தில் ஆழ்ந்துவிடுவார்கள். விடிகிறவரை பேச்சு மூச்சு இருக்காது. வீட்டிற்குள்ளே நீர் என்ன செய்தாலும் கவனிக்கவோ, பார்க்கவோ, தடுக்கவோ ஆளில்லாமல் போய்விடும். பிறகு ஊரடங்கிய சமயம் பார்த்து, ஆனந்தரங்கன் படுத்திருக்கும் இடத்திற்குச் சென்று அவனது உடலுக்கு அருகில் துப்பாக்கியை அழுத்திப் பிடித்துக் கொண்டு சுட்டுவிடுங்கள். துப்பாக்கி வெடிக்கும் சப்தம் அவ்வளவு கடூரமாகக் கேட்காது. அதனுல் அண்டை அயலார் காதுகளுக்கும் எட்டாது. பிறகு அப்பிணத்தைத் தூக்கி வந்து உங்கள் அறையிலே இருக்கும் சவப் பெட்டியில் போட்டு மூடி பூட்டி விடுங்கள்..."

முழுதும் சொல்லி முடிப்பதற்குள் "என் அறையில் சவப் பெட்டி ஏது?" என்று குறுக்கிட்டார் ஆளவந்தார்.

"உம் அறையில் அப்போது அது இருக்கும். அது எப்படி உம் அறையிலே இருக்கும் என்பதையும் சொல்லி விடுகிறேன். காப்டன் காசிநாதனின் சவப் பெட்டி கப்பலில் அனுப்பப்படுகிறபோது, உள்ளே இருப்பது 'சவம்'தான் என்று சுங்க உறுதிமொழி நமுனுவில் நீங்கள் நிர்வாக டைரக்டர் என்ற ஹோதாவில் 'சர்ட்டிபை' செய்யவேண்டு மல்லவா, அந்தச் சாக்கு வைத்துக்கொண்டு, காப்டனின் சவப்பெட்டியை நானே காரில் ஏற்றிக் கொண்டு வந்து உங்கள் அறையில் வைத்துப் போய்விடுவேன். பிறகு சுமார் பனிரெண்டு மணி வாக்கில் நானே கார் எடுத்து வந்து பெட்டியைத் திரும்ப எடுத்துக் கொண்டு போய் விடு வேன். அதற்குள் நீங்கள் ஆனந்தரங்கனைக் கொன்று அவனுடைய பிரேதத்தை அந்தச் சவப்பெட்டிக்குள் வைத்துவிட வேண்டும்!"

"அப்புறம்?" என்ருர் ஆளவந்தார்.

"அந்தச் சவப் பெட்டியை ஏற்றிக்கொண்டு கப்பல் கடலிலே போகும்போது சவப் பெட்டியைத் திறந்து, ஆனந்தரங்கனின் உடலைக் கடலுக்குள் தள்ளிவிடுவேன்! பிறகு சவம் எங்கே அகப்படும். கேஸ் எப்படிப் போட முடியும்? மகன் திரும்பிவராததைக் கண்டு, லட்சக் கணக்கான பணங்களோடு தனக்கும் கடுக்காய்கொடுத்து விட்டு எங்கேயோ போய்விட்டானே ஆனந்தரங்கன் என்று எண்ணி பட்டாபி சமாதானமடைவானே தவிர, நம்மீது சந்தேகப்பட மாட்டான்! எப்படி என் யோசனை?" என்று கேட்டு நிமிர்ந்து பார்த்தான் ஆத்மாராம்.

"பிரமாதமான திட்டம்தான்!"என்று சொல்லிவிட்டு. ஏதோ யோசனையில் ஆழ்ந்த ஆளவந்தார், "திட்டம் சரியானதுதான். ஆனல் ஆனந்தரங்கனைக் காணமல் அவன் எங்கே போனுன் என்று உஷா அமர்க்களப் படுத் திஞல் என்ன சொல்வது?" என்று கேட்டார்.

"அவனைத் திருப்பிஞல் சரியாகிவிடும். 'அப்போதே சொன்னேனே, கேட்டாயா? அவ்வளவு கொஞ்சிஞயே,

அதற்குப் பலன் கைமேலே பெற்ருய்! உன்னை ஏமாற்றி விட்டு அவன், கிடைத்த காசைச் சுருட்டிக்கொண்டு பர்மா விற்கு ஓடிவிட்டான்!' என்று சொல்லிவிடுங்கள். நானும் சேர்ந்து பாடிஞல் உஷா நம்பிவிடுவாள். அதோடு அவன் நினைப்பும் நாளாவட்டத்தில் மறைந்து விடும்!'' என்ருன் ஆத்மாராம் சேட்.

திருப்தியடைந்தவர்போல காணப்பட்ட ஆளவந்தார், ''சரி ஆத்மாராம். எழுந்திரு போகலாம். நிச்சயமாக நீ என்னை நம்பலாம். தீர்த்துவிடுகிறேன் அவனை'' என்று சொல்லிக்கொண்டே எழுந்திருந்தார்.

ஆத்மாராம் சேட் ஓர் திசையிலும், ஆளவந்தார் நாயுடு மற்ருெரு திசையிலும் பிரிந்து சென்ருர்கள்.

ஆளவந்தாரின் நடையிலே ஓர் அலாதியான மிடுக்கும் தெம்பும் தீர்க்கமாகத் தென்பட்டது. அவர் வீடு நோக்கி 'விர்'ரென நடந்தார்.

---

## 13 சவப் பெட்டி வந்தது!

---

ஆளவந்தார் வீடு திரும்பியபோது அந்தி மறைந்து விட்டது. அன்னம்மாள் நடுக் கூடத்திலே உட்கார்ந்து கொண்டு வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தாள். வீட்டு வாசலில் அடியெடுத்து வைக்கும் போதே, ''அன்னம்!'' என்று அன்பு ததும்பக் கூப்பிட்டபடி உள்ளே வரும் தன் கணவனைக் காண அவளுக்கே வியப்பாக இருந்தது.

அன்று ஐந்து மணி சுமாருக்கு வீட்டை விட்டு ஆள வந்தார் வெளியே போகையில் அவரது முகத்தைப் பார்த்த அன்னம்மாளுக்கு, இப்போது உள்ளே நுழையும் கணவரின் அதே முகத்தைப் பார்க்கும்போது அதிலே எவ்வளவோ மாற்றத்தைக் காண முடிந்தது.

''அன்னம்மா! உஷா எங்கே?...ஆனந்தரங்கனும் இன்னும் வரவில்லையா?'' என்று ஆளவந்தார் சிரித்துக்

கொண்டே கேட்டபடி அன்னம்மாள் அருகே வந்து உட்கார்ந்து கொண்டார்.

நல்ல பாம்பு தீண்டுவதற்கு முன்னே படம் விரித்து அழகாட்டம் ஆடுவது இயற்கைதானே! அதைப்போலவே ஆளவந்தாரும் நடந்து கொள்கிறார் என்பது பாவம், அன்னம்மாளுக்கு எப்படித் தெரிந்திருக்கப் போகிறது!

"ஆனந்தரங்கனைக் கண்டால் உங்களுக்குத்தான் கட்டோடு பிடிப்பதில்லையே! அவன் வந்தாலென்ன, வராவிட்டால் என்ன!" என்றாள் அன்னம்மாள் நாசூக்காக.

"ஒருதரம் பிடிக்காத பொருள், வேறொரு சமயத்தில் மனதுக்குப் பிடித்தமானதாகிவிடும். இது சகஜம் தானே அன்னம்மா!"

இந்தச் சொற்கள் அன்னம்மாளின் காதுகளுக்குக் கேட்கக் குளுமையாக இருந்தன. இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட்டால் வேறொரு சந்தர்ப்பம் கிடைப்பது அரிது என்று எண்ணிய அன்னம்மாள், அவரது குழைந்த சுபாவத்தை தன் காரியசித்திக்குப் பயன் படுத்திக் கொள்வதில் முனைந்தாள்.

"என் மனதிலே உள்ள ஒரு ஆசையைச் சொன்னால் கோபித்துக் கொள்ளமாட்டீர்களே?" என்று அன்னம்மாள் பீடிகை போட்டாள்.

"சொல்லு கேட்கிறேன்" என்றார் ஆளவந்தார்.

"உஷாவிற்கும் ஆனந்தரங்கத்திற்கு ஒரு முடிச்சுப் போட்டுவிட்டால் என்ன?" என்று அந்த அம்மாள் கேட்டாள் புருஷனின் முகத்தைக் கனிவோடு பார்த்துக் கொண்டே.

"போடுகிற முடிச்சு பலமாகக் கடைசிவரை இறுகி இருக்க வேண்டுமே; அதை யோசித்தாயா?"

"யோசிக்கவே வேண்டாம். நடைமுறையிலேயே பார்க்கிறேனே, அது போதாதா?"

"இருபத்தி நாலு மணி நேர நடப்பு என்ன பழக்கத்தைத் தெளிய வைத்துவிடும் அன்னம்மா? நேற்று

மத்தியானம் வந்த அவனை ஒரே நாளைக்குள் எடை போட்டுவிட முடியுமா?"

"ஒரு பானைச் சோற்றிலே ஒரு சோறுதானே எடுத்துப் பதம் பார்க்கிறோம். ஒருவர் நல்லவரா கெட்டவரா என்று தெரிய ஒன்பது வருஷங்களா பழக வேண்டும்?"

"உனக்கு அது இஷ்டமானால் நான் சொல்ல எதுவுமே இல்லை! நாளைக்கே தந்தி கொடுத்து விடுவோமா?"

"எங்கே?"

"ரங்கூனுக்கு!"

"யாருக்கு?"

"ஆனந்தரங்கனின் அப்பாவிற்கு!"

"அவர்தான் செத்துப் போய்விட்டாரே!"

'செத்துப் போய்விட்டதாகப் பிள்ளை சொல்கிறான்; அதுவும் நம்மிடம்! உயிரோடு இருப்பதாக ஆத்மாராமிற்குச் சொல்லி பணம் வாங்கியிருக்கிறான்! எதை நம்பப் போகிறாய் இப்பொழுது?"

அதே சமயம் வாசற்புறமிருந்து ஒரு புதுக்குரல் வந்தது. "எதையுமே நம்பவேண்டாம்! நான் உயிரோடு இருக்கிறேன் என்பதையாவது நம்புகிறீர்களா இல்லையா?"

தம்பதிகள் திரும்பிப் பார்த்தனர். சிரித்துக்கொண்டே அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான் ஆனந்தரங்கன்.

இதுதான் சமயமென்று பேச்சைப் பிடித்துக் கொண்டார் ஆளவந்தார். "பல பேரிடம் பல தினுசாக ஏன் சொல்லவேண்டும்? நிஜத்தைச் சொல்லு. பட்டாபி உயிரோடு இருக்கிறாரா இல்லையா?" என்று கேட்டார் ஆளவந்தார்.

"எந்த விதமான பதில் சொன்னால் உங்களுக்குத் திருப்தி தரும் சொல்லுங்கள்!" என்றான் ஆனந்தரங்கன்.

"நிஜம் எதுவோ அதைச் சொன்னால் போதும்!"

"அப்பா சாகவில்லை!"

"அப்படியானால் நீ எழுதிய கடிதம்?"

"அந்த ஒரு பொய்யைச் சொல்லாவிட்டால் உங்கள் வீட்டிற்கு நான் வந்திருக்க முடியுமா? அல்லது சென்னைப் பட்டினத்தைத் தான் பார்த்திருக்க முடியுமா?"

"பொய் சொல்லாதே, தம்பீ! சென்னைப்பட்டினத்தைப் பார்ப்பதற்கென்று நீ வரவில்லை!" என்று குறுக்கிட்டாள் அன்னம்மாள்—கள்ளச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே.

"பின், எதற்காக வந்திருக்கிறேன்?"

"உஷாவைப் பார்க்க! உன் தந்திரமெல்லாம் எனக்குத் தெரியும், தம்பீ. ஏன் மறைக்கிறாய்!" என்றாள் அன்னம்மாள்.

'நீ சொல்வது, அவன் சொல்வது, எல்லாமே பொய்' என்று மனதிற்குள்ளே புருபுருத்துக் கொண்டார் ஆளவந்தார். அந்த அபிப்பிராயத்தை வாய்விட்டு அவர் சொல்லியிருந்தால் சாயம் வெளுத்திருக்கும்!

"பட்டாபி உயிரோடு இருந்தாலும் சரி, உயிரை விட்டிருந்தாலும் சரி, எனக்கு எதுவும் அக்கறையில்லை!" என்று அலக்ஷியமாகச் சொன்ன ஆளவந்தார், "ஆனந்தரங்கா! உஷா எங்கே?" என்று கேட்டார்.

"மாமா!" என்று அழைத்து இலேசாகச் சிரித்தான் ஆனந்தரங்கன். "தெரியாமல் தான் கேட்கிறீங்களா?" என்றான் கள்ளப்பார்வையை வீசவிட்டு.

திருபுரு என்று முழித்தார் ஆளவந்தார்.

"மாமா! நிஜமாகச் சொல்லுங்க. நானும் உஷாவும் சினிமாவுக்குப் போயிருந்தது உங்களுக்குத் தெரியுமா தெரியாதா?"

"எனக்குத் தெரியும் என்பது உனக்கு எப்படித் தெரிந்தது?"

“ஆத்மாராம் சொல்லியிருப்பான்!”

“ஆத்மாராமுக்கு உன் விஷயம் தெரியும் என்பது உனக்கு எப்படித் தெரியும்!”

“தியேட்டரிலே பார்த்தேன். கடைத்தெருவிலே பார்த்தேன். கடைக் கண்ணுல் பார்த்துக் கொண்டேதான் இருந்தேன்! திருடனைக் கையோடு களவுமாய்ப் பிடிப்பது போலல்லவா போலீஸ்காரன் போல பதுங்கிப் பதுங்கி வந்து கொண்டிருந்தேன். அப்போதே உஷா சொன்னுள் — ‘இதைப் போய் அப்பாவிடம் சொல்லாவிட்டால் அவனுக்குத் தலை வெடித்துவிடும்!’ என்று. அதே போல உங்களிடமும் வந்து சொல்லிவிட்டான். இல்லையா மாமா?”

“ஆமா...ஆமா...” என்று அசடுவழியப் பதில் சொன்ன ஆளவந்தாருக்கு மற்ருெரு திகில் மனதை உலுப்பிற்று. ‘தானும் ஆத்மாராமும் பார்க்கிலே பேசிக் கொண்டிருந்ததையும் ஆனந்தரங்கன் பார்த்திருப்பானே?’ என்று. அதை நிவர்த்தி செய்து கொள்ளும் எண்ணத்தில் “பூரா சினிமாவும் பார்த்தயா, தம்பீ?” என்று அவர் கேட்டார்.

“நான் என்ன ஆத்மாராமா, பாதியில் எழுந்து ஓட!” என்று சிரித்தான் ஆனந்தரங்கன்.

“நீ மகா கெட்டிக்காரனப்பா!” என்ருர் ஆளவந்தார்.

“அது தெரிந்து தான் என் பெண் ஒரேயடியாய் இவனிடம் மாய்ந்துவிட்டாள்!” என்று பூரிப்போடு குறுக்கிட்டாள் அன்னம்மாள். அதைத் தொடர்ந்து, “உஷா எங்கே தம்பீ?” என்று கேட்டாள்.

“சினிமாவுக்குப் போன விஷயம் அப்பாவுக்குத் தெரிந்திருக்குமே என்ற பயத்திலே, கொல்லைப் பக்கமாகச் சுற்றி வந்து தன் அறையிலே பதுங்கிக் கிடப்பாள். போய்ப் பார்த்தால் தெரிகிறது!” என்று ஆனந்தரங்கன் சொல்லிவிட்டு அப்பால் நகர்ந்தான்.

ஆளவந்தார் தம் அறைக்குள் புகுந்து கொண்டார்.

அதற்கப்புறம் கையில் பெரியதொரு பொட்டலத்தோடு ஆளவந்தாரின் அறைக்குள் வந்தாள் அன்னம்மாள். "பார்த்தீங்களா இதை!" என்று அவள் சொல்லிக் கொண்டே பொட்டலத்தைப் பிரித்தாள்.

"துணி நல்லதாகத் தான் இருக்கிறது!" என்ருர் ஆளவந்தார்.

"உங்களுக்காகத் தம்பி எடுத்து வந்திருக்கிருன்!" என்று சொல்லி புன்னகை பூத்தாள் அன்னம்மாள்.

"கிருத்துருவக்காரப் பயலாக இருக்கிருன்!" என்ருர் அவர் மெதுவாக. பிறகு அவர் தொடர்ந்து "காலையில் உஷா என் வேட்டியை எடுத்துப் போய் ஆனந்தரங்கனுக்குக் கொடுத்ததுபற்றி எரிந்து விழுந்தேனே, அதற்கு என்னை மட்டந்தட்டிக் காட்டுவதற்காக இந்த வேஷ்டிகளை வாங்கி வந்திருக்கிருன்! என்ருர்.

"கொடுக்காதவங்களுக்கு நீ கொடுத்துப் பாரு. அவங்களும் கொடுக்க ஆரம்பித்துவிடுவாங்க' என்று ஒரு வசனம் சொல்லுவாங்க. அதைத் தம்பி செய்து காட்டுது!" என்று சொல்லிவிட்டு, தன் வேலையைக் கவனிக்கச் சென்ருள் அன்னம்மாள்.

'இந்த ஆட்ட சாட்டமெல்லாம் இன்றுவரைக்கும் தானே!' என்று மனதினுள்ளே கருவிக் கொண்டார் ஆளவந்தார். அவர் இந்த ஆத்திரத்தோடு சமையற்கட்டுப் பக்கம் போயிருந்தால் அங்கு நடக்கும் சரச சல்லாபங்களைக் கண்டு என்னபாடு பட்டிருப்பாரோ!

அந்த அடுப்பங்கரையிலே உஷா சிரிப்பும் களிப்புமாய் பரிமாறுகிற சாப்பாட்டை தேவாமிர்தம் போல ருசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான் ஆனந்தரங்கன்.

நல்ல தருணத்திலேதான் வாசலிலே மோட்டார் 'வான்' வந்து நின்றது.

கார் சத்தம் கேட்டு வெளியே ஓடிவந்தார் ஆளவந்தார். இரண்டு பேர் சவப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு உள்ளே வர, எந்த இடத்திலே வைக்க

வேண்டும் என்பதற்கு வழிகாட்டிக் கொண்டு முன்னே போனார் ஆளவந்தார்.

ஆளவந்தாரின் அறையிலே அதை வைத்துவிட்டு கூலிக்காரர்கள் வெளியே சென்றனர்.

சவப் பெட்டியைப் பார்க்கப் பார்க்க ஆளவந்தாரின் இருதயமும் 'பக் பக்' கென்று அடித்துக் கொண்டது.

## 14 மரண ஓலையா?

சாப்பாட்டு நேரம் வரை எவ்வளவு உறுதியோடும் வைராக்கிய மனதோடும் ஆளவந்தார் இருந்தாரோ, அதில் பாதியளவு தெம்பையும் திட சித்தத்தையும் இழந்து விட்டார் ஆளவந்தார். பழி மனப்பான்மையைப் பிரதிபலித்துக் கொண்டிருந்த அவரது கொட்டைப் பாக்கு விழிகள் அவர் அறையிலே வைக்கப்பட்டிருந்த சவப் பெட்டியை இமை கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தன. அந்தப் பெட்டிக்குள்ளே சவமாகிக் கிடக்கும் காப்டன் காசிநாதனுக்குத் துணையாக நாமல்லவா ஒரு துணை இணைக்க வேண்டியிருக்கிறது என்றெண்ணி அவரது மூளை கலக்கமுற்றது.

ஆனந்தரங்கனைக் கொலை செய்யாமல் பிரச்னையைத் தீர்த்துக்கொள்ள வேறு வழியில்லையா என்று ஏக்கம் கொள்ள ஆரம்பித்து விட்டார் ஆளவந்தார். அதற்கு மார்க்கம் தேடி அவர் மனமே அலுத்து விட்டது.

அவரது நிலை அன்னம்மாளுக்கு எப்படித் தெரிய முடியும்? " மணி எட்டுக்கு மேல் ஆகிவிட்டதே, சாப்பிட வரவில்லையா ?" என்று குரல் கொடுத்தாள் அன்னம்மாள்.

அவருக்கிருக்கிற பீதியிலே பசி வேறு தலை தூக்கும்! அன்னம்மாளின் குரலுக்குப் பதில்கூடக் கொடுக்காமல் அவர் பிரம்மஹத்தி பிடித்தவர் போல இடிந்து உட்கார்ந்திருந்தார்.

"நான் கூப்பிடுவது காதில் விழவில்லையா?" என்று கேட்டபடி அன்னம்மாள் அறையை நெருங்கிவருவது தெரிந்தபோது தம்மைச் சமாளித்துக்கொண்டு அறையை விட்டு வெளியே விரைந்து வந்தார் ஆளவந்தார். உள்ளே வந்து சவப் பெட்டியை அவள் பார்த்து விட்டால் ஆபத்தாயிற்றே என்ற பயம் அவருக்கு.

அறையை விட்டு வெளியே வந்த ஆளவந்தார் அன்னம்மாளின் பின்னே போய்விடவில்லை; பூட்டு ஒன்றைத் தேடியெடுத்து அறைக் கதவைத் தாளிட்டுப் பூட்டினர்.

"பழக்கமில்லாத வழக்கமாக இருக்கிறதே!" என்று அதிசயித்துக் கேட்டாள் அன்னம்மாள்.

"இத்தனை நாளும் உள்ளே ஒன்றுமில்லை. இப்போது அப்படியல்ல;" என்ருர் ஆளவந்தார்.

"அப்படி என்ன அங்கே இருக்கிறது?"

"நீ கொடுத்த ஆனந்தரங்கனின் பணத்தை வேறு எங்கே நான் வைத்திருக்க முடியும்?" என்று அவர் சொல்லிக் கொண்டே, சாவியை இடுப்பில் சொருகிக் கொண்டு நடந்தார் அன்னம்மாளைப் பின்பற்றி.

அவர் சாப்பிடுவது போல இலை முன்னே உட்கார்ந்து கொண்டாரே ஒழிய, சோறு இறங்கவில்லை. கோழி கிண்டுவது போல முதலில் வைத்த கைப்பிடிச் சோற்றைக் கிளறிக் கிளறி ஒவ்வொரு பருக்கையாக எடுத்து சாப்பிடுவதைக் கண்ட அன்னம்மாள், "எங்கே யோசனை? இலையைப் பார்த்துச் சாப்பிடுங்கள்!" என்று செல்லமாக அதட்டினள்.

தமது போக்கிலே வித்தியாசம் வெளிப்படையாகத் தெரிகிறதே என்பதை எண்ணி ஆளவந்தார் அதை மறைக்கப் பஞ்சத்திலடிபட்டவன் போல 'லபக்' 'லபக்' என்று சோறு, கறி, குழம்பு எல்லாவற்றையும் சேர்த்து ஒன்ருக உருட்டி வாயில் திணித்து வயிற்றினுள் தள்ளி விட்டு, கையலம்பிக் கொண்டு தம் அறையை நோக்கி விரைந்தார்.

கூடத்தைத் தாண்டி வரும்போது, ஆனந்தரங்கன் தன் படுக்கையைத் தட்டிப் போட்டுக் கொண்டிருந்தான். என்ன சலனமோ புரியவில்லை, தயங்கி அங்கே நின்ற ஆளவந்தார் மேலும் நடையைத் துரிதப்படுத்தி அறைக்குள்ளே போய்ப் புகுந்து கொண்டார்.

முன் திட்டம் வகுத்து, ஒரு கொலையை நடத்த முற்படுபவன், கொலை செய்வதற்கு முன் எப்படியெப்படிக் காக்ஷியளிப்பான், அவன் போக்கு எப்படியெப்படி யிருக்கும், அவன் முகத்திலே என்னென்ன பிரதிபலிப்புக்கள் மாறி மாறித் தோன்றும் என்பதை அறிய விரும்பினால், இப்போதைய ஆளவந்தாரைப் பார்த்தாலே தெரிந்து கொண்டு விடலாம்!

அறைக்குள்ளே போன பிறகும் அவர் மனம் ஒரு நிலைப்படவில்லை. உறுதி கொள்ளவில்லை. படுக்கையைத் தட்டி உதறிப் போட்டுக் கொண்டிருக்கும் ஆனந்தரங்கனின் உருவமே அவர் முன்னால் நிழலாட்டம் காட்டிக் கொண்டிருந்தது. 'எவ்வளவு நிம்மதியோடு அவன் படுக்கப் போகிறான்! தனக்குத் தீங்கு நேரப் போகிறது என்பதைக் கடுகளவு கூட அறியாத நிலையில் அல்லவா துயில் கொள்ளப் போகிறான்! அவனையா நாம் கொல்ல வேண்டும்?' என்ற ஒரு தவிப்பு அவர் மனதினுள்ளே இருந்தபடி தத்தளித்தது. ஒரு கொலையை நிகழ்த்தாமல் பிரச்னையைத் தீர்த்துக்கொள்ள வேறு வழியில்லையா என்று மீண்டும் அவர் உழலப் புகுந்துவிட்டார்!

சில நேர யோசனைக்குப் பிறகு அவர் மனதிற்குள்ளே என்ன விமோசனத்தை உருவாக்கிக் கொண்டாரோ தெரியவில்லை, அறையைவிட்டு நடுக் கூடத்திற்கு வந்து சாயமான சோபாவில் உட்கார்ந்து கொண்டார் ஆளவந்தார்.

படுக்கையில் படுத்திருந்த ஆனந்தரங்கன் ஆளவந்தார் வந்து உட்காருவதைக் கண்டு மரியாதைக்காக எழுந்து உட்கார்ந்து, "தூக்கம் வரவில்லையா மாமா?" என்று விசாரித்தான்.

"ஆமாம் தம்பி! அந்தச் சவத்தைப் பார்த்ததிலிருந்து மனது சாம்பிப் போய் விட்டது!" என்றார் ஆளவந்தார் அலுப்போடு.

“ எந்தச் சவம் ?” என்று திடுக்கிட்டுக் கேட்டான் ஆனந்தரங்கன்.

“ கொலையுண்டானே அந்த காப்டனின் சவம் !”

“ அதை எங்கே நீங்கள் பார்த்தீர்கள் ?”

“ ஈமக் கிரியைக்காக அவனது மனைவி அந்தச் சடலத்தைக் கேட்டிருக்கிருள். அந்தப் பிணம் ரங்கூன் போய்ச் சேரவேண்டும். பிணத்தைச் சவப் பெட்டியில் வைத்து நன்ருக ஆணி அடித்து விடுவார்களாதலால், பிணமாயிற்றே என்று சுங்க அதிகாரிகள் அதைச் சோதனை போட வெறுப்படைவார்கள். அந்த ஒரு கஷ்டத்தை அவர்களுக்குக் கொடுக்காமல் இருக்க வேண்டுமாளுல் சவப் பெட்டிக்குள் வேறு எதுவும் இல்லை என்று நான் உத்திரவாதம் செய்து அதற்கென உள்ள ஒரு நமூனுவில் கையெழுத்திட வேண்டும். அதனுள் வேறு ஏதாவது இருந்து கண்டு பிடிக்கப்பட்டு விட்டால் அந்தப் பொறுப்பு என் தலையில் விழும். அதற்காகப் பெட்டியைச் சோதனை போட்டேன், பிணம் கண்ணில் படாமலிருக்குமா ?... பார்த்துத் தொலைத்தேன் !... தம்பீ ! நல்லவேளையாக அதிலே நீ மாட்டிக்கொள்ளாமல் தப்பித்தாயே !” என்ருர் ஆளவந்தார்.

“ தர்ம நியாயம் பிசகிடுமா மாமா ?” என்ருன் ஆனந்தரங்கன் சடக்கென்று.

“ அவன் கொலைப்பட்டது ரொம்பப் பரிதாபம், இல்லையா தம்பி ?”

“ அவன் என்ன பாபம் செய்தானே, கொலைப்பட்டுச் செத்திருக்கிருன் !” என்று வேதாந்தம் பேசினுன் ஆனந்தரங்கன்.

“ அதற்காகக் கொலைப் படுகிறவர்களெல்லாம் பாபம் செய்தவர்கள் என்ரு அர்த்தம் ?”

“ மாமா ! ஒன்று சொல்கிறேன் கேளுங்கள். அவனவன் செய்த பாபத்தை அவனவன் அனுபவிக்காமல் தப்ப முடியாது. பாபம் செய்யாதவனுக இருந்தால் அவன் ஏன் கொலைப்படுகிருன் ? அதை யோசனை செய்து பாருங்க !”

"ஒருவன் தெரிந்தோ தெரியாமலோ பாபம் செய்து விட்டான் என்றே வைத்துக் கொள். அதை உணர்ந்து பிற்காலத்தில் நல்லதனமாக நடந்து வந்தால் கூட அந்தப் பாபம் விடாது என்கிறயா ?"

"சந்தேகமேயில்லை! செய்த பாபத்திற்கு ஓரளவாவது பதிலுக்கு வாதனைப் பட்டாலொழிய கர்ம வினை தீராது மாமா! மனதிலே கழிவிரக்கம் கொண்டால் மட்டும் தீர்ந்துவிடுமா ?"

"தம்பீ! பேச்சுக்குச் சொல்கிறேன். தப்பாக நினைக் காதே. நீ தான் இருக்கிறே. ஏதோ இங்கே வந்தாய்; தங்கினாய். தெரிந்தோ தெரியாமலோ எதையாவது திருடிக் கொண்டு போய்விடுகிறாய். அதைச் செல வழித்துத் தீர்த்து விடுகிறாய். பிறகு உன் மனது உன்னைக் குத்தி எடுக்கிறது. திரும்ப இங்கே ஓடிவந்து காலில் விழுந்து தெரியாமல் மனதாரச் செய்து விட்டதாக உணர்ந்து மன்னிப்புக் கேட்கிறாய். நான் மன்னித்து விட்டு விடுகிறேன். அப்போது நீ சொன்ன வேதாந்த மும் கர்ம வினையும் பொய்த்து விடுகிறதா இல்லையா ?"

"உங்கள் தர்க்கம் தப்பு மாமா! நீங்கள் மன்னித் தாலும்கூட தர்மமும் நியாயமும் அவ்வளவு கருணையோடு மன்னித்து விடாது. செய்த பாவத்திற்குப் பிராயச் சித்தம் மெய் வருத்தம். அதை எங்காவது அனுபவிக் காமல் சாகமாட்டான். எனக்குத் தெரிந்த வரை அப்படி எத்தனையோ நடந்திருக்கிறது!...அதையெல்லாம் இந்த வேளையிலே ஏன் மாமா பேசணும்...போய்த் தூங்குங்கள் போங்க! வேண்டாத வேதனையா இது!" என்றான் ஆனந்தரங்கன் பரிவோடு.

"படுத்துக்கொள் தம்பீ!" என்று சொல்லி விட்டு மீண்டும் தம் அறைக்கு வந்து உட்கார்ந்து கொண்டார் ஆளவந்தார். கர்ம வினை, பிராயச் சித்தம், மெய்வருத்தம், கழிவிரக்கம் என்பது போன்ற பெரிய பெரிய வார்த்தை களையெல்லாம் தம் மனதிற்குள்ளே பல தடவை ஸ்மரித்துக் கொண்டார். சட்டென அவர் புத்திக்கு என்ன தோன்றியதோ என்னவோ, "இந்தப் பயல் ஆத்மாராமைப் பயமுறுத்தி மூணு லட்சம் கொள்ளை

யடித்து வந்தானே, அதற்கு மட்டும் இவனுக்குக் கர்ம பலன் கிட்டக் கூடாது போலிருக்கிறது!" என்று இரைந்து முணுமுணுத்துக் கொண்டார்.

அதே சமயம் டெலிபோன் மணி சப்தித்தது. டெலிபோன் ரிசீவரை எடுத்து மெதுவாகப் பேசினார். இந்தச் சமயத்திலே யார் தம்மைக் கூப்பிடுவார் என்பது அவருக்குத் தெரியும்.

"நாயுடு, காரியம் எந்த மட்டில் இருக்கிறது? அவர்கள் மூன்று பேரும் படுப்பதற்கு முன் நான் கொடுத்த மருந்தைத் தெளித்துவிடும். நடு ராத்திரியில் நான் வந்து கதவைத் தட்டக் கூடாது. அதனால் வாசற் கதவைத் தாளிடாமல் வைத்துவிடும். இன்னொரு சமாசாரம்; காரியம் நடந்த பிறகு நாமும் வெளியூர் போய் இரண்டொரு நாளாவது தங்கி வந்தால்தான் எந்த ஒரு நீக்குப் போக்குக்கும் நல்லது. அதனாலே கல்கத்தா போகத் தீர்மானம். உங்களுக்கும் சேர்த்து இரண்டு ரயில் டிக்கட் 'புக்' செய்துவிட்டேன். டயத்திற்கு ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து விடுங்கள். உங்கள் மனைவியிடமும் முடிந்தால் இப்போதே ஒரு வார்த்தை போட்டு வைத்துவிடுங்கள். நாளை திடுதிப்பென்று சொன்னால் நல்லதில்லை! ... சரிதானா?...... இன்றைக்கு முடிந்து போகுமில்லையா?...முடிந்துதான் ஆகவேண்டும்!"

ஆத்மாராம் அதோடு பேச்சை நிறுத்திக் கொண்டு விட்டான்.

ஒரு பக்கம் சோர்வு தட்டுகிறது. மற்றொரு பக்கம் உற்சாகம் ஊட்டப்படுகிறது. ஆளவந்தாரின் மனமே இன்னும் ஒரு தெளிவான நிலையை அடையவில்லை.

அந்த சமயத்தில் தானா உஷா அங்கே வரவேண்டும்! "அப்பா!" என்று கூப்பிட்டுக் கொண்டே உஷா வருவது தெரிந்து எதிர் கொண்டு ஓடிவந்தார் ஆளவந்தார். அறையில் கிடக்கும் சவப் பெட்டியை அவள் பார்த்து விடக் கூடாது அல்லவா!

"என்னம்மா?...இன்னும் நீ தூங்கவில்லையா?"

"தூங்கிற சமயத்திலே அவர் கூப்பிட்டார். 'பர்மா, பிஸ்கட் நல்லா இருக்கும். அப்பாவிற்குக் கொண்டுபோய்க் கொடு' என்றார். அதானப்பா வந்தேன்...இந்தாங்க!" என்று ஒரு பிஸ்கட் டப்பாவை நீட்டினாள் உஷா.

அதை வாங்கிக் கொண்ட ஆளவந்தார், மீண்டும் அறைக்குள்ளே வந்து அமர்ந்து, அந்தப் பெட்டியைத் திறந்தார். அதிலிருந்த ஒரு சிறு துண்டுக் காகிதத்தைக் கண்டதும் தூக்கி வாரிப் போட்டது அவருக்கு.

அதைப் படித்தார். கொலையுண்ட கப்பல் காப்டனின் பையில் இருந்ததே ஒரு கடிதம் அதே வாசகம் அதில் காணப்பட்டது,

> "மூன்று அயோக்கியர்களும் ஒரு பேராசைக் காரனும் சேர்ந்து அபாரமான திட்டத்தோடு, கண்டு பிடிக்க முடியாத வகையில் மகத்தான ஒரு கொள்ளையை நடத்தினார்கள். அதன் மூலம் கிடைத்த ஆதாயத்தை நான்கு பேர்களும் பங்கிட்டுக் கொண்டார்கள். அதில் ஒருவன் கணக்கைத் தீர்த்துக் கொண்டு விட்டான். அடுத்தது...?"

"எனக்கா இந்த மரண ஓலை!" என்று கிரீச்சிட்டுக் கொண்டு பிஸ்கட் டப்பாவைத் தூக்கி எறிந்தார் ஆளவந்தார். 'அடுத்தது யார் என்பதைக் கொடுத்தனுப் பியவனே தெரிந்து கொள்வான்!' என்று அவர் கர்ஜித்துக் கொண்டே, கோட்டுப் பைக்குள் கைவிட்டார்.

செய்ய நினைத்ததைச் செய்துதான் ஆகவேண்டும் என்ற திடமான சங்கற்பம் ஆளவந்தாருக்கு உறுதியாக வேரூன்றி விட்டது!



## விளக்கு அணைந்தது!

ஆனந்தரங்கன் கொலைப்பட்டே தீரவேண்டும் அதைத் தவிர வேறு வழியே கிடையாது!

இந்த எண்ணம் உறுதியாகி விட்டது ஆளவந்தாருக்கு. ஆதலால் ஆகவேண்டிய காரியங்களை அவர் மள மள வென்று செய்து முடிக்க முற்படலானார்.

ஆத்மாராம் கொடுத்த மயக்க மருந்தை எடுத்துக் கொண்டு அறையைவிட்டு அவர் மீண்டும் வெளியே வந்தார். அவரது முதல் பார்வை கூடத்திலே படுத்திருந்த ஆனந்தரங்கன் மீது விழுந்தது. பிறகு நாலாபுறமும் திரும்பிப் பார்த்துக் கொண்டார்.

விடுவிடு வென்று வந்த ஆளவந்தார் கூடத்திற்கு வந்து யாரையோ தேடுவது போலக் கவனிப்பதை ஆனந்தரங்கன் கவனித்தான்.

“என்ன மாமா வேண்டும்?”

ஆனந்தரங்கனின் அந்தக் குரலைக் கேட்டு நேர் கொண்ட பார்வையோடு அவனை ஏறிட்டு நோக்கினார் ஆளவந்தார். “அன்னம்மா எங்கே படுத்திருக்கிறது தம்பீ?” என்று அவர் கேட்டார் சமயோசிதமாக.

“தெற்குப் பக்கத்து அறைப் பக்கமாகப் போனார்கள். உஷாவின் அறையிலே படுத்துக்கொண்டு விட்டார்களோ என்னவோ. போய்க் கூப்பிடட்டுமா மாமா?” என்றான் ஆனந்தரங்கன் சகஜ பாவத்தில்.

“போய்ப் பாரு” என்றார் ஆளவந்தார். சரியான ஒரு சந்தர்ப்பமல்லவா கிட்டிவிட்டது அவருக்கு.

படுக்கையை விட்டு எழுந்த ஆனந்தரங்கன் கூடத்தைக் கடந்து உஷாவின் அறைப்பக்கமாகச் சென்றான். அந்தச்சமயம் பார்த்து ஆளவந்தார் தம் கையிலிருந்த சீசா மருந்தை ஆனந்தரங்கனின் தலையணையில் தெளித்தார்.

உஷாவின் அறைவாசலருகே நின்று கொண்டு, உள் பக்கமாக எட்டிப் பார்த்தான் ஆனந்தரங்கன், அங்கே அன்னம்மாளைக் காணும்.

அதற்குள் ஆளவந்தாரே அங்கு வந்து விட்டார்.

"காணுமா என்ன ?...சரி தம்பி, நீபோய்ப் படுத்துக் கொள். நான் தேடிப் பார்த்துக் கொள்கிறேன்" என்றார் ஆளவந்தார். ஆனந்தரங்கனும் அப்பால் போய் விட்டான்.

அந்த அறைக்குள்ளே நுழைந்த ஆளவந்தார் "உஷா!...உஷா!" என்று குரல் கொடுத்து எழுப்பினார். தூக்கம் கலைந்து "என்னப்பா?" என்று கேட்டபடி படுக்கையிலேயே எழுந்து உட்கார்ந்து கொண்டாள் உஷா.

"அம்மா எந்தக் கடவிலே படுத்துக் கிடக்கு?...... பார்த்துக் கூட்டிக் கொண்டுவா !" என்றார் ஆளவந்தார்.

"சரியப்பா !" என்று சொல்லி எழுந்து போனாள் உஷா. தலையணையில் மயக்க மருந்தைத் தெளிப்பதற் காகவே இப்படி ஒரு தேடும் படலத்தை ஏற்படுத்தியிருக் கிறார் தந்தை என்பதை அவள் எப்படிக் கண்டு கொள்ள முடியும்?

இரண்டொரு அறைகளிலே தேடிவிட்டு ரேழிப்பக்க மாக உஷா வந்தபோது ஆளவந்தார் சேர்ந்துகொண்டார். அதற்கு மேல் உஷாவை ஏன் அலைக்கழிக்கவேண்டும்? "நீ போய்ப் படுத்துத் தூங்கு உஷா. நான் தேடிப் பார்த்துக் கொள்கிறேன் !" என்றார் தகப்பனார் கனிவோடு.

உஷா தன் அறைக்குப் போய் விட்டாள்.

அன்னம்மாள் எங்கே படுத்திருப்பாள் என்று ஆளவந்தாருக்கா தெரியாது? கொல்லை வாசற் பக்கமாக உள்ள முற்றத்தில் காற்றுடப் படுக்காவிட்டால் அவளுக்கு ராத்தூக்கம் வராது என்பதை அவர் நன்கு அறிவார், எத்தனையோ இரவுகளில் அவராகப்போய் அன்னம்மாளை எழுப்பி தம் அறைக்குக் கூட்டிக் கொண்டு வந்தவ ராயிற்றே!

முற்றத்திலே படுத்திருந்த அன்னம்மாள், கணவரின் குரல்கேட்டு "என்னங்க?" என்று கேட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

"கொஞ்ச நேரத்திற்கு முன்னால் கல்கத்தாவிலேயிருந்து டெலிபோன் டிரங்கால் வந்தது, முக்யமான விஷயம். நாளை காலை எக்ஸ்பிரஸில் புறப்பட்டாக வேண்டும். சூரிய வெளிச்சம் முகத்திலே அடிக்கிறவரை நீ தூங்கிவிடக் கூடாதே என்று நினைவு படுத்த வந்தேன்!" என்றார் ஆளவந்தார்.

"திரும்பிவர எத்தனை நாளாகுமோ?"

"இன்றைக்கு ஞாயிறு அல்லவா? வியாழக் கிழமை திரும்பி விடுவேன்."

"செலவுக்குப் பணம் கொடுக்க மறந்து நீங்கள் பாட்டுக்குக் கிளம்பி விடாதீங்க!"

"எனக்குத் தெரியாதா என்ன? புறப்படுகிறபோது கொடுக்கிறேன்!" என்று சொல்லிய ஆளவந்தார், "அன்னம்! கொஞ்சம் தண்ணி கொண்டு தருகிறாயா?" என்றார்.

"கொஞ்சம் என்ன? சொம்பு நிறையக் கொண்டு வரேன்!" என்று அன்னம்மாள் கொஞ்சலாகச் சொல்லி விட்டு, சமையல் அறைக்குப் போனாள்.

அவள் திரும்பி வருவதற்குள் மயக்க மருந்து அவள் படுக்கையில் தெளிக்கப்பட்டாகி விட்டது!

கொண்டுவரச் சொன்ன தண்ணீரைக் குடிக்காமல் போகக் கூடாதே என்று இரண்டு மடக்கு குடித்துவிட்டு, "சீக்கிரம் படுத்து சீக்கிரம் எழுந்துவிடு!" என்று சொல்லிக் கொண்டே தம் அறைக்குத் திரும்பினார் ஆளவந்தார்.

பிஸ்கட் டப்பாவில் வைக்கப்பட்டிருந்த அந்தத் துண்டுக் கடிதத்தை மீண்டும் படித்துப் பார்த்தார் ஆளவந்தார். அதை ஆத்திரத்தோடு கசக்கி தம் சட்டைப்பையில் திணித்துக் கொண்டு, "அடுத்த பிராயச்சித்தத்திற்கு ஆளைத் தேடுகிறானும் ஆளை! எல்லோருமேயா ஏமாந்த

சோணகிரிகள்!'' என்று அவர் கர்ஜித்துக் கொண்டார். பிறகு அவர் டெலிபோன் இருந்த இடத்திற்குச் சென்று, நம்பரைச் சுழற்றினார். எதிர் முனையில் பேசவேண்டிய ஆசாமியின் குரல் கிடைத்து விட்டது.

''ஆத்மாராம்?'' என்று மெதுவாகக் கேட்டுக் கொண்டார் ஆளவந்தார். பிறகு தொடர்ந்து, ''ஆத்மாராம்! மயக்கமருந்தைத் தெளித்து விட்டேன். இப்போது மணி பத்து. இன்னும் அரைமணிநேரம் சென்றால் அத்தனை பேரும் அடித்து எழுப்பினால்கூட எழுந்திருக்க மாட்டார்கள் இல்லையா?...அதற்கப்புறம் காரியத்தை முடித்துவிடுகிறேன், சரியாகப் பதினொரு மணிக்கு வந்து சவப் பெட்டியை எடுத்துப் போய்விடு; அப்படி எடுத்துப் போவதில் அதிக தாமதம் ஏற்பட்டு விடக்கூடாதல்லவா?... வாசல் கதவைத் திறந்து வைக்கிறேன்...கதவைத் திறந்ததும் அருகிலேயே பெட்டி இருக்கும். எடுத்துப்போய்விடு! ...அப்புறம் டெலிபோன் பேச்சே வேண்டாம். நாளை சரியான நேரத்திற்கு ரயில்வே ஸ்டேஷன் வந்து விடுகிறேன். சரிதானா?'' என்றார் ஆளவந்தார்.

வேண்டாம் என்று பதில் வரப்போகிறது? டெலிபோன் ரீசீவரை அதற்குரிய கருவியில் இருத்திவிட்டு கட்டிலில்போய் உட்கார்ந்து கொண்டார் ஆளவந்தார்.

சவப்பெட்டி 'யார் வந்தாலும் சரி ஏற்றுக்கொள்கிறேன்' என்ற தோரணையில் அறையில் ஒரு புறத்திலே இடம் பெற்றிருந்தது.

எப்போது மணி பத்தரை ஆகும் என்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார் ஆளவந்தார்.

ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகம் போல இருந்தது.

'டாண்' என்று ஒரே ஒரு தரம் ஓசை எழுப்பி விட்டு அடங்கியது சுவர்க் கெடியாரம். மணி பத்தரை...!

கட்டிலை விட்டு எழுந்தார் ஆளவந்தார். கால்கள் கூடத்தை நோக்கி நடை போட்டன, ஆனந்தரங்கன் படுத்திருந்த இடத்திற்கு வந்து அவனைத் தொட்டு அப்படியும் இப்படியுமாய்ப் புரட்டிப் பார்த்தார். விழிப்பு இல்லை,

உஷா படுத்திருந்த அறைக்குப் போனார். வீடே இடிந்து சரிந்தாலும் அவள் சலனப் படுவதாகக் காணோம்!

முற்றத்திற்கு வந்து அன்னம்மாளைக் காலால் மிதித்துத் தள்ளிப்பார்த்தார். அடுத்த நாள் காலை எட்டுமணிக்குக் கூட அவளுக்குக் கண் விழிப்பு ஏற்படுமோ ஏற்படாதோ என்ற நிலையிலே கிடந்தாள்.

"ஜெயமுண்டு பயமில்லை மனமே!" என்று பாடுவதற்குத்தான் அங்கே எவருமில்லை.

நேராகத் தம் அறைக்குள் வந்தார் ஆளவந்தார். மேஜை டிராயரைத் திறந்து ஆத்மாராம்சேட் கொடுத்த கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டார். முன்பிருந்த பீதியும் பயமும் இப்போது அவரிடம் தோற்று விட்டன. நடுக்கமும் சித்தப்பேதலிப்பும் சரணடைந்து விட்டதுபோல சமாதி பெற்றுவிட்டன. துப்பாக்கியை அவரது வலக்கரம் உறுதியாகவே பற்றிக் கொண்டிருந்தது. அதே டிராயரிலிருந்த பாட்ரி டார்ச் விளக்கு ஒன்றையும் எடுத்து இடுப்பில் சொருகிக் கொண்டார். கொலைக்குத் தயாராகி விட்டார்!

பிறகு ஆளவந்தார் சவப்பெட்டி இருந்த இடத்திற்கு வந்தார். காலியான அந்த மரப்பெட்டியை ஒண்டியாகத் தூக்கும் அந்த அசுரபலம் அவருக்கு எங்கிருந்துதான் வந்ததோ தெரியவில்லை. அதைத் தூக்கிவந்து, வாசல் கதவருகே வைத்தார். கதவுச் சுவரை ஒட்டினாற்போல இருந்த மின்சார மெயினை மேலே தள்ளினார். மஞ்சள் மாளிகை 'கப்' பென்று கருமை பூசிக்கொண்டது.

ஒரு வினாடியைக் கூடத் தயக்கத்திலே கழிக்க அவரது மனம் ஒப்பவில்லை. இடுப்பிலே சொருகியிருந்த டார்ச் லைட்டை இடது கையால் உருவி, கூடத்துப் பக்கம் வெளிச்சத்தைப் பாயவிட்டார். ஆனந்தரங்கன் படுத்திருந்த இடத்தை அவ்வெளிச்சம் துழாவியது. உறுதியாகப் பற்றியிருந்த கைத்துப்பாக்கியை ஆனந்தரங்கன் படுதிருந்த திசைக்குத் திருப்பினார். சுட்டுவிட வேண்டியது தான் பாக்கி.

" அவசரப்படாதே ஆளவந்தார் !" என்று திடுமென ஒரு குரல் எங்கிருந்தோ ஒலித்தது.

திடுக்கிட்டுத் திரும்பி, குரல் வந்த திசைப் பக்கம டார்ச் வெளிச்சத்தைத் திருப்பினார் ஆளவந்தார்.

மின்னல் போல தெறித்துப் பாய்ந்த அந்த டார்ச் வெளிச்சத்தில் நன்றாகத் தெரிந்தது ஒரு மனித உருவம். கம்பளிச் சால்வை ஒன்றால் உச்சி முதல் உள்ளங்கால் வரை மூடியபடி நின்று, அந்த உருவம் தன் பிரகாசம் நிறைந்த பார்வையை தம் மீதே நிலைத்து வைத்துப் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டதும் ஆளவந்தார் திக்பிரமை யடைந்தார்.

" ஆளவந்தார்! பேஷான காரியம் தான் செய்கிறாய்! ஒருவன் ஒரு தரம் தப்பித் தவறி ஒரு குற்றத்தைச் செய்வது சகஜம். ஆனால் திரும்பத் திரும்ப அதையே செய்து நான் பார்த்தது கிடையாது! இப்போது பார்க்கிறேன். ஜீவராசிகளிலே இரண்டே இரண்டு வர்க்கம் தான் இருக்கிறது, ஒரு தரம் மனித ரத்தத்தை நுகர்ந்து பார்த்து விட்டால் பிறகு அதை நுகரவே அவை திரிந்து அலையுமாம். அவைகள் புலி, சிங்கம்! கேவலம் அந்த மிருக இனங்களையும் விடக் கீழ்த்தரமாக அல்லவா நீ ஆகிவிட்டாய்!"

நிதானமாக, அழுத்தந் திருத்தமாக, உச்சரிப்பு சுத்தமாக அந்த உருவம் பேசியது.

எதிர்பாராத சமயத்தில் நடந்த ஒரு திடும் பிரவேசத்தால் திகைத்துப் போயிருந்த ஆளவந்தார், தம் நிலை உணர்ந்து, கைத்துப்பாக்கியை அந்த உருவத்தை நோக்கி இறுகப் பற்றிக் கொண்டார்.

" அப்பேர்ப்பட்ட கீழ்த்தர மனிதன் முன்னே வந்தால் அவனுக்கு ஏற்படக் கூடிய கதியும் உனக்குத் தெரிந்திருக்க வேண்டும்!" என்று கூறினார் ஆளவந்தார்.

" தெரிந்து தான் வந்திருக்கிறேன், ஆளவந்தாரே! நீர் என்னைச் சுட முற்பட்டாலும், தற்பாதுகாப்புக்காக உம்மோடு போரிடப் போவதில்லை. சாந்தீகமாகப் பேசிப் போகவே வந்திருக்கிறேன். நான் உயிரோடு திரும்பிப் போக நீர் என்னை அனுமதித்தாலும் சரி; சுட்டுத் தள்ளினாலும் சரி. எதையும் ஏற்றுக்கொள்கிறேன். ஆனை

யிட்டுச் சொல்கிறேன் ஆளவந்தாரே, என்னைப் பாது காத்துக் கொள்வதற்காக ஒரு சிறு தீங்குகூட நான் உமக்கு இழைக்கப் போவதில்லை. என்னை நீர் நம்பலாம். ஆனால் நான் எதற்காக இங்கு வந்தேனோ அதைச் சொல்ல மட்டும் நீர் அனுமதித்தால் போதும் !''

வந்த உருவத்தின் பேச்சு நயவஞ்சகமானதோ என்ற நினைப்பில் உஷாராகவே இருந்தார் ஆளவந்தார்.

மர்ம மனிதன் பேச ஆரம்பித்தான்.

"குற்றம் செய்யாதவர்கள் இந்த உலகத்திலேயே எவரும் இல்லை. தெரிந்தும் செய்கிறார்கள். தெரியாமலும் செய்கிறார்கள். ஆகக் கூடி குற்றம் செய்த முடித்த பின் மனச்சாட்சிக்கு அவர்கள் முக்யத்வம் கொடுக்கத் தயங்குவதில்லை. ஆளவந்தாரே ! எனக்குத் தெரியும். வெளியே பேசிக்கொள்ளப்படுவது போல நீர் நொடிந்து போனவரல்ல. இருபது லட்சம் மதிப்புள்ள பிரபு நீர் ! ஆனால் அந்த பாக்கியம் எப்படிக் கிடைத்தது என்பதை யோசித்தீரா ? உம்மிடம் இருப்பது யாவும் ஜல சமாதி தேடித் தந்த செல்வமல்லவா ! அது ஒருபுறமிருக்கட்டும். இப்போது ஆனந்தரங்கனைக் கொல்லத் துணிந்தீரே, அவன் யார் என்பதைப் பற்றியாவது சிந்தித்தீரா ? செங்கான்கடைச் சரகத்தில் அஞ்சு காசுக்கு அலைந்த நீர் அஞ்சுவேலி நிலத்தைப் பெற்றீர் ! யார் உதவி கொண்டு? தரை மார்க்கமாக நடத்தி வந்த கள்ளக் கடத்தலை கடல் தாண்டியும் பரப்பினீர் !...யாருடைய தயவால்? கள்ளத் தோணி நடத்தி வந்த நீர் அங்கீகாரம் பெற்ற கப்பல் முதலாளி ஆனீர் !...யாருடைய ஒத்துழைப்பால் ? 'இன்னும் பணம் சேர்க்க ஆசையிருந்தால் முடிந்த வரை சேர்த்துக்கொள். குறுக்கே நின்று இடைஞ்சல் தர மாட்டேன்' என்று சொல்லிக் கப்பல் கம்பெனியில் தனக் கிருந்த பங்கையும் மனராசியோடு வெட்டிக்கொண்டானே, அந்த பட்டாபிக்கு நீர் காட்டிய நன்றி என்ன ? அவனைக் கொல்ல கப்பலையே கவிழ்த்தீர் !''

"பொய் !...சுத்தப் பொய் !'' என்று ஆத்திரத்தோடு கத்தினார் ஆளவந்தார்.

"எது பொய் ஆளவந்தார் ? நான் சொல்வதா அல்லது நீ மறைக்கப் பார்ப்பதா ? நொடிந்து விட்டவன்

போல நீ நடத்திவரும் நாடகம் பொய்யா, அல்லது நான் சொல்வது பொய்யா? கப்பல் கம்பெனி நஷ்டப்பட்டு விட்டதால் கப்பல் போக்குவரத்தை நிறுத்துகிறோம் என்று அறிக்கை விட்டாயே, அது பொய்யா அல்லது நான் சொல்வது பொய்யா? கப்பலை மூழ்கடிப்பதால் ஒரு சில லட்சம் நஷ்டமானாலும் பாதகமில்லை என்று கருதி இருபது பணக்காரர்களின் திரண்ட செல்வத்தை தொக்குப்போல சுவீகரித்துக் கொண்டாயே, அது பொய்யா, அல்லது நான் சொல்லுவது பொய்யா?''

"எல்லாமேதான்!" என்று கத்தினர் ஆளவந்தார் அடிவயிற்றிலிருந்து.

"அட கிராதகா! இவ்வளவு சொல்லியுமா நீ பொய் என்று மறுக்கிறாய்! கழிவிரக்கம் கொள்ள மனம் பொறுக்கிறாய்! ஆளவந்தார்! பார் என்னை...என்னைப் பார்த்துச் சொல்லு!...என் முகத்தை உற்றுப் பார்த்துச் சொல்லு!" என்று ஆத்திரத்தோடு கூறிய மர்ம உருவம், தன் முகத்தை மறைத்திருந்த முட்டாக்கை நழுவ விட்டது.

டார்ச் வெளிச்சம் அந்த முகத்தின் மீது பட்டதும் இமைகளை அகல விரித்துப் பார்த்தார் ஆளவந்தார் அடுத்து "ஆ! நீயா?" என்று அவர் கிரீச்சிட்டார்.

அவர் பார்த்த உருவம் பாண்டிச்சேரி பட்டாபி!

ஆளவந்தாரின் அங்கமெல்லாம் ஆட்டம் கண்டது. படபடக்கும் அவருடைய கைகள் கைத்துப்பாக்கியை நெகிழ விட்டுவிடுவது போலப் பதறின. "பழி வாங்க நீயே நேரில் வந்து விட்டாய்!...மகனை முன் அனுப்பி, பின் வந்து விட்டாய்! நம் பகை தீராதது. தீர்க்கவும் முடியாதது. அதனால் நான் உன்னைத் தீர்த்துக்கொண்டே ஆக வேண்டும்!" என்று ஆளவந்தார் சொல்லிக்கொண்டே கைத்துப்பாக்கியைத் தூக்கிப் பிடித்துக் குறி பார்த்தார்.

பரிகாசமாகச் சிரித்தான் பட்டாபி. "ஆளவந்தார்! வீணுக ஒரு தோட்டாவைக் காலி செய்யாதே! ஒன்று அல்ல, ஒன்பது தோட்டா தீர்ந்தாலும் என் உயிரை உன்னுல் கவர முடியாது!...பார் என்னை! முடியுமா என்பதை நீயே பார்த்துத் தெரிந்து கொள்!" என்று

சொல்லி, உடலை மறைத்துக் கொண்டிருந்த சால்வையை எடுத்து அப்பால் விசிறி எறிந்தது அந்த உருவம்.

பட்டாபியின் உடல் முழுதும் உலோகக் கவசத்தால் மூடுண்டு இருந்தது.

சிறிது நேரம் பரதவித்தார் ஆளவந்தார். சட்டென ஒரு யோசனை. கைத்துப்பாக்கியோடு பின்னுக்கு நகர்ந்து சென்றார். இப்போதைய நிலை ஆளவந்தாருக்கும் பட்டாபிக்கும் இடையே ஆனந்தரங்கன் படுத்திருந்தான்.

மயக்கத்தோடு அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருக்கும் ஆனந்தரங்கனை நோக்கிக் கைத்துப்பாக்கியை கீழ்ச்சாய்வாகப் பிடித்துக் கொண்டார் ஆளவந்தார். "பட்டாபி! இந்த இறுதியான கட்டத்தில் நான் சொல்லுகிறபடி நீ கேட்காவிட்டால் ஆனந்தரங்கனை உன் கண் முன்னாலேயே சுட்டு விடுவேன். நீ ஓடோடி வந்து என் கைத்துப்பாக்கியைப் பிடுங்க ஒரு நிமிஷம் ஆகும். ஆனால் ஒரு விநாடி எனக்குப் போதும் ஆனந்தரங்கனைச் சுட!...என் முடிவு இதுதான். நீ உயிரோடு இருக்கும் வரையில் எனக்கு எப்போதும் ஆபத்து காத்திருக்கும். அதனால் உன்னை நான் கொன்றே ஆக வேண்டும். அதை நிறைவேற்றிக்கொள்ள என்னை அனுமதித்தால், உன் கவசத்தைக் கழற்றி அப்பால் போட்டால், உன்னைச் சுட்டு என் பதட்டத்தைத் தணித்துக்கொள்வேன். மற்றொரு உறுதி மொழியும் தருகிறேன். உன் மகனை நான் எக்காலமும் கொல்ல மாட்டேன். அவனை உயிரோடு உலகத்திலே உலாவ விடுவேன். என்ன சொல்லுகிறாய், பட்டாபி?"

"கவசத்தைக் கழற்றமாட்டேன். உன் கைத்துப்பாக்கிக்கு இரையாகவும் நான் சித்தமாக இல்லை!"

"அப்படியானால் உன் மகனைச் சுடப் போகிறேன்!",

"கவலைப்படவில்லை!"

"உன் மகன் அவன்!"

"அதைவிடப் பெரியதொரு பந்தபாசம் அவன்பால் உனக்கிருக்கிறது. அதையும் நீ புறக்கணித்து விட்டுக் கொல்வதானால் கொல்!"

" எனக்கு அவன் பரம வைரி !"

" இல்லை. அவன் உயிர் போனால் உன் புதல்வி விதவை ! ஆளவந்தார் ! எந்த ஒரு கிராதகத் தகப்பனும் தன் பெண் தலையில் தன் செயலால் விதவைத்தன்மையைச் சுமத்தமாட்டான். அதற்கு நீ விலக்காக இருந்தால் நான் எப்படிக் குறுக்கே நிற்க முடியும் ?"

துளிக்கூடப் பயமோ பதட்டமோ இல்லாமல் இடியிடி யென்று சிரித்தான் பட்டாபி.

" என்ன பேத்துகிறாய் !" என்று கத்தினார் ஆளவந்தார்.

" உஷா ஆனந்தரங்கனின் மனைவியாகி விட்டாள். சோபன அறைக்குள் தான் அவர்கள் இருவரும் நுழைய வில்லையே தவிர. பாக்கி யெல்லாம் நடந்து விட்டது. இன்று மத்தியானம் தான் இருவரும் மனமொப்பி கல்யாண ரிஜிஸ்ட்ரார் முன்னிலையில் கணவன் மனைவியாகி இருக்கிறார்கள் !...பொய்யில்லை ஆளவந்தார் !...அத்தாக்ஷி வேண்டுமா அதற்கு ?...பார் இதை !" என்று சொல்லி ஒரு கையகலக் கடுதாசியை விசிறிப் போட்டான் பட்டாபி.

எடுத்துப் பார்த்தார் ஆளவந்தார். கல்யாண ரிஜிஸ்ட்ராரால் அளிக்கப்பட்ட விவாக இணைப்பு சர்டிபி கேட் ! மணமகன் பெயர் ஆனந்தரங்கன் ! மணமகள் உஷா !

" புதுமண வாழ்வின் இன்பம் கண்டறியாத உஷா இனி என்றும் கன்னி கழியாமலேயே உழலட்டும் என்று நீ தீர்மானித்தால் முன்பின் யோசிக்காதே ஆளவந்தார் ! ஆனந்தரங்கனைச் சுட்டுவிடு...என்மீதுள்ள ஆத்திரத்தை யெல்லாம் கொட்டி எத்தனை தரம் சுடலாமோ அத்தனை தரம் சுடு. நீ சிந்தாத கண்ணீரை நான் சிந்தப் போவதில்லை !"

ஆடாமல் அசையாமல் நின்றுகொண்டு அழுத்தம் திருத்தமாகச் சொல்லும் பட்டாபியை இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார் ஆளவந்தார்.

அவர் ஒன்று நினைக்க தெய்வம் வேறொன்றல்லவா நினைக்கிறது !

“ நாம் சம்பந்திகளாக ஆகிவிட்டோம். அதனுல் பகை தீர்ந்து விட்டது என்கிருயா பட்டாபி ?”

“ அப்படியே வைத்துக் கொள்ளலாம் !”

“ இனி என்னை நீ பழிவாங்க முற்படமாட்டாய் ?”

“ உண்மை ! ஆனுல் நீ செய்த ஏனைய பத்தொன்பது கொலைகளுக்கு யாருடன் மனராசி கொள்வாய் ?”

திகைத்தார் ஆளவந்தார்.

“ நான் உன்னை மன்னித்தாலும் தர்மம் தன் தண்டனையைக் கொடுத்த பிறகே உனக்கு மன்னிப்பு அளிக்கும். அதை நீ ஏற்றுத்தானே ஆகவேண்டும் ?” என்ருன் பட்டாபி.

“ அப்போது அதை நான் அனுபவித்துக்கொள்கிறேன்.”

“ தர்மம் தன் கடமையைச் செய்ய உன்னைத் தேடி வருவதைக் காட்டிலும், நீயாக தர்மத்தைத் தேடிப் போய் மன்னிப்புக் கோரினுல் தண்டனைக்குப் பதில் கருணை பிறந்தாலும் பிறக்கும் !”

“ புரியவில்லை !” என்ருர் ஆளவந்தார். அவரது சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. குரலும் வெகு பலஹீனமாகவே வெளிவந்தது.

“ சர்க்காருக்கு உன்மீது சந்தேகம் தட்டி விட்டது. அவர்களாக வந்து உன்னைக் கைதுசெய்தால் மன்னிப்பே இல்லை. நீயாகப் போய்ச் சரணடைந்து நிஜத்தைச் சொல்லி விடு. சர்க்கார் உன்னை அப்ரூவராக ஆக்கும். அதன் நிமித்தம் உன் விஷயத்தில் இரக்கம் காட்டச் சொல்லி சிபாரிசும் செய்யலாம் ! அதோடு நீ செய்த பாபத்திற்குப் பரிகாரம் ஏற்பட்டுவிடும் !”

“ நானு ?...சர்க்காரிடம் போயா ?......உண்மையைச் சொல்லியா ?...அங்கே எனக்கு மன்னிப்பு கிடைத்தாலும் என் சகாக்கள் என்னைக் கொன்று விடுவார்கள் !...அங்கே கிடைக்காத சாவை அவர்கள் எனக்கு அளித்து விடுவார்கள் !...இருவருமே சாவை எனக்குப் பரிசாகத் தராவிட்டாலும் என் மனச்சாட்சி அதை வரவழைத்துத்

தந்துவிடும்!...மற்ருென்று கூட....எப்படி யெப்படியோ வாழ்ந்துவிட்டு, ஊராரின் கண்முன்னே 'கொலைகாரன்' என்ற பழிச்சொல்லைச் சுமந்துகொண்டு, திரிய என்ருல் முடியவே முடியாது!...முடியாது பட்டாபி! முடியாது!"

"அதனுல் மேலும் மேலும் கொலை செய்துகொண்டே போகப் போகிருயா?"

"அதைத் தான் யோசிக்கிறேன். எப்படி நான் நடந்து கொண்டால் எல்லாவற்றிற்கும் விமோசனம் கிடைக்கும் என்பதைத்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்!......பேச்சுக்கு மேல் பேச்சுப் பேசி என்னை அலட்டாதே பட்டாபி...அலட்டாதே!..."

பட்டாபி மௌனம் பூண்டான். பத்து நிமிஷம் நிசப்தத்தில் கழிந்தது.

சுவர்க் கெடியாரம் ஒன்றன்பின் ஒன்ருய் மணி ஓசை கிளப்பிப் பதிஞெரு தரம் அடித்தது.

"மணி பதிஞென்ருகி விட்டதா?" என்று பரபரப்போடு பட்டாபியை ஏறிட்டுப் பார்த்தார் ஆளவந்தார். பிறகு குனிந்து ஆனந்தரங்கனின் முகத்தை நோக்கிஞர். ஆத்மாராம் வரக்கூடிய நேரம் அல்லவா!

இத்தனை நேரமும் எரிந்து கொண்டிருந்த டார்ச் பாட்ரி விளக்கின் வெளிச்சம் குப்பென்று அணைந்தது. அதாவது ஆளவந்தாரே அணைத்து விட்டார்.

அடுத்த நிமிஷம் 'டுமீல்' என்ற வேட்டுச் சப்தம் மஞ்சள் மாளிகையைக் கிடுகிடுக்க வைத்தது. அதைத் தொடர்ந்து மரண ஓலம் ஒன்று எழும்பி, பின்பு ஒடுங்கியது!



முந்திய இரவு சுமார் பன்னிரண்டு மணிக்கு ஆளவந்தார் வீட்டிலிருந்து எடுத்துவந்த சவப் பெட்டிக்குத் தானே முன்னின்று ஆணி அடித்து இறுக்கிய ஆத்மாராம் சேட், அதை பத்திரமாகப் பார்த்துக் கொள்ளும்படி கம்பெனி புக்கிங் குமஸ்தாவிடம் சொல்லிவிட்டு, வீட்டுக்கு விரைந்தான்.

சேட் தன் வீட்டை அடைந்தபோது காலை எட்டுமணி ஆகிவிட்டதால் அவசர அவசரமாகக் குளித்துவிட்டு, பியாரி கொண்டு வைத்த சப்பாத்தியைக் கூடத் தின்னுமல், ரயிலுக்கு நேரமாகி விட்டதே என்ற பரபரப்பில் பெட்டி படுக்கையைக் கட்டினுன்.

அவன் அவ்வளவு அவசரப்பட்டுப் புறப்பட்டும்கூட ரயில்வே ஸ்டேஷனை அடைந்தபோது, ரயில் புறப்படுவதற்குப் பத்து நிமிஷமே பாக்கியிருந்தது.

தனக்காக ரீசர்வ் செய்யப்பட்ட பெட்டியைத் தேடி அலைந்து, முடிவில் கண்டு பிடித்து, அந்த முதல் வகுப்புப் பெட்டியிலே ஏறிக் கொண்டான் ஆத்மாராம் சேட்.

தனக்கு முன்னதாக ஆளவந்தார் வந்திருப்பார் என்று ஆத்மாராம் எதிர்பார்த்தான். ஆனுல் அவர் அந்தப் பெட்டியில் காணப்படவில்லை. இரண்டே பேர்களுக்கென அமைக்கப்பட்ட அந்த வண்டியின் மற்ெருரு ஆசனத்தின் மீது ஒரு சிறு கைப்பெட்டியும் படுக்கையும் இடம் பெற்றிருந்தன.

அவை ஆளவந்தாருடையதாகத்தானிருக்கவேண்டும் என்ற நினைப்பு ஆத்மாராமிற்கு வந்தது. இருந்தாலும் வேெருரு சந்தேகம் தட்டியது. வேறு எந்தப் பிரயாணியாவது தன் சாமான்களை அங்கே வைத்துவிட்டு வெளியே சென்றிருக்கலாமல்லவா?

'அது எப்படி முடியும்?' என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டான் ஆத்மாராம். அந்த ரயில் பெட்டி

யில் உள்ள இரண்டு ஆசனங்களையும் தான் ரிசர்வ் செய்திருக்கும்போது அன்னியர் யார் வந்து உட்கார முடியும் என்ற நினைப்பு அவனுக்கு!

சந்தேகத்தை முற்றும் நிவர்த்தி செய்து கொள்ள நினைத்த சேட், அந்த முதல் வகுப்புப் பெட்டிக்கு வெளியே தொங்கவிடப்பட்டிருந்த ரிசர்வேஷன் கார்டைக் கவனித்துப் பார்த்தான். அப்படித் தொங்கிய கார்டு கீழ்க்கண்ட குறிப்பைத்தாங்கிக் கொண்டிருந்தது :

| பெயர் | போய்ச் சேருமிடம் |
|---|---|
| 1. ஆத்மாராம் சேட் | கல்கத்தா |
| 2. ஆளவந்தார் நாயுடு | கல்கத்தா |

வேறு யாருடைய பெயரும் இல்லாதபோது எந்தக் கனவான் அந்தச் முதல் வகுப்புப் பெட்டிப் பக்கம் வர முடியும்! ஆகவே அந்தச் சாமான்கள் ஆளவந்தாருடையது தான் என்பதாக நிச்சயப் படுத்திக் கொண்டான் ஆத்மாராம்,

ரயில் புறப்பட இன்னும் ஐந்தே நிமிஷம் இருந்தது, ஜன்னல் வழியாக அப்படியும் இப்படியும் கழுத்தொடியப் பார்த்தும் ஆளவந்தார் இருக்குமிடத்தை சேட்டினுல் கண்டு பிடிக்க முடியவில்லை.

முதல் மணி அடித்தாகி விட்டது. மூன்று நிமிஷம் கழிந்து விட்டால் ரயில் பிளாட்பாரத்தைவிட்டு மெதுவாக நகர ஆரம்பித்து விடும். சாமான்களை வைத்துவிட்டு இந்த மனிதன் எங்கேபோய்த் தொலைந்தார் என்று சங்கடப்பட்டுப் பரபரப்படைந்தான் ஆத்மாராம் சேட்.

கண்ணுக் கெட்டிய தூரம் வரை ஆளவந்தாரைக் காணவில்லை. அவன் கண்களுக்குப் பறக்க பறக்க ஓடி வரும் ஒரு சீக்கிய கனவானே தென்பட்டார். இதைப் போல தான் ஆளவந்தாரும் விழுந்தடித்துக் கொண்டு கடைசி நிமிஷத்தில் ஓடிவரப் போகிருரோ என்னவோ என்று ஆவலோடு இருந்தான்.

விரைந்து வந்த சீக்கிய கனவான், முகத்தில் வேர்த்துக் கொட்டும் வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்து

விட்டுக் கொண்டே ஆத்மாராம் இருந்த பெட்டிக்குள்ளே ஏறிக்கொண்டார். வந்த அவசரத்தில் தான் ஏறிக் கொள்ள வேண்டிய பெட்டியை அடையாளம் மறந்து ஏறி விட்டார் என்ற எண்ணத்தில், "தவருன பெட்டியில் ஏறி விட்டீர்கள்!" என்ருன் ஆத்மாராம் சேட் ஆங்கிலத்தில்.

"நோ...நோ...(இல்லை யில்லை)!" என்று கம்பீரமாகச் சொல்லிய அந்த சீக்கிய கனவான், மற்ருேர் ஆசனத்தில் இருந்த கைப் பெட்டியையும் படுக்கையையும் தூக்கிச் சாமான்கள் வைக்கும் தட்டிலே வைத்தார்.

"அந்த இடம் ரிசர்வ் செய்யப்பட்டிருக்கிறது. பிரயாணி வந்து விடுவார்!" என்ருன் ஆத்மாராம்.

"வந்தால் இறங்கிவிடுகிறேன்!" என்று சீக்கியக் கனவான் சொல்லிக்கொண்டே சுழன்று கொண்டிருக்கும் மின்சாரக் காற்ருடியை தன் பக்கமாகத் திருப்பி விட்டுக் கொண்டார்.

இருவருக்குமிடையே சம்பாஷணை ஆங்கிலத்திலே தான் நடந்து கொண்டிருந்தது.

"பிரயாணி வந்துவிட்டார். அந்தப் பெட்டி படுக்கை கூட அவருடையதுதான்!" என்ருன் ஆத்மாராம்.

"அது என்னுடையது!" என்ருர் கனவான்.

திடுக்கிட்டுவிட்டான் ஆத்மாராம். "ஆளவந்தார் வந்து விட்டார்; எங்கோ போயிருக்கிருர்" என்ற அவனது நினைப்பும் ஏமாற்றமானதாகி விட்டதே!

ரயில் புறப்பட இரண்டாவது மணியும் அடிக்கப்பட்டு விட்டது. ஆளவந்தார் வந்து சேர்ந்தபாடில்லை. ஆத்மாராமின் மனம் 'பக்பக்' கென்று அடித்துக் கொண்டது.

மூன்ருவது மணி அடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கார்டின் 'பிகில்' சத்தம் ஒலித்தது. ஸ்டேஷனை அது இருந்த இடத்திலேயே விட்டு விட்டு ரயில் வண்டியும் நகரத் தொடங்கி விட்டது.

ஆளவந்தார் வராததற்குக் காரணம் புரியாமல் தவித்தான் ஆத்மாராம். அந்தத் தவிப்பு எண்ணுத எண்ணத்

தையெல்லாம் எண்ணச் செய்துவிட்டது. முடிவிலே தனக்குத் தானே மற்ருெரு சமாதானம். ரயிலுக்கு நேர மாகி விட்டால்கூட, ஆளவந்தார் விமானத்தில் புறப்பட் டாவது கல்கத்தா வந்தடையலாம் அல்லவா!

∴ ∴ ∴ ∴

மஞ்சள் மாளிகை எப்போதும் போலவே சந்தடியற்று இருந்தது. கண்ணைக் கசக்கிக் கொண்டே படுக்கையை விட்டு எழுந்த உஷாவின் பார்வை ஜன்னல் பக்கம் பாய்ந் ததும், வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள். வெளியே அடிக்கும் வெயிலைப் பார்த்தபோது மணி பத்து இருக்கும் போல் தோன்றியது.

"இவ்வளவு நேரமா தூங்கிவிட்டோம்!" என்று உஷா நினைத்துக் கொண்டே கூடத்துப் பக்கம் விரைந்து வந்தாள். பிறகு பக்கத்து அறைக்குள்ளே அவள் எட்டிப்பார்த்தாள்; வாசல் ரேழிக்கு வந்து மூலையிலே எதையோ தேடினுள். அவளது முகம் வாடிப் போய்விட்டது.

ரேழியிலே கிடக்கவேண்டிய ஆனந்தரங்கனின் பூட்ஸ் அங்கு காணப்படவில்லை. கூடத்திலே ஒரு ஓரமாய் ஆனந்தரங்கனின் புதிய மெத்தை சுருட்டி வைக்கப்பட் டிருந்தது. அவனுக்கென ஒதுக்கிக் கொடுத்திருந்த அறையில் கூட அவனைக் காணும்!

தன்னைத்தானே நொந்து கொண்டாள் உஷா. பத்து மணி வரைக்கும் தூங்கிக் கொண்டிருந்துவிட்ட தன்னைப் பற்றி ஆனந்தரங்கன் என்ன நினைத்திருப்பாரோ என்று உஷா சாம்பினுள். அவன் வெளியே போனபோது ஏதாவது சொல்லிவிட்டுச் சென்ருறு என்பதை அறிந்து கொள்ளும் பொருட்டு, "அம்மா! .....அம்மா!" என்று கூப்பிட்டுக்கொண்டே அடுப்பங்கரைக்குப் போனுள். அடுப்பு பற்றவைக்கப்படாமல் பூனைக்குத் தூங்க இடம் தந்து கொண்டிருந்தது. "அம்மா எங்கே போய்த் தொலைந் தாள்!" என்று உஷா முணுமுணுத்துக் கொண்டே, கொல்லைப் புறம்போய்க் கிணற்றடியை நோக்கினுள்.

அங்குகூட அன்னம்மாள் குளித்துக் கொண்டிருக்க வில்லை!

பம்பரம் போல வீடெங்கும் சுற்றிவந்த உஷா, முற்றத்துப் பக்கம் வந்தபோது 'ஆ!' என்று அதிர்ந்தாள்.

அவளது அம்மா குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருப்பது அவளுக்கு வியப்பைத் தந்தது. முகத்திலே வெயில் படுவது கூடத்தெரியாமல் இப்படித் தூங்குகிருளே என்ற நினைப்போடு, அம்மாவின் அருகேபோய்த் தட்டி எழுப்பினுள்.

அன்னம்மாள் கண் விழித்துக்கொண்டாள். "பத்து மணி வரைக்குமா தூங்கிக் கொண்டிருப்பார்கள்!" என்று செல்லமாக அம்மாவைக் கடிந்து கொண்டாள் உஷா.

"பத்து மணியா?...ஐயய்யோ!" என்று திகிலோடு கேட்டு அடித்துப் புரண்டு எழுந்திருந்த அன்னம்மாள், குண்டோட்டம் குதியோட்டமாக வீட்டு முகப்புப் பக்கம் போவதைப் பார்த்த உஷா, அம்மா பின்னே சென்ருள்.

விரைந்து சென்ற அன்னம்மாள், தன் கணவனின் படுக்கையறைக்குள் வந்து எட்டிப் பார்த்தாள், அவள் முகம் சுண்டிச் சோர்ந்து விட்டது.

அம்மாவின் முகமாறுதலைக் கவனித்த உஷா, "என்னம்மா?" என்று பதறினுள்.

"சீக்கிரம் எழுந்துவிடு என்று நேற்றே சொன்னுர். பாவி, தூங்கிவிட்டேனே!" என்று வருத்தத்தோடு கூறிக் கொண்ட அன்னம்மாள், "உஷா! நீயாவது என்னை எழுப்பிவிட்டிருக்கக் கூடாதா?" என்று தன் பெண்ணைக் கடிந்து கொண்டாள்.

"நானும் கொஞ்சநேரத்துக்கு முன்னுலேதானே கண்விழித்தேன்!" என்ருள் உஷா,

"அப்படியானல் அவர் புறப்பட்டது உனக்கும் தெரியாதா?" என்ருள் திடுக்கிட்டு,

"எங்கேம்மா புறப்பட்டார்?" என்ருள் உஷா; அப்பாவின் பயணம் உள்ளபடியே அவளுக்குத் தெரியாதல்லவா?

“கல்கத்தாவுக்கு!” என்றாள் அன்னம்மா, மிகவும் சோர்ந்துபோய். கணவன் புறப்படுகிறபோது வழியனுப்ப முடியாமற்போயிற்றே என்ற விசாரம் அவளுக்கு,

“அப்பா மட்டுமா கல்கத்தா போயிருக்கிறார்?” என்று கேட்டாள் உஷா, எதையோ மனதில் எண்ணிக்கொண்டு.

“கூடப்போக இந்த வீட்டிலே வேறு யார் இருக்கிறார்கள்? கூட மாடப் போய்க்கொண்டிருந்த வேலைக்காரனையும் தான் அவர் நிறுத்தி விட்டாரே” என்ற சலிப்பான பதில் வந்தது அன்னம்மாளிட மிருந்து.

“அவரையும் காணோம்மம்மா!” என்றாள் உஷா, கவலையோடு.

“ஆனந்த ரங்கனையா சொல்றே? அவனும் இங்கேயில்லையா?... சரிதான்! என்ன ஜோலி இருந்ததோ, எங்கே போயிருக்கிறானோ! நாம் இப்படித் தூங்கிக் கொண்டிருந்தால் எந்தப் புருஷன்தான் மெச்சிக்கொள்வான்! நாம் கவலையில்லாமல் தூங்குவதைப் பார்த்து தம்பிகூட என்ன நினைத்துவிட்டதோ தெரியவில்லை!” என்று சொல்லிக் கொண்டே, தன் வேலைகளைக் கவனிக்க கொல்லைப் பக்கமாகச் சென்று விட்டாள் அன்னம்மாள்,

தனியே விடப்பட்ட உஷாவிற்கு எல்லாமே வெறிச் சென்று இருந்தது. தூங்கி எழுந்ததும் ஆனந்தரங்கனைப் பார்த்திருந்தால், அவள் இப்படியா சாம்பி இருப்பாள்? சிரிப்பும் கும்மாளமுமாய் அல்லவா மஞ்சள் மாளிகை முழுதும் நிரம்பியிருக்கும்!

ஃ ஃ ஃ ஃ

**ம**ணி இரண்டாகியும் சாப்பிடாமலேயே கூடத்திற்கும் வாசலுக்குமாய் வளைய வளைய வந்து கொண்டிருந்தாள் உஷா. சாப்பாட்டு நேரத்திற்கு அதிகமாகியும் கூட ஆனந்தரங்கன் வீடு திரும்பவில்லையே என்ற நினைப்பில் இருப்புக் கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தாள் அவள்.

அப்போது வாசல் பக்கமிருந்து யாரோ வருவதுபோல மிதியடி சப்தம் கேட்கவே ஆனந்தரங்கன் தானுக்கும் என்ற மலர்ச்சியில் எதிர்கொண்டு ஓடினாள் உஷா. ஓடிய குதூகலம் ஆளைப்பார்த்ததும் எங்கோ பறந்து விட்டது!

வந்தவன் ஆனந்தரங்கனல்ல. பாம்பே சில்க் எம்போரியத்தின் முதலாளி பண வசூலுக்காக வந்திருந்தான்.

'பில்'லை வாங்கிப் பார்த்தாள் உஷா. தொகை ஆயிரத்தி நூறு.

"உள்ளே வந்து உட்காருங்கள்!" என்று உஷா சொல்லிவிட்டு, அம்மாவைத்தேடி சமையலறைக்குள் சென்றாள்.

"அம்மா! நேற்று வாங்கி வந்தேனே புடவை, துணி மணிகள் அந்தக் கடைக்காரன் வந்திருக்கிறான். ஆயிரத்தி நூறு ரூபாய் அந்தப் பணத்திலிருந்து எடுத்து அவனுக்குக் கொடுத்தனுப்பு!" என்றாள் உஷா.

"எந்தப் பணமடி?" என்று கேட்டாள் அன்னம்மா.

"நேற்று ஆனந்தரங்கம் கொடுத்தாரே, அந்தப் பணத்திலிருந்துதான் கேட்கிறேன்."

"என்னிடம் அது இப்போது இல்லையே உஷா! அப்பாவிடம் கொடுத்து பத்திரமாய் வைக்கச்சொன்னேன். அவரில்லாத போது பணம் கேட்டால்......" என்று தயங்கித் தயங்கி இழுத்துப் பேசினாள் அன்னம்மாள்.

"அப்பா இல்லாவிட்டால் என்ன? எடுத்துக் கொடுத்தால் என்னைக் கேட்காமல் ஏன் எடுத்தாய் என்று கோபிக்கப் போகிறார்?" என்றாள் உஷா.

"அவர் எங்கே வைத்திருக்கிறாரோ, நமக்கு எப்படித் தெரியும்?"

"எனக்குத் தெரியுமம்மா. நான் எடுத்துக் கொடுக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே ஆளவந்தாரின் அந்தரங்க அறைக்குப்போனாள் உஷா. அவ்வளவு பெருந் தொகையை அவர் எந்த இடத்திலே ஒளித்து வைத்திருப்பார் என்பதுதான் ஏற்கனவே உஷாவிற்குத் தெரிந்திருக்கிறதே!

அறைக்குள் வந்த உஷா, சுவரிலே மாட்டியிருந்த லட்சுமி படத்தைக் கழற்றிக் கீழே வைத்தாள். சுவரில் தென்பட்ட பிறைக்குள் கையை விட்டு இழுத்தாள். டிராயர் வெளியே வந்தது. உள்ளே தடவினுள், அடுத்த நிமிடம், உள்ளே பாம்பொன்று இருந்து கடித்திருந்தால் எப்படி வீரிட்டுக் கதறுவாளோ, அதைப்போல அலறி, "அம்மா!" என்று கத்தினுள்.

அவளைப் பாம்பு எதுவும் தீண்டிவிடவில்லை, கத்தை கத்தையாகக் கட்டப்பட்டிருந்த கரன்ஸி நோட்டுகளில் ஒன்றைக்கூடக் காணேம் அதிலே!

## 17 இவனு கரன் ஸிங்?

கல்கத்தா எக்ஸ்பிரஸ் ரயில் பெஜவாடா ஸ்டேஷனை அடையும் போது இரவு மணி எட்டு. பிரயாணிகள் அந்த ஸ்டேஷனில் தான் தங்களது இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொள்ளவேண்டும். அதற்காகவே எக்ஸ்பிரஸ் அங்கே அரைமணி நேரம் தாமதிக்கிறது.

முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து இறங்கினுன் ஆத்மாராம் சேட். ஆனுல் ஏனைய பிரயாணிகளைப் போல அவன் சாப்பாட்டைத் தேடிப் போகவில்லை. அரைமணி நேர சாவகாசம் இருந்ததால் அதற்குள் சென்னைக்கு ஒரு டெலிபோன் 'டிரங்க் கால்' போட்டு, ஆளவந்தார் புறப் பட்டாரா இல்லையா என்பதைப் பற்றித் தெரிந்துகொள்ள எண்ணி ஸ்டேஷன் மாஸ்டர் அறைக்குள்ளே புகுந்தான்.

'எக்ஸ்பிரஸ் கால்' ஆகையால் டெலிபோன் பதில் பத்து நிமிஷத்திற்கெல்லாம் கிடைத்துவிட்டது. ஆளவந் தார் வீட்டிலிருந்து,அன்னம்மாளே பேசினுள்.

சம்பாஷணை தொடர்ந்தது,

"ஆத்மாராம் பேசுகிறேன். ஆளவந்தார் இருக் கிருரா ஊரில்?" என்று கேட்டான் ஆத்மாராம்.

"இல்லை, கல்கத்தாவுக்குப் புறப்பட்டுப் போய் விட்டார்!" என்று பதில் கொடுத்தாள் அன்னம்மாள்.

அடுத்தபடியாக என்ன பேசலாம் என்பதை எண்ணித் தயங்கின ஆத்மாராம், "ஆனந்தரங்கமாவது அங்கே இருக்கிறாரா?" என்று விசாரித்தான்.

"அவரும் இல்லையே!" என்ற பதில் வந்தது.

"எங்கே போயிருக்கிறார்?"

"அதுவும் எனக்குத் தெரியாது. நேற்று இரவு பார்த்தது. அப்புறம் அவரைப் பார்க்கவேயில்லை!"

"சரியம்மா!" என்று சொல்லி டெலிபோன் தொடர்பை நிறுத்திக் கொண்டான் ஆத்மாராம்.

உற்சாகம் கரை கடந்து பொங்கிற்று ஆத்மாராம் சேட்டுக்கு. திட்டம் வெற்றிகரமாக நடந்தேறிவிட்டது என்ற ஆனந்தம் அவனுக்கு!

முதல வகுப்புப் பெட்டி நோக்கி உல்லாச நடைபோட்டு வந்தான் அவன். எதிரிலே ஒரு பிச்சைக்காரன் எதிர்ப் பட்டு "சேட்ஜி! சேட்ஜி!" என்று பல்லைக் காட்டிக் கை நீட்டினான்.

டெலிபோன் கட்டணத்தைக் கொடுத்ததுபோக பத்து ரூபாய் நோட்டில் இரண்டு ரூபாய் மிச்சமிருந்தது கையில். 'இந்தா' என்று தாராளமாக அதைப் பிச்சைக் காரன் கையில் கொடுத்துவிட்டு அப்பால் நகர்ந்தான். 'எத்தனையோ லட்ச ரூபாய்களைக் காப்பாற்றிக் கொண்டு விட்டபோது இந்த இரண்டு ரூபாய் காசு போனால் தான் என்ன?' என்று நினைத்து பிச்சைக்காரனுக்கு அதைக் கொடுத்தானோ, அல்லது, 'செய்திருக்கும் பாவமாவது கொஞ்சம் தொலையட்டும்!' என்ற பிராயச்சித்த மனப் பான்மையில் பிச்சை போட்டானோ என்பது அவனுக்குத் தான் தெரியும்.

முதல் வகுப்புப் பெட்டியில் உட்கார்ந்து கொண்டு கண்மூடி எதையோ நினைத்துப் புன்னகையை உதிர்த்துக் கொண்டிருந்த ஆத்மாராமின் மானசீகக் கனவில்,

அப்துல்லா பத்து ரூபாய் நோட்டுகளாக எண்ணி எண்ணி ஐந்து லட்சத்தைத் தன்னிடம் கொடுப்பது போன்ற காக்ஷியைக் கண்டு கொண்டிருந்தான்.

அவன் கண்டது கனவாக ஆகிவிடாது. 'ஐந்து லட்சம் தரத் தயார். ஆனந்தரங்கனைக் கொன்றுவிட்டால் போதும்' என்று ஏற்கனவே கைப்பட அப்துல்லா கடிதம் எழுதியிருப்பதால் அந்தத் தொகையை ஆத்மாரா மிற்குக் கொடுத்துத்தானே ஆகவேண்டும்!

அடுத்த விநாடி ஆத்மாராமின் முகம் சட்டென மாறியது. அதற்குக் காரணம் வேறொன்று. அதாவது ஆனந்தரங்கனைக் கொன்றுவிட்டால் ஐந்து லட்சம் தருவதாக அப்துல்லா உறுதியளித்திருப்பது ஆளவந் தாருக்கும் தெரியும். அப்துல்லா கொடுக்கிற ஐந்து லட்சத்தில் அவருக்கல்லவா பாதி அழவேண்டியிருக்கும்!

இப்போது அடுத்ததொரு யோசனையில் ஆழ்ந்தான் ஆத்மாராம் சேட். அந்தப் பாதிப்பணத்தை ஆளவந் தாருக்குக் கொடுக்காமல் தானே அமுக்கிக் கொள்ள ஏதாவது வழியிருக்கிறதா என்பதே அவனது சிந்தனை!

பெஜவாடாவை விட்டு ரயில் கிளம்பியது கூடத் தெரியாமல் யோசனையில் சேட் ஆழ்ந்திருந்தான். அன்றைய இரவைக் கொஞ்சம் கூடத் தூக்கத்தில் கழிக்க வில்லை. சிந்தனை...சிந்தனை...ஒரே சிந்தனை!

ஃ ஃ ஃ ஃ

ஒருமட்டும் கல்கத்தாவை வந்தடைந்தான் ஆத்மா ராம். அப்துல்லாவிடமிருந்து ஐந்து லட்சத்தை வாங்கின லொழிய அவனுக்கு எதுவும் சுரத்துப் படாதாகையால், மாமனார் வீட்டிற்குப் போய் பெட்டி படுக்கையைப் போட்டுவிட்டுக் கிளம்பக்கூடப் பொறுக்காதவனாய், நேராக அப்துல்லாவின் மாளிகையை அடைந்தான்.

மகிழ்ச்சியோடு வரவேற்றான் அப்துல்லா. ஆனந்த ரங்கனைக் கொன்று விட்டோம் என்று ஆத்மாராம் ரகசிய மாகக் கூறியபோது அப்துல்லா அடைந்த மகிழ்ச்சிக்கு

எல்லேயே இல்லை. அவனது நோய் நொடியெல்லாம் பறந்தே போய்விட்டது.

"பணம்,..." என்று பல்லை இளித்தான் ஆத்மாராம்.

"மனுஷனுக்கு சொல்லுதான் பெரிசு !...,தாராளமா, நிறைஞ்ச மனசோடு கொடுக்கிறேன் ;.........இப்பவே வேண்டுமா ?" என்ருன் அப்துல்லா.

"அப்போதைக்கப்போது கணக்கை நேர் செய்து கொள்வது நல்லது தானே !" என்று அசட்டுச் சிரிப்பு சிரித்தான் ஆத்மாராம்.

"அச்சா !....அச்சா !" என்று சொல்லிக் கொண்டே உள்ளே போன அப்துல்லா, பத்து நிமிட அவகாசத் திற்குள் திரும்பிவந்து ஒரு துணி மூட்டையைக் கொடுத்து, "எல்லாம் பத்து ரூபாய் நோட்டு பத்திரம் !" என்ருன்.

அந்தப் பணத்தைக் கையில் வாங்கிக் கொண்ட பிறகு தான் ஆத்மாராமிற்கு ஆளவந்தாரின் ஞாபகம் வந்தது. அவர் விமானத்தில் புறப்பட்டிருந்தால் தனக்கு முன்னதாகவே கல்கத்தாவை வந்தடைந்திருக்க வேண்டுமே என்று எண்ணிஞன். அதை நிவர்த்தி செய்து கொள்ள நினைத்து, "ஆளவந்தார் வந்தாரா ?" என்று கேட்டான் அப்துல்லாவிடம்.

"இல்லையே ! வருவதாகச் சொன்ஞரா ?" என்று அப்துல்லா சொல்லிக் கொண்டிருக்கும் போதே, வேலைக் காரன் ஒருவன் வந்து, 'இவங்க உங்களைப் பார்க்கணு மாம், வந்திருக்காங்க' என்று சொல்லி ஒரு விசிட்டிங் கார்டை அப்துல்லாவிடம் கொடுத்தான்.

வாங்கிப் பார்த்தான் அப்துல்லா. அதில் "கரன்ஸிங், பாங்கர், ரங்கூன்" என்றிருந்தது.

"இருங்கள் ஆத்மாராம், வந்தவரை விசாரித்து விட்டு வந்து விடுகிறேன் !" என்று எழுந்து போஞன் அப்துல்லா.

கரன்ஸிங்கைப் பார்த்துவிட்டுத் திரும்பிய அப்துல்லா, "இன்னும் ஒரு ஐந்து நிமிட வேலை, இதோ வந்துவிடு

இறேன்'' என்று சில கரன்ஸி நோட்டுக் கட்டுகளைக் கொண்டு வந்து ஆத்மாராம் முன்னே வைத்து "இதை எண்ணிப் பார்த்து விடுங்கள். சரியாக ஐம்பதாயிரம் இருக்க வேண்டும்!'' என்றார்.

'யாருக்கோ கொடுக்க இந்தப் பணத்தை எண்ணச் சொல்கிறார்' என்பதை யூகித்துக்கொண்ட ஆத்மாராம், 'மள மள'வென்று எண்ணி முடித்தான். சரியாக ஐம்பதாயிரம் இருந்தது.

"ரங்கூனிலிருந்து லாசா மரைக்காயர் உண்டி கொடுத்தனுப்பியிருக்கிறார். அவருக்கு வேண்டியவராம்." என்று சொல்லிவிட்டு, அந்தப் பணத்தை அள்ளிக் கொண்டு கரன்ஸிங்கிடம் போனான் அப்துல்லா.

கரன்ஸிங் மூலம் லாசா மரைக்காயர், அப்துல்லாவுக்கு எழுதியிருந்த கடிதத்தையும், உண்டியையும் அப்துல்லா அந்த அறையிலே டீபாயின் மீது வைத்துச் சென்றிருந்ததால், அதை எடுத்து வாசித்துப் பார்த்தான் ஆத்மாராம். திருட்டு புத்தி எங்கே போகும்?

கடிதம் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது:

"ஜனாப் அப்துல்லாவுக்கு அஸ்ஸலாமு அலைக்கும்.

இக் கடிதம் கொண்டு வருபவர் எனக்கு மிகவும் வேண்டியவர். ஒரு பாங்கர். ரங்கூனில் இருப்பவர். இந்தியாவுக்கு வந்திருக்கும் அவருக்கு அங்கே பணம் தேவை இருந்ததால் என்னை அண்டினார். அனுமதி விரைவில் கிடைக்காததால் இங்கே என்னிடம் அறுபதாயிரம் கொடுத்திருக்கிறார். இந்தியாவில் ஐம்பதாயிரம் கொடுத்தால் போதும். மிச்சப்படுகிற வட்டப் பணமாகிய பத்தாயிரத்தில் உங்கள் பேரால் ஆறாயிரம் அதிகப்படியாக வரவு வைத்துக் கொண்டிருக்கிறேன். என் உண்டியலைப் பெற்றுக் கொண்டு கரன்ஸிங்குக்குப் பணம் கொடுக்கவும்.

லாசா மரைக்காயர்.

ரங்கூன்."

கடிதத்தைப் படித்து முடித்த ஆத்மாராம் தனக்குள்ளே, 'இதைப்போல கிராக்கி நமக்கு அகப்படவில்லையே! ஐம்பதாயிரத்திற்கு ஆறுயிரம் அல்லவா வட்டத் தொகை!' என்று வயிறெரிந்தான்.

அந்த வயிற்றெரிச்சலில் 'கரன்ஸிங்கைக் பார்த்து அறிமுகம் செய்துகொண்டால் என்ன?' என்ற ஆவலும் உள்ளூர ஏற்படவே, இருந்த இடத்தைவிட்டுக் கிளம்பி 'விசிட்டிங்' ஹால் பக்கம் வந்தான்.

யாரை அறிமுகம் செய்து கொள்ள நினைத்து ஆவலோடு ஆத்மாராம் எழுந்துவந்தானே, அந்த கரன்ஸிங்கைப் பார்த்ததும் காணாததைக் கண்டவன் போல வியப்படைந்தான். "அட பாவி, நீ தானா கரன்ஸிங்" என்று முணுமுணுத்துக் கொண்டான் ஆத்மாராம்.

கரன்ஸிங் என்பவன் வேறு யாருமில்லை. சென்னையிலிருந்து ஆத்மாராமுடன் ஒரே பெட்டியில் பிரயாணம் செய்து வந்தானே ஒரு சீக்கியன்; அவனே தான்!

## 18 கள்ளனுக்குள் கள்ளன்!

பேராசைக்காரனுக்கு ஆவலாதி தீரவே தீராது என்பார்கள். 'போதும்!' என்ற திருப்தியே இருக்காது. பணம் சேரச் சேர, இன்னும் சேர்க்க வேண்டும் என்று ஆவலாதி கொள்வான். அந்த ரகத்திலே சேர்ந்தவனல்லவா ஆத்மாராம்! கரன்ஸிங்கை சிநேகம் செய்து கொண்டால், அப்துல்லா அடைந்தது போன்று மேலும் அதிக லாபமடையலாமே என்று சேட் எண்ணிவிட்டான். அந்த ஆசையில் விசிட்டிங் ஹாலில் பேசிக் கொண்டிருந்த அப்துல்லா அருகே வந்து உட்கார்ந்து கொண்டான்.

அப்துல்லாவோடு வெகு தமாஷாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்த கரன்ஸிங் அங்கே வந்து உட்கார்ந்து

கொண்ட ஆத்மாராமை ஏறிட்டுப் பார்த்து, அதிசயித்துப் போய், "ஓ! என்னோடு ரயிலில் வந்தவராயிற்றே இவர்!" என்று சொல்லிப் புன்னகை செய்தார்.

"அப்துல்லாவின் நண்பர் நீங்கள் என்று எனக்குத் தெரியாது. அதனால் தான் ரயிலில் வரும்போது 'ஏனோ தானோ' வென்று இருந்து விட்டேன். இல்லாவிட்டால்..." என்று சிரித்தான் ஆத்மாராம்.

"அப்போது எனக்குக் கூடத்தான் உங்களைத் தெரியாது! அப்துல்லாவின் நண்பர் நீங்கள் என்பது எனக்கு, ரயிலில் வைத்தே தெரிந்திருந்தால் பிரயாணம் எவ்வளவோ குஷியாக இருந்திருக்கும்!" என்று சொல்லி பதிலுக்குச் சிரித்தார் கரன்ஸிங்.

"இப்போது நீங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் அறிமுகம் ஆகிவிட்டீர்கள்!" என்று சொல்லிச் சேர்ந்து சிரித்தான் அப்துல்லாவும்.

சிறிது நேரம் மூவருக்குமிடையே பேச்சு வெகு சுவாரசியமாக இருந்தது.

பேச்சு முடிவடைந்து விடை பெற்றுக் கொண்டார் கரன்ஸிங். "எப்போது சென்னை திரும்புகிறீர்களோ?" என்று விசாரித்தான் ஆத்மாராம்.

"கல்கத்தாவில் எனக்கு வேலை எதுவும் இல்லை. அப்துல்லாவைப் பார்க்கவந்தேன். பார்த்தாகிவிட்டது. இன்று இரவே சென்னை திரும்புகிறேன்." என்றார் கரன்ஸிங்.

கரன்ஸிங் விடை பெற்றுச் சென்றபிறகு, "நல்ல மனுஷன். தமாஷான பேர்வழி! சிரிக்கச் சிரிக்கப் பேசுகிறார்!" என்று புகழ்ந்தான் அப்துல்லா.

"பெரிய மனுஷர் இல்லையா அவர்!" என்று சேர்ந்து பாடினான் ஆத்மாராம்.

அதோடு அந்தப் பேச்சு முடிந்தது. "உங்களுடைய அடுத்த காரியம் என்ன? மாமனார் வீட்டிற்கா?" என்று கேட்டான் அப்துல்லா.

"சரிதான்! அங்கே போனால் இலேசில் ஊர் திரும்ப விடமாட்டார்கள்! வந்த சுவடே தெரியாமல் திரும்பிப் போய்விடுவதுதான் உத்தமம்" என்றான் ஆத்மாராம்.

ஐந்து லட்சம் ரொக்கமாகக் கிடைத்தபிறகு மாமனார் வீடு என்ன, மச்சினன் வீடு என்ன!

"அப்படியானால் நீங்கள் திரும்புகிற வரை அந்த அறையில் தங்கிக் கொள்ளலாம். என் ஜோலி முடிந்து வந்து பார்க்கிறேன்" என்று சொல்லி அறையைச் சுட்டிக் காட்டினான் அப்துல்லா,

இட்ட பணியைச் செய்ய தயாராய்க் காத்திருந்த ஒரு வேலைக்காரன் ஆத்மாராமின் பெட்டி படுக்கைகளை அறைக்குள்ளே கொண்டுபோய் வைத்தான். உள்ளே இருந்த பணமூட்டையை எடுத்து வந்து ஆத்மாராமிடம் கொடுத்துவிட்டு அப்துல்லா, தன் காரியங்களைக் கவனிக்கப் போய்விட்டான்.

அறைக்குள்ளே இருந்த சோபாவில் சாய்ந்து கொண்டான், ஆத்மாராம். மூட்டையாகக் கட்டிவைத்திருக்கும் பணம் முழுதும் கைப் பெட்டிக்குள் கொள்ளுமா கொள்ளாதா என்ற ஆராய்ச்சி பலமாக இருந்தது. முடிவில் அது போதாது என்ற முடிவுக்கு வந்தான்.

எத்தனை நேரம் தான் கட்டிப் போட்டதுபோல ஒண்டியாக அந்த அறைக்குள்ளே அடைந்து கிடப்பது? கதவைப் பூட்டிக் கொண்டு ஆத்மாராம் வெளியே கிளம்பினான். இவ்வளவு பெரிய லாபம் கிடைத்திருக்கிறபோது நூறு, இரு நூறு செலவழித்தால்தான் என்ன என்ற தயாளமனதோடு கடைத்தெருவிற்குச் சேட் கிளம்பினான். பியாரிக்கு ஏதாவது வாங்கிப் போகவேண்டுமென்பது அவன் ஆசை.

கடைத் தெருவிற்கு வந்த ஆத்மாராம் துணிக்கடையொன்றில் நுழைந்தான். 'அதில் ஒரு கஜம், இதில் மூன்று கஜம்!' என்று மளமள வென்று துணிகளை எடுத்துப் போட்டான். விலை கூட விசாரிக்கவில்லை,

ஒருவனுக்கு நல்ல காலம் திரும்பிவிட்டால், வருகிற அதிருஷ்டத்தை யாராலும் தடுக்க முடியாது, அதே

கடைக்குள் புகுந்த கரன்ஸிங் ஆத்மாராமைச் சந்தித்தார். அவரும் நிறையத் துணிகள் எடுத்தார். பில் தொகை கொடுக்கப் போகிற சமயத்தில் ஆத்மாராமின் சரக்குக்கும் சேர்த்துப் பணம் கொடுக்க முற்பட்டு விட்டார் கரன்ஸிங்.

"வேண்டாம்...வேண்டாம்...நான் கொடுக்கிறேன்!" என்று ஆத்மாராம் எவ்வளவோ தடுத்தும் கரன்ஸிங் கேட்கவேயில்லை. "என் வெகுமதியாக இருக்கட்டும்!" என்று சொல்லி, ஆத்மாராம் கொடுக்க வந்த பணத்தை வாங்கி அவன் பைக்குள்ளேயே திணித்தார்.

துணிக்கடை வியாபாரம் முடிந்ததும், "போய் வருகிறேன்" என்று விடை பெற்றுக் கொண்டார் கரன்ஸிங். "எவ்வளவு பெரும்போக்கு இவருக்கு!" என்று தன்னுள்ளே வியந்து கொண்டான் ஆத்மாராம் சேட்.

'கொண்டு வந்த காசு மிச்சம்' என்ற மகிழ்ச்சியில் வீடு திரும்பிய அவன் பெட்டி ஒன்றையும் வாங்கிக் கொண்டான். ஐந்து லட்சம் ரூபாயை எதிலாவது அடைத்தாகவேண்டுமே!

⁘ ⁘ ⁘

அப்துல்லாவிடம் விடைபெற்றுக் கொண்ட ஆத்மாராம் அவனது காரிலேயே ரயில்வே நிலையம் வந்தடைந்தான். ஸ்டேஷன் வந்ததும் கரன்ஸிங் ஞாபகம் வந்தது. அவரும் அன்றைய ரயிலில் சென்னை திரும்புவதாகச் சொல்லியிருந்தாரல்லவா!

முதல் வகுப்பு 'ரிசர்வ்' செய்யும் கிளார்க்கிடம் இருந்த பிரயாணிகள் ஜாபிதாவை வாங்கிப் பார்த்தான் ஆத்மாராம். 'கரன்ஸிங் டிக்கட் வாங்கியிருக்கிறாரா? இதே ரயிலில் புறப்படுகிறாரா' என்று தெரிந்து கொள்ளவே ஜாபிதாவைப் பார்த்தான். அவருடைய பெயர் அதிலே இடம் பெற்றிருப்பதைப் பார்த்ததும் சேட் முகம் மலர்ந்தான். எந்தப் பெட்டியில் கரன்ஸிங் 'ரிசர்வ்' செய்திருக்கிறாரோ அதே பெட்டியில் இடம் பிடித்துக் கொண்டான் ஆத்மாராம்.

பிளாட்பாரத்தில் ரயில் தயாராக இருந்தது. முதல் வகுப்புப் பெட்டியில் ஏறி ஆத்மாராம் உட்கார்ந்து கொண்

டான். அதன் பின் கால் மணி நேரத்திற் கெல்லாம் கரன்ஸிங்கும் வந்து சேர்ந்தார்.

"ஓ!...ஆத்மாராம்!" என்று குஷியாகக் கூறிக் கொண்டே பெட்டியில் ஏறிக்கொண்ட கரன்ஸிங், "வரும் போது சேர்ந்து வந்தோம், போகும்போதும் சேர்ந்து போகிறோம். வெரிகுட்!" என்றார், புன்னகை ததும்ப.

சென்னை திரும்பும் பிரயாணம் ஆத்மாராமிற்கு பலவிதத்திலும் லாபகரமானதாகவே இருந்தது. சென்னை வந்து சேருகிறவரை ஆத்மாராமிற்குக் கால் காசு கூடச் செலவில்லை! எல்லாமே கரன்ஸிங் தர்மமாக இருந்தது!

சென்னையை வந்தடைந்ததும் பெட்டி படுக்கையை எடுத்துக்கொண்டு முதலில் இறங்கினார் கரன்ஸிங். மாலையில் ஆத்மாராமின் வீட்டிற்கு வருவதாகச் சொல்லி அவர் விடை பெற்றுக் கொண்டார்.

ஆத்மாராம் மற்றொரு டாக்ஸியை அமர்த்திக்கொண்டு தன் வீடுபோய்ச் சேர்ந்தான். வீட்டிற்குள்ளே நுழையும் போதே 'பியாரி...பியாரி!' என்றழைக்கும் சப்தம் பிரமாத மாக இருந்தது.

ஓடோடி வந்தாள் பியாரி. கைப் பெட்டியைத் திறந்து, தான் எடுத்துவந்த துணிகள் யாவையும் எடுத்து வெளியே போட்டு "பார் பியாரி!...எல்லாம் உனக்காக!...மொத்தம் இரண்டு நூறு ரூபாய்!" என்று கொஞ்சினான்.

அத்தனை துணிகளையும் வாறி எடுத்து நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொண்டு, "அந்தப் பெட்டியில்?" என்று கேட்டு கண்ஜாடையாக மற்றொரு பெட்டியைக் காட்டினாள்.

"பணம்!...சம்பாதித்த பணம்! பார்க்கிறாயா?.. ... பாரு...பாரு!" என்று ஆத்மாராம் ஆனந்தம் தாங்க மாட்டாமல் பெட்டியைத் திறந்தான். அதனுள் இருப் பதைப் பார்த்து பியாரி சிரித்தாள்,

அவ்வளவு தான். அடுத்த விநாடி ஆத்மாராவின் கால்கள் பூமியில் பாவவில்லை. "ஐயோ!...போச்சே! போச்சே!" என்று வாயிலும் வயிறிலும் அடித்துக் கொண்டு பைத்தியக்காரன் போல கதறினான் சேட்,

பியாரிக்கு ஒன்றுமே புரியவில்லை.

பாவம், அவளுக்கு எப்படிப் புரியும்!

ஐந்து லட்சம் அடுக்கிவைக்கப் பட்டிருந்த பெட்டியில் வெறும் கல்லும் மண்ணுமே இருந்தன!

"கொடுப்பதுபோல கொடுத்து, பிறகு இப்படி மோசம் செய்து விட்டானே அப்துல்லா!" என்று ஆத்மாராம் போட்ட கூச்சல், பியாரி பவனமெங்கும் எதிரொலித்தது!

---

## 19 "மோசம் போனேனடி!"

---

கண்ணை மறைத்து, ஏமாற்று வேலை செய்து 'இதோ இதில் இருக்கிறது ஐந்து லக்ஷம்' என்று சொல்லிப் பெட்டி ஒன்றைக் கொடுத்தனுப்பவில்லை அப்துல்லா. எல்லாமே பத்து ரூபாய் நோட்டுகளாக கண்ணுக்குத் தெரிந்தே எண்ணியெடுத்து ஆத்மாராமின் கையிலே கொடுத்தான். பிறகு கடைத் தெருவிலிருந்து வாங்கிவந்த பெட்டியில் தன் கையாலேயே அந்த கரன்ஸி நோட்டுகளை அடுக்கி வைத்து இறுகப் பூட்டினான் ஆத்மாராம், அதற்கப்புறம் அவன் வேறெங்கும் வெளியே போகவில்லை. இரவு பெட்டி சகிதம் ரயில்வே ஸ்டேஷன் வந்து முதல் வகுப்புப் பெட்டியிலே ஏறிக் கொண்டான். சென்னையும் வந்தடைந்தான். வீட்டிற்கு வந்து பெட்டியைத் திறந்து பார்க்கும் போது மண்ணும் கல்லுமாக இருந்தால் அப்துல்லா பேரில் பழிபோடுவது அநியாயமல்லவா!

ஆத்மாராமின் ஆத்திரமெல்லாம் 'கொக்குக்கு மதி ஒன்றே!' என்ற போக்கில் இருந்ததால் அப்துல்லாவே தன்னை ஏமாற்றிவிட்டதாக நிச்சயப்படுத்திக் கொண்டான். அசந்து மறந்திருந்த சமயத்தில் அப்துல்லா வேறு ஏதோ சாவிகொண்டு பெட்டியைத் திறந்து, தான் கொடுத்த பணத்தைக் கவர்ந்து கொண்டு கல்லையும் மண்ணையும் போட்டு நிரப்பிவிட்டு, 'இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா?' என்பது போல வேஷமிட்டிருக்கிறான் என்பதாக

ஆத்மாராம் முடிவு கட்டிக் கொண்டு விட்டான், ஆனல் தன்னேடு ரயிலில் பிரயாணம் செய்து வந்த கரன்ஸிங் அந்த ஐந்து லட்சத்தையும் ஏன் தந்திரமாக ஊடுதட்டி யிருக்கக் கூடாது என்று சந்தேகிக்க ஏனே அவனுக்கு புத்தியில்லாமற் போயிற்று!

ஆத்மாராமின் வஞ்சக நெஞ்சத்திலே அப்துல்லா அலைக்கழிக்கப் பட்டான். அந்த வைராக்கியத்தில் ஆள வந்தாரைச் சந்தித்து அவனுடைய அயோக்கியத் தனத் தைச் சொல்லிவிட வேண்டும் என்று துடியாய்த் துடித்து தன் காரை எடுத்துக் கொண்டு 'மஞ்சள் மாளிகை' நோக்கிப் படுவேகத்தில் கிளம்பினன் ஆத்மாராம்சேட்.

வாசலில் கார் வந்து நிற்கிற சப்தம் கேட்டு அன்னம் மாள் விழுந்தடித்துக் கொண்டு வெளிவாசலுக்கு ஓடி வந்தாள். அன்று வியாழக்கிழமையாதலால் ஊருக்குப் போன அவளது கணவன்தான் திரும்பி வந்திருக்க வேண்டும் என்ற மகிழ்ச்சி அவளுக்கு!

ஆனல் அடுத்த நிமிடமே அவள் ஏமாற்றம் அடைந் தாள். காரில் வந்திறங்கியது ஆத்மாராமல்லவா!

அன்னம்மாளைப் பார்க்கவா அவன் அங்கே வந்தான்? ஆளவந்தாரையல்லவா சந்திக்க வந்திருக்கிறன்! அதனல் காரைவிட்டு இறங்கிய அந்த சேட் வாசலிலே நிற்கும் அன்னம்மாளைக்கூடக் கேட்காமல் 'விடு விடு' என்று உள்ளே நுழைந்தான்.

நடுஹாலுக்குப் போய் அங்கிருந்த சோபாவில் உட்கார்ந்து கொண்ட அவன், "நாயுடு காரு!...நாயுடு காரு!" என்று பலமாகக் குரல் கொடுத்தான். நாயுடு அங்கே இருந்தாலல்லவா கூப்பிட்ட குரலுக்குப் பதில் கொடுக்க!

"வெளியூர் போனவர் இன்னும் திரும்பி வர வில்லையே!" என்று சொல்லிக் கொண்டே அன்னம்மாள் அங்கு வந்து சேர்ந்தாள்.

திடுக்கிட்டான் ஆத்மாராம். கல்கத்தாவுக்கு வராத ஆளவந்தார் வேறு எங்கே போனர் என்பதே அவனது பிரமிப்பாக இருந்தது.

"எந்த ஊருக்குப் போவதாகச் சொன்னார்!" என்று கேட்டான் ஆத்மாராம், படபடப்போடு.

"கல்கத்தாவிற்கு!" என்றாள் அன்னம்மாள், எந்த விதப் பரபரப்பும் இல்லாமல்.

"கல்கத்தாவிற்கா?.........இல்லை......கல்கத்தாவிற்கு இல்லை!"

"அப்படியானால் வேறு எங்கே போயிருக்கிறார்?"

"அதுதான் எனக்குப் புரியவில்லை. என்னோடுதான் அவர் கல்கத்தா புறப்படுவதாக இருந்தது. டிக்கட்கூட அவருக்காக ரயிலில் ரிசர்வ் செய்து வைத்தேன். ரயில் புறப்படுகிறவரை அவர் வரவில்லை. ரயிலுக்குத் தாமதமாகி, விமானத்தில் வந்து சேர்வார் என்று எதிர்பார்த்தேன்!...அப்படியும் அவர் வரவில்லையே!"

அன்னம்மாளுக்குத் தலை சுற்றிக்கொண்டு வந்தது. அதைத் தொடர்ந்து மனதிலே ஒரு குழப்பம். தன் கணவருக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்குமோ என்ற திகில்.

அந்தச் சமயத்திலே ஹாலிலிருந்து பேச்சுக்குரல் கேட்டு, தன் அறையை விட்டு வெளியேறி அங்கே வந்து சேர்ந்தாள் உஷா.

தன் பெண்ணைக் கண்டதும், "உஷா! அப்பா கல்கத்தாவே போகவில்லையாமேடி!" என்றாள் அழாக் குறையாக.

"யாரம்மா சொன்னார்கள்?" என்று திகைத்துப் போய்க் கேட்டாள் உஷா.

"நான்தானம்மா சொன்னேன்!" என்று சொல்லி ஆத்மாராம் அந்தப் பேச்சிலே கலந்து கொண்டான்.

"உஷா! மோசம் போனோமடி!" என்று பெருமூச்சு விட்டாள் அன்னம்மாள்.

"என்னம்மா?...என்னம்மா!" என்று பரபரப்புக் காட்டினான் ஆத்மாராம்.

"எந்த விதத்திலேம்மா?" என்று ஆத்மாராமை விடப் பரபரப்பு காட்டினாள் உஷா.

" ஆரம்பத்திலேயே அவர் சொன்னாரடி! நான்தான் பழியாய் எதிர்த்துச் சண்டை போட்டேன்! அவர் என்ன நினைத்து பயந்தாரோ அது நடந்து விட்டதடி! கொடுப்பது போலக் கொடுத்து, அப்பா வைத்திருந்த பணத்தையும் சேர்த்து எடுத்துச் சுருட்டிக் கொண்டு, அவரையும் எங்கோ ஒளித்து வைத்திருக்கிறானே!" என்று அழுதாள் அன்னம்மாள்.

"யாரையம்மா சொல்கிறீர்கள்?" என்று எழுந்து நின்றான் ஆத்மாராம். அந்த அம்மாள் பழியைத் தன்மீது திருப்புகிறாளோ என்ற பயம் அவனுக்கு.

"சேட்! நீங்கள் சொன்னதாக அவர் ஏற்கனவே எனக்குச் சொன்னார். 'அவன் ஒரு நயவஞ்சகன். நம் குடும்பத்தையும் கெடுத்து என்னையும் நாசப்படுத்த வந்திருக்கிறான்!' என்று நூறுதரம் சொன்னார். சொன்னது போலவே நடந்து விட்டது. உங்களைக் கொள்ளையடித்து மூன்று லட்சம் வாங்கினதாக அவர் சொன்னபோது 'ஒருக்காலும் இல்லை' என்று பரிந்து பேசினேன்!...... கடைசியில் என் தலையில் தீச் சட்டியைக் கவிழ்த்து விட்டானே பாவி!"

அன்னம்மாளின் ஓலம் பெரிதாகி விட்டது,

"யாரையம்மா குறிப்பிடுகிறாய்?...பேரைச் சொல்லாமல் ஏதேதோ சொல்கிறாயே அம்மா?" என்று கேட்டுத் தாயாரை ஒட்டி நின்று கொண்டாள் உஷா.

" தம்பீ தம்பீ என்று உயிரையே விட்டோமே, அந்த பர்மாக் காரப் பாவி தானடி அப்பாவையும் நயவஞ்சகமாக எங்கோ கூட்டிச் சென்று, இருந்த பணத்தையும் அள்ளிக் கொண்டு போயிருக்கிறான்!" என்று மேலும் விசும்பி விசும்பிக் குமுறினாள் அன்னம்மாள்.

" இருக்காதம்மா...இருக்காதம்மா!" என்று பதை பதைத்தாள் உஷா.

"ஏன் இருக்காது உஷா? உன் பேரிலே ஆசை வைத்ததாலேயா?... அதெல்லாம் வெறும் வேஷம்... நயவஞ்சகம்! உன் மூலம் ஒரு ரகசியத்தை அறிந்து கொள்ளவே அவன் அப்படி நடித்திருக்கிறான். உன்னால்

தான் அப்பாவும் கெட்டார், அவர் சேர்த்து வைத்திருந்த பணமும் கொள்ளேபோயிருக்கிறது!" என்ருன் ஆத்மா ராம்.

"என்னுலா?" என்று பரிதவித்தாள் உஷா. அவளு டைய கண்களுக்கு அந்த வீடே தலேகீழாகக் கவிழ்வது போல இருந்தது.

"ஆமாம் உஷா, ஆமாம்! உன்னுல்தான் எல்லாமே குட்டிச் சுவராகிவிட்டது. அவன் மேல் உனக்கிருந்த மயக்கத்தில் உன் வீட்டு ரகசியத்தை அவனிடம் சொல்லி அப்பாவின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்திவிட்டாயே;..."

"வீட்டு ரகசியமா?...இல்லே!... இல்லவேயில்லே!" என்று வீண்பழி சுமத்தப்பட்டவள் போலத் துடிதுடித்தாள் உஷா.

"அப்பா தன் பணங்களே யெல்லாம் எந்த இடத்திலே பத்திரப்படுத்தி வைத்திருக்கிருர் என்ற ரகசியத்தை சினிமாக் கொட்டகையில் வைத்து ஆனந்த ரங்கத்திடம் நீ சொல்லிவிட்டு இல்லே யென்று மறைக்கிருயே!"

உஷாவின் நெஞ்சோட்டம் நிலே குத்தி விட்டது. நடந்து போனவைகளே ஞாபகப்படுத்திப் பார்த்துக் கொள்வது போல மலேத்து நின்றவள், "ஆமாம்... சொன்னேன்...சொன்னது வாஸ்தவம் தான்!" என்று மெல்லிய குரலில் முணுமுணுத்துக் கொண்டாள். அப்படி முணுமுணுக்கும்போது அவள் முகத்திலே எந்தவித பாவமும் இல்லே. கண்களில் பிரகாசம் இல்லே. நாவும் உதடும் வரண்டு விட்டது.

"அடி சண்டாளி! கெடுத்து விட்டாயேடி குடியை!" என்று கீழே விழுந்து புரண்டாள் அன்னம்மாள். பிறகு எழுந்து உட்கார்ந்து கொண்டு, "சேட்! போங்கள்... போய் உடனே போலீசிலே புகார் கொடுங்கள்!... போங்களேன்! போங்களேன்!" என்று அன்னம்மாள் கதறிஞள்.

இந்த உலகச் சிந்தனேயே இல்லாமல் இடிந்து போய் நின்று கொண்டிருந்த உஷா கழுத்தில் தொங் கிக் கொண்டிருந்த சங்கிலியின் நுனியை இறுகப் பற்றியபடி கண்ணீர் உகுத்தாள். அந்தச் சங்கிலியில்

தொங்கிய மூன்று தாலிப் பொட்டுகள் மணமாகிவிட்டவளின் சின்னங்களேயாகும்! ஆளவந்தாருக்கும் தெரியாமல் ரிஜிஸ்டர் ஆபீஸில் வைத்து ஆனந்தரங்கனுல் கட்டப்பட்ட தாலி அது!

"இன்னும் என்ன தயக்கம்?...ஓடுங்கள் சேட்!... டெலிபோனுவது செய்யுங்களேன்!" என்று அவசரப் படுத்தினுள் அன்னம்மாள்.

சினிமாவில் வரும் சோகக் காட்சியைப் பார்த்து தாங்களும் அழுவார்களே சில ரஸிகர்கள்; அதைப்போல வாய்விட்டு அழாமல் கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தாள் உஷா. இத்தனைநேரம் வரை உள்ளே கிடந்து உழன்று கொண்டிருந்த வேதனை பொத்துக்கொண்டு வெளிவரவே, "ஏமாந்தேன் அம்மா, ஏமாந்தேன்! நானும் கெட்டேன். குடும்பம் கெடவும் நானே காரணமாகி விட்டேன்! என்னைக் கண்டதுண்டமாக வெட்டிப் போட்டால்கூட பாபமில்லையம்மா! என்னுல் தான் எல்லாம்...என்னுல் தான் சர்வ நாசமும்!" என்று கத்திக் கொண்டே கொல்லைப்புறம் பைத்தியக்காரி போல ஓடினுள் உஷா.

"ஐயோ!...உஷா! உஷா!" என்று கத்திய அன்னம்மாள், "சேட்! அவளைப் பிடியுங்கள் சேட்! எங்கோ ஓடுகிருளே!" என்று கூவிக்கொண்டே அவளும் உஷாவைப் பின் தொடர்ந்து ஓடினுள்.

கொல்லைப் பக்கமாக ஓடிய உஷாவின் காதுகளில் எந்தக் குரலும் விழவேயில்லை. விழுந்தாலும் அந்தக்குரல் அவளை நிறுத்தக் கூடிய சக்தியுள்ளதாக இல்லை. கொல்லை வாசலையும் கடந்து தோட்டத்துக்குள்ளே ஓடினுள் உஷா.

பின்னே துரத்திவந்த அன்னம்மாளும் ஆத்மாராமும் ஏக காலத்தில் "ஐயையோ!" என்று கத்தினுர்கள்.

கிணற்றிலே குதித்து விட்டாள் உஷா.

அந்த அதிர்ச்சியிலே அன்னம்மாள் நினைவு இழந்து பட்ட மரம் சாய்வதுபோல 'படா' ரென்று கீழே விழுந்து விட்டாள்.

உஷா கிணற்றிலே விழுந்து விட்ட திகிலில் என்ன செய்வதென்றே தெரியவில்லை ஆத்மாராமிற்கு. கிணற்றிலே குதித்து அவளைக் காப்பாற்றவும் துணிவில்லை. 'ஐயோ! ஓடிவாருங்களேன்! காப்பாற்றுங்களேன்!' என்று கத்திக் கூப்பாடு போட்டான் சேட்.

சத்தம் கேட்டு யாரெல்லாமோ ஓடிவந்தார்கள். அப்படி ஓடிவந்தவர்களிலே ஒருவன் முன்பின் யோசிக்காது கிணற்றிலே குதித்தான்.

கிணற்றைச் சுற்றி ஏகக் கூட்டம். ஆத்மாராம் மட்டும் கிட்டக்கூடப் போகவில்லை. ஐம்பதடி தூரத்தில் தள்ளி நின்றுகொண்டிருந்தான். 'அவனைக் கொல், இவனை அடி' என்று ஏவுவதற்கு மட்டிலுமே அவனுக்குத் தைரியமுண்டே ஒழிய, செத்த பிணத்தைக் கூடக் கண்ணால் சேட் பார்க்கமாட்டான்.

சிறிது நேரத்திற் கெல்லாம் கிணற்றைச்சுற்றி நெருக்கமாக இருந்த ஜனக் கும்பல் வழிவிடுவதுபோல ஒதுங்கி இடைவெளி விட்டது. "மூச்சு இருக்கிறதா பாரு"—"தலைமேலே வைத்துச் சுற்று!"—"உருளையை வைத்து வயிற்றிலே அழுத்து!"—இப்படியான கசமுசாவுக்கிடையே உஷாவை கைத்தூக்காகத் தூக்கிவருபவனைக் கூர்ந்து பார்த்தான் ஆத்மாராம்.

அவ்வளவு தான்! ரத்த ஓட்டமே நின்று விட்டது போல அவனது உடல் மரத்து விட்டது. கண்களைப் பல முறை மூடி மூடித் திறந்து பார்த்தான். பிரமைத் தோற்றமில்லை.

ஆனந்த ரங்கன் தான் உஷாவைத் தூக்கிக்கொண்டு வந்தான்!

"அட பாவி! நீ இன்னும் சாகாமலா இருக்கிறாய்!" என்று கத்திக்கொண்டே சேட் அந்த இடத்தை விட்டு ஓடினான்...ஓடினான்...அப்படி ஓடினான்! மஞ்சள் மாளிகையின் வாசலிலே நிறுத்தியிருந்த தன் மோட்டாரைக்கூட மறந்து விட்டான் அவன்!

அவன் எவ்வளவு தூரம்தான் ஓடுவான்? சோர் வால் கால்கள் தள்ளாடி விட்டன. எங்காவது சற்று உட்காரா விட்டால் மூச்சு அடைத்துச் செத்துவிடுவான் போலாகிவிட்டது!

ஏற்கனவே ஐந்து லக்ஷத்தைப் பறிகொடுத்து விட்ட ஏக்கம். அதோடு ஆனந்தரங்கன் சாகவில்லையே என்ற துக்கமும் சேர்ந்து கொண்டு மகா புத்திசாலியான ஆத்மா ராமைத் திக்குமுக்காட வைத்து விட்டது.

"எங்காவது சற்று உட்காரேன்' என்று அவனது கால்கள் கெஞ்சின. சுற்று முற்றும் பார்த்தான். ஒரு 'பார்க்' அவன் கண்ணிற்குத் தட்டுப்பட்டது. அந்தப் பூங்காவனத்திற்குள் போய்ச் சிறிது நேரம் தனிமையில் உடகாரவேண்டும் போல இருந்தது.

பார்க்கை நோக்கிச் சென்றான் சேட். உள்ளே நுழைந்ததும் நிழல் எங்கே இருக்கிறது என்று அவன் தேடினான். ஓர் ஓரத்திலே அடர்ந்து வளர்ந்திருந்த வேப்பமரத்தின் கீழ் நிழல் பரவலாக இருந்தது. அங்கே போய் உட்கார்ந்து கொண்டான் ஆத்மாராம் சேட்.

அந்த இடத்தில், அதே வேப்பமரத்தடியில் தான் ஆளவந்தாரும் அவனும் சந்தித்து ஆனந்தரங்கனைக் கொலை செய்யத் திட்ட மிட்டனர் என்பது அவன் நினை வுக்கே வரவில்லை!

இப்போது ஐந்து லட்சம் பறிபோன விஷயம் கூட அவனுக்குப் பெரிதாக இல்லை. ஆனந்தரங்கன் எப்படி உயிரோடு இருக்க முடியும் என்ற சிந்தனையே பெரிதாக இருந்தது.

கொலை செய்யப்பட்ட இடத்தில் உயிரிழந்தவன் பேய் ரூபத்தில் சுற்றிச் சுற்றி நடமாடிக் கொண்டிருப்பான் என்று பலர் சொல்லக் கேட்டது அவனது ஞாபகத்திற்கு வந்தது. கிணற்றடியில் வைத்தே ஆளைத் தொட்டுப் பார்க்காமல் போனோமே என்று சேட் வருந்தினான். அவன் பார்த்த ஆனந்த ரங்கன் பேயாக இருந்திருந்தால் உடல் ஸ்பரிசம் தெரியாதல்லவா?

பேயாயிருந்தால் பகலில் நடமாடாதே என்ற பிரச்னை எழுந்துவிட்டது அவனுக்கு! கொலைப்படாத ஆனந்த

ரங்கன் இனி என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்வான் என்பதைப் பற்றி அனுமானிக்க ஆரம்பித்து விட்டது அவன் மனம்.

கிணற்றில் விழுந்த உஷா எப்படியும் உயிர் பெற்று விடுவாள். கண் விழித்ததும் தன்னைக் காப்பாற்றியது யார் என்று பார்ப்பாள். ஆனந்த ரங்கனாக இருக்கும்! ஓடிப்போய் விட்டதாகக் கருதப்படும் அவன் திரும்பி வந்திருப்பது அவளுக்கு ஆச்சரியமாக இருக்கும். உடனே விஸ்தாரமாக, அவனைப்பற்றி ஆத்மாராம் இகழ்ந்து சொன்ன பேச்சு அத்தனையையும் அவள் அவனுக்குக் கூறுவாள். அதையெல்லாம் கேட்கக் கேட்க அவனுக்கு ஆத்திரம் மண்டிக் கொண்டுவரும். தன்னைப் பற்றி இப்படியெல்லாமா கூறினான் என்று வெகுண்டு, பார்க்கிறேன் ஒரு கை என்று கங்கணம் கட்டிக் கொண்டு கிளம்புவான். நேரே பியாரி பவனம் வருவான். 'எங்கே ஆத்மாராம்?' என்று கேட்டு கர்ஜிப்பான். பியாரி நடு நடுங்குவாள்! ஆத்மாராமிற்கு பாதி உயிர் போய்விடும். பதறித் துடிப்பான்!...இப்படிப் பல பல எண்ணங்கள்!

ஆத்மாராமின் மனக்கனவு இந்த இடத்திலே வந்து சற்று தயங்கியபோது, "அப்படியே அவன் வந்து விட்டால் தான் என்ன? தாழ்ந்து போய் இன்னும் ஒரு இரண்டு லட்சத்தை எடுத்துத் தூக்கி எறிந்தால் தானாகப் போய் விடுகிறான், என்னிடம் இருக்கும் பணத்தைக் கொண்டு இருபதுதரம் தப்பித்துக் கொள்ளலாமே!" என்று உரக்கச் சொல்லி சேட் சமாதானம் செய்து கொண்டான்.

அவன் எப்படியெல்லாம் மனதைத் தேற்றிக் கொண்டால் என்ன? ஆனந்தரங்கனின் கிலி அவனைக் கிட்டத் தட்டக் கிறுக்கனாகவே ஆக்கிவிட்டது. இந்தச் சமயத்திலே ஆளவந்தார் இருந்தால் எவ்வளவோ விஷயங்களுக்கு நல்லதாக இருக்குமே என்று ஆத்மாராம் அலட்டிக் கொண்டான். எப்படியாவது அவர் இருக்குமிடத்தைத் தெரிந்து கொள்ளவேண்டுமே என்று அவன் துடியாய்த் துடித்தான்.

ஆளவந்தார் போன இடம் அவர் மனைவிக்கே தெரியவில்லை. ஒருவருக்குமே தெரியாமல் அவர் எங்கே போயிருப்பார்?

அவர் எங்கு வெளியூர் சென்றாலும் கம்பெனியில் சொல்லாமல் போனது கிடையாது. இந்த ஞாபகம் வந்தது ஆத்மாராமிற்கு. கடைசி முயற்சியாக கம்பெனிக்குப்போய் விசாரித்து விடலாம் என்ற எண்ணத்தோடு அவன் அங்கிருந்து கிளம்பினான்.

வியர்க்க விறு விறுக்க வரும் தன் சின்ன முதலாளியைக் கண்டதும் எழுந்து நின்ற கம்பெனி ஏஜெண்டு, "ஏதாவது முக்கிய சமாசாரமா முதலாளி?" என்று பணிவோடு கேட்டான்.

"ஆமாம். ஆளவந்தார் எந்த ஊருக்குப் போனார் தெரியுமா?...உன்னிடம் சொல்வது வழக்கமாயிற்றே?" என்று கேட்டான் ஆத்மாராம்.

"தெரியாதுங்களே! அவர் வெளியூர் போயிருக்கிறார் என்பதே நீங்கள் சொல்லித்தான் தெரிகிறது!" என்றான கம்பெனி ஏஜெண்டு.

சொல்லாமல் கொள்ளாமல் எங்கே போயிருப்பார் இந்த மனிதர்?

சட்டென ஒரு சந்தேகம். அதைத் தொடர்ந்து ஒரு விபரீத எண்ணம். ஒருக்கால் கொலை முயற்சியின்போது ஆனந்தரங்கனிடம் பிடிபட்டு, அவன் அவரை இழுத்துப் போய் போலீஸ் ஸ்டேஷனில் ஒப்புவித்திருக்கலாமில்லையா? அந்தச் சந்தேகத்தையும் ஏன் விட்டுவைக்க வேண்டும்? டெலிபோன் புஸ்தகத்தை எடுத்து போலீஸ் ஆபீஸ் நம்பரைப் பார்த்தான். டெலிபோனும் செய்தான்.

"பேசுவது யார்?" என்று போலீஸ் ஆபீஸிலிருந்து கேள்வி வந்தது.

"ஆளவந்தார் அண்டு அப்துல்லா கம்பெனியிலிருந்து பேசுகிறோம்."

என்று பதில் கொடுத்த ஆத்மாராம், விஷயத்தைக் கேட்காமல் தயங்கினார். எந்தத் தினுசில் உளவு அறிவது என்ற நீக்குப் போக்குத் தெரியவில்லை. 'என் அப்பன் குதிருக்குள் இல்லை!' என்ற கதையாக, "ஆளவந்தாரைக் கைது செய்து வைத்திருக்கிறீர்களா?" என்றா கேட்க முடியும்! சூசகமாக அல்லவா தெரிந்து கொள்ள வேண்டும்!

"எங்கள் முதலாளியை நாலைந்து நாட்களாகக் காண வில்லை. உங்களுக்கு ஏதாவது தகவல் தெரியுமா?" என்று கேட்டான் ஆத்மாராம்.

"நரசோரமா?" என்று திடுக்கிட்டு கேள்வி வந்தது போலீஸ் ஆபீசிலிருந்து.

"அது தெரியவில்லை. சொல்லிக் கொள்ளாமல் கிளம்பியிருக்கிறார்!" என்று சொல்லிய ஆத்மாராம் சட்டென உதட்டைக் கடித்துக் கொண்டான். இப்படிப் பதில் சொல்வது சும்மா கிடக்கும் சங்கை ஆண்டி ஊதிக் கெடுத்தது போன்றல்லவா ஆகிவிட்டது.

சமாளித்துக் கொண்டான் ஆத்மாராம்: "ஒரு வார மாகவே அவருக்குக் கொஞ்சம் சித்தப் பிரமை. திடுதிப் பென்று போவார்...பிறகு வந்து சேர்வார்! வேறொன்று மில்லை" என்றான் சேட்.

"புகார் ரிஜிஸ்டர் செய்துகொண்டு தேட முயற்சி எடுக்கட்டுமா?" என்று போலீஸ் கேட்டதும், "வேண் டாம்...வேண்டாம்!" என்று அவசரமாகப் பதில் சொல்லி விட்டு, டெலிபோனை வைத்துவிட்டான் சேட்.

ஆளவந்தாரின் மறைவு மர்மமாக இருக்கிறதே என்று சிந்தித்தபடி நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான் ஆத்மாராம். ஏதோ யோசனையில் அர்த்தமற்று எங் கெல்லாமோ பார்வையை வீசவிட்டுக் கொண்டிருந்த அவன் கண்கள் அங்கிருந்த சவப் பெட்டி மீது பதிந்தது. அவன் தானே அந்தச் சவப் பெட்டியை நடுநிசியில் ஆள வந்தார் வீட்டின்றும் தூக்கிவந்தான்?

அதைத் தூக்கி காரில் ஏற்ற அன்று அவன் பட்ட சிரமம் ஞாபகத்திற்கு வந்தது, பெட்டி அவ்வளவு கனத்ததே என்ற நினைப்பும் சேர்ந்து தலைதூக்கியது. சவப் பெட்டிச் சமாசாரம், ஐந்து லட்சம் இருந்த சூட் கேஸ் கதையாக முடிந்திருக்குமோ என்ற சந்தேகம் எழவே, அதையும் திறந்து பார்த்துவிட நிச்சயம் செய்து கொண் டான் ஆத்மாராம் சேட்.

அவ்வளவு எளிதாக அவனை அந்தச் சவப் பெட்டி யைத் திறந்து சோதனைபோட முடியுமா? கம்பெனி

ஏஜண்டு கூர்ச்சம்போல அங்கே இருக்கும்போது அவன் அப்படிச் செய்வது ஆபத்தாயிற்றே!

"ஒரு காரியம் செய்கிறீரா ஏஜண்ட்?" என்றான் ஆத்மாராம்.

"சொல்லுங்க முதலாளி!" என்றான் ஏஜண்டு.

"என் வீடு வரைக்கும் போய் பியாரியிடம் ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டு வந்து சேரும்."

"சரி முதலாளி!" என்று கிளம்பினான் அந்த ஏஜண்டு. தன்னைக் கழித்துக் கட்டவே இப்படி ஒரு வேலையை இட்டிருக்கிறார் என்பது அவனுக்கு எப்படித் தெரியும்!

ஆத்மாராமைத் தவிர அங்கே யாருமில்லை. மூலையில் கிடந்த சுத்தியலை எடுத்துச் சவப் பெட்டியின் ஆணிகளை ஒவ்வொன்றாகக் கழற்றினான்; மேல் மூடியைத் திறந்து உள்ளே பார்த்தான்.

அவ்வளவுதான்! பேயறைந்தவன் போல கிரீச்சிட்டான் ஆத்மாராம்! அவன் கண்ட சவத்தின் மீது ஒரு துண்டுக் கடுதாசி இருந்தது. அவனுடைய நடுங்கும் கரங்கள் நண்டு பிடிப்பதுபோல நடுங்கி அதை எடுத்தன. அதைப் படித்ததும் அவன் இழுத்துக் கொண்ட சுவாசக் காற்று வெளிவர முடியாமல் இருதயத்திலே கிடந்து தவித்துத் திணறியது.

அந்தக் குறிப்பில்:

**"மூன்று அயோக்கியர்களும் ஒரு பேராசைக்காரனும் சேர்ந்து அபாரமான திட்டத்தோடு கண்டு பிடிக்க முடியாத வகையில் மகத்தான ஒரு கொள்ளையை நடத்தினார்கள். அதன் மூலம் கிடைத்த ஆதாயத்தை நால்வருமாகப் பங்கிட்டுக் கொண்டார்கள். அதில் இருவர் கணக்கை நேர் செய்து கொண்டு விட்டார்கள். அடுத்தவன்...?"**

கடிதத்தைக் கசக்கி தன் பையிலே போட்டுக் கொண்ட ஆத்மாராம் மீண்டும் மீண்டும் சவப் பெட்டியையே பார்த்து நின்றான்.

அந்தச் சவப் பெட்டிக்குள் காப்டன் காசி நாதனின் பிரேதத்தைக் காணோம்! அதற்குப் பதில் ஆளவந்தாரின் பிரேதம் இருந்தது!

# 21 உறுமினுர் அப்துல்லா ! உருண்டார் ஸேட்!

ஆபத்தான நிலையிலே சிக்கிக் கொண்டுவிட்டான் ஆத்மாராம் சேட்; போட்ட திட்டம் அனைத்துமே பாழாகி வருவதை நினைக்க நினைக்க, பிறருக்கு விளைவிக்க இருந்த ஆபத்து யாவும் தன்னைச் சூழ்ந்து கொள்வதை சேட் உணர்ந்தான்.

'உடும்பு வேண்டாம் கை வந்தால் போதும்!' என்ற நிலையில் அவன் சிக்கிவிட்டதால், தன்னைத் துரத்திவரும் துன்பத்தின் கோரப்பிடியில் சிக்கிக் கொண்டுவிடாமல் தப்பி ஓடிஞலே போதும் போலாகிவிட்டது.

மேலும் ஒரு நிமிஷம் அங்கே தாமதப்பட்டாலும் ஆபத்து வளைத்துக் கொண்டுவிடும். 'ஓடுடா சீக்கிரம்' என்று அவசரப்படுத்தியது ஆத்மாராமின் மனம்.

சவப்பெட்டியின் மேல் மூடியை எடுத்துப் பொருத்திஞன் சேட்; 'பட் பட்'டென்று அவன் நாலாபக்கமும் ஆணிகளை அடித்து இறுக்கிஞன், கம்பெனியில் இருக்க வேறு ஆள்கூட இல்லையே என்பதைக்கூட அவஞல் நினைக்கத் தோன்றவில்லை. அங்கிருந்து ஆத்மாராம் ஓட்டம் பிடித்தான் வீடு நோக்கி. ஆனந்தரங்கனைக்கண்டு மிரண்டு ஓடிஞனே, அதைவிடப் பன்மடங்கு வேகத்தில் குதிகால் பிடரியில் இடிக்கும்படி ஓடிஞன். பத்து அடி தூரம் நடந்து பழக்கமில்லாத அவனுக்கு மூன்று மைல் தூரத்தை ஒரே மூச்சில் ஓடிமுடிக்க தெம்பும் பலமும் எங்கிருந்து தான் வந்ததோ?

பியாரி பவனத்தின் வெளி வாசலை வந்தடைந்து விட்டான் ஆத்மாராம், இனி பயமில்லை என்ற ஆறுதலோடு காம்பவுண்டுக் கதவைக் கடந்து, மெதுவாக நடந்தான். அவஞக மெதுவாய் நடக்கவில்லை. ஓய்ந்து போன அவன் கால்கள் எடுத்து அடி வைக்க சத்யாக்ரகம் செய்தன.

ஒரு மாதிரியாய் தன்னைச் சமாளித்துக் கொண்டு பங்களாவின் வெளி வராந்தாவைக் கடந்து, தலை வாசலை

யும் தாண்டி ஹாலுக்குள் கால் வைத்தான் சேட்; அங்கே யுமா அவனை வரவேற்க வேறோர் அபாய மனிதன் காத்திருக்க வேண்டும்!

சோர்ந்து போய்த் தள்ளாடி வரும் ஆத்மாராமைப் பார்த்துப் புன்னகை செய்தார் ஹாலிலே அவனது வரவை எதிர்பார்த்துக் காத்திருந்த துப்பறியும் ராஜாமணி.

ஆத்மாராமின் முகத்திலே பிரேதக் களை தாண்டவமாடியது. 'அபாய மனிதனிடம் அகப்பட்டுக் கொள்ளாதேடா!...ஓடு எங்கேயாவது!...மனிதப் பூண்டே தென்படாத இடமாகப் பார்த்து ஓடு!' என்று கூறி அவனுடைய மனம் அவனை அங்கிருந்து ஓட்டப் பார்த்தது. சோர்வும் பலஹீனமும் இல்லாதிருந்தால் அவன் அந்த புத்திமதியை ஏற்று ஓடியே தான் போயிருப்பான்!

"ஏன் இந்தக் கஷ்டமெல்லாம் உங்களுக்கு சேட்ஜி? பத்தாயிரம் ரூபாய் காரை மஞ்சள் மாளிகையில் நிறுத்தி விட்டு, படை பதைக்கிற வெயிலில் சூடு தாங்க முடியாமல் ஏன் இப்படி ஓட்டமும் நடையுமாய் வர வேண்டும்?" என்று பச்சாத் தாபப்பட்டார் ராஜாமணி.

அவரோ துப்பறியும் நிபுணர். அகப்பட்டுக் கொண்டிருப்பதோ பல விவகாரங்களில். சாதுர்யமாகப் பதில் சொல்லாவிட்டால் ஆபத்து. மெய் சோர்ந்து போயிருந்தாலும் ஆத்மாராம் சேட்டின் மதி நுட்பம் சோர்ந்திருக்கவில்லை. "காரில் பெட்ரோல் இல்லாத வேதனை தான் ஸார்!" என்றான் ஆத்மாராம் வெகு நாசூக்காக.

"சேட்ஜி! ஏற்கனவே களைத்து இருக்கிறீர்கள். இந்தச் சமயத்திலே நானும் உங்களுக்குச் சிரமம் கொடுக்க வேண்டியதாகிவிட்டது. தவிர்க்க முடியாத விஷயமாதலால் பிறகு சந்தித்துப் பேசலாம் என்று நான் எழுந்து போவதற்குமில்லை!" என்று சொல்லி நிறுத்தினார் ராஜாமணி.

"அவ்வளவு முக்கியமான விஷயமா?" என்று பரபரப்பைக் காட்டினான் ஆத்மாராம்.

"ஆமாம் சேட்ஜி!" என்று ராஜாமணி புன்னகையோடு அவனைப் பார்த்துவிட்டு, "ஆளவந்தார்

நாயுடுவை நான்கு நாட்களாய்க் காணோம். தேட வேண்டிய இடத்திலெல்லாம் தேடினோம். மனைவியைக் கேட்டால் கல்கத்தா போவதாகச் சொல்லிப் புறப்பட்டதாகக் கூறுகிறாள். கல்கத்தாவில் போய்த் தேடினால் 'அவர் இங்கு வரவில்லையே' என்று கை விரித்துவிட்டார் அப்துல்லா. நீங்கள் கூட போலீஸ் ஆபீஸிற்கு இது விஷயமாய் டெலிபோன் செய்து கேட்டீர்களாமே, அதைப்போல சித்தப் பிரமையில் எங்காவது அலைந்து திரிகிறாரோ என்றெல் லாம் வலைபோட்டு அரித்தோம்......"

ராஜாமணி சொல்லி முடிப்பதற்குள் ஆத்மாராமிற்கு அவசரம்! "ஆள் அகப்படவேயில்லையாக்கும் ?"என்றான் அவன்.

"கிடைக்காமல் எங்கே போகிறார். கிடைத்தார்! ஆனால் கிடைத்துப் பிரயோஜனம்?"

"ஏன்?...ஏன் பிரயோஜனமில்லை என்கிறீர்கள்?"

"செத்த பிணமாகக் கிடைத்தார்!"

"தற்கொலை புரிந்து கொண்டு விட்டாரா!"

"அப்படியிருந்தால் எங்களுக்கு ஏன் இந்த அலைச்சல்! யாரோ சுட்டுக் கொன்றிருக்கிறார்கள்!"

தெரியாததுபோல "ஆ!" என்று அலறினான் ஆத்மாராம்; தொடர்ந்து "கொலை செய்தவன் யார் என்பது தெரிகிறதா ?" என்றும் அவன் கேட்டான்.

"லேசுபாசாகத் தெரிகிறது!...முழுதும் தெரிந்தால் உங்களை இஷ்டப்படி திரிய விட்டு வைப்போமா?"

"என்ன சொன்னீர்கள்?" என்று பதைபதைத்தான் ஆத்மாராம்.

"கொலைசெய்ய உபயோகப்பட்டிருக்கும் கைத் துப்பாக்கி உம்முடையதாக இருக்கிறது! இதோ இருக் கிறது பாரும்!" என்று சொல்லி, கோட்டுப் பைக்குள் இருந்த கைத்துப்பாக்கியை எடுத்து ஆத்மாராம் கையிலே கொடுத்தார் ராஜாமணி.

அதைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த ஆத்மாராம் சட்டெனச் சமாளித்துக் கொண்டான், "என்

கைத்துப்பாக்கிதான். ஆனால் இதைக் கொண்டு என்னை நீங்கள் கொலைகாரனாகக் கருதமுடியாது! என் கைத் துப்பாக்கியைத் திருடி இன்னொருவன் துஷ்பிரயோகம் செய்து விட்டால் அந்தக் குற்றத்திற்கு நான் எப்படிப் பாத்திரமாக முடியும்? இது என்னிடமிருந்து ஞாயிற்றுக் கிழமையன்று தொலைந்துபோன ரிவால்வர். மழுப்பி மறைப்பதற்காக இதை நான் சொல்லவில்லை. போலீஸ் ஆபீஸில் போய் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளலாம். எந்த நிமிஷத்தில் என் ரிவால்வர் தொலைந்து விட்டதாக அறிந்தேனோ, அப்போதே போலீஸ் ஆபீசுக்குத் தகவல் கொடுத்து விட்டேன். இதை நீங்கள் அறிந்து கொள்ளாமல் வந்தது பிசகு!...நான் இப்படிச் சுடுசொல் உபயோகிக்கிறேனே என்று கோபப்பட்டுக் கொள்ளக் கூடாது. இதெல்லாம் பெரிய விஷயம் பாருங்கள்!"

சாமர்த்தியமான ஆத்மாராமின் பேச்சைக் கேட்டு ராஜாமணிக்கு உள்ளூர ஓர் அபிப்ராயம்; வக்கீலாகத் தொழில் நடத்த வேண்டியவன் வட்டித் தொழில் செய்யும் வம்சத்தில் பிறந்து விட்டானே என்று!

"மன்னிக்க வேண்டும் சேட்ஜி! நீங்களே நேர் நின்று கொலை செய்ததாக நான் சொல்லவில்லையே!" என்று ராஜாமணி சாந்தமாக சமாதானம் சொன்னார்.

"அப்பட்டமாகச் சொல்லவில்லை. சுற்றி வளைத்துச் சொன்னீர்கள்!"

"இந்தக் கொலையில் நீங்களும் சுற்றி வளைத்து வந்து ஈடுபட்டதால் நானும் சுற்றி வளைத்துக் கோடி காண்பித்தேன். ஆனால் நான் போட்ட எடை மட்டும் ஒருக்காலும் பிசகாகாது. ஒரு கொலையை நடத்த நீங்கள் உடந்தையாய் இருந்திருக்கிறீர்கள்!"

"இல்லவே யில்லை!"

"ஒரு கொலையை வெற்றிகரமாக நடத்திவிட்டால் ஐந்து லட்சம் கொடுப்பதாக உங்களிடம் கூறினார் ஒருவர். நீங்கள் முனைந்தீர்கள். முடித்து விட்டதாகச் சொல்லி ஐந்து லட்சம் வாங்கியும் விட்டீர்கள்!"

"பொய்!...சுத்தப் பொய்!

"ஆதாரம் இல்லாமல் சொல்ல மாட்டேன்!"

"இருந்தால் காட்டுங்கள்!"

"பாரும் இந்தக் கடிதத்தை! உமக்கு எழுதப்பட்ட கடிதம், கல்கத்தா அப்துல்லா எழுதிய கடிதம், இது கூடப் பொய் சொல்லுமா?

முன்பின் பாராதது போல அதை ஆத்மாராம்சேட் வாங்கிப் பார்த்தான். படித்துப் பார்க்கவில்லை. ஊன்றிப் படிப்பதுபோல பாவனை செய்தானே ஒழிய என்ன பதில் சொல்லி இந்தக் கடிதத்தையும் பொய்யாக்கலாம் என்பதில் தீவிரமாக அவன் மூளை ஈடுபட்டிருந்தது.

புத்திக் கூர்மைதான் இனி இந்த ஆட்டத்தில் ஜெயிக்க அவனிடம் இருக்கும் ஒரே துருப்பு. அதைச் சரியானபடி உபயோகித்துவிட்டான்!

"அப்துல்லாவால் எழுதப்பட்ட கடிதமே இல்லை இது! கையெழுத்து நிஜத்தைச் சொல்லுகிறது! அவர் பெயரை வைத்து யாரோ தயாரித்துள்ள கடிதம் இது!... வேண்டுமானால் அதையும் நிரூபிக்கிறேன்!" என்று சொல்லிவிட்டு சேட் உள்ளே போனான்.

"சேட்ஜி! தப்பி ஓடிவிட மட்டும் நினைக்காதீர்!" என்று எச்சரித்தார் ராஜாமணி,

அவன் ஏன் ஓடப் போகிறான்! புத்திக் கூர்மை சரியாக அல்லவா வேலை செய்து விட்டது. கையில் ஒரு கடிதத்தோடு திரும்பி வந்த அவன், அந்தக் கடிதத்தை ராஜாமணி கையில் கொடுத்து, "இது ஒரு மாதத்திற்கு முன் அப்துல்லாவிடமிருந்து எனக்கு வந்த கடிதம், இதிலிருப்பதுதான் அப்துல்லாவின் கையெழுத்து. இந்தக் கையெழுத்தோடு உம்மிடம் இருக்கும் கடிதத்திலிருப்பதை ஒப்பிட்டுப் பாரும்!" என்றான் முறைப்போடு.

ராஜாமணி பார்த்தார், படுதோல்வி அவருக்கு! எழுத்து வித்தியாசம் ஏகப்பட்டது இருந்தது.

சிறிது நேரம் மௌனம் குடி கொண்டது. இருவரும் பேசவில்லை,

மூன்று ஆட்டம் ஆடினுல் மூன்ஹறயுமே ஒரு கட்சி ஜயிப்பது அபூர்வமானது. அந்த நம்பிக்கையில் கடைசி அம்பை எய்தார் ராஜாமணி.

"சேட்ஜி! ஞாயிறு அன்று இரவு ஒன்பது மணிக்கு நீர் உமது கம்பெனிக் காரில் ஒரு சவப்பெட்டியை எடுத்து வந்து மஞ்சள் மாளிகையில் வைத்தீர்! பிறகு நடுநிசியில் வந்து திருப்ப எடுத்துச் சென்றீர்!"

"இருக்கலாம்! அதிலே கப்பல் காப்டனின் சவம் இருந்தது. ரங்கூனுக்கு அனுப்பப்பட இருந்ததால் கஸ்டம்ஸ் உறுதி மொழிப் பத்திரத்தில் ஆளவந்தாரின் கையெழுத்து வாங்கவேண்டியிருந்தது. எதையும் சோதியாமல் அவர் கையெழுத்திடுவதில்லை. அதனுல் அதை எடுத்துப் போய் வந்தேன்! அதற்கு ஆதாரம் ஆளவந்தார் கையெழுத்திட்ட அந்த சர்ட்டிபிகேட் எமது புக்கிங் ஆபீஸில் இருக்கிறது."

"இருக்கலாம். ஆனுல் அந்தச் சவப் பெட்டிக்குள்ளே இருப்பது காப்டனின் சவம் மட்டுமல்ல; ஆளவந்தாரும் அதிலே அடக்கம் செய்யப்பட்டிருக்கிருர்! அதுவும் நீங்கள் எடுத்துவந்தேன் என்கிறீர்களே; அந்தப் பெட்டியில!"

"அதற்கு நான் எப்படி ஜவாப்தாரியாக முடியும்? ஆளவந்தாரைக் கொன்று, அவரைத் தூக்கிச் சவப் பெட்டியில் நான் போட்டது நிஜமானுல் அதை நிரூபிப்பதில் உங்களுக்குக் கஷ்டமிராது. சவத்தின்மீது தூக்கியவனின் கைரேகை பதிந்திருக்கும். அதைப்போய் முதலில் பார்த்து விட்டு, பிறகு என்னிடம் வாருங்கள்!"

அசந்துபோய் விட்டார் ராஜாமணி. கடைசி ஆட்டத்திலும் ஆத்மாராம் ஜயித்து விட்டார்!

ராஜாமணி எழுந்தார். "போதிய ஆதாரம் இல்லாது நான் உம்மைக் கைது செய்யக் கூடாது என்கிறீர். சரி, திரும்ப வந்து சந்திக்கிறேன்!" என்று சொல்லிவிட்டு 'விர்' ரென நடந்தார்.

பெருமூச்சு விட்டபடி உள்ளே சென்ருன் ஆத்மாராம்.

அலங்கார அறையில் தன்னை அழகுபடுத்திக் கொண்டிருந்த பியாரி, தன் கணவனைக் கண்டதும் மோகனப் புன்னகையை வீசி விட்டு, "மாட்னி சினிமாவுக்குப் போய் வரட்டுமா?" என்றாள்.

ஆத்மாராமிற்கு இருந்த கவலையில் யாரைப்பற்றியும் அக்கறை கொள்பவனாக இல்லை. "சரி...சரி" என்று சொல்லிக்கொண்டே தனது பிரத்தியேக அறைக்குள் புகுந்து கொண்டான்.

முன்பு இருந்த பதட்டம் அவனுக்கு இப்போதில்லை. ராஜாமணியின் பிடியிலிருந்து முற்றும் தப்பித்துக்கொண்டு விட்டோம் என்ற அசட்டு தைரியத்தால் அல்ல. தற்போதைக்கு அவன் தப்பித்துக் கொண்டு விட்டானல்லவா?

அவன் அறையிலே இருந்த டெலிபோன் மூச்சு விடாமல் மணி அடித்தது. இன்னும் என்ன கெட்ட சேதி வரப்போகிறதோ என்று வேதனையோடு டெலிபோன் ரிசீவரை ஆத்மாராம் எடுத்தான்; கல்கத்தாவிலிருந்து ட்ரங்க்—கால் வந்தது.

"ஆத்மாராம் பேசுகிறேன்!"

"அப்துல்லா பேசுகிறேன்! சேட், உமது மோச நாசத்தை என்னிடமே காட்ட ஆரம்பித்து விட்டீரா?...... சேட்! நான் எப்படிப்பட்டவன் என்பது உமக்குத் தெரியுமா இல்லையா?...அணு அணுவாக வெட்டிப்போட்டு விட்டு, அன்ன நடை நடந்து அவசரமில்லாமல் போய்க் கொண்டிருக்கக் கூடியவன் நான்..."

'அப்துல்லாவா இப்படிப் பேசுகிறார்!' என்று மலைத்தான் ஆத்மாராம்.

"அரே சேட்! ஒன்றில்லை இரண்டில்லை. ஐந்து லட்சம்!...அப்துல்லாவிடமா ஏமாற்ற வந்தாய்?...காலம் குறுகிவிட்டால்தான் எவனும் அப்துல்லாவிடம் வாலாட்டுவான்!....ஆனந்தரங்கன் உயிரோடு இருக்கும் போதே முழுப் பூசணிக்காயைச் சோற்றில் அமுக்கினாற்போல வேலை செய்து விட்டீரே!...சேட்! உன் உயிர் மேல் உனக்கு ஆசை இருந்தால் ஐந்து லட்சத்தோடு மேற்கொண்டு ஒரு லட்சம் சேர்த்து ஆறு லட்சம் உடனே

அனுப்பிவிடு! நாளை காலை வரை பார்ப்பேன்!... இன்னும் என்னை ஏமாற்றப் பார்த்தால் நாளை இரவு என்னை உம் வீட்டில் பார்த்துக்கொள்ளலாம்...எச்சரிக்கை செய்து விட்டேன் சேட்!....மரியாதையாய் பணத்தை பாங்க் மூலம் டி. டி. செய்யவேண்டும்!...யாரை ஏமாற்றி ஞலும் ஏமாற்றலாம். அப்துல்லாவை ஏமாற்ற முடியாது!"

அதற்குமேல் அப்துல்லா பேசவில்லை. டெலிபோன் தொடர்பு 'டக்'கென நின்று விட்டது!

ஆனந்தரங்கன் உயிரோடிருக்கும் விஷயம் அதற்குள் அப்துல்லாவிற்கு எப்படித் தெரிந்தது!

மற்ஒரு பேரிடி ஆத்மாராம் சேட்டிற்கு!

அப்துல்லாவிடம் அகப்பட்டுக் கொண்டு கெட்டபேர் எடுத்து விட்டோமே என்று தவித்த ஆத்மாராம் அவனை மறுபடியும் டெலிபோனில் கூப்பிட்டு உள்ள நடப்பைக் கூற முனைந்தான். அப்துல்லா பேச மறுப்பதாக டெலி போன் எக்ஸ்சேஞ்சிலிருந்து தகவல் கிடைத்தது.

பணத்தைத் திரும்ப அனுப்பாத வரையில் அப்துல்லா வின் மனதை தன்ஞல் மாற்றமுடியாது என்று முடிவுக்கு வந்த ஆத்மாராம், டி. டி. யில் பணம் அனுப்பி விடலாம் என்ற நோக்கத்தில், பணம் எடுக்க பொக்கிஷ அறைக்குப் போஞன்.

அப்பை குப்பை நிறைந்திருந்த அந்த அறை துப்புர வாகத் துடைத்து வைக்கப்பட்டிருந்தது. "பியாரி!" என்று கத்திக் குரல் கொடுத்தான் சேட்.

சினிமாவுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த பியாரி ஓடோடி வந்தாள்.

"இந்த அறையில் கிடந்த சாமான்களெல்லாம் எங்கே?" என்று கர்ஜித்தான்.

"வீண் குப்பை எதற்கென்று அதையெல்லாம் எடுத்து காயலான் கடைக்காரனிடம் விற்றுவிட்டேன்!" என்ருள் பியாரி.

"உன்னை யார் போடச் சொன்னது?...சரி...சரி— போ....போ!" என்று அதட்டிஞன் சேட்.

பியாரி சினிமா பார்க்கக் கிளம்பி விட்டாள்.

சுவரிலே தொங்கிய பழைய காலண்டரை அப்பால் தள்ளி ரகசிய டிராயரை வெளியே இழுத்தான் சேட்.

ஆனால் அதில் இருந்த அத்தனை பணத்தில் ஒரு நோட்டு கூடக் காணப்படவில்லை. "போச்சு!...எல்லாம் போச்சு!" என்று ஓலமிட்டபடி வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு தரையில் விழுந்து உருண்டு புரண்டான் ஆத்மாராம் சேட்!

---

## 22 பிணம் பேசியது!

---

மறுதினம் வெளிவந்த பத்திரிகைச் செய்தி எங்கும், எல்லா வட்டாரத்திலும் பரபரப்பை ஏற்படுத்தியது. அச் செய்தியின் பின்னே ஒளிந்திருக்கும் மர்ம விஷயங்கள் மக்களுக்குத் தெரியுமேயானால் அந்தச் செய்தியில் கதா நாயகன் அந்தஸ்து வகித்த இருவர் மீது யாருமே பச்சாதாபம் காட்டியிருக்க மாட்டார்கள்! படித்துவிட்டு அனுதாப வார்த்தைகளை உதிர்த்திருக்க மாட்டார்கள்!

அந்தச் செய்தி இதுதான்:

**"ஒரே நாளில் இரண்டு கோரச் சம்பவங்கள்!**

**"கப்பல் முதலாளிகள் இவருக்குக் கிட்டிய துர்ப்பாக்கிய மரணம்!**

செய்தி தொடர்ந்தது:

—நேற்று காலை ஆளவந்தார் அண்டு அப்துல்லா கம்பெனியாரின் முக்கிய பாகஸ்தரான ஆளவந்தார் நாயுடுவின் பிரேதம் போலீசாரால் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டது. வெளியூர் புறப்பட்டுச் சென்ற அவரைச் செத்த பிணமாக வீட்டிலே கொண்டுபோய்ச்சேர்த்தபோது, அவருடைய மனைவியும் ஏகபுத்திரியும் கதறி அழுத காட்சி மிகவும் பரிதாபகரமாக இருந்தது.

ஆளவந்தாரின் சவத்தின் மீது குண்டுக் காயம் இருந்தது. அவர் கொலைசெய்யப் பட்டிருப்பதாகவே போலீஸார் உறுதிப் படுத்துகின்றனர். கொல்வதற்கு

உபயோகப் படுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிற சுழல் துப்பாக்கியானது போலீஸ் கைக்கு அகப்பட்டிருக்கிறது.

ஆளவந்தாரின் சடலம் எங்கிருந்து கண்டு பிடித்து எடுத்து வரப்பட்டது, சுழல் துப்பாக்கியின் சொந்தக்காரர் யார் என்பது போன்ற விபரங்களைப் போலீஸார் பரம ரகசியமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை வெளிப்படுத்துவதன் மூலம் தீவிரமான புலன் விசாரணைக்குக் குந்தகம் ஏற்பட்டு விடும் என்பது அவர்களுடைய அபிப்பிராயமாக இருக்கிறது.

நேற்று இரவு அந்த கம்பெனியின் மற்றொரு பங்குதாரரான ஆத்மாராம் சேட் தம் அறையில் தூக்கிட்டுக் கொண்டு தற்கொலைக்கு ஆளாகியிருக்கிறார். எந்த விஷயத்தில் வெறுப்படைந்து அவர் தற்கொலைசெய்து கொண்டார் என்பது தெரியவில்லை. அவரால் எழுதி வைக்கப்பட்ட கடிதம் ஏதும் அகப்படவில்லை.

அவருடைய மனைவியான பியாரி சினிமாவிற்குச் சென்றிருந்த சமயத்தில் ஆத்மாராம் சேட் தற்கொலை செய்து கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

° ° ° °

*இதே செய்தியைக் கல்கத்தாவிலிருந்த அப்துல்லா படிக்காமல் விடவில்லை. தன் பாகஸ்தர்களின் துர்ப்பாக்கிய மரணத்திற்காக அப்துல்லா இரண்டு சொட்டு கண்ணீர் உகுக்க மட்டிலுமே நேரம் இருந்தது. அதற்காக அவன் அதிக நேரம் துக்கம் கொண்டாடிக் கொண்டிருக்க அவகாசமற்று இருந்தான். அதற்குக் காரணம் பர்மாவிலிருந்து வந்த ஒரு கடிதமேயாகும்.*

*அந்தக் கடிதம் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது:*

*"முதலாளி அவர்களுக்கு ரங்கூன் ஏஜண்டு காளாத்தி முதலியார் சலாம் வைத்து எழுதிக் கொண்டது என்னவென்றால், முந்திய என் கடிதம் பார்த்திருப்பீர்கள். பட்டாபி என்னிடம் அந்தரங்கமாகச் சொன்ன விஷயங்களையும், அவனது அடுத்த திட்டத்தையும் உங்கட்குத் தெரியப் படுத்தவே இக்கடிதம் அவசரமாக எழுதலானேன்.*

இப்போது பட்டாபி பெரிய திட்டம் தீட்டியிருக்கிறான். அதுபடி செய்யும்படி இந்தியாவில் உள்ள தன் மகனுக்கு அவன் கடிதம் எழுதியிருப்பதாகத் தெரியவருகிறது.

அவன் திட்டம் இதுதான். ஆனந்தரங்கன் எப்படியேனும் ஆத்மாராம் சேட்டைத் தன்னைக் கட்டிக்கொண்டு அவனைக் கொண்டே ஆளவந்தார் நாயுடுவைக் கொலை செய்து விடவேண்டும்; பிறகு இருவருமாகச் சேர்ந்து ஆளவந்தார் பதுக்கி வைத்திருக்கும் பணத்தைத் தேடி எடுத்து பங்கு செய்து கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆனந்தரங்கன் வேறொரு தந்திரத்தை மேற்கொண்டு—அதாவது ஆத்மாராம் சேட்டைப் பயமுறுத்தி ஆளவந்தாரைக் கொன்றது அவனேதான் என்று காட்டிக் கொடுப்பதாகக் கூறிப் பயமுறுத்தி, அவனிடமிருக்கும் எல்லாப் பணத்தையும் ஆனந்தரங்கன் அபகரித்துக் கொண்டு விடவேண்டும். இப்போதைக்கு உங்களிடம் அவன் வாலாட்டக் கூடாது என்று திட்டம். அதனால் ஆத்மாராமிடமிருந்தும் ஆளவந்தாரிடமிருந்தும் அபகரித்த பணத்தை எடுத்துக் கொண்டு, நாளை மறுநாள் புறப்பட இருக்கிற கப்பலில் ஆனந்தரங்கன் புறப்பட்டு விடவேண்டும். பணத்தை எப்படிக் கொண்டு வருவது என்பதற்கும் ஒரு நல்ல யோசனையை பட்டாபி ஆனந்த ரங்கனுக்கு அறிவித்திருக்கிறான். புறப்படப் போகிற கப்பலில் செத்துப் போன காப்டன் காசிநாதனின் சடலம் ரங்கூனுக்கு வருகிறதல்லவா; அந்தச் சவப் பெட்டியில் ஆனந்தரங்கன் பணத்தை ஒளித்து வைத்து விட்டால் கப்பல் இங்கு வந்ததும் அதை எடுத்துக் கொள்ளலாம் என்பது ஏற்பாடு. இதற்கு சென்னையிலுள்ள நமது ஏஜண்டும் உள் கை என்று தெரிகிறது.

இந்தத் தடவை உங்களுக்கு ஏதும் பட்டாபியால் ஆபத்து இருக்காது, இந்தப் பணம் பர்மா

வந்து சேர்ந்தபிறகு உங்களைக் கொள்ளையிட அடுத்த கப்பலில் திரும்ப ஆனந்தரங்கனை அனுப்பிவைப்பான் போலிருக்கிறது.

மற்றவைகட்கு உசிதம்போல் செய்யுங்கள்.

இப்படிக்கு
தாழ்மையுள்ள
**காளாத்திமுதலியார்.''**

கள்ளத்தோணிக் கலையில் கரைகண்ட அப்துல்லாவின் கண்கள் சிவந்து பொங்கின. வீடெங்கும் அவன் சுற்றி வந்த நடையின் வேகத்திலிருந்து, அவனுடைய எண்ணங்களும் யோசனைகளும் எவ்வளவு துரித கதியில் சுழல்கின்றன என்பது நன்கு புலனாகியது.

ஃ ஃ ஃ ஃ

'ஜலமோகினி' கப்பல் ரங்கூன் கிளம்ப ஆயத்தமாக இருந்தது. சுமந்து செல்லவேண்டிய சாமான்கள் யாவும் ஏற்றப்பட்டு விட்டன. பிரயாணிகளும் காலதாமதப் படுத்தாமல் ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவே கப்பலில் ஏறிக்கொண்டு விட்டனர். மேல் தளத்திலே அங்குமிங்கும் உலாவியபடி இருந்தான் ஆனந்தரங்கன்.

அவனோடு உஷா இல்லை, அன்னம்மாளையும் காணோம்! அவனை வழியனுப்பக் கூட அவர்கள் வந்ததாகத் தெரியவில்லை!

கிராதகனை ஆனந்தரங்கன் ஒருவரிடமும் தெரியப் படுத்தாமல் தொட்டுத் தாலி கட்டிய உஷாவைக்கூட அல்லவா ஏமாற்றி விட்டுப் போகத் துணிந்து விட்டான் என்றே எவருக்கும் எண்ணத்தோன்றும்!

கப்பல் புறப்படவேண்டிய நேரமும் வந்தது. நங்கூரம் மேலே இழுக்கப்பட்டது. ஜலமோகினி கப்பல் ஜலத்திலே ஜாலம் புரிந்துகொண்டு மிதக்க ஆரம்பித்து விட்டது.

கப்பலுக்கு எந்தவித விக்னமும் குறுக்கிடவில்லை. சுமுகமாகவே கப்பல் மிதந்து கொண்டிருந்தது ரங்கூனை, நோக்கி.

இரவு சுமார் பதினேரு மணி இருக்கும். தாலாட்டுவதுபோல கப்பல் லேசாக அலைகளால் அலைக்கழிக்கப்பட்டு மிதந்து கொண்டிருக்க, பிரயாணிகள் அனைவரும் சுகமாக நித்திரையில் ஆழ்ந்திருந்தனர்.

அப்போது தூரத்தே சிறியதொரு சிவப்பு வெளிச்சத்தைக் கண்ட கப்பல் காப்டன், கப்பலின் வேகத்தைச் சிறிது சிறிதாக மட்டுப்படுத்தி, கப்பலையே நிறுத்தி விட்டான். கப்பல் மிதக்கிறதா நின்றுவிட்டதா என்பது கூட எந்தப் பிரயாணிக்கும் தெரியவில்லை.

தூரத்தே தெரிந்த சிவப்பு வெளிச்சம் அணைந்து அணைந்து அடையாளம் காட்டிக் கொண்டே கப்பலை நெருங்கி வந்தது; அது ஒரு தோணி!

கப்பலை மிகவும் நெருங்கி வந்து நின்ற அந்தத் தோணியிலிருந்து ஓர் உருவம் கப்பலுக்குள் ஏறியது. சில நிமிடங்களுக்கெல்லாம் அந்த உருவம் பெரிய பெட்டி ஒன்றை நகர்த்த முடியாமல் நகர்த்தி வந்து கப்பல் விளிம்பிற்குக் கொண்டு வந்து ஏதோ சமிக்ஞை காட்டியது. தோணியில் இருந்த வேறு நால்வர், முதலில் ஏறிய உருவத்தோடு ஒத்துழைத்து அந்தப் பெரிய பெட்டியைத் தோணியில் ஏற்றிக் கொண்டார்கள்.

அதற்கு மேல் கப்பல் நிற்கவேண்டிய அவசியமே இல்லை. நகர ஆரம்பித்து விட்டது. தோணியும் வேறு திசையில் திரும்பி விரைந்தது.

அந்தக் கள்ளத் தோணியில் வந்தவன் வேறு யாருமில்லை. அப்துல்லாவே தான்! அவன் கடத்திக்கொண்டு சென்றது சவப் பெட்டி! கப்பல் காப்டனும் இதற்கு ஒத்துழைத்திருக்கிறன்!

இரவின் இருள் நீங்குவதற்கு முன்னதாகவே கள்ளத் தோணி கரை சேர்ந்துவிட்டது. கரையில் அவர்கள் வரவை எதிர்பார்த்தே காத்துக் கொண்டிருந்தது ஒரு பெரிய ஜீப்கார்.

தோணியில் இருந்த சவப் பெட்டி காருக்கு மாற்றப்பட்டது, ஜீப் கார் தனக்கே உரித்தான வேகத்தில் மேடு பள்ளம் என்பதையே சிறிதும் லக்ஷியம் செய்யாமல் சென்று, இறுதியில் ஒரு மாளிகையை அடைந்தது.

சவப்பெட்டி உள்ளே எடுத்துச் செல்லப்பட்டது. காரை எடுத்துச் செல்லும்படி டிரைவருக்கு உத்தரவு கொடுத்து அனுப்பின அப்துல்லா, சவப் பெட்டியைத் திறப்பதில் மும்முரமாக ஈடுபட்டான்.

மேல் மூடியைத் திறந்து ஆவலோடு உள்ளே பார்த்த அப்துல்லாவின் முகம் 'குப்'பென்று சிவந்தது. அதற்குள்ளே அவன் நினைத்தது போலப் பணமில்லை, அசல் சவமொன்று தான் இருந்தது.

ஏமாற்றத்தின் எரிச்சலோடு, பெட்டியை வெறிக்கப் பார்த்தான். உள்ளே இருந்த சவத்தின் மீது இருந்த ஒரு துண்டுக் கடுதாசியை எடுத்துப் பிரித்தான்.

அது பழைய ரீதியில் உள்ள அதே மரண ஓலை!

> "மூன்று அயோக்கியர்களும் ஒரு பேராசைக் காரனும் சேர்ந்து அபாரமான திட்டத்தோடு கண்டு பிடிக்க முடியாத வகையில் மகத்தான ஒரு கொள்ளையை நடத்தினார்கள். அதன் மூலம் கிடைத்த ஆதாயத்தை நால்வருமாகப் பங்கிட்டுக் கொண்டார்கள். அதில் மூவர் கணக்கை நேர் செய்து கொண்டுவிட்டார்கள். எஞ்சிய நீ இப் போது கணக்கை நேர் செய்து கொள்ள வந்திருக் கிறாய்!"

அப்துல்லா அந்தக் குறிப்பைப் படிப்பதில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கும் போது, சவப் பெட்டிக் குள்ளே இருந்த பிணம் மெதுவாக எழுந்து பின்பு விரைத்து நின்றது. "அப்துல்லா! கணக்கை நேர் செய்துகொள்ள இஷ்டம் தானே!" என்று அந்தப் பிணம் கர்ஜித்தது.

அப்துல்லா திடுக்கிட்டுத் திரும்பினான். சவப்பெட்டி யினின்றும் எழுந்து நிற்கும் பிணத்தின் இரு கைகளிலும் இரு சுழல் துப்பாக்கிகள் இருப்பதைக் கண்டதும் அப்துல்லா பயந்து தப்பி ஓட முற்பட்டான்.

"ஓடினால் ஓர் அடி தாண்டுவதற்குள் செத்து விழுவாய்! நில் அப்படியே!" என்று கிடுகிடுக்கும்படி யாகக் குரல் எழுந்தது.

பெட்டியிலிருந்து எழுந்து நின்றது செத்த பிணமல்ல; சாகாத பிசாசு போன்ற துப்பறியும் ராஜாமணியே யாகும்!

என்றும்போல அன்றும் ஓலமிட்டன எல்லாத் தினப் பத்திரிகைகளும்! **"நான்கு வருஷத்திற்கு முன்னால் நடந்த கடற் கொள்ளை. நாசக்காரர்கள் பிடிபட்டார்கள்!"** என்ற தலைப்பைச் சுமந்து கடையெங்கும் தொங்கியது வால் போஸ்டர்கள். பத்திரிகைகள் தந்த செய்தியைப் படித்து விட்டுப் பரபரப்படைந்தனர் மக்கள்.

ஆனால் போலீஸ் ஆபீஸில் உயர்தர அதிகாரிகளுக்கு மத்தியிலே உட்கார்ந்திருந்த துப்பறியும் ராஜாமணியிடம் கொஞ்சம்கூடப் பரபரப்புக் காணப்படவில்லை. ஆச்சரியப் படத்தக்கதாக எதுவுமே நிகழாதது போல அமைதி யுடனேயே ராஜாமணி இருந்தார்.

கைகளிலும் கால்களிலும் விலங்கு பூட்டப்பட்டு இருந்த அப்துல்லா, ஒரு மூலையிலே உட்கார்ந்து கிடந்தான்.

"வாயால் விவரித்து நான் யாவற்றையும் சொல் வதைவிட நான் எழுதி வைத்திருக்கும் டைரியைப் படித் தால் எல்லாமே தெரிந்துவிடும்!" என்று சொல்லி, துப்பறியும் ராஜாமணி கொடுத்திருந்த டைரியை வெகு சுவாரசியமாகப் படிப்பதில் ஈடுபட்டிருந்தார் பெரிய போலீஸ் அதிகாரி.

## ராஜாமணியின் டைரி

ஜனவரி 3; திங்கள் கிழமை

'ஜல மாயா' என்னும் கப்பல் ஏதோ விபத்திற் குள்ளாகி வெடித்து கடலில் மூழ்கி விட்டதாக இன்று செய்தி வந்தது, எதேச்சையான ஒரு விபத்தாக இருந் தாலும், சந்தேகக் கண்களோடு எதையும் நோக்கி, தீர்க்க மாகத் தெரிந்து கொள்ள முற்படும் போலீஸ் இலாக்கா,

ஜல மாயா கப்பல் மூழ்கியது பற்றி ஆராயும்படி எனக்கு உத்திரவிட்டது. அந்த விபத்து பற்றி சர்க்கார் தந்த அறிக்கையையும் வாசித்துப் பார்த்தேன். இடையே என் மனதிற்கும் ஒரு சந்தேகம் தட்டியது. ஒரு கப்பல் வெடித்து மூழ்கியபோது வேறு யாரும் அதிலிருந்து மீளவில்லை. நால்வர் தெய்வாதீனமாகத் தப்பித்திருக்கிறார்கள். அந்த நால்வர் பிரதான புருஷர்கள். கப்பல் கம்பெனியின் முதலாளிகள் மூவர்; கப்பல் காப்டன் ஒருவன்!

எதேச்சையாக நடந்த அந்த விபத்திலே சொல்லி வைத்தாற்போல அந்த நான்கு பேரை மட்டிலுமா கடவுள் காப்பாற்றிக் கரை சேர்த்தார்?

இந்த ஒரு சந்தேகம் என்னைப் பலமாகப் பிடித்தாட்டியது. அன்று முதல் சர்க்கார் எனக்கெனத் தந்திருந்த மோட்டார்ப் படகில் தினமும் சென்று எந்த இடத்தில் கப்பல் விபத்துக்குள்ளானதோ, அதன் சுற்றுப் புறங்களை ஆராய்ந்த வண்ணமிருந்தேன்,

கடலில் மீது நான் அலைந்த அலைச்சல் வீணாகவில்லை. நீரில் மிதந்து கொண்டிருந்த ஒரு சடலம் என் கைக்கு அகப்பட்டது, அதை எடுத்துக் கொண்டு கரை வந்து சேர்ந்தேன். அந்தப் பிணத்தைச் சோதனையிட்டபோது, அந்தப் பிணத்தின் கையில் குத்தப்பட்டிருந்த பச்சையைக் கவனித்தேன். 'பட்டாபிராம், பாண்டிச்சேரி' என்ற எழுத்துகள் ஸ்பஷ்டமாகத் தெரிந்தன.

கடலிலிருந்து கண்டெடுக்கப்பட்ட இந்த மனிதன் மூழ்கிய ஜலமாயாவில் பிரயாணம் செய்தவர்களில் ஒருவனாக இருக்கலாமோ என்ற சந்தேகம் எழுந்தது.

கப்பலில் பிரயாணம் செய்தவர்களின் அதிகார பூர்வமான ஜாபிதாவை கப்பல் கம்பெனியிலிருந்து பெற்றுவந்து அதிலே பாண்டிச்சேரி பட்டாபியின் பெயர் இடம் பெற்றிருக்கிறதா என்று பார்த்தேன். காணவில்லை!

ஜனவரி 4, செவ்வாய்க்கிழமை

இந்தப் பிணத்தால் நமக்கொன்றும் பிரயோசனமில்லை என்று நான் ஒதுக்கிவிடவில்லை. பாண்டிச்சேரி பட்டாபி நீரில் ஏன் மிதக்கிறான் என்பதையும் அறிந்து

கொள்ள ஆவல் கொண்டேன். இதன் காரணமாக பாண்டிச்சேரி போனேன். பட்டாபி என்பவனைப்பற்றி பல பேர்களிடம் விசாரித்தேன். அலைச்சல் வீண் போக வில்லை.

ருசிகரமான தகவல் ஒன்று கிடைத்தது. பட்டாபி இரண்டு வருஷங்களுக்கு முன்னுல் பாண்டிச்சேரியில் வாழ்ந்தவனென்றும், பெரியதொரு புள்ளியாக பாண்டிச் சேரியில் விளங்கினுன் என்றும், கள்ளக் கடத்தலும் கள்ளத்தோணியுமே அவனது தொழிலாக அப்போது இருந்ததென்றும், போக்கிரிகளிடையே அவனுக்குச் செல்வாக்கு இருந்ததென்றும் தெரியவந்தது. பிறகு அவன் ஆளவந்தாரோடு சேர்ந்து கப்பல் கம்பெனியில் பங்கு பெற்றிருந்ததையும் அறிந்து கொண்டேன்.

மேலும் அவனைப்பற்றிய தகவல் கிடைத்தது. கப்பல் கம்பெனி பங்குதாரராகிய பின் அவன் பர்மா சென்று விட்டான். அதற்குப் பிறகு அவன் என்றுமே பாண்டிச் சேரிக்கு வந்ததில்லை.

ஆளவந்தார் நாயுடுவிடம் வந்து பட்டாபியைப்பற்றி விசாரித்தேன். அவனுடைய சவத்தை நான் கண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை, சில காலம் தன்னேடு பங்கு தாரராக இருந்து பின்பு அவன் விலகிக் கொண்டதாகவும், பர்மாவிலேயே தங்கிவிட்டதாயும் கூறினுர். பட்டாபியின் ரங்கூன் விலாசம் பற்றிக் கேட்டேன். பங்கை வெட்டிக் கொண்ட பிறகு அவனேடு தமக்கு எந்தவிதத் தொடர் புமே இல்லாததால் விலாசம் தெரியாது என்று ஆளவந் தார் கூறிவிட்டார்.

ரங்கூன் சென்றேன். ஆறு மாத காலம் அலைந்து திரிந்தும் பட்டாபியைப்பற்றி எதுவுமே தெரிந்து கொள்ள முடியவில்லை. அலைந்தது தான் மிச்சம். அவனைச் சமீபத்தில் பார்த்ததாக யாருமே சொல்லவில்லை. மிகச் சோர்வோடு திரும்பினேன்.

என் மனதிற்குள்ளே மாற்றிக் கொள்ளமுடியாத ஓர் அபிப்பிராயம் விழுந்துவிட்டது. கவிழ்ந்த கப்பலுக்கும் பட்டாபிக்கும் ஏதோ ஒரு வகையில் சம்பந்தம் இருக்க வேண்டும் என்று திடமாக நம்பினேன். கஜினி முஹம்மது

வெற்றி காண பல தடவை படையெடுத்திருக்கும் போது, நான் மறுபடியும் பர்மா செல்லத் தயங்கவில்லை.

**டிசம்பர் 6 : வெள்ளிக்கிழமை**

இந்தத் தடவை தீவிரமாக நான் சலியாமல் அலைந்ததால் பட்டாபியைத் தெரிந்த ஒருவனை நான் சந்திக்க முடிந்தது. அவனே காளாத்தி முதலியார். ஆளவந்தார் அண்டு அப்துல்லா கம்பெனியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவன். தரகுக் காரனுகவும் ஏஜண்டாகவும் இருந்துவந்தான். அவனிடமிருந்து விஷயம் கிரகிப்பது கல்லிலிருந்து நார் உரிப்பது போலிருந்தது. அவனை நாராக உரித்துத்தான் நானும் விஷயத்தைக் கிரகிக்க வேண்டியிருந்தது. அவன் என் புலன் விசாரணைக்கு மிகவும் உபயோகமுள்ளவனுக இருந்தான். அவன் மூலம், ஆளவந்தார் அண்டு அப்துல்லா கம்பெனியார் எந்தெந்த விதத்தில் விசா இல்லாதவர்களுக்கெல்லாம் உபகாரியாக இருந்திருக்கிருர்கள் என்பது புரிந்தது.

காளாத்தி முதலியாரை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டேன். ஜல மாயா கப்பல் மூழ்குவதற்கு முன் அதிலே கள்ளப் பிரயாணிகள் எத்தனை பேர் இருந்தார்கள் என்பதைக் கேட்டேன். அந்த 'டிரிப்' விஷயம் தனக்குத் தெரியாது என்றும், பாங்கர் லாசா மரைக்காயர் மூலமே அந்த 'டிரிப்' நடந்திருக்கிறதென்றும் உளறி விட்டான்.

பாங்கர் லாசா மரைக்காயரிடம் அலையாய் அலைந்தேன். நான் ஒரு துப்பறிபவன் என்பதாகவே காட்டிக் கொள்ளவில்லை. பாண்டிச்சேரி பட்டாபியிடம் பத்தாயிரம் கொடுத்து வைத்ததாகவும் அவனைத் தேடி அலைவது போலவும் சொல்லிக் கொண்டேன். ஓயாமல் அலையும் என் அலைச்சலைக் கண்டு பரிதாபப்பட்ட அவர், அவன் செத்துவிட்டதாகச் சொன்னுர்.

அவ்வளவு சொன்னுல் போதாதா எனக்கு! பிடித்துக் கொண்டேன் அவரை. பட்டாபி பற்றி உள்ளதைச் சொல்லிவிட்டால், அவர் கெளரவமாக வாழ வழி தருவதாக உறுதி கூறினேன். ஜல மாயா மூழ்கிய அந்த 'டிரிப்'பில் இருபது பெரும் பணக்காரர்கள் கள்ளத்தன

ாள்ள ஆவல் கொண்டு ... , கப்பல் கட்டணமாக
ண்டிச்சேரி போனேன் ... ரக்காயர் வசூலித்தது
ப பேர்களிடம் வி... றும், அந்தப் பிரயாணிகள்
ல்லே. ... ணம் சுமார் அறுபது லட்ச
... மதக் கருதி அத்தொகையை
ருசிகர ... ாப்டனிடம் ஒப்படைத்தாகவும்
ரண் ... ரயாணிகளில் ஒருவன் பட்டாபி
... யன் கொண்டு சென்ற தொகை

... ரக்காயர் சர்க்காரின் கண்களுக்கு
... ல் அவருடைய பிரதான வருமானம்
கள் ... ன் மூலம், ஆளவந்தார் அண்டு அப்
துல்லா ... யின் கப்பலில் விசா இல்லாத பிரயாணி
களை நடுக்கடலுக்குக் கொண்டு சென்று ஏற்றிவிடுவதும் 'விசா' இல்லாமல் இந்தியாவிலிருந்து வரும் பிரயாணிகளை, நடுக் கடலில்எதிர் கொண்டு வந்து அழைத்துவருவதும் அவரது பொறுப்பில் இருந்து வந்திருக்கிறது. அதன் மூலம் பெரும் பணம் திரட்டியிருக்கிறார்.

**ஜனவரி 17 : சனிக்கிழமை**

ஜல மாயாவுக்கு ஏற்பட்ட விபத்து பற்றிக் கேட்டேன். அதன் முதலாளிகள் வேண்டுமென்றே கவிழ்க்கக் கூடியவர்கள் தான் என்ற அபிப்பிராயம் தந்தாரே ஒழிய, பரிபூரண உண்மை தெரிந்தவராகத் தெரியவில்லை.

பல யோசனைக்குப் பின் உத்தேசமான ஒரு முடிவுக்கு வந்தேன். 'ஜல மாயா' கப்பலை மூழ்கடித்தது ஒரு சதியாகவே இருக்க வேண்டுமென்றும், அதன் மூலம் கிடைக்கிற பல லட்ச லாபத்தைக் கருதி காரியம் நடத்தப்பட்டிருக்க வேண்டுமென்றும் நிச்சயம் செய்து கொண்டேன், பண ஆசை காரணமாக நடத்தப்பட்ட ஒரு பயங்கரச் செயலானால், அதைக் கண்டு கொள்வதில் கஷ்டமில்லை. அதற்கு ஒரு வழி இருந்தது.

மூழ்கிவிட்ட கப்பலை நீருக்கு மேலே கொணர்ந்து சோதனையிட்டுப் பார்க்கக் கடற்படையினரின் உதவியை நாடினேன். அவர்களும் ஒத்துழைத்தார்கள். அந்தக் கப்பலை எவ்வளவோ குடைந்து பார்த்தும் ஒரு கரன்ஸி

நோட்டு கூடக் கைக்கு அகப்படவில்லை. நிச்சயமாகத் தெரிந்துவிட்டது, இது ஒரு கடற் கொள்ளை என்று!

சதித்திட்டம் நன்ருகப் புரிகிறது. ஆனல் சட்டம் ஏற்றுக் கொள்கிற வகையில் சாட்சியம் எதுவுமில்லை. அதனுல் நேரடி நடவடிக்கை எடுத்துக் கப்பல் கம்பெனி முதலாளிகளைக் கைது செய்ய முடியவில்லை.

கப்பலில் பிரயாணம் செய்தவர்களில் ஒருவர் உயிரோடு இருந்தாலும் போதும்! அவரைப் பிரதான சாட்சியமாக வைத்து குற்றவாளிகளைத் தீர்த்துக் கட்டி விடலாம். கப்பலை வேண்டுமென்றே கவிழ்த்தார்கள் என்பதைச் சொல்ல நேரிடை சாட்சியம் இல்லாத நிலையில் நான் எதுவுமே செய்ய முடியாமற்போயிற்று. சதியை அம்பலப்படுத்திக் குற்றவாளிகளைத் தண்டனை பெறச் செய்ய வேண்டுமானுல் ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. கப்பல் கம்பெனி முதலாளிகள் மூவர், காப்டன் ஆக நான்கு பேர்களில் ஒருவரை 'அப்ருவராக்கி' விட்டால் போதும்!

இது இலேசான காரியமா?

கஷ்டமானது தான்! கொக்கு தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்க முயற்சிக்கும் ஒரு செயல் போன்றது தான்!

இருந்தாலுமென்ன? முயற்சித்துப் பார்க்கலாமே என்று துணிந்து முனைந்தேன்.

**பிப்ரவரி 28: வியாழக்கிழமை**

'குற்றமுள்ள நெஞ்சு குறு குறுக்கும்' என்ற பழமொழி ஞாபகம் வந்தது. குற்றமுள்ள நெஞ்சம் எதெது என்பதாக நான் கருதுகிறேனே, அவற்றையெல்லாம் குறு குறுக்க வைத்தால் எந்த விதத்திலாவது சாதகம் காணமுடியாதா என்று எண்ணினேன். உடனடியாகச் செயலிலும் இறங்கினேன்.

இந்த எண்ணத்தோடு நான் எடுத்துக் கொண்ட முதல் நடவடிக்கை லாசா மரைக்காயரையும், காளாத்தி முதலியாரையும் என் கண்காணிப்பில் வைத்துக்கொள்ள

விரும்பி, கைது செய்து. விமானத்தில் இந்தியாவுக்கு அனுப்பிவைத்தேன்.

இதற்குப் பிறகு என்னுடைய புலன் விசாரணைக்கு மிக மிக உதவியாக இருக்க ஆனந்தரங்கனைப் பயன் படுத்திக் கொண்டேன். அவனைக் கொண்டு ஆளவந்தாருக்குக் கடிதம் எழுதச் சொன்னேன். சாதகமான பதில் அவரிடமிருந்து கிடைத்தது. குற்றவாளியின் வீட்டிற்குள்ளே ஓர் உளவாளியை சாமர்த்தியமாகத் திணிக்க நான் எடுத்து கொண்ட முதல் முயற்சியில் வெற்றி பெற்று விட்டேன்.

இனி எனக்குப் பர்மாவில் வேலையில்லை. ஆனந்தரங்கனோடு ஜல தாரா கப்பலில் இந்தியா புறப்பட்டேன்.

பர்மாவிலிருந்து நான் வாங்கிக் கொண்ட சாமான்கள் இரண்டே இரண்டு தான். பத்து ரூபாய்க்கு பர்மா ஸ்டாம்புகள். பிளாஸ்டிக் களிம்பு ஒரு டப்பி! இந்த இரண்டும் எதற்குமில்லை, குற்றமுள்ள நெஞ்சுகளில் பயத்தையும் பீதியையும் கிளப்பிவிட தபால் முத்திரைகளும் சமயத்திற்கேற்றாற் போல முகத் தோற்றத்தை மாற்றிக் கொள்ள பிளாஸ்டிக் களிம்பும் அத்தியாவசியமான பொருள்களாக இருந்தன.

நான் பிரயாணம் செய்து வந்த ஜல தாராக் கப்பல் இந்தியக் கரையை நெருங்கியது. நான் குறி வைத்திருக்கும் நாலு குற்றவாளிகளில் கப்பலைச் செலுத்திவரும் காப்டனும் ஒருவனல்லவா! அவனுடைய குற்றமுள்ள நெஞ்சிலே குறு குறுப்பைக் கிளப்ப ஆயத்தமானேன்,

பிளாஸ்டிக் களிம்பைக் கொண்டு என் முகத்தை மாற்றிக் கொண்டு பட்டாபியின் முக ஜாடையைப் பெற்றேன். இரவு வேளையாதலால் கப்பல் அமைதியை நிலவவிட்டுக் கொண்டிருந்தது. காப்டன் காசி நாதன் தன் அறையில் தனித்து உட்கார்ந்து கொண்டிருந்தான். படுக்கை கட்டும் கயிறோடு அவன் அறைக்குள் நுழைந்தேன். என்னைப் பார்த்ததும் திடுக்கிட்டான். குற்றமுள்ள நெஞ்சம் என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது, ''யார்

அது? பட்டாபியா?'' என்று அவன் திகைத்துக் கேட்டான்.

"ஆமாம் காப்டன்!...இப்போது இந்தக் கப்பல் மிதந்து கொண்டிருக்கிறதே, இதே இடத்தில் தானே ஜல மாயாக் கப்பலைக் கவிழ்த்தாய்?...திரும்ப மற்றொன்றை அதே போல நீ நடத்தி நான் பார்க்க ஆசை! என்ன சொல்கிறாய் காப்டன்?'' என்றேன்,

அவன் முகத்திலே வியர்வை அரும்பிற்று. பீதி கக்கித் தள்ளும் துர் நீர் அது! "பட்டாபி!...பட்டாபி!'' என்று அவன் பலதரம் சொல்லிக் குழம்பினான்.

"விபத்திலே நீ மட்டும் தப்பிக்கும் போது நான் ஏன் தப்பித்திருக்க முடியாது?....செத்தேவிட்டேன் என்று நீ நினைத்து விட்டாயல்லவா? கணக்கை நேர் செய்து கொள்ளத் திரும்பிவருவேன் என்று நீ நினைக்கவேயில்லை அல்லவா?'' என்றேன்.

"என்னைக் கொல்லப் போகிறாயா பட்டாபி?'' என்று பதறினான் அவன்.

"நான் சொல்கிறபடி செய்தால் நான் உன்னைக் கொல்லமாட்டேன். கப்பல் கரையை அடைந்ததும் போலீஸார் தயாராய் இருப்பார்கள். 'ஜல மாயா' கவிழ்க்கப்பட்ட கதையை உள்ளது உள்ளபடி நீ அவர்களிடம் வாக்கு மூலம் கொடுத்தாயேயானால் உனக்கு உயிர்ப் பிச்சை யளிக்கிறேன்!''

"ஐயோ! நிஜத்தைச் சொன்னால் நீ பிச்சைபோடும் உயிரை அவர்கள் அபகரித்துக் கொண்டு விடுவார்களே!'' என்று அவன் அலறினான்.

"நீ அப்ரூவராக மாறி கோர்ட்டாரின் மன்னிப்பைப் பெறலாம்!'' என்றேன்.

"மன்னிப்பைப் பெற்றாலும் என் உயிருக்கு ஆபத்து நீங்காது. அப்துல்லாவோ, ஆளவந்தாரோ, ஆத்மாராமோ நான் தானே காட்டிக் கொடுத்தேன் என்ற வர்மம் கொண்டு என் உயிரைத் தீர்த்துவிடுவார்கள்!'' என்றான்.

அவனுக்கு எவ்வளவோ ஆறுதல் வார்த்தைகள் கூறி வசப்படுத்தினேன். அப்ரூவராக அவன் ஒப்புக் கொண்

டான். எடுத்த எடுப்பிலேயே வெற்றியடைந்து விட்டோமே என்ற ஆனந்தத்தில் அன்று ஆழ்ந்த தூக்கத்தை மேற்கொண்டேன்.

விடிந்து கண் விழித்த போது என்னுடைய பாக்கிய சக்கரம் தலைகீழாய்ச் சுற்ற ஆரம்பித்துவிட்டதை உணர்ந்தேன். கப்பல் காப்டன் தற்கொலை செய்து கொள்வதையே பெரிதெனக் கருதிவிட்டான்! காரியத்தையும் முடித்துக் கொண்டுவிட்டான்!

காப்டனை அப்ரூவராக்க நான் எடுத்துக் கொண்ட முயற்சி வீணாகிவிட்டது.

இந்தியா வந்த பிறகு நானும் ஆனந்தரங்கனும் பிரிந்து எலியும் பூனையும் போல நாடகமாட முற்பட்டோம்.

ஆனந்தரங்கனை மையப் புள்ளியாக வைத்து குற்றமுள்ள நெஞ்சுகளைக் கலக்கிவிட்டேன். பர்மா ஸ்டாம்புகளும், காளாத்தி முதலியாரும், லாசா மரைக்காயரும் எனக்கு மிகவும் பயன்பட்டார்கள். ஆனந்தரங்கன் சதித் திட்டத்தோடு வந்திருப்பதாக ஒரு புரளியை ஆளவந்தார், அப்துல்லா, ஆத்மாராம் ஆகியவர்களிடையே கிளப்பினேன். ஒவ்வொருவரும் தாங்கள் கொள்ளையடித்த பணத்தை எங்கே எப்படிப் பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்பதை அறியவே, ஆனந்தரங்கனுக்கு யோசனை கூறி ஆத்மாராமை மிரட்டிப் பணம் கேட்கச் சொன்னேன். உஷாவின் மீது அன்பு கொண்டிருப்பதாகக் காட்டி, அவள் மூலம் ஆளவந்தாரின் பணம் எங்கு ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளச் செய்தேன். அதெல்லாம் வெற்றிகரமாகவே நடந்து விட்டது!

ஆளவந்தாரைக் கண்காணிக்க ஆனந்தரங்கன் இருந்ததால், ஆத்மாராமைப் பின் தொடர்ந்து வேவு பார்க்கும் வேலையை நான் ஏற்றுக் கொண்டேன். அதனால் தான் பார்க்கில் வேப்பமரத்தின் மீது நான் உட்கார்ந்து ஆளவந்தாரும் ஆத்மாராமும் பேசிக் கொண்டதைக் கவனிக்க முடிந்தது. தியேட்டரில் வைத்து ஆளவந்தார் கையில் ஆத்மாராம் சுழல் துப்பாக்கி கொடுத்ததை அறியமுடிந்தது. ஆனந்தரங்கனைக் கொல்ல

எந்தவிதமாகச் சதி செய்கிறார்கள். என்பதை உணர முடிந்தது. நான் எச்சரிக்கையானேன். சவப் பெட்டி ஆளவந்தாரின் அறைக்கு வந்த பிறகு வாசற் கதவை ஆளவந்தார் திறந்து வைத்தது செளகரியமாகப் போய் விட்டது.

⁘ ⁘ ⁘ ⁘

அன்று இரவு பட்டாபியின் முக ஜாடையோடு ஆளவந்தாரை மிரட்டினேன். நயமாகப் பேசினேன். சாதுரியமாகப் பேசினேன். தந்திரமான என் பேச்சின் மூலம் அவரை அப்ரூவராக மாறிவிடும்படி தூண்டினேன். பைத்தியக்கார மனுஷன், எதையோ நினைத்துக் கொண்டு கையிலிருந்த துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுக் கொண்டுவிட்டார்!

இது என் இரண்டாவது தோல்வியாகிவிட்டது.

ஆனந்தரங்கனின் சவத்தை எடுத்துப்போக ஆத்மா ராம் சேட் வருவான் என்பது எனக்குத் தெரியும்.

ஆத்மாராமை என் வழிக்குக் கொண்டுவர வேண்டு மானால் ஒரே ஒரு மார்க்கம் தான் இருந்தது; ஆளவந் தாரை அவனே கொன்றதாக ஒரு மிரட்டு மிரட்டினால் பலன் கிடைக்கும் என்று நினைத்தேன். அந்த முயற்சியின் முதல் கட்டமாக தற்கொலை செய்து கொண்ட ஆளவந் தாரைச் சவப்பெட்டிக்குள் திணித்தேன்.

நடுநிசியில் வந்தான் ஆத்மாராம்: சவப்பெட்டியைத் தூக்கிக் கொண்டு போய்விட்டான்!

மயக்க முற்றிருக்கும் ஆனந்தரங்கனை நான் கடத்திச் சென்றேன். அதோடு ஆளவந்தாரின் பணத்தையும் சேர்த்துக் கடத்தினேன். சிறிது நாள் அவன் யார் கண் ணுக்கும் தட்டுப்படாமல் இருக்க எச்சரித்தேன். காரணம் சவப் பெட்டியில் இருக்கும் சவம் ஆனந்தரங்கனுடையது என்பதாக ஆத்மாராம் எண்ணிக் கொண்டால் தான், நான் அப்துல்லாவைச் சந்திக்க முடியும்.

ஆத்மாராம் கல்கத்தா புறப்பட்ட போது கரன்ஸிங் ரூபமெடுத்தேன். என் கண்காணிப்பில் இருந்த மைசா

மரைக்காயரிடம் உண்டி எழுதி வாங்கிக் கொண்டேன். அப்துல்லாவை சுமுகமான முறையில் அறிமுகம் செய்து கொண்டேன்.

கடைத்தெருவிலே ஆத்மாராம் புதுப் பெட்டி வாங்கினான். எதற்காக என்பது எனக்கு முன் கூட்டியே தெரியும். ஐந்து லட்சத்தை அவன் தட்டிக் கொண்டு போகக்கூடாது. ஆத்மாராம் வாங்கிய பெட்டியில், அதே வர்ணத்தில் அதே மாதிரி நானும் ஒரு பெட்டி வாங்கினேன். திரும்பும் பிரயாணத்தின் போது பெட்டியை மாற்றி எடுத்துக் கொண்டு கம்பி நீட்டினேன். ஆத்மாராம் சேட் தன் வீடு போய் பெட்டியைத் திறந்துபார்த்தால் கல்லும் மண்ணும் தான் இருக்கும்!

கல்கத்தா போகும் போது ஆனந்தரங்கத்திற்கு ஒரே ஒரு வேலை சொல்லிச் சென்றேன், ஆத்மாராமின் ரகசிய அறையிலிருந்து பணத்தையெல்லாம் அள்ளி வந்து விட வேண்டுமென்று. கெட்டிக்காரத் தம்பி! காயலான் கடைக் காரன் வேஷம் போட்டு, பியாரியை ஏமாற்றி, சாமான்களை அப்புறப்படுத்துவது போலப் பாவனைசெய்து பணத்தையும் அப்புறப்படுத்தி வந்து விட்டான்.

இனி நான் ஆத்மாராமை அப்ரூவராக்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டும். இது ஆகாத காரியமாகத் தோன்றினால் தான் அப்துல்லாவை முயற்சிக்க வேண்டும்!

ஆத்மாராமை அவன் வீட்டிலே போய்ச் சந்தித்தேன். ஆளவந்தாரைக் கொலை செய்தது நீ தான் என்று சொல்லி பயமுறுத்திப் பார்த்தேன். ஆள் மசியவில்லை. எமகாதகன். என்னையே திணற வைத்துவிட்டான். திரும்பினேன்.

அவனும் அன்றிரவு தற்கொலை செய்து கொள்வான் என்று நான் எதிர் பார்க்கவில்லை. அவன் தற்கொலை செய்து கொள்ளக் காரணமே வேருக இருக்க வேண்டும்.

அவனுடைய பணத்தை நாங்கள் அபகரித்துக் கொண்டு விட்டோம்; திருடு போய்விட்டது என்று புகார் கொடுக்க முடியாத நிலை, மேலும் ‘பணமில்லாதவன் பிணத்துக்குச் சமானம்’ என்ற தீவிர சித்தாந்தம் கொண்டவன். பணம் பறி போய் விட்டதால் அவன் பிணமாகிவிட்டான்.

அப்ரூவரைத் தேடியலைந்த முயற்சியில் நான் மூன்ருவது தோல்வியை அடைந்து விட்டேன்.

கொக்கு தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பது ஆகாத காரியம் என்ற முடிக்கு வந்து விட்டேன். எந்த விதத்திலாவது அப்துல்லாவை 'உயிரோடு கொண்டுவந்து அப்ரூவர் ஆக்கிவிட வேண்டும்; இல்லாவிட்டால் இந்தக் கேஸ் எனக்கு ஒரு படுதோல்வியாகிவிடும்!

சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்பார்கள். காளாத்தி முதலியாரைக் கொண்டு அப்துல்லாவுக்கு ஒரு கடிதம் எழுதி வாங்கித் தபாலில் சேர்த்துவிட்டேன். கையில் மிச்சமிருக்கும் பர்மா ஸ்டாம்பு வரவரக் குறைந்து கொண்டே இருக்கிறது!

கப்பல் கம்பெனி லோகல் ஏஜண்டு ரொம்பவும் நல்லவன், சொன்னது சொன்னபடி ஆடினுன், பரிபூரண மாக பரம ரகசியமாக ஒத்துழைப்பதாக அவன் உறுதி மொழியும் தந்திருக்கிருன், அவன் எப்படிப்பட்ட சத்ய வந்தன் என்பது முடிவிலே தான் தெரியும்.

நம்பிவிட்டேன் அவனை. காப்டனைத் திணித்து வைத் திருந்த சவப் பெட்டி எனக்காகக் காலி செய்யப்பட்டு விட்டது. கப்பல் புறப்படத் தயாராகிவிட்டது. லோகல் ஏஜண்டு சவப் பெட்டியை கப்பலில் ஏற்றத் துடியாய் நிற்கிருன். பிராண வாயு காற்றடங்கிய பையோடு நான் சவப் பெட்டிக்குள் படுத்தாக வேண்டும்.

அப்துல்லாவின் பேராசை இன்னும் தீராததாக இருந்தால் நிச்சயம் எப்படியேனும் வந்து சேர்வான். நானிருக்கும் சவப் பெட்டியைத் தூக்கிப் போவான். கையும் மெய்யுமாய்ப் பிடிக்கச் சரியான சந்தர்ப்பந்தான்!

பிறகு நான் வெற்றியடைவதோ தோல்வியடை வதோ என் சாமர்த்தியத்தைப் பொறுத்தது!

ஏனே என் மனதிற்குள்ளே ஒரு சஞ்சலம்; அச்சம். நான் வைத்துக் கொண்டிருக்கும் பையிலுள்ள பிராண வாயு 24 மணி நேரம் தான் தாங்கும். அதற்குள் அப்துல்லா வந்து சவப் பெட்டியைத் தூக்கிப் போய்

விட்டால் பாதகமில்லை. நல்ல புத்தியோடு அவன் அலக்ஷியமாக இருந்து விட்டானேயானால் நிச்சயம் நான் சவமாகிவிடுவேன்!

நான் செத்துவிட்டால் அப்புறம் என்ன நடக்கும் என்பதையும் யோசிக்காமல் இல்லை. 'கடமைக்காகவே உயிரைவிட்டான்' என்று அரசாங்கம் பிரகடனப் படுத்தி வீரப் பரிசாக என் மனைவியிடம் ஒரு தங்கப்பதக்கம் கொடுக்கும். அவ்வளவு தான்!

## 24 ஆனந்தரங்களின் ஆனந்தம்!

துப்பறியும் ராஜாமணியின் டைரியைப் படித்து முடித்த போலீஸ் அதிகாரி, "துப்பாக்கியையோ, குண்டாந் தடியையோ உபயோகிக்காமல் வெகு சாமர்த்தியமாகப் பெரியதொரு கூட்டத்தாரைச் சுற்றி வளைத்து விட்டீர்களே!" என்று வியந்தார்.

அப்போது அங்கே இருந்த இதர அதிகாரிகளில் அரை குடமும் ஒன்று இருந்தது. "கண்ணுக்குத் தெரிந்த குற்றவாளிகளைப் பிடிக்க ராஜாமணி அவர்கள் இவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வே டியதில்லை. எப்போது கப்பல் கம்பெனி முதலாளிகள் மீது சந்தேகம் விழுந்து விட்டதோ, அடுத்த நடவடிக்கையாக அவர்களைக் கைது செய்து கொண்டு, விசாரிக்கிறபடி விசாரித்தால் நடந்தது யாவையும் கக்கிவிட மாட்டார்களா!" என்று வெகு அலக்ஷியமாகக் கூறினார் அந்த அரைகுட அதிகாரி.

"குண்டாந்தடியும், உருட்டல் மிரட்டலும், கதியற்ற நாதியற்ற, பரம ஏழைகளிடம் செல்லுபடியாகும். அத்தகைய அப்பாவிகள் குற்றம் செய்தறியாதவர்களாக இருந்தாலும் உருட்டல் மிரட்டலுக்குப் பயந்து, செய்யாத குற்றத்தையும் செய்ததாக ஒப்புக்கொள்வார்கள்!" என்று சொல்லிவிட்டு ஏகத்தாளமாகப் பார்த்தார் துப்பறியும் ராஜாமணி.

அரைகுட அதிகாரி வெட்கிப் போய்விட்டார்!

பிறகு ராஜாமணி பொதுப்படையாக ஒரு விளக்கம் கொடுத்தார். "படிப்பு அதிகமில்லாத நாளில் பண்பு இருந்தது. அப்போது சட்டத்திற்குப் பலம் இருந்தது. இப்போது கல்வியறிவு நிறைந்துவிட்டது. இன்றைய நிலையில் சட்டத்திற்குள்ள பலத்தைக் காட்டிலும் பணத்திற்குப் பலம் அதிகமாகக் காண்கிறோம். பல வழக்குகளில் பணத்தை வாறி இறைத்து சட்டமே தப்பு என்று நிரூபித்து நிரபராதியாய் வெளியே செல்லும் பல குற்றவாளிகளை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்....

"கப்பல் கொள்ளையான இந்த வழக்கிலே நால்வர் குற்றவாளிகளாக இருக்கிறார்கள் என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. உண்மை தெரிகிறதே ஒழிய, அதற்கான சாட்சியம் கிடைக்கவில்லை. குற்றவாளிகளில் ஒருவர் அப்ரூவரானால் ஒழிய சாட்சியம் வலுப்பெறாது. கொஞ்சம் முன்னதாக அந்த அதிகாரி சொன்னாரே, அதே போன்ற நடவடிக்கை அந்த நான்கு பேர் விஷயத்தில் நடக்காது! அவர்கள் லட்சாதிபதிகள். விசாரணைக்கு வரச்சொன்னால் வக்கீல்கள் புடை சூழ வருவார்கள். ஸ்டேஷனில் நுழையும்போது அந்த விசாரணைப் பேர்வழிக்கு எதேச்சையாக காலில் முள் தைத்து ரத்தம் கசிந்துவிட்டால்கூட பிடித்தது சனியன், அந்த ஸ்டேஷன் அதிகாரிக்கு! என் கக்ஷிக்காரனை சித்ரவதைக்குள்ளாக்கி விட்டனர் என்று வக்கீல் பெரிய ஸ்டேட்மெண்ட் தயாரித்து விடுவார்! அந்தக் காரியத்தை பணக்காரர்களிடம் மேற் கொள்ள முடியாது என்பதை நான் உணர்ந்தேன். நான் ஒரு துப்பறிபவன். உளவு அறிபவன். இழைக்கப்பட்ட அநீதிக்கு யார் பொறுப்பாளி என்பதைக் கொஞ்சம் கொஞ்சமாக கிரகித்து, முடிவில் இவன்தான் குற்றவாளி என்று நான் காட்டவேண்டும். அதுவே என்கடமை. அந்தக் கடமையை நான் சரிவர நிறைவேற்றி விட்டேன் என்பதே என் திருப்தி!"

நாசூக்காக எவ்வளவு அழகாக ராஜாமணி பேசுகிறார் என்று வியந்து பார்த்தார் பெரிய அதிகாரி.

மேலும் ராஜாமணி சொல்ல வேண்டிய விஷயங்கள் பாக்கி இருந்தன. அதையும் அவர் கூறலானார்.

"ஆளவந்தார் நாயுடுவிடமும் ஆத்மாராம் சேட்டிடமும் இருந்த பதுக்கல் பணம் மொத்தம் நாற்பத்தி மூன்று லட்சம். அதைச் சர்க்கார் பாங்கில் போட்டு வைத்திருக்கிறேன். அப்துல்லாவிடம் இருக்கிற பணத்தை எடுத்து வரும் பொறுப்பை இனி போலீஸ் அதிகாரிகள் மேற்கொள்ளவேண்டும். அப்துல்லா வீட்டில் கொல்லைப்புறம் ஒரு சமாதி இருக்கிறது. அது தன்னுடைய தாயாருடையது என்று சொல்லிக்கொண்டு அப்துல்லா தினமும் அங்கு போய் பாத்திஹா ஓதி வருகிருர். அது அவருடைய தாயாருடையதோ என்னவோ, அது வேறு விஷயம். அந்தச் சமாதியின்மீது துணியை மூடி, அதன்மேல் ஒரு அங்குலம் கூட இடை வெளி விடாது புஷ்பச் சரங்களைப் போட்டு வைத்திருக்கிருர். அதைக் களைத்துப் பார்த்தால் அப்துல்லாவின் பணம் அகப்படும்..."

"அது எப்படி உங்களுக்குத் தெரியவந்தது?" என்று கேட்டார் பெரிய அதிகாரி.

"கரன் ஸிங் வேஷமெடுத்ததே அதற்காகத்தான். என்னிடம் அப்துல்லா கொண்டுவந்து கொடுத்த கரன்ஸி நோட்டுகளிடையே மலர்கள் சில ஒட்டிக் கொண்டிருந்தன. அதே போல ஆத்மாராம் சேட்டுக்கு அப்துல்லா கொடுத்திருந்த ஐந்து லட்சத்திலும் சில புஷ்பங்களைப் பார்த்தேன். பணத்தை லட்சுமியாகப் பூஜிக்கும் வகுப்பைச் சேர்ந்தவரல்ல அப்துல்லா. அதனுல் அந்த புஷ்பங்களுக்கும் கொல்லைப்புற சமாதி மீது இருக்கும் புஷ்பச் சரங்களுக்கும் சம்பந்தமிருக்க வேண்டுமென உணருகிறேன்!"

எல்லோரும் மூலையில் உட்கார்ந்திருந்த அப்துல்லாவைப் பார்த்தார்கள். அப்துல்லா மறுப்பு எதுவும் சொல்லாமல் உட்கார்ந்திருந்தார்.

"மற்ருெரு வேண்டுகோள்" என்று ராஜாமணி ஏதோ சொல்ல முற்படுவதைக் கேட்டு, எல்லோரும் திரும்பினர். "இந்த மூவரிடமிருந்தும் கைப்பற்றப் படுகிற பணத்தை சர்க்கார் பறிமுதல் செய்த கணக்கில் சேர்த்துக் கொண்டுவிடக்கூடாது. கப்பல் சதியில் உயிரைவிட்ட 'விஸா' இல்லாத பிரயாணிகளின் பணம் அதில் பெரும் பகுதியாகும். அந்த இருபது பிரயாணி

களின் விலாசமும், அவரவர்கள கப்பல் தலைவனிடம் ஒப்புவித்த தொகையும் லாசா மரைக்காயரிடம் இருக்கிறது. அத்தொகைகளை மாண்டவர்களின் சந்ததியினரிடம் சேர்ப்பித்து விடுவதே சர்க்கார் எனக்குத் தரும் வெகுமதியாகக் கருதுகிறேன். பட்டாபியின் பணத்தைப் பறிமுதல் செய்து கொள்ளலாம்! ஏனெனில் அவருக்குச் சந்ததி கிடையாது!" என்றார் ராஜாமணி.

அப்துல்லா உள்பட அத்தனை அதிகாரிகளும் ஆச்சரியப்பட்டார்கள். கல்லுப்போல் ஆனந்தரங்கன் இருக்கிறான். அவன் வாயிலே மண்ணள்ளிப் போடுகிறாரே இந்த ராஜாமணி என்று அவர்கள் எண்ணினார்கள்.

° ° ° °

மஞ்சள் மாளிகையிலே தன் பெண்ணான உஷாவும் ஆனந்தரங்கனும் கொஞ்சிக் குலாவுவதைக் கண்கொண்டு பார்த்தபடி பூரித்துக் கொண்டிருந்தாள் அன்னம்மாள்.

பேச்சுக்கிடையே உஷா சிரிக்கச் சிரிக்கப் பேசினாள்.

"அம்மா! இத்தனை நாளும் இவருக்கு என் மீது கோபம் வந்துவிட்டால் 'கொள்ளைக்காரன்மகள்தானே நீ!' என்று ஏசிக் காட்டி வந்தார். இனிமேல் அவர் அப்படிச் சொன்னால் பதிலுக்கு நானும் சூடு கொடுப்பேன். என் மாமனாரும் ஒரு கொள்ளைக் காரராக இருந்திருப்பதால் சம்பந்தியும் சம்பந்தியும் சத்திரத்திற்குப் போனால் ஏச்சுமில்லை பேச்சுமில்லை!" என்று சொல்லிவிட்டு உஷா கலகலவென்று சிரித்தாள்.

"ஏய் வாயாடி! இதோ பாரு......என்னை! அப்படி ஏதாவது சொன்னாயோ சவப்பெட்டிக்குள்ளே உன்னையும் தள்ளி விடுவேன்! பட்டாபி கொள்ளைக் காரனாக இருக்கலாம். ஆனால் என் அப்பா பரிசுத்தமான மனிதர் என்பதைத் தெரிந்து கொள்!" என்றான் ஆனந்தரங்கன்.

அன்னம்மாளுக்கு அவன் பேச்சு புரியவில்லை; உஷாவும் திருபுருவென்று விழித்தாள்.

அப்போது உள்ளே நுழைந்தார்கள் ராஜாமணியும், அவருடைய மனைவியான லீலாவும்.

வரும்போதே ''ஆனந்த ரங்கா! எனக்குக் கையாளாக இருக்க உன்னை ஆளவந்தார் வீட்டுக்கு அனுப்பினேனா அல்லது உஷாவைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொள்ள அனுப்பினேனா?'' என்று அதட்டினார் ராஜாமணி.

''உங்கள் சிஷ்யன்தானே அவன்! காதலிப்பதில் கூட உங்கள் வழியையே பின்பற்றியிருக்கிறான்! நீங்கள் என்னைக் கல்யாணம் செய்து கொண்டது எப்படியாம்? தபால் கொள்ளையைக் கண்டு பிடிப்பதற்காக பழையனூர் வந்த நீங்கள் மாயவில்லாவிற்கு வந்து காதல் கீதல் என்று என்னவெல்லாமோ என்னிடம் பேத்தியதை மறந்து விட்டீர்களாக்கும்!'' என்று லீலா சொல்லி விட்டுத் துப்பறியும் ராஜாமணியை ஓரக் கண்ணால் பார்த்தாள்!

COMICS
PDF TIMES